SRI S. NAGARAJA MONIGAR : நிலங்களை சிறிய அளவில் வைத்திருக்கக்கூடிய நடுத்தர விவசாயிகளுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து டிரக்டர்வாங்க வழி கிடையாது. ஆகையால் உழவர்களுக்கும், மத்திய தர விவசாயிகளுக்கும் உதவக்கூடிய கருவியாக உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவைகள் மேற்சொன்ன கம்பனிகளில் உற்பத்தி செய்யப்படும்.

SRI K. B. S. MANI : ஸ்டீல், கண்ட்ரோல் விலையில் விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது சலபமான விலையில் விற்கப்பட்டு வருகிறது. ஆகவே அதற்கு கண்ட்ரோல் வேண்டியதில்லை.

SRI T. IRUSAPPAN : விவசாயக் கருவிகள் தொழிற்சாலைகள் எத்தனை ஜில்லாக்களில் இயங்கி வருகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி தகவல் என்னிடத்தில் இல்லை.

SRI V. SUBBIAH : நடுத்தர விவசாயிகள் விவசாயக் கருவிகளுக்கு அதிக விலைகொடுத்து வாங்க முடியாது. ஆகவே அரசாங்கம் அவர்களுக்கு மான்யம் கொடுத்து உதவுவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது இருக்கும் நிலைமைப்படி அதிகமான விலை இருப்பதாகத் தெரியவில்லை. வியாபாரிகள் கொஞ்சம் லாபம் வைத்து விற்கிறார்கள்.

SRI N. MARUDACHALAM : விவசாயக் கருவிகளை அதிகப்படுத்துவதற்கு முயற்சி செய்துவரும் அரசாங்கத்தார், அவைகளை ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்களுடைய வொர்க்ஷாப்பில் செய்வதற்கு அனுமதிப்பார்களா ? அவ்வாறு அனுமதித்தால் அவை சரசமான விலைக்குக் கிடைக்குமே.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி ஏதாவது யோசனை வந்தால், அதற்கப்புறம் அதை அரசாங்கம் கவனிக்கலாம்.

SRI K. R. NALLASIVAM : இப்போது ஏற்படுத்தப்பட்டுவரும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளில், விவசாயக் கருவிகள் செய்வதற்கு என்று குறிப்பாக ஒரு பகுதி ஒவ்வொரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டிலும் ஒதுக்கப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இல்லை.

Forensic Science Laboratory

* 400-F *Q.*—SRI M. SELVARAJ (on behalf of Sri M. P. Sarathi) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் Forensic Laboratory ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

(இ) அத்தகைய Laboratory-ல் பரிசோதிக்க வேண்டிய கேஸ்கள் தற்சமயம் எவ்வாறு கவனிக்கப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) It is not possible to state when it will be established.

(*c*) Such cases at present are being attended to by the Chemical Examiner's Department and the Laboratories attached to the C.I.D. Police Department and the Board of Revenue (Excise).

SRI K. VINAYAKAM : Whereas it is the present practice to entrust the work of analysing cases to surgeon who get training in forensic medicine at the Medical College, will the Government think of the possibility of setting up a separate laboratory in the City of Madras attached to the General Hospital which will be entrusted with this work and this work alone?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already stated that there is no such proposal.

Action against Agricultural Officers in Thiruthuraipoondi Block

* 400-G *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி பிளாக்கில் கையாடல் செய்த விவசாய உத்தியோகஸ்தர்கள் பேரில் எடுத்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டதா ?

(ஆ) கையாடல் தொகைகள் மீட்கப்பட்டதா ?

(இ) இல்லையாயின் அதற்கான நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது ?

(ஈ) இந்த நடவடிக்கை இவ்வளவு தாமதமாவதேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir.

(*c*) & (*d*) The matter is being investigated by the Collector of Tanjore in consultation with subordinate officers for fixing the nature and extent of the responsibility among the various Agricultural Officers and staff concerned for the irregularities. The police investigation against the accused is pending for want of

certain vital information which has to be obtained by careful scrutiny of the original vouchers and other records with the Accountant-General. A certain amount of delay is inevitable in cases of this kind where numerous persons are involved and detailed and careful examination of individuals and of various vouchers and records from many directions is required. Every effort is however being made to proceed with the case expeditiously.

SRI A. VEDARATHNAM : இவ்வளவு பெரிய தொகை கையாடல் செய்யப்படுவதற்கு ஏதுவாக அவர்களிடம் ஏன் இவ்வளவு பெரிய தொகை அஜாக்கிரதையாக விட்டு வைக்கப்பட்டிருந்தது ? அதை, இடையிடையே "செக்" பண்ண வேண்டியவர்கள் அவ்வாறு "செக்" பண்ணி வந்திருக்கிறார்களா ? அவர்கள் "செக்" பண்ணி வந்திருந்தால் இவ்வளவு ஜாஸ்தியான தொகை கையாடப்படுவது நேர்ந்திருக்காதே. இனிமேலாவது இவ்வளவு பெரிய தொகை கையாடல் செய்யப்படுவதற்கு வசதி இல்லாதபடி செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

THE HON. SRI M. BHAKTAVTSALAM : இதற்கு தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கப்படும்.

SRI T. SAMPATH : May I know, what is the amount involved?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The loss was estimated by the Accountant-General as over Rs. 40,000

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI K. S. SUBRAMANIA GOUNDER : Mr. Speaker, Sir, I the Chairman of the Committee on Estimates having been authorized by the Committee to submit the report on its behalf present the report on Agricultural Experimental Farms, Agricultural Demonstration and Propaganda including Public Exhibitions and Fairs.

III—REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES ("DINA THANTHI" CASE NO. 2)

MR. SPEAKER : I have received a letter from the Editor, Dina Thanthi, dated 14th February 1959 which reads as follows :

"In the matter of breach of privilege of the Legislative Assembly by the 'Daily Thanthi' newspaper, I tender to the House and to you my unconditional apology and request that the House be pleased to accept the apology. I had no chance to offer an apology to the Hon. Speaker before the matter was referred to the Privileges Committee of the House as I had no notice at that time. Now that I have an opportunity I hasten to tender the apology to the House.

I beg to invite your attention, Sir, to the fact that an apology tendered for the second time has been accepted in the case of other newspapers, for example, the 'Dina Mani'—vide Assembly proceedings, dated the 19th December 1953 and 23rd December 1953."

(Signed) P. RAMARATNAM,
Editor, Daily Thanthi."

[16th February 1959

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த சபையின் முன் வைக்க விரும்புகிறேன் :—

That the recommendation made by the Committee of Privileges in its Report on ' Dina Thanthi ' Case No. 2, laid on the table of the House on 5th February 1959 be approved '.

இந்த அறிக்கையை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் பார்த்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த அறிக்கையின் 21-வது பக்கத்தில், " தினத்தந்தி " -யில் வந்த ஆட்சேபகாமான செய்தி அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது, அந்தச் செய்திக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பிற்கும் சட்டசபையில் நடந்ததற்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது என்பது தான். அந்தச் செய்திக்கு " தாலி கட்டிவிட்டால், அது ' கல்யாணம் ' ஆகிவிடாது " என்ற தலைப்பும் அதற்குக் கீழே " சட்ட சபையில் மந்திரி பக்தவத்சலம் அறிவிப்பு " என்ற மற்றொரு தலைப்பும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குக் கீழே, சட்டசபையில் நடந்த நடவடிக்கைகள் பற்றிப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. சட்ட சபையில் நடந்ததற்கும், " தாலி கட்டிவிட்டால், அது ' கல்யாணம் ' ஆகிவிடாது " என்ற தலைப்பிற்கும் சம்பந்தம் இல்லாமலிருக்கிறது. அம்மாதிரி கனம் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் சட்ட சபையில் பேசவுமில்லை, அம்மாதிரியான அறிவிப்பு எதுவும் இங்கே செய்யப்படவும் இல்லை. ஆனால் " தினத்தந்தி " பத்திரிகை " தாலி கட்டிவிட்டால், அது ' கல்யாணம் ' ஆகிவிடாது " என்ற தலைப்புடன் அந்தச் செய்தியைப் பிரசுரித்திருக்கிறது. இது இந்த சபையின் நடவடிக்கைகளை தவறுதலாகவும் தப்பாகவும் பிரசுரிப்பதாகிறது, இந்த சபையின் உரிமையை பாதிப்பதாகிறது என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தப் பிரச்னையை உரிமைக் கமிட்டி பரிசீலித்திருக்கிறது. அந்தச் செய்திக்கு அவ்வாறு தலைப்புக் கொடுக்கப்பட்டது தவறு என்பதை உரிமைக் கமிட்டியில் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அதற்குப் பிறகு, அதற்காக மன்னிப்புக் கோரி கனம் சபாநாயகர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இப்போது நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் இது தான். தவறாகப் பிரசுரிப்பது என்ற குற்றத்தின் பேரில்தான் நாம் இப்போது நடவடிக்கை எடுக்கவிரும்புகிறோம் ; இந்த சபையின் அங்கத்தினர்களைப் பற்றியோ இங்கு நடக்கும் நடவடிக்கைகளைப் பற்றியோ அவதூறாகப் பேசியதன் பேரிலோ குறைத்துப் பேசியதன் பேரிலோ நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரச்னை இப்போது நமக்கு இல்லை ; தவறாகப் பிரசுரிப்பது என்ற குற்றத்தின் பேரில்தான் இப்போது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இதுசம்பந்தமாக நாம் ஆலோசனை செய்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கிறது. " தினத்தந்தி " பத்திரிகையைப் படிப்பவர்கள் ஒரு விஷயத்தை கவனித்திருப்பார்கள். அந்தப் பத்திரிகையில், இந்த சபையில் நடக்கும் விஷயங்கள் சம்பந்தமாகப் பிரசுரம் செய்யும்போது மட்டுமன்றி, வெளியில் நடக்கும் விஷயங்கள் சம்பந்தமாகப் பிரசுரம் செய்யும்போதும், தலைப்பிற்கும் கீழே போடும் செய்திக்கும் சம்பந்தமில்லாத முறையில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டு வருவதை பலரும் கவனித்திருப்பார்கள். அந்தப் பத்திரிகையின் பண்பே அப்படித் தான் இருக்கிறது போல் தோன்றுகிறது. ஆகவே, சற்று முன்பு நான் குறிப்பிட்ட செய்தியை, அப்பத்திரிகை, சட்ட சபையை அலட்சியம் செய்வதற்காக அவ்வாறு பிரசுரித்திருக்கிறது என்று நாம் கருத வேண்டியதில்லை. அந்தப் பத்திரிகை, தன் பண்பையே—பிரசுர முறையையே—அவ்வாறு வைத்துக்கொண்டிருக்கிறது. அது தவறா, தவறில்லையா என்பதற்கு தீர்ப்பு கூற வேண்டியவர்கள் பொதுமக்களாக இருக்கிறார்கள் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். எனவே, அந்தப் பத்திரிகை அந்தச் செய்தியை, சட்ட சபையை குறைவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அவ்வாறு பிரசுரித்ததாக நாம் கருதுவதற்கில்லை ; செய்திகளை அவ்வாறு பிரசுரிப்பது அதன் வழக்கமாகப் போய் விட்டது. இந்த சபை சம்பந்தமாக அவ்வாறு பிரசுரிக்கப்பட்டதால் ஒரு

16th February 1959] [Sri C. Subramaniam]

கமிட்டி போட்டு நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது. மற்றவர்கள் சம்பந்தமாக அவ்வாறு பிரசுரிக்கப்படும்போது, அவர்கள் நடவடிக்கை எடுக்கமுடியுமா, அவர்கள் கோர்ட்டுக்குப் போக முடியுமா என்று நாம் சிந்திக்க வேண்டும். இப்போது அந்தச் செய்தியை அவ்வாறு பிரசுரித்ததற்காக இப்பத்திரிகையின் மீது நாம் நடவடிக்கை எடுப்பது ஒரு முக்கியமான விஷயம் அல்ல. இந்தப் பத்திரிகை இனிமேல் செய்திகளை நல்ல முறையில் பிரசுரித்தால் அதன் பண்பு வளரும், நாட்டில் பத்திரிகை தர்மம் வளரும். பத்திரிகையாகப் பணியாற்றும் பொறுப்பு " தினத்தந்தி "—க்கு இருக்கிறது. அது தன் பொறுப்பை உணர்ந்து செய்திகளை நல்ல முறையில் பிரசுரித்தால் நன்றாக இருக்கும். பத்திரிகைகள் தலைப்பிற்கும் செய்திக்கும் சம்பந்தா சம்பந்தமில்லாமல் விஷயங்களை பிரசுரித்தால் அவைகளுக்கு மதிப்பு இருக்காது. பத்திரிகைகள் அவ்வாறு செய்யாமல் இருந்தால், முக்கியமான விஷயங்கள் அவைகளில் சரியாக வந்தால் கூட மக்கள் அந்த விஷயங்களை நம்ப மாட்டார்கள் ; ஒருவன் " புலி வருகிறது, புலி வருகிறது " என்று பல தடவை பொய் சொல்லி வந்ததால், நிஜமாகவே புலி வந்தபோது அவன் சொல்லியதை பிறர் நம்பாத கதை போல ஆகிவிடும். கமிட்டியின் சிபாரிசுப்படி பத்திரிகைக்கு தண்டனை கொடுப்பது அவசியமா அல்லது இனிமேல் சட்ட சபை சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டுமன்றி மற்ற விஷயங்களையும் நல்ல முறையில் பிரசுரிக்க வேண்டும் என்று இப்பத்திரிகையை எச்சரிப்பது சரியா—போதுமா—என்பது பற்றி நாம் ஆலோசிக்க வேண்டும். இந்தப் பத்திரிகைக்கு இதற்காக தண்டனை அளிப்பதால், நமக்கு லாபம் எதுவும் ஏற்படப் போவதில்லை, இந்தப் பத்திரிகைக்கும் நஷ்டம் எதுவும் ஏற்படப் போவதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. எனவே, எச்சரிக்கையுடன் இந்த நடவடிக்கையை முடிக்கலாம் என்பது என் கருத்து.

ஆனால் இதுபற்றி முடிவு செய்யவேண்டியவர்கள், அங்கத்தினர்களாவார்கள். அந்த முறையில் இதைப் பரிசீலனை செய்து மற்றவர்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டு, லீடர் ஆப் தி அப்போஸிஷன் அவர்கள் சொல்வதையும் கேட்டு இந்த அஸெம்பளி முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : சபாநாயகர் அவர்களே, நிதியமைச்சர் அவர்களின் சொற்பொழிவு பூராவையும் நான் ஆதரிக்கிறேன். முக்கியமாக, இதுமாதிரி சர்குலேஷன் அதிகமாகவுள்ள பத்திரிகைகள் நன்கு வளருவதற்கு, அவைகள் மேலும் நல்லமுறையில் வளர வேண்டுமென்றால் அதன் தரம் உயர வேண்டும். எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் படி அப்பத்திரிகையை அநேகம் பேர்கள் வாங்கிப் படிக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள், நாம் என்ன வேண்டுமானாலும் எழுதலாம் என்று நினைக்கக் கூடாது. அதிலும் முக்கியமாக இந்த சபையில் நிகழ்த்தப்படும் பேச்சுக்கள் பற்றியும் அமைச்சர் பேசுவதையும் ஜாக்கிரதையாகப் பார்த்து போடவேண்டும். அப்படி போட்டால்தான் அப்பத்திரிகைகள் நன்கு வளர முடியும். அவர்கள் இப்பொழுது எழுதிக் கொடுத்திருக்கும் சமாதானத்தைப் பார்க்கும்போது இதற்கு மேல் நாம் ஒன்றும் வலியுறுத்திப் பேச வேண்டாம். ஆகவே அதை ஒப்புக்கொண்டு இதோடு அதை விட்டு விடலாம் என்று நானும் கருதுகிறேன்.

SRI D. S. AUTHIMOOLAM : கனம் சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் அழகாக, " இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல் " என்ற பழமொழிக்கு ஏற்றமுறையில் இச்சபையின் கௌரவத்தை அவர்கள் சொன்ன அழகிய மொழிகள் ரொம்பவும் உயர்த்தி விட்டது. ஆகவே ஒரு கல்லில் இரண்டு பட்சிகள் என்று சொல்வார்களே, அதேபோல் இச்சபையின் கௌரவத்தை உயர்த்தும் வகையில் அவர்களின் மன்னிப்பை ஏற்றுக் கொண்டு மேலும் இச்சபையின் கௌரவத்தை உயர்த்திக் கொள்வதும், மேலும் அவர்கள் நல்ல [illegible]

[Sri D. S. Authimoolam] [16th February 1959

அவர்களுக்கு இது ஒரு நல்ல பாடமுமாகி விட்டது. ஆகவே அவர்கள் சொன்னதை நான் முழு மனதோடு ஆதரித்து இதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***Sri V. K. KOTHANDARAMAN:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் பக்தவத்ஸலம் அவர்கள் சொல்லாததை சொல்லியதாக தினத்தந்தியில் வந்ததைப் பற்றி பரிசீலனை செய்வதற்காக வேண்டிய ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு விடப்பட்டு நம் முன்னால் வந்திருக்கக் கூடிய கமிட்டியின் முடிவின் பேரில் கனம் நிதியமைச்சர் அவர்கள் அந்தக் கமிட்டியின் முடிவை ஏற்றுக்கொள்ளலாம் என்று கொண்டு வந்தவர் இந்நேரத்தில், ஏதோ மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்று ஒரு லெட்டர் வந்த நேரத்தில் அவர்களின் முடிவையே மாற்றிக் கொள்ளக் கூடிய அளவிற்கு இதெல்லாம் வேண்டியதில்லை. இது ஒன்று மாத்திரமல்ல. பல விஷயங்களில் தலைப்பு ஒன்றாகயிருக்கும், செய்தி ஒன்றாகயிருக்கும். இப்பொழுது அக்கமிட்டியின் முடிவை மாற்றிக் கொண்டால் நன்றாகயிருக்கும் என்று வள வளவென்று நாசூக்காக....

Sri S. NAGARAJA MONIGAR On a point of order Sir.: நிதியமைச்சர் அவர்களின் பேச்சைப்பற்றி, கூறும் போது "முடிவை மாற்றிக் கொண்டால்" என்று சொன்னார்கள். இச்சபையில் எந்த முடிவோடு அவர் வந்திருக்கிறார் என்பதை அங்கத்தினர் அவர்கள் எப்படி உணர்ந்து கொண்டார்கள், அதோடு . . .

Mr. SPEAKER: இது ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டராகாது. It would not be a point of order.

Sri V. K. KOTHANDARAMAN: அங்கத்தினர் நாகராஜ மணியகார் அவர்கள் . . .

Mr. SPEAKER: அதுபற்றி பதில் கொடுக்க வேண்டாம்.

Sri V.K. KOTHANDARAMAN: கமிட்டியின் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டியது என்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள், நிதியமைச்சர் அவர்கள். அதை அங்கத்தினர் அவர்கள் படிக்கவில்லை போலிருக்கிறது. ஏற்கனவே இதேபோன்று அந்தப் பத்திரிகையில் சில பிரசுரிக்கப்பட்டு மன்னிப் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் தொடர்ந்தாற்போல் வந்திருப்பதினால்தான், மன்னிப்பு என்ற முறை இருப்பதற்குப் பதிலாக குறைந்தபட்சம் வேறு வகையில் ஒரு பனிஷ்மெண்ட் இருக்க வேண்டுமென்ற முறையில் இந்த சட்டசபையில் நடக்கக் கூடிய விவாதங்களில் ஒரு வா த்திற்கு பங்கெடுக்கக்கூடாது என்ற முறையில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியில் கூட என் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தேன். இன்று சாட்சியம் கொடுத்திருக்கக்கூடிய ஆசிரியராக இருக்கக் கூடியவர் உண்மையான ஆசிரியர் அல்ல. ஆகவே மீண்டும் அதை பரிசீலனைக்கு கொண்டு வர வேண்டுமென்ற எனது அபிப்பிராயத்தை சொல்லியிருந்தேன். அவரை ஏற்கனவே அழைத்து விசாரணை செய்தாகி விட்டது. வேறு ஏதாவது இருந்தால் அதுபற்றி சட்டசபையில் விவாதத்திற்கு வரும்போது சொல்லிக்கொள்ளலாம் என்று விவாதம் செய்யப்பட்டு ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம். ஆகவே இதை விட்டுக் கொடுப்பது, அவர்கள் இனி நல்லமுறையில் நடந்து கொள்வார்கள் என்ற முறையில் போவது அவ்வளவு சரியான முறையல்ல என்று எனது தாழ்மையான அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்வதோடு, நிதியமைச்சர் அவர்கள் அந்தக் கமிட்டியின் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற மனோபாவத்தோடு எப்படி வந்தார்களோ அதே மனோபாவத்தோடு கொஞ்சம் உறுதியாக நிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அந்த கமிட்டியின் முடிவை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அந்தக் கமிட்டியின் முடிவு சரியல்ல என்பதை திட்டவட்டமாக சொல்லியிருக்கவேண்டும். இல்லை அந்த முடிவு சரி என்று நோக்கத்தோடு இதைக் கொண்டுவந்திருந்தால் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்படியில்லாமல் அதை மாற்றுவது என்று

16th February 1959] [Sri V. K. Kothandaraman]

சொன்னால் அது முன்னுக்குப் பின் முரணாகத்தான் இருக்கும். மேலும் அந்தக் கமிட்டியின் முடிவை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதன் மதிப்பே போய்விடும், என்று தெரிவித்துக்கொண்டு அந்தக் கமிட்டியின் முடிவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

***Sri K. SATTANATHA KARAYALAR:** கனம் சபா நாயகர் அவர்களே, உரிமை கமிட்டி பல மாதங்கள் பரிசீலனை செய்து ஒரு தீர்ப்பு கூறியுள்ளது. அந்தத் தீர்ப்பை இந்த சபை அங்கீகரிக்கவேண்டுமா? வேண்டாமா? என்ற பிரச்னை இப்பொழுது எழுந்துள்ளது. இது முதல் தடவையல்ல. இதற்கு முன்பு ஒரு தடவை இதேபோன்று உரிமைக் கமிட்டிக்கு விடப்பட்டு, அதுவும் நிதியமைச்சர் அவர்கள் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தை திருத்திக் கூறியதாகச் சொல்லி அது ஒரு சமயம் உரிமைக் கமிட்டிக்கு சென்றது. பல சந்தர்ப்பங்களிலும் இந்த சபையிலே அங்கத்தினர்கள் தங்களுடைய பிரசங்கங்கள் திரித்திக் கூறப்படும்போது கோர்ட்டுக்குப் போவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லையென்ற மனத்தாங்கலோடு மன வருத்தத்தோடு இருந்ததுண்டு. இந்த பத்திரிகை இப்படி தொடர்ந்து நடந்து போவதை அனுமதித்துக் கொண்டு போவதற்கு இந்தப் நாட்டிலுள்ள பேச்சு சுதந்திரமும் எழுத்து சுதந்திரமும் இவர்களுக்கு சாதகமாயிருக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் அவ வர்களுடைய பிரசங்கங்கள் திரித்துக் கூறப்படும்போது கோர்ட்டிற்கு போக வேண்டுமென்றால் அது எளிதில் நடக்கக் கூடிய காரியமல்ல. அப்படியிருக்க இந்த சபையின் முன்னால், இச்சபையிலே நிகழ்த்திய, மந்திரியவர்கள் நிகழ்த்திய உரையைக் கூட திரித்துக் கூறியிருக்கும் ஒரு பத்திரிகை மீது, அதுவும் முதல் தடவையாக அல்ல—இரண்டாவது தடவையாக அதுமாதிரி ஒரு நிகழ்ச்சி நடக்குமானால், அதற்கு இன்று மன்னிப்பு கோரினாலும் கூட அதுவும் ஓரளவு இந்த சபையை அவமானப்படுத்துவதாகும். அதோடு, உரிமைக் கமிட்டி இதை பரிசீலனை செய்த காலத்தில் இதற்காக மன்னிப்புக் கோருவதற்கு வாய்ப்பும் வசதியும் இருந்த போதிலும் கூட அன்று சட்டபூர்வமாக ஏதாவது நெளிவு வளைவில் மாறிக் கொள்ளலாம் என்று முயற்சி செய்து விட்டு பிறகு கடைசியாக கண்டிப்பாக தண்டனை வரும் என்றகாலையில் இந்த சபையினிடம் மன்னிப்பு கோருவது என்பதை ஒத்துக் கொள்வது சரியாகாது. சில தினங்களுக்கு முன் குமுதம் பத்திரிகையில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டபோது அவர்கள் ஓடோடி வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு வருத்தமும் தெரிவித்தார்கள். அதுதான் பத்திரிகை தர்மம். அப்படியில்லாமல் இன்று காலம் தாழ்த்தி வந்து, வேறு வழியின்றி மன்னிப்பு கேட்கும்போது அதை அங்கீகரிப்பது தவறான நடவடிக்கையாகும். ஆகவே, மிகவும் குறைந்த தண்டனை தான் உரிமைக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது. அந்த உரிமைக் கமிட்டிக்கு மதிப்புக் கொடுக்கக் கூடிய முறையில் இதை அங்கீகரிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

Sri K. R. NALLASIVAM: சபாநாயகர் அவர்களே, உண்மையிலே இரண்டாவது தடவையாக இழைக்கப் பட்டிருக்கக் கூடிய குற்றமாக நாம் இதைக் கருதுகிறோம். அது, சரியானதுதான். ஆனால் அதே வேளையில், எனது சக அங்கத்தினர்கள் கண்டிப்பாக இந்தத் தடவை நடவடிக்கைகள் எடுத்துத்தான் தீர வேண்டுமென்ற உணர்ச்சியோடு இருக்கிறார்கள். அது ஓரளவு உணர்ச்சி பூர்வமானதுதான். ஏனெனில் ஒரு தடவை செய்து விட்ட குற்றத்தை மீண்டும் ஒரு முறை செய்யும்போது அது வேண்டுமென்றே செய்யப்படுகிறது என்ற ஐயப்பாடு சிலருக்கு எழுவது நியாயமே. அதே நேரத்தில் அது பற்றி நமக்கு அதிருப்தியிருக்கிறது என்பதை புலமானமுறையில் தெரிவித்துக் கொள்கிறோம். இது ஒரு சரியான எச்சரிக்கையாகயிருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆகவே இந்த தடவை எச்சரிக்கை என்ற முறையில் நமது உணர்ச்சியை பிரதிபலித்து விட்டு மன்னித்து விடுவதுதான் நியாயமாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

[16th February 1959

10-00 a.m. * SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்தப் பத்திரிகைச் செய்தி குறித்து உரிமையைப்பற்றி ஆராய்கிற குழு ஆராய்ந்து சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. அந்தக் கருத்துக்களையொட்டி அவையில் உள்ளவர்கள் விவாதிக்கிற நேரத்திலேயே எந்தப் பலன் ஏற்பட வேண்டுமோ அந்தப் பலன் அமைச்சர் அவர்களும் சில கருத்துக்களை வெளியிட்டதன் மூலமாக ஏற்பட்டுவிட்டதாக நான் எண்ணுகிறேன். எனவே தேவையான விளைவை ஏற்படுத்தியதற்குப் பின்னால் தண்டனை என்ற முறையில் நாம் மேலும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கிறபோது வேறு சில பத்திரிகைகளைப்பற்றியும் எழுந்த பிரச்சனை நினைவிற்கு வருகிறது. ஒரு முறை ஜனசகதிப் பத்திரிகை பற்றி இதே பிரச்சனை எழுந்திருக்கிறது. மற்றொரு முறை குமுதம் பத்திரிகையின் மன்னிப்பை இந்தச் சபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் பத்திரிகை சம்மந்தப்பட்ட ஆசிரியரிட மிருந்து சற்றுக் காலம் தாழ்ந்து இன்றைக்கு மன்னிப்புக் கோரி வந்திருந்தாலும் கூட – இந்த நிலையிலும் பத்திரிகை ஆசிரியா பொறுப்பை உணர்ந்து மன்னிப்புக் கேட்டிருப்பதனால் நாமும் பத்திரிகைக்காரர்களிடத்தில் வைத்திருக்கக்கூடிய மதிப்பையும், அவர்களுக்கு இருக்கவேண்டிய பொறுப்பையும், கண்ணியத்தையும் மதித்து அவற்றைத் தொடர்ந்து நிலை பெறச் செய்ய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபடி – இந்த அளவோடு தண்டனையைக் கைவிட்டு மன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வருவது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கமிட்டியின் அறிக்கை பற்றி இரண்டு விஷயங்களை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது. இரண்டாவது பாதிக்கப்பட்டிருந்தால் தண்டனை என்ன சிபார்சு செய்வது என்பது. உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்கிற விஷயத்தைப் பற்றி யாரும் உரிமை பாதிக்கப்படவில்லை என்பதாக மறுத்துச் சொன்னது கிடையாது. குற்றம் குற்றம்தான் என்பதை உறுதியாக்குகிறோம். அதற்கு மேல் தண்டனை அந்தக் குற்றத்திற்கு என்ன என்பதைப்பற்றித்தான் உரிமைக் கமிட்டியின் சிபார்சு இருக்கிறது. ஒரு கோர்ட்டில் ஒரு குற்றத்திற்கு தண்டனை ஏற்பட்டாலும் கூட அது உறுதியாகும்போது அந்தக் குற்றத்திற்குரிய தண்டனையைக் குறைக்கவோ, எச்சரிக்கை செய்துவிடவோ அப்பீல் கோர்ட்டால் முடிகிறது. நாம் இப்போது கமிட்டியின் அறிக்கையை ஒப்புக்கொள்கிறோம். உரிமையைப் பாதிக்கக் கூடிய செய்தியை அது பிரசுரம் செய்தது என்பதை மாற்றுவது இல்லை. அதற்கு மேல் என்ன தண்டனை கொடுக்கவேண்டும் என்பதை நாம் முடிவு செய்யும்போது அதன் காரணமாக அந்தக் கமிட்டிக்கு மதிப்புக் குறைவோ அல்லது அவர்கள் செய்த சிபார்சை அலட்சியம் செய்துவிட்டதாகவோ எண்ண முடியாது. நான் என்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொண்டேன் என்ற முறையில் ஸ்ரீ கோதண்டராமன் பேசினார்கள். அது தவறு என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் நான் கொண்டுவந்த தீர்மானம் குற்றம் என்று சொன்னதை உறுதி செய்கிறது. அந்தக் குற்றத்திற்கு தண்டனை கொடுப்பது என்பதற்குப் பதிலாக ஓர் எச்சரிக்கையுடன் விட்டுவிட வேண்டுமென்று முடிவு செய்கிறது. ஆகையால் இதில் ஒன்றும் முரண்பாடு கிடையாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும் நான் கொண்டுவந்த தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். கீழ்க்கண்ட தீர்மானத்தை சபை முன்பு எல்லோருடைய அங்கீகாரத்திற்காகவும் வைக்க விரும்புகிறேன்.

The motion was, by leave, withdrawn.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"That in view of the apology tendered by the Editor 'Dina Thanthi', further action in the matter be dropped."

16th February 1959]

MR. SPEAKER : The question is—

"That in view of the apology tendered by the Editor 'Dina Thanthi', further action in the matter be dropped."

The motion was put and carried.

IV.—GOVERNMENT BILL.

THE MADRAS DISTRICT MUNICIPALITIES (EXTENSION TO THE TRANSFERRED TERRITORY) BILL, 1959.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959."

The motion was put and carried.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

V.—NON-OFFICIAL BUSINESS.

A. Bills.

(1) THE MADRAS LEGAL PRACTITIONERS PROVIDENT FUND BILL, 1959.

SRI T. SAMPATH : Sir, I beg leave to introduce the Madras Legal Practitioners Provident Fund Bill, 1959.

SRI V. SANKARAN : Sir, I second it.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Legal Practitioners Provident Fund Bill, 1959."

The motion was put and carried.

SRI T. SAMPATH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS DOWRY PROHIBITION BILL, 1958 (L.A. BILL NO. 21 OF 1958)

SRI N. K. PALANISAMI : Mr. Speaker, Sir, I request that the consideration of the Madras Dowry Prohibition Bill, 1959 may be taken up on the next non-official day.

MR. SPEAKER : I have no objection.

(3) THE MADRAS AGRICULTURISTS RELIEF (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 23 OF 1958).

MR. SPEAKER: As the hon. Member Sri K. Ramachandran is not in his seat, this Bill will also be taken up later.

B. *Resolutions.*

CONSTITUTION OF A COMMITTEE TO SUGGEST WAYS AND MEANS FOR BRINGING DOWN PRICES OF FOODGRAINS AND ESSENTIAL ARTICLES.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, I move the following Resolution—

"That this House is of opinion that the steps taken by the Government so far to bring down the soaring prices of foodgrains and essential articles are inadequate and recommends that a Committee consisting of members of all political parties and specialists may be constituted for suggesting ways and means of bringing down the prices."

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, I second it.

MR. SPEAKER: Resolution moved—

"That this House is of opinion that the steps taken by the Government so far to bring down the soaring prices of foodgrains and essential articles are inadequate and recommends that a Committee consisting of members of all political parties and specialists may be constituted for suggesting ways and means of bringing down the prices."

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, in moving this resolution, I would like to emphasize only certain important points, as many hon. Members may be eager to speak on this very important resolution which is now before this House. We are on the threshold of an agricultural economic revolution and the transitional period is no doubt painful and uncertain but we must bear all these things with fortitude and take an optimistic view of things.

(Deputy Speaker in the Chair.)

First and foremost the problem that is facing us is the mounting price of foodstuffs and other articles of consumption. Their prices are very high. The living index has now come to 430 points. It has reached the maximum. Secondly, in spite of aid agreements that have been entered into with various foreign Governments for the supply of foodgrains, the situation is going from bad to worse. It is indeed alarming. So far as agriculture is concerned, it is practically true to say that it is a gamble depending on seasonal conditions. Therefore we must realise that because it is a gamble, we must take adequate precautions. What are the steps taken by the Government to build up buffer stocks in our State of Tamilnad? We are not having adequate supply of foodgrains. In order to find an excuse for our incapacity to tackle the problem, we charge

producers with profiteering on foodgrains. Of course there are some profiteers but at the same time there are some corrupt officials at the Government level also. So, we cannot charge every ryot with profiteering, as we cannot charge every official with corruption. Therefore, we must admit our incapacity to tackle this problem effectively. The Government's bankruptcy was no doubt exposed on this food front. The Hon. Minister is not often giving us very correct figures when some statistics are placed on the table of the House. Probably, the departmental people do not take much pains to go into those questions thoroughly with a view to tackle this important problem. The prices of foodstuffs as also the prices of other articles have risen up. The Ministers are talking of nationalisation of wholesale trade and other matters, to divert the attention of the public from their incompetency and inefficiency, as I may put it.

Then, Sir, they talk of co-operative farming and splitting up of holdings. That is now talked of much in all directions. It cannot be denied that persons with large holdings have the incentive to produce more and they resort to intensive and effective cultivation, whereas a poor ryot cannot make both ends meet and does not find adequate money to improve his cultivation. Sir, we have already abolished zamindaries and intermediaries and introduced agricultural income-tax and provided this tax works efficiently, it will lead to gradual splitting up of land holdings of agriculturists. To fix a ceiling on lands and then expect the inidviduals to display the incentive is totally opposed to the laws of self-interest and social obligation. It is unthinkable, Sir, that reduction of land holdings and resort to co-operative farming will solve land hunger. It is not at all going to solve the land hunger. It is going to lead to some other trouble, a very great trouble indeed.

National Extension Service blocks were worked by solvent ryots in all the areas. After all ryots who are not having sufficient means have not so far come forward to give their helping hand in these blocks. That is a well-known fact. I should say, Sir, the Congress Government have now reduced the rural communities to the position of serfdom. Gandhiji wanted village communities to be self-reliant under the leadership of their own communities. Such leadership came from many solvent ryots and they contributed much for the development of these villages. Co-operative farming, if it is introduced, to put it in plain language, wll be the hunting ground of Co-operative Inspectors, Tahsildars and Deputy Collectors and so many other officials. It is not going to work well. No longer will there be incentive to work these farms. I have seen in my own firka of Mathuranthakam taluk that when co-operative farming was introduced some four or five years back—the Minister in charge of Agriculture who hails from my district also knows—how it failed miserably with the result that the whole thing had to be wound up. Is there any private incentive? Will any officer come forward to

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [16th February 1959]

work it well? These are very serious points to be taken into consideration. I would request the Hon. Minister to look into these things very carefully before trying to implement it. I wish to say, Sir—I have been reiterating it on the floor of this House and even now I wish to emphasise—that there are lakhs of arable lands that are lying waste and they should be brought under the plough and if possible co operative farming may be tried in those areas as an experimental measure; and if they find co-operative farms in such selected areas working successfully, then they could think of introducing it for the whole State.' Instead of that there is no use of taking ' co-operative farming ', and leave everything in the lurch.

Sir, sufficient aid is not given to the producers. I have been telling this on previous occasions. I want to know from the Hon. Minister whether adequate aid and that too in time, is given to these ryots in the rural areas. If sufficient aid is given in time, I am sure, Sir, he will produce more, much more, than what we expect from these people. First of all, the ryot does not get iron and steel; he wants for his cultivation purposes, iron tyres, iron shares and all those things. Then, Sir, insecticides and pesticides are not rushed through in time. These things go to the ryots only after the complete devastation by insects. The Hon. Minister knows that even though these pesticides and insecticides are decided to be given at concessional rates, they are not rushed through in time with the result there is wholesale devastation and the poor ryots are put to all sorts of difficulties.

Then, Sir, with regard to artificial manures, in spite of the fact that it is distributed through co-operative agency, still, we find whether in the private sector or some other sector, I am not in a position to say, there has been blackmarketing and prices are put up abnormally; in addition, they are not rushed through in time, with the result that many of the ryots do not at all purchase these artificial manures. The price of oil cakes also is soaring up like anything. It has gone up by two times or three times the original price at which it was sold some three years ago. Therefore, some effective step should be taken to bring down this rise in prices.

With regard to distribution of good seeds and manures, good seeds of paddy are being introduced, but they are also not supplied in time. So also the green manure seeds.

(Mr. Speaker in the Chair.)

Though these are distributed to ryots at subsidised rates, they are not given in time. In my area, many ryots have been writing letters and letters to the officers concerned, but they were not able to get these manure seeds in time and the latest strains of paddy. That also should be looked into.

With regard to short term loans, Sir, there has been such an inordinate delay and that it has led at certain levels to corruption also. Ryots do not get the entire money applied for. There has

[16th February 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

been delay also. I would, therefore, suggest to the Government to think of issuing long-term loans and that too in time when the agriculturists actually want them, during sowing season, cultivation season and manuring season, etc. They must be given without delay and it should be on a long-term basis. Otherwise, poor ryots will not be in a position to cultivate efficiently.

With regard to the Well Subsidy Scheme, Government were kind enough to give large amount by way of subsidy by getting aid from the Government of India. In my district of Chingleput, I know as a matter of fact that about 10,000 wells were sunk, because the ryots were able to get subsidy in time in those days, with the result many thousand acres have been brought under cultivation. That will go a long way in augmenting food supply. Now also I would request the Hon. Minister to apply to the Government of India to renew the well subsidy scheme so that it may help the poor ryots in bringing large areas under cultivation. That also should be taken into consideration with all earnestness.

With regard to price of paddy, I find that there has been a lot of difference between that of Andhra and Madras State. I saw in the papers that the Minister for Agriculture, Andhra State, has been putting up a strong fight with India Government for increase in spite of the fact that there is difference in price as between Andhra and Madras. Our price when compared to that of Andhra is very low. Also with regard to fixation of varieties, it has been found that there is such a lot of difference. My submission is that there should be only three fixations—one for the super-fine, another for the fine quality and the third for the coarse variety. We find here for about six or seven varieties, prices have been fixed. In regard to item 1, I find that Chingleput sirumani has been fixed at Rs. 11·11, whereas Chinna Samba at Rs. 12·27. Both are the same variety, and they are the finer variety. I do not see why there should be a difference of one rupee in the price. Then, Sir, with regard to G.E.B., I find that Rs. 12·62 is the price fixed. Jeeraka Samba and other finer varieties are not at all grown in our district. For these the price fixed is Rs. 13·79. There has been a lot of difference in the fixation of prices even in regard to the finer qualities of paddy. We find there is a lot of difference between one variety and another. Therefore, my submission is that there should be only three kinds with regard to the fixation of prices, namely, super fine, fine and coarse. This is my submission.

Take the price in Andhra. We are on the borders of the Andhra districts. If there is going to be a difference in price, I am sure that will work a lot of havoc. There will be a lot of smuggling. We have seen this with regard to the price of diesel oil. The rumour we got was that a lot of oil from Pondicherry or Kerala or Andhra was coming in. Therefore, there is sure to be too much of leakage. I would request Government to go into these questions and see that proper prices are fixed so that neither the consumer nor the producer

will be hit hard. Unless this is done, we will find scarcity conditions being created. In this connection, I would quote the speech of an eminent person who says—

"Defective preparatory tillage, primitive cultivation of land, poor quality of livestock, lack of adequate supply of good seeds, diseases, harm from insects and pests, soil erosion, exhaustion, lack of proper manuring, subdivision, and fragmentation of holdings, deficit economy, overcrowding of people on farm land, lack of subsidiary industries and defective organization in cultivation and marketing, all these require patient and skillful investigation and even more prompt application of new knowledge to the actual process of agriculture."

With regard to this new knowledge, I know from practical experience that the Japanese method no doubt produces very good results. But how many ryots have come forward to take to this method? Where are the trained personnel to put the people in the right way? We find that the Agricultural Demonstrators are very busy with the preparation of statistics and going after some officer or other without doing anything tangible. These statistics are prepared in very large numbers, and I do not know whether there are any officers who go through these statistics. Why not this work be reduced to the irreducible minimum so that these Demonstrators may do useful work by coming in contact with the ryots and introducing modern methods and technique so far as agriculture is concerned?

Again, Sir, if any correspondence is started, we find there is inordinate delay. The ryots do not get immediate replies to their letters. If they want any clarification, they do not get it from the officers. Recently, in the Lok Sabha, the Prime Minister was speaking on the fourth annual report of the organization and methods of Division placed on the table of the Lok Sabha. The Prime Minister says—

"The unnecessary horizontal and vertical references were mostly due to the intellectual dishonesty, (i.e.), the reluctance on the part of individual officers to take full responsibility."

This should not be so. There should be officers entrusted with important items of work, and they should be in direct touch with the ryots so that all their problems could be solved very well and as effectively as possible.

Lastly, Sir, I come to the State-trading schemes in food. We have seen how in the rationing days we have bungled very badly. The Civil Supplies Department of the Government of Madras have now come forward with proposals for the writing off of nearly Rs. 14 crores. This proposal is now under the active scrutiny of the Government. I do not want to take up the time of the House by going through the reports of the Commissioner of Civil Supplies, except to point out one or two instances here. In the report of the

Commissioner of Civil Supplies it is seen that there has been shortage in transit of one hundred tons of rice which was noticed in a district in a consignment of 3,900 tons. In another place, the loss noticed in the consignment of rice and paddy held by six co-operative institutions in the Coimbatore district, and which was subsequently handed over to the Government, was nearly Rs. 48,000. This was the state of affairs which we found then. When Government adopted the State-trading schemes, there had been shortage of rice in every place, and there had been uneconomical movements of rice also. For the people of South Arcot, food was rushed from Nellore in those days. There should be no such repetition in State-trading. The movement of food also should be economical. The quantity of paddy and rice were not weighed. This was all due to the inexperienced officers who handled the situation then badly. These things should not be repeated. When we got imports of food through ships, proper weighments were not made in the harbour. This has resulted in a huge shortage, and our State Government had to take the responsibility by incurring a heavy loss. These things should not be repeated I would request the Hon. Minister not to commit such blunders. Everywhere we find there has been a lot of heart burning. We should not try all sorts of experiments with the people. Therefore I would request the Government to go into these things very carefully and come to some decision, a decision which is acceptable to all the people and which will not make people starve. I am aware of these dangers, and that is why I have come forward to suggest to the Government the constitution of a committee consisting of members of all shades of opinion and also some experts to go into the whole question and suggest some practical means by which we can overcome all these defects. This is my submission, Mr. Speaker, Sir.

Mr. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் பதில் அளிப்பதற்கு ஒரு மணி நேரம் வேண்டுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : 40 அல்லது 45 நிமிஷங்கள் வேண்டும்.

Mr. SPEAKER : அங்கத்தினர் யாராவது பேசவேண்டுமென்று விரும்பினால் என்னிடம் பெயர் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் ஒவ்வொரு அங்கத்தினரும் பேசுவதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்கலாம் என்பதை நான் சொல்ல முடியும். இப்பொழுது தற்காலிகமாக ஒவ்வொரு அங்கத்தினரும் 15 நிமிஷங்கள் பேசலாம் என்று சொல்லுகிறேன். இன்னும் அதிகமாக அங்கத்தினர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்தால் இந்த நேரத்தை குறைக்கவேண்டி வரும்.

***Sri K. SATTANATHA KARAYALAR :** கனம் சபாநாயகர் அவர்களே, சமீப மாதங்களில் விலைவாசி உயர்வு விஷம் போல ஏறிக் கொண்டே இருந்தது. ஆனால், இந்தச் சபையில் கொடுத்த சில புள்ளி விவரங்களை பார்க்கும்போது விலைவாசி அந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதா என்பது ஐயப்பாட்டுக்குள்ளாகாக தோன்றுகிறது. 10-ம் தேதி இந்தச் சபையில் உணவு மந்திரி அவர்கள் 1939-ம் ஆண்டில் மொத்த உணவு தானியங்களின் விலைவாசி குறியீட்டு எண் 100-ஆகவும், 1953-ம் ஆண்டில் 351 ஆகவும், 1955-ம் ஆண்டில் 321 ஆகவும், 1958 டிசம்பரில்

480 ஆகவும் இருந்தது, உயர்ந்து அந்த நிலையில் நின்றது என்று சொன்ஞர்கள். அப்படியாஞல் 2 மாதங்களுக்கு முன்பு டிசம்பரிலே மொத்த விலைவாசி, உணவு தானியங்களின் விலைவாசி குறியீட்டு எண் 480 ஆகிறது. கழிந்த ஆண்டு 1957 டிசம்பரில் நிதி அமைச்சர் அவர்கள் கழிந்த பட்ஜெட் சமர்ப்பிக்கும்பொழுது நிகழ்த்திய உரையில் மொத்த உணவு தானியங்களின் விலைவாசி 510-ஆக உயர்ந்திருந்தது என்று குறிப்பிட்டார்கள். அப்படியாஞல் எந்த அளவு இந்தப் புள்ளி விவரத்திற்கு பெரு மதிப்பு கொடுக்கவேண்டும் என்பதை ஆலோசிக்க வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உணவு தானியங்கள் மட்டும் அல்ல. வாழ்க்கைச் செலவு எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்லுவது வேறு புள்ளி விவரம்.

SRI K. SATTANATHA KARAYALAR : அந்த அடிப்படையில் பார்த்தால், மொத்த விலைவாசி குறியீட்டு எண் இன்று சுமார் 550-க்கும் அதிகமாக இருக்கிறது என்பதிலே எந்தவிதமான ஐயமும் இல்லை. அப்படியாஞல், 1939-ல் இருந்த விலைவாசியைப்பார்க்கிலும், இன்று 5½ மடங்குக்கும் அதிகமாக விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பது வெள்ளிடைமலை. அந்த நிலையிலே இந்த விலைவாசி உயர்வை மக்கள் எப்படி சரிக்கட்டிக்கொள்ள முடியும் என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும். இப்படி உணவு தானியங்களின் விலைவாசி ஏறுமுகமாக இருந்துகொண்டிருப்பதற்கு உள்ள காரணங்கள் என்ன என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும்.

10 30 a.m. அகில இந்திய ரீதியில் உணவுப் பெருக்கை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு விலைவாசி அதிகமாக குறைந்திருக்கிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும். அகில இந்திய ரீதியிலும் இன்றைக்கு விலைவாசி உயர்வாகத் தான் இருக்கிறது. அதே சமயத்தில் நாம் மண்டலங்களாக பிரிந்திருக்கின்ற ரீதியில் ஏன் விலைவாசி குறையவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இது எல்லாவற்றுக்கும் மேலாக நம் மாகாணத்தில் உணவு உற்பத்தி எந்த அளவுக்கு பெருகியிருக்கிறது என்பதை நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். உணவு தான்யங்களைப் பொறுத்த வரையில் முதல் முதலில் திட்டமிட்டது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒரிஜினல் டார்ஜெட்டாகத் தீட்டப்பட்டது. நாம் 16 சதமானம் உணவு தான்யங்களை பெருக்க வேண்டுமென்பது. அதாவது நமது மாகாணத்தைப் பொறுத்தவரை 7 லட்சத்தி 12 ஆயிரம் டன் உணவு உற்பத்தி பெருக்க வேண்டும் என்பது திட்டம். இது முதலில் போடப்பட்டிருந்த திட்டம். அதன் பின்ஞல் முசௌரியில் வைத்து கூடிய விவசாய மந்திரிகள் மகாநாட்டில் இதை திருத்தி அமைத்து சென்னை மாகாணத்தில் 25 சதமானம் அதாவது 12 லட்சத்தி 79 ஆயிரம் டன் உணவு உற்பத்தி பெருக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். இது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு போடப்பட்ட திட்டம். இவ்விதம் ஐந்து ஆண்டுகளுக்குமாக 12¾ டன் உணவு தான்யங்கள் உற்பத்தி பெருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற இதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டுக்கும் குறிப்பிட்ட அளவிலாவது நாம் பெருக்கியிருக்கிரேமா என்பதை நாம் பார்க்கவேண்டும். முதல் ஆண்டில் அதாவது 1956–57-வது ஆண்டில் இரண்டு லட்சம் டன் உணவு உற்பத்தி பெருக்கியிருக்கிறேம். அடுத்ததாக 1957–58-வது ஆண்டில் 32 ஆயிரம் டன்தான் பெருகியிருக்கிறது என்று தெரிகிறது. அதே போன்று தான் நடைமுறை ஆண்டிலும் கிட்டதட்ட 50 ஆயிரம் டன்னுக்கு மேல் உற்பத்தி பெருகவில்லை என்று தெரிகிறது. ஆஞல் கழிந்த ஆண்டு இந்த சர்க்கார் 3 லட்சம் டன் நம்மால் பெருக்க முடியும் என்று சொன்ஞர்கள். கவர்னர் அவர்களுடைய உரையில் "Will make relentless efforts to achieve the target" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் மூன்று லட்சம் டன் 1957–58-வது ஆண்டில் பெருக்க முடியும் என்று குறிப்பிட்டு விட்டு அதன்படி உணவு உற்பத்தியைப் பெருக்கவில்லையென்றால் அதன் காரணங்கள் என்ன என்பதை நாம் பரிசீலிக்க வேண்டியது மிகமிக அவசியம். இதற்காக செலவு செய்ய ஒதுக்கியிருந்த பணம் செலவு செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்தால் செலவு செய்யப்பட்டிருப்பதாகத்தான் தெரிகிறது. அல்லாமல் பற்றுக்குறை ஒன்றும் ஏற்பட்டுவிட்டதாக தெரியவில்லை. சமுதாய நலத்திட்டங்கள் மூலமாகவும் வேறு பல வழிகளிலும் ஆறு கோடி ரூபாய் இந்த துறையில் செலவு செய்யப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆஞல் இந்தப் பணத்தை எல்லாம் எந்த முறையில் செலவு செய்துள்ளோம் என்பதை நாம் பார்க்கவேண்டும். அதே நேரத்தில் இவ்வளவு பணம் செலவு செய்தும் உணவு உற்பத்தி குறிப்பிட்ட அளவுக்கு பெருகவில்லையென்றே தெரிகிறது. உணவுப் பெருக்கத்தையும் ஜனங்களின் பெருக்கத்தையும் எடுத்துப் பார்த்தால் 1·38 சதமானம் வளரும் ஜனத் தொகைக்கு சமமாக இருக்கும். நம்முடைய லட்சியமாகிய 12¾ லட்சம் டன் உணவு உற்பத்தி பெருக்கவேண்டும் என்பதில் நாம் நம்முடைய ஒரு ஆண்டு குறிக்கோளான மூன்று லட்சம் டன் அளவுக்காவது பெருக்கியிருக்கிரேமா என்று பார்த்தால் அந்த அளவுக்கும் பெருகவில்லை. முதல் ஆண்டில் உணவு உற்பத்தியை பெருக்கியிருந்தாலும்கூட இரண்டாவது ஆண்டில் நம்முடைய டார்ஜெட்டின் அளவுக்கு பெருக்கியிருக்கிரேமா என்று பார்த்தால் அது பத்தில் ஒரு பங்கு கூட இல்லை என்று சொல்லலாம்.

அடுத்தபடியாக இந்த உணவு தான்யங்களை பெருக்குவதற்கு போடப்பட்டிருக்கிற திட்டங்களில் மிகவும் முக்கியமான திட்டம், விதைப் பண்ணைகளை ஏற்படுத்துவது என்பது. அது ஒரு அதிகமான அளவில் பணம் செலவு செய்யக்கூடிய ஒரு திட்டமாகும். அந்தத் திட்டத்தில் கழிந்த இரண்டு ஆண்டுகளில் செலவு செய்த அளவுக்கு நாம் உணவு உற்பத்தியை பெருக்கியிருக்கிரேமா என்பதை நாம் பார்க்க வேண்டியது அவசியம். உயர்ந்த ரக விதைகளை உற்பத்தி செய்வதின் மூலம் நாம் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி சுமார் இரண்டு லட்சம் டன்னும் அதன் பின்ஞல் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் (ரிவைஸ்ட் டார்ஜெட்) படி நான்கு லட்சம் டன்னும் பெருக்குவதாக இருந்தோம். ஆஞல் நான் மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த விதைப் பண்ணைகளின் மூலமாக கிஞ்சித்தேனும் நம்முடைய திட்டத்திற்கேற்ப உணவு உற்பத்தி பெருகவில்லை என்பதை இந்த சபையில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலிருந்து தெரியவருகின்றது. நமது நாட்டில் சுமார் 360 விதைப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆஞல் இதுவரை 184 விதைப்பண்ணைகள் தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் சமீப காலத்தில் பல விதைப்பண்ணைகளை நாம் மூடியிருக்கிரேம். இப்போது நாம் எடுத்து இருக்கும் விதைப்பண்ணைகள் மூலமாக நாம் விதைகளை நல்ல விதத்தில் அபிவிருத்தியடையச் செய்திருக்கிரேமா என்று பார்த்தால் குறிப்பிடத்தக்க அளவுக்கு தகுந்த பலனை அளிக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்ருல் விதைப் பண்ணைகளுக்கு எடுத்துக் கொண்ட நிலங்கள் எல்லாம் மோசமான இடங்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும் கழிசடையாக இருக்கக்கூடிய இடங்கள்தான் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் எடுக்கப்பட்ட இடங்களில் நல்ல முறையில் விதைப் பண்ணைகளை வைத்து பலனை காண முடியாது. ஒவ்வொரு வட்டாரத்திலும் அங்கு இருக்கின்ற நிலபுலன்களை எல்லாம் விசாரித்துப் பார்த்து நிலங்களின் தரத்தை அறிந்து அதில் நல்ல தரத்தில் இருக்கக்கூடிய நிலங்களை எடுத்தால்தான் இதற்கு நல்ல முறையில் பயன்படும். ஆஞல் அவ்விதம் ஒவ்வொரு வட்டாரத்திலும் நிலங்களை எடுப்பதற்கு பல சிக்கல்கள் இருக்கின்றது என்பது என் போன்றவர்களுக்கு நன்கு தெரியும். ஒவ்வொரு இடத்திலும் நல்ல நிலங்களை வைத்திருக்கக்கூடிய நிலச்சுவாந்தார்களும் பெரிய மிராசுதார்களும் நிலங்களை கொடுப்பதில்லை. சில இடங்களில் இம்மாதிரிப்பட்ட இடங்களை மிகவும் கஷ்டப்பட்டுத்தான் எடுக்க வேண்டியிருக்கிறது. ஆஞல் இவ்விதம் நல்ல இடங்களை எடுப்பதற்கு நாம் பல சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிரேம். அதன் அடிப்படையில் விதைப்பண்ணைகளை அமைப்பதற்கு நல்ல நிலங்களை பொறுக்கி

[Sri K. Sattanatha Karayalar] [16th February 1959

யெடுத்து, அதற்கான நியாயமான விலை கொடுத்து அதை சர்க்காருக்கு சொந்தமாக்கிக்கொண்டு திட்டவட்டமாக நல்ல முறையில் வேலை செய்வதற்கு திட்டமிடப்படவேண்டும். இப்போது நாம் போட்டிருக்கும் திட்டத்தில் அடிப்படையில் ஒரு ஏக்கருக்கு சுமார் 2,000 ரூபாய் கொடுக்கலாம் என்று ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் நெல்லை பகுதிகளில் நல்ல நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு பத்தாயிரம் ரூபாய் வரையிலும் கொடுக்கவேண்டியிருக்கிறது. அது மாத்திரமல்ல. ஒரு ஏக்கருக்கு 200 ரூபாய், 250 ரூபாய் வீதம் லீஸ்-க்கு (குத்தகை) கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவ்விதம் எடுக்கப்பட்டிருக்கும் விதைப்பண்ணைகள் எல்லாம் அதிகமாகவும் நஷ்டத்தில் தான் வேலை செய்து வருகின்றன என்று திரு. வைத்தியநாதன் அவர்கள் ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு அவர்கள் நல்ல நிலங்களை எடுத்து விதைப் பண்ணைகளை ஏற்படுத்தினால்தான் பயன் கிடைக்கும். இப்போது நமது திட்டத்தில் விதைப்பண்ணைகளை எடுப்பதற்காக 87 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்தத் தொகையை மும்மடங்காக அதிகரிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது ஏக்கர் ஒன்றுக்கு 2,000 ரூபாய் என்று மதிப்பு வைத்து அதன் அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று பார்த்தால் நாம் நல்ல நிலங்களை தேர்ந்தெடுக்க முடியாது. ஆனால் நல்ல நிலங்களை விதைப்பண்ணைகளுக்குப் பொறுக்கி எடுக்க வேண்டும் என்று சொன்னால் நாம் பல கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே நான் சொல்லுவது என்னவென்றால் இம்மாதிரி மோசமான நிலங்களை எடுத்து விதைப்பண்ணைகளை அமைப்பதைவிட நல்ல நிலங்களை தேர்ந்தெடுத்து குறைவான எண்ணிக்கையுள்ள விதைப்பண்ணைகளை ஏற்படுத்தினால் போதும் என்பதுதான். குறைவாக விதைப்பண்ணைகள் இருந்தாலும் அதிலிருந்து கிடைக்கக்கூடிய விதைகள் சிறந்தவைகளாக இருக்க வேண்டும். சில இடங்களில் விதைப் பண்ணைகளிலிருந்து எடுக்கப்படும் விதைகள் ஒன்றுக்கும் பயன்படாமல், உணவுக்குக்கூட உருப்படாமல் இருக்குமானால் நாம் எந்த அளவுக்கு இந்த நாட்டில் உணவு உற்பத்தியை பெருக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். விதைப்பண்ணைகள் ஏற்படுத்துவதில் நாம் அடிப்படையாக வைத்துக்கொண்டிருக்கக்கூடிய திட்டங்களை மாற்ற வேண்டும். அப்போதுதான் நாம் விதைப்பண்ணைகளை சரியான விதத்தில் சீரமைக்க முடியும். விதைப்பண்ணைகள் இன்று இருக்கக்கூடிய இதே முறையில் இருக்க வேண்டுமா என்று பரிசீலிக்கவேண்டும். ஒவ்வொரு சிறு சிறு குக்கிராமங்களுக்கும் ஒரு விதைப் பண்ணை இருக்க வேண்டுமா அல்லது டெவலெப்மெண்ட் பிளாக்குக்கு ஒரு விதைப் பண்ணை என்று இருக்க வேண்

10-40 a.m. டுமா என்று பரிசீலிக்கவேண்டும். ஒரு மாவட்டத்தில் நல்ல இடமாக பார்த்து, 25 ஏக்கர் அல்லது 50 ஏக்கர் என்று இருப்பதை, 100 ஏக்கரோ அல்லது ஒரு "எக்கனமிக் யூனிட்" என்று சொல்லக்கூடிய முறையில் இருக்கலாமா என்று பார்க்க வேண்டும். இன்று ஒரு விதைப்பண்ணைக்கு ஒரு உத்தியோகஸ்தரைப் போடுகிறோம், ஒரு மேஸ்திரியைப் போடுகிறோம்; இத்தனை ஆட்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூடிய முறையில் இருந்தால் பலன் தருமா என்று பார்க்க வேண்டும். மொத்தமாக 100 ஏக்கர் நல்ல இடமாக எடுத்துக்கொண்டு, சட்டத்தில் இருக்கக்கூடியவைகளைப் பயன்படுத்திக் கட்டாயமாக எடுக்கவேண்டுமானால் கட்டாயமாக எடுக்க வேண்டும். இப்போது நிலவுடமைக்கு வரம்பு கட்டக்கூடிய கால கட்டத்தில் இருக்கக்கூடிய நேரத்தில் பலரும் தங்கள் நிலத்தைக் கொடுக்க முன் வருவார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் நல்ல பகுதிகளாகப் பார்த்து 100 ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொள்ளும்போது அந்த வட்டாரத்தில் யார் யாருக்கோ யாருடைய செல்வாக்குக்கோ—உத்தியோகஸ்தர்கள் பணிவாரானால் அதை விட வெட்கக் கேடான ஒரு விஷயம் இருக்க முடியாது. அத்தகைய உத்தியோகஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த ஆண்டிலே ரெவின்யூ இலாகாவிற்கும், விவசாய இலாகாவிற்கும் ஒற்றுமை இல்லாத முறையில், விவசாய இலாகா ஒன்றைச் சிபாரிசு செய்ய, அதற்கும் உயர்ந்த ரேட்டைக் கொடுக்க வேண்டும் என்று ரெவின்யூ இலாகா சொல்லி உயர்ந்த ரேட் கொடுக்கப்பட்டிருப்பது வருந்தத் தக்கது.

16th February 1959] [Sri K. Sattanatha Karayalar]

நிலச் சொந்தக்காரர்கள்கூட உயர்ந்த வாடகை கேட்காத நேரத்திலே கூட, இன்னும் உயர்வாக இந்த நிலத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று ரெவின்யூ இலாகா அதிகாரிகள் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்றால் அது மிகவும் வருந்தத் தக்க விஷயம். சர்க்கார் பணத்தைச் சிக்கனமாக — சிறந்த முறையிலே — — செலவு செய்யக் கடமைபட்டிருப்பவர்கள் உத்தியோகஸ்தர்கள். அப்படிக்கில்லாமல் வீணாக, விரயம் செய்யக்கூடிய முறையில் நடந்துகொண்ட உத்தியோகஸ்தர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கோருகிறேன்.

அடுத்தபடியாக இதேபோல மிகவும் வருந்தத் தக்க ஒரு முறை இன்று உர வினியோகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. உரத்தைப் பொருத்தமட்டில் ஒரு பெரிய சிக்கலாக இருக்கக்கூடும். கெமிகல் மென்யூர் நல்ல முறையில் கிடைப்பதில்லை. உரம் வினியோகம் செய்யக்கூடியவர்களாக இருக்கக்கூடிய வினியோகஸ்தர்கள் யார், யார், அவர்கள் யார் யாருக்கு உறவு என்று பார்ப்போமானால் அதுவும் வருந்தத் தக்க ஒன்றாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சமீப காலத்தில் விலை வாசி உயர்வைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகளைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன்.

நம் மாகாணத்திற்குத் தேவை 45 லட்சம் டன் – நமக்கு 45 லட்சம் டன் போதும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த 45 லட்சம் டன்னிலே இப்போது 2 லட்சம் டன் கொள்முதல் செய்யப் போவதாகச் சர்க்கார் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தானியம் மலிவு தானியக் கடைகள் மூலமாக, கூட்டுறவு சங்கக் கடைகள் மூலமாக வினியோகிக்கப்படும் என்றும் தெரிகிறது. 2 லட்சம் டன் என்பது மிகவும் குறைந்த எண்ணிக்கை. சுமார் 10 லட்சம் டன் வரையில் கொள் முதல் செய்தால்தான் மலிவான முறையில் வினியோகிக்க போதுமானதாக இருக்கும். இன்று இருக்கக்கூடிய முறையில் தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் மாத்திரம் தான் நெல் கொள் முதல் செய்வதாகத் தெரிகிறது. நான் சொல்வதெல்லாம், பெருமளவு கிடைக்கக்கூடிய இடங்களை எடுத்துக்கொள்வதோடு விவசாய வருமான வரி செலுத்துபவர்கள் யார் யார் என்ற புள்ளி விவரம் நம்மிடம் உண்டு. இந்த விவசாய வருமான வரி கொடுக்கக் கூடியவர்களிடமிருந்து குறிப்பிட்ட அளவு நெல் கொள் முதல் செய்துதான் ஆகவேண்டும். எல்லா இடங்களிலும் கொள் முதல் செய்ய ரெவின்யூ இலாகாவிற்கோ அல்லது மற்ற உத்தியோகஸ்தர்களுக்கோ கொடுக்காமல், வியாபாரிகளைப் பொறுப்புக் கட்டி, வியாபாரிகளுக்கு குறிப்பிட்ட நிலச்சுவான்தார்களிடமிருந்து இத்தனை மூட்டை நெல் கொள் முதல் செய்யலாம் என்று திட்டப்படுத்தினால், ஊழல் எதும் நிகழாமல் இருக்கலாம். நிர்வாக உத்தியோகஸ்தர்கள் கையில் கொடுத்தால் அதுவும் கடைக் கோடியில் இருக்கும் உத்தியோகஸ்தர்கள் கையில் கொடுக்கும்போது லஞ்சத்திற்கும் ஊழலுக்கும் இடம் ஏற்படும் என்று அமைச்சர் அஞ்சலாம். அதைத் தவிர்க்க, கொள் முதல் செய்யும் பொறுப்பு வியாபாரிகள் கையில் விட்டுவிட்டால் அவர்கள் நல்ல முறையில் வியாபாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் மலிவுக் கடைகளுக்கு அவர்களிடமிருந்து கொள் முதல் செய்துகொள்வார்கள். சமீபத்தில் நடந்துகொண்டிருக்கக்கூடிய மலிவு தானியக் கடைகள் மாவட்டக் கலெக்டர் அவர்கள் மாவட்டத்திலே ஒரு மாநாடு கூட்டி, வியாபாரிகளிடம் "நீங்கள் இத்தனை மூட்டை தானியம் கொடுக்கவேண்டும்" என்று கேட்க, அவர்கள் ஏதோ தானம் கொடுப்பது போல ஒவ்வொருவரிடத்திலும் சென்று கூறி 5 மூட்டைகள், 10 மூட்டைகள் வாங்கினார்கள். ஒவ்வொரு மூட்டைக்கும் 5 ரூபாய் நஷ்டம் என்று சொல்லிக்கொண்டே, கலெக்டரே வந்திருக்கிறார் என்று கொடுக்கிறோம் என்று கொடுத்தார்கள். எங்கள் மாவட்டக் கலெக்டர் உணவு தானிய வினியோகம் வருமானால், இப்போது உதவிய வியாபாரிகளுக்கு முதலிடம் கொடுப்போம் என்று [illegible] பல வியாபாரிகள் கொடுத்தார்கள். நெல்லை மாவட்டத்திலும்

இன்றைக்கு அதிகமான மலிவு தானியக் கடைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிலும் செங்கோட்டை, தென்காசி பகுதியில் அந்த ஜில்லாவிலேயே அதிகப்படியான கடைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் நல்ல முறையில் செயலாற்ற வேண்டுமானால், இன்று இருக்கிற முறையில் எத்தனை நாட்கள் இப்படி கஷ்டப்பட்டுக்கொண்டு இந்த வியாபாரத்தை நடத்துவார்கள் என்று சர்க்கார் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பரவலாக மலிவு தானியக் கடைகள் நல்ல முறையில் இயங்க வேண்டுமானால், இதற்கு 10 லட்சம் டன் வரையில் இப்போது வரக்கூடிய அறுவடை காலத்திலேயே கொள் முதல் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஆலோசனை கூறுகிறேன். இப்படி நடவடிக்கை எடுக்கத் தயங்கினால் விலைவாசி – மொத்த விலைவாசி – விசேஷமாகக் குறையாது என்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

Sri P. G. KARUTHIRUMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று சபையின் முன் இருக்கும்படியான இந்த உணவு விற்பனைப் பிரச்னையிலே என்னுடைய சில – சிறிய – கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இப்போது இங்கு விலைகள் அதிகமாகிக் கொண்டிருக்கும்படியான காரணத்தினால், நியாயமான விலைக்கு தானியங்கள் – குறிப்பாக அரிசி கிடைக்கவேண்டுமென்று சர்க்கார் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஆனால், முதலில் நியாயமான விலை உண்பவர்களுக்கா அல்லது உண்டாக்குபவர்களுக்கா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டியது முக்கியமான ஒரு விஷயம். அப்படிப் பார்க்கும்போது நியாய விலை உண்பவர்களுக்குத் தான் இருக்கிறது. உண்டாக்குபவர்களுக்கு நியாய விலை இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கூடிய நிலையில்தான் இருக்கிறோம். ஏனென்றால், ஒரு தானியத்தின் விலை கட்டுபடியான விலையாக இருக்க வேண்டும். அந்த தானியத்தை உற்பத்தி செய்வதில் ஆகும் செலவை அடிப்படையாக வைத்துத் தான் நியாய விலை இருக்கவேண்டும். கிராமத்தில் 100-க்கு 75 பேர்கள் கிராமவாசிகள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் — அவர்களிடமிருந்து நியாய விலை வேண்டுமென்று எந்த விண்ணப்பமும் வரவில்லை. யார் நியாய விலை வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்றால், சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்கள், உபாத்தியாயர்கள், பட்டணத்தில் இருப்பவர்கள் முதலியவர்களிடமிருந்துதான் நியாய விலை வேண்டும் என்ற விண்ணப்பம் வருகிறது. கிராமத்தில் இருப்பவர்கள் விவசாயிகள் ஒன்று சேர்ந்து நியாயமான விலையை அறிவிக்கும் நிலையிலில்லாமல் இருக்கிறார்கள். இரவு பகலாக அங்கு பாடுபடுவதற்கு அவர்களுக்கு 12 அணா கூலி கிடைக்கிறது. ஒரு மில்லில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிக்கு 100 ரூபாய் மாதச் சம்பளம் கிடைக்கிறது. 12 அணா அல்லது 1 ரூபாய்க்கு ஒரு தொழிலாளி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது அவனுக்கு அந்தச் சை கொடுக்காமல், எங்கோ இருப்பவர்களுக்கு — புரட்சி செய்கிறோம் என்று சங்கம் வைத்திருப்பவர்களுக்கு தானியக் கொள் முதல் செய்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். அரிசி விலை குறைந்தால் எல்லாம் குறைந்து விடும், அரிசிதான் மற்ற எல்லாவற்றிற்கும் அடிப்படை என்று சொல்லி வந்ததானது, இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு அது ஓடி விட்டது. அரிசி விலை குறைந்தாலும் மற்ற தானியங்களின் விலை குறையாமல், "பித்தம் தெளிந்தால் தான் கல்யாணம், கல்யாணம் ஆனால் தான் பித்தம் தெளியும்" என்ற மாதிரித்தான் அரிசி விலையின் ஏற்றத் தாழ்வும் இதர விலைகளின் ஏற்றத் தாழ்வும் இருக்கின்றன. (குறுக்கீடு) என்னுடைய நிலைமையைப் பற்றிக் கவலைப் [illegible] இடையாது. விஷயமே தெரியாது நீங்கள் [illegible]

கொண்டிருப்பதால்தான் நான் வரவேண்டியிருக்கிறது. ஆகையால் குடியானவர்களுடைய நிலையைப் பார்க்க வேண்டும். சுயநலத்திற்காக பேசுகிறேன் என்று எண்ணக் கூடாது. இன்றைக்கு பிண்ணாக்கு விலை எப்படி இருக்கிறது. பருத்திக்கொட்டை விலை எப்படி இருக்கிறது என்றால் 3 ரூபாய் இருந்தது இப்போது 21 ரூபாயாக இருக்கிறது. அதல்லாமல் விவசாயத்திலே, கால்நடைச் செல்வத்திற்குச் சரியான உணவு கொடுக்காவிட்டால் விவசாயம் நடக்காது. 5 ரூபாய்க்கு விற்ற பிண்ணாக்கு இன்றைக்கு 25 ரூபாய்க்குக் கூட கிடைக்காத நிலை இருக்கிறது. இதையெல்லாம் பார்த்து, பிறகு நியாயமான விலையைச் சர்க்கார் வைத்தால் நிச்சயமாக, சந்தோஷமாக வரவேற்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், அதற்கு உதாரணம் வேண்டுமென்றால் சர்க்கார் நடத்துகின்ற விவசாயப் பண்ணைகளிலே (கவர்ன்மெண்ட் பார்ம்) உற்பத்தி செய்வதற்கான செலவு என்ன, கட்டுபடியாகும்படியான விலை என்ன, லாபம் என்ன என்பதைச் சொல்வார்களானால், நாமும் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். ஆனால், இஷ்டமான விலைக்கு விற்றுவிடலாமா, விற்றுவிட்டால் பண வீக்கம் ஆகாதா ? என்று சொல்லலாம். அதிகமான விலைக்கு விற்கவேண்டும் என்று சொல்லவில்லை ; கட்டுப்படியான விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். அதே நேரத்தில் கருணை கூர்ந்து கிராம விவசாயிகள், விவசாயக் குடிகள், விவசாயப் பண்ணையிலே வேலை செய்யும்படியான விவசாயத் தொழிலாளிகளையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும், அவர்களைப்பற்றியும் சற்று சிந்திக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு தானியத்திலேதான் நாங்கள் கொடுக்கிறோம். விலை விலை மாற்றம் ஏற்படும்படியான சமயத்திலே பணமாகத்தான் நாங்கள் கொடுப்போம் என்று அவர்கள் மாற்றி விடலாம். விலைவாசியின் ஏற்றத் தாழ்வைப் பொறுத்து விவசாயிகளுக்குக் கொடுக்கும் கூலியை தானியத்திலிருந்து பணத்திற்கும், பணத்திலிருந்து, தானியமாகவும் மாற்றிக் மாற்றிக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.

இப்பொழுது நூற்றுக்கு 70 பேர்கள் உண்மையாக கிராமத்தில் வசிக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் உண்மையாக இருக்குமானால், பாக்கியுள்ள 100க்கு 30 பேர்கள் நகரப் பகுதிகளில் வசிக்கிறார்கள் என்ற புள்ளி விவரமும் உண்மையாக இருக்குமானால், நாம் உணவு தானிய விலைக் கட்டுப்பாட்டைப்பற்றி எதுவும் செய்யவேண்டிய அவசியம் இல்லை. இதற்கு நாம் கட்டுப்பாட்டை செய்தோம் என்றால், இதர தொழில்களிலும் கட்டுப்பாடு செய்து, அந்த உற்பத்தியாளர்களுக்கு நாம் எப்படி கொடுக்கிறோமோ அதேபோல் விவசாய உற்பத்தி செய்கின்றவர்களுக்கும் செய்யுங்கள் என்றால், முடியாது என்று சொல்லுகிறார்கள்.

பருத்தி உற்பத்தி செய்யும் ஏழை விவசாயிக்கு பொதி ஒன்றுக்கு ரூ. 110 கிடைக்கிறது என்று சொன்னால், அதே ஒரு பொதி பருத்தியை வைத்துக்கொண்டு துணி உற்பத்தி செய்யும் துணியின் மதிப்பு ரூ. 950 ஆகிறது. இப்படி வித்தியாசம் இருக்கிறது. பருத்தி உற்பத்தி செய்யும்படியான விவசாயிக்கு என்ன கிடைக்கிறதோ, அதை விட பத்து மடங்கு அதிகமான விலை துணி உற்பத்தி செய்கிறவர்களுக்குக் கிடைக்கிறதென்றால், இதில் என்ன நியாயம் இருக்கிறது என்று நான் கேட்கிறேன். துணியின் விலை நியாயமாக இருக்குமானால், பருத்திக்கும் கட்டுப்படியான விலை கிடைத்தால்தான், அதை உற்பத்தி செய்த விவசாயி உண்மையிலேயே சந்தோஷப்பட முடியும். அப்படி இல்லாத நிலையில் தானியத்திற்குத் தானியம், பயிருக்குப் பயிர் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது.

உற்பத்தியையெல்லாம் அதிகம் பெருக்கிவிட்டோம், நவீன முறையில் விவசாயம் செய்கின்றோம் என்றால் அதில் சந்தேகம் இல்லை. ஆனால், விவசாயிகள் விளைச்சலை அதிகமாக்குவதும், குறைவாக்குவதும் எதிலே இருக்கிறதென்றால், நாம் போடும் திட்டங்களிலே ஒரு பகுதி இருக்கும் [illegible]

காலா காலத்தில் மழை பெய்யாத காரணத்தால் உற்பத்தி குறைந்து விடும். ஆனால், அதே மழையினால் கெடுதல் ஏற்படுவதும் உண்டு. நெற்பயிர் கதிராகி அறுவடையாக வேண்டிய சமயத்தில் ஒரு நாளைக்கு மழை பெய்தால் போதும், ஒரு வருஷம் விவசாயி பட்ட பாடெல்லாம் வீணாகிப் போய்விடும். பயிர் சாவியாகப் போகும்; அல்லது பயிர் கருகி விடும். இதை ஒரு திட்டமாக வைத்து இவ்வளவு தான் விளைச்சல் ஏற்படும் என்று கடைசி வரையில் சொல்ல முடியாது. மனிதனுடைய ஆயுளுக்கு இன்ஷ்யூரன்ஸ் ஏற்படுத்தியிருப்பது போல், விவசாயிக்கு உற்பத்தி செய்வதற்கு ஆன செலவாவது கிடைக்கும்படியாக இருந்தால் விவசாயி நல்ல முறையிலே வாழ முடியும் என்று பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நெல் உற்பத்தி ஏனைய தானியங்களை விட இன்று அதிகமாகியிருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் என்ன? நெல் ஏன் அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது? அரிசி சாப்பிடுகிறவர்கள் அதிகமாகிக் கொண்டு வந்திருப்பதுதான் அதற்குக் காரணம். இன்று அரிசி சாப்பிடுவதில் ஒரு மோகம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். அரிசி உணவு சாப்பிட்டால்தான் மிக நன்றாக இருக்கும் என்ற எண்ணம் வளர்ந்து கொண்டு வந்திருக்கிறது. ஆனால், பழைய காலத்திலே, சங்க காலத்திலே கூட அரிசியை அபூர்வமாகத்தான் உபயோகித்தார்கள். திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் கூறியிருப்பதாவது:

“சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ...........”

அந்தக் காலத்தில் கம்பு, கேழ்வரகு முதலிய புஞ்சை தானியங்களை அதிகமாக உபயோகித்து வந்திருக்கிறார்கள். வெகு அழகாக உபயோகித்துக் கொண்டிருந்தார்கள்.

SRI A. GOVINDASAMY: தினையைக்கூட உபயோகித்திருக்கிறார்கள்.

SRI P. G. KARUTHIRUMAN: தினை என்னும்போது எல்லாப் புஞ்சை தானியங்களையுமே உபயோகித்தார்கள் என்று சொல்லலாம். இப்பொழுது புஞ்சை தானியம் உண்பது குறைந்து, அரிசி உண்போர் அதிகமாகி விட்ட காரணத்தால் அரிசி உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. அரிசித் தானியத்தின் விலை அதிகமாக இருப்பது தான் அரிசி அதிகமான உற்பத்திக்கு முக்கியமான காரணம். விலைவாசி ஓரளவு அதிகமாக இருப்பதால்தான் அரிசி உற்பத்தி அதிகரித்திருக்கிறது. அணைத்திட்டங்கள் ஓரளவு இருந்தாலுங்கூட, அரிசி விலை சுமாரான விலையாக, ஓரளவு கட்டுப்படியாகக்கூடிய விலையாக இருப்பதால், அரிசி உற்பத்தி பெருகியிருக்கிறதே தவிர, விலைக் கட்டுப்பாடு செய்துவிட்டால் அது எந்த நிலையிலே இருக்குமோ எனக்குத் தெரியாது. நாம் செய்யும்படியான முறைகள் நன்றாக இருக்க வேண்டும். செய்யும்படியான திட்டங்கள் நன்றாக இருக்க வேண்டும். அதோடு கொடுக்கும்படியான விலையும் நன்றாக இருக்க வேண்டும். இரண்டாவது உலக மகாயுத்தத்திலே அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதம மந்திரியாக இருந்த சர்ச்சில் அவர்கள் யுத்தத்தில் ஜெயிக்க வேண்டுமானால் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி மக்களைப் பார்த்து அன்று கேட்டார்கள். அப்பொழுது அந்த மக்கள், “இட்லர் என்ன தான் குண்டு மாரி பொழிந்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை, எங்களுக்கு வேண்டிய ஆயுதங்களைக் கொடுங்கள், நாங்கள் ஜெயித்து விடுகிறோம்” என்று சொன்னார்கள். அதாவது, “Give us the tools. we will finish the job.” என்று சொன்னார்கள். அது போல, விவசாயியாகிய நாம் பட்டினி, பஞ்சம் என்பது நாட்டில் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளமுடியும், ஆனால் நாங்கள் கேட்பது, பொது மக்களிடமிருந்து நாங்கள் கேட்பது, எங்களுக்குக் கட்டுப்படியான விலையைக் கொடுங்கள் என்பதுதான். கட்டுப்படியான விலையை கொடுத்தால் நாங்கள் உணவு உற்பத்தியை நூற்றுக்கு நூறு சத விகிதம் பெருக்கித் தருவோம் என்று உறுதியாக நாங்கள் சொல்வோம்

(ஆரவாரம்). கட்டுப்படியான விலை, நியாயமான விலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்குக் கிடைக்கும்படியான நிலை இருக்குமானால், இந்த உணவுப் பிரச்னையை எப்போதோ தீர்த்து விட்டிருப்போம். நிலை இல்லாத சமாசாரம் இருப்பதால்தான், உணவுப் பிரச்னை என்பது இருந்துகொண்டிருக்கிறது.

விலையை நிர்ணயிப்பதிலேகூட நான் சில ஆலோசனை கூற முடியும். நெல்லிலே இரண்டு ஜாதி இருப்பதைப் பார்க்கிறோம். கார், சம்பா என்ற இரு ஜாதி இருக்கும். ஆனால், இதை இப்பொழுது ஒன்பது பகுதியாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு நம்பர் கொடுத்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு விலை நிர்ணயித்திருப்பதை விவசாயி என்ற முறையில் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை.

அதனுடைய விலை எப்படி இருக்கிறதென்றால், 9 ரூபாயிலிருந்து 13½ ரூபாய் வரையில் போகிறது. ஒவ்வொரு நம்பருக்கும் ஒரு விலை என்று விதித்திருப்பதால் எது எது எந்த எந்த நம்பர் நெல் என்று தெரியாத நிலையில் விவசாயி இருப்பதோடு, வாங்குபவர்களுக்கும் புரிவதில்லை. உண்மையாக விவசாயம் தெரிந்த எனக்கே இது பற்றித் தகராறு இருக்கும்போது சாதாரண விவசாயிகள் மிகவும் ஏமாற்றப்படுவார்கள் என்று நான் அஞ்சுகின்றேன்.

விலை நிர்ணயிக்கும்படியான சமயத்தில், காலத்தை அனுசரித்து, பயிர்களுடைய வளத்தை அனுசரித்து வைக்கலாம். கார் நெல், சம்பா நெல் இவற்றிற்கு என்ன விலை என்று சொல்லி விடலாம். அதிலே இந்த நெல் சாப்பிடுவதற்கு நன்றாக இருக்கும், அந்த நெல் சாப்பிடுவதற்கு நன்றாக இருக்காது என்று சொல்வதும், அதற்கு ஒரு விலை என்று வைப்பதும் பொருத்தமாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு நெல் ஒவ்வொருவருக்குப் பிடிப்பதும், பிடிக்காததும் அவரவருடைய மனப்பான்மையைப் பொருத்திருக்கிறதே தவிர வேறு அல்ல. தஞ்சாவூர் வாசிகளுக்கு ஒரு வேளை நீண்ட அரிசி சாப்பிட்டால் தொண்டையில் இறங்காமல் இருக்கக்கூடும். குண்டு அரிசி சாப்பிடுவதை ஒரு வேளை அவர்கள் விரும்பலாம். அதனால், தஞ்சாவூர்வாசிகள் குண்டு நெல்லாகவே வாங்கிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ரக வாரியாகப் பிரிக்காமல், இரண்டே ரகமாகப் பிரிப்பது நல்லது. ஏனென்றால், பொதுவாக எந்த நெல் உற்பத்தி செய்யவேண்டுமென்றாலும், அதற்குச் செலவு ஒன்றுதான், உழைப்பு ஒன்றுதான், தண்ணீரும் ஒன்றுதான். அப்படியிருக்க இதற்கு ஒரு விலை, அதற்கு ஒரு விலை என்று ஜாதிவாரியாகப் பிரிப்பது சரியல்ல. ஜாதியை ஒழிக்கவேண்டும் என்று சொல்லப்படும் இந்த நாளில், நமது அரசாங்கத்தார் நெல்லிலே ஜாதிகளை வைத்து, விலை வித்தியாசம் உண்டாக்காமல் இருப்பது நல்லது என்பதுதான் என்னுடைய கருத்து. வேண்டுமானால், குறுகிய காலப் பயிருக்கு ஒரு விலை இருக்கலாம்; நீண்ட காலப் பயிருக்கு இன்னொரு விலை இருக்கலாம். ஆனால், இரண்டு நெல்லுக்கும் உள்ள வித்தியாசம் மணங்கு ஒன்றுக்கு ஒரு ரூபாய் இருக்கலாம். அதற்கு மேல் இருக்கக்கூடாது. ஒரு நெல்லுக்கும் இன்னொரு நெல்லுக்கும் உள்ள வித்தியாசம் ஒரு மூட்டைக்கு ரூ. 6 இருக்கிறது. அமைச்சர் அவர்கள் புனராலோசனை செய்து கணக்கில்லாத ஜாதியைப் போக்கி, நெல்லை இரண்டே இரண்டு வகையாகப் பிரித்து மாற்றியமைக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபா நாயகர் அவர்களே, நெல்லிலே இரண்டே ஜாதிகள் இருக்கலாம் என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். அதோடு அவர் திருப்தி அடைகிறார் என்று அறிய விரும்புகிறேன். இரண்டு விலை போட்டு விடுவதைப் பற்றிச் சொல்கிறார். ஆனால், இன்ன இன்ன விலை என்று சொல்லவில்லை. குறைந்த விலையில் இரண்டு பிரிவாகப் பிரித்து விட்டால் அவர் ஒத்துக் கொள்வாரா?

SRI P. G. KARUTHIRUMAN : கட்டுப்படியாகும்படியான விலை வேண்டும் என்றுதான் நான் குறிப்பிட்டேன். விலை விஷயத்திற்கே நான் இன்னும் வரவில்லையே. அடுத்ததாகத்தான் அது பற்றி நான் பேச ஆசைப்படுகிறேன். இந்த ரகங்களுக்கு குறைந்த பட்சமாக 9½ ரூபாயும், அதிகப் பட்சமாக ரூ. 13¾ என்றும் வைத்திருப்பதே முதலில் தவறு. அதிகமான விலை இருப்பதுதான் மிகவும் குறைந்த விலை. அதைத்தான் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். 13¾ ரூபாய்தான் அதிக விலை என்று நிர்ணயித்திருக்கிறோமே, அதுதான் விவசாயிகளுக்குக் குறைந்த விலை. அதற்குக் கீழிருக்கும் குறைந்த விலை இருக்கிறதே, அது விலையே அல்ல. எங்கேயோ இருக்கும்படியான உத்தியோகஸ்தர்களுக்கு சுலபமாக அரிசி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்டேட் டிரேடிங் முறையில் குறைந்த விலை வைக்கிறார்களே தவிர, வைத்திருக்கும் விலை விலையே அல்ல. விவசாயி என்ற முறையில் நான் சொல்கிறேன்—அதிகமான விலை என்று வைத்திருப்பதுதான் விவசாயிகளுக்கு நியாயமான குறைந்த விலை. விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்கவேண்டுமென்றால், கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டுமென்றால், அதிகமாக நிர்ணயித்திருக்கிறோமே அந்த விலைதான் சரியான விலை என்று நான் சொல்லிக்கொள்கிறேன். கார் நெல்லுக்கும், சம்பா நெல்லுக்கும் உள்ள வித்தியாசம் மணங்கொன்றுக்கு ஒரு ரூபாய் இருக்கலாம். அப்படி வைத்து விடுவோமானால் சிறந்த முறையிலே இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இப்பொழுது "ஸோரிங் ப்ரைஸ்", அதிகமான விலை ஏற்றம் இருக்கிறதென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஒரு மூட்டை நெல்லுக்கு விலை ஐந்து ரூபாய் என்று பழைய காலத்தில் இருந்தது என்றால், அப்பொழுது பணத்திற்கு மதிப்பு அதிகம் இருந்தது, பொருளுக்கு மதிப்பு அதிகம் இல்லாமல் இருந்தது. ஆனால், இப்பொழுது ரூ. 20, ரூ. 25 என்று இருக்கும்போது, பணத்திற்கு மதிப்பு கிடையாது, பொருளுக்கு மதிப்பு அதிகமாகிறது. இதைத்தான் பண வீக்கம் என்று சொல்கிறோம். பண வீக்கம் என்பது நெல் தானிய உற்பத்திற்கு மட்டுமல்ல, இதர இடங்களிலும் வீக்கங்கள் இருக்கின்றன. அந்த வீக்கங்களையும் குறைத்தால்தான், இந்த வீக்கத்தைக் குறைக்க முடியும். அந்த வீக்கத்தைக் குறைக்காமல், இந்த வீக்கத்தை மட்டும் குறைத்தால் விவசாயத் துறையில் உற்பத்தி பெருகும்படியான நிலைமை மாறி உற்பத்தி குறைவதோடுமட்டுமல்ல, விவசாயிகள் உணவுத்தானியங்கள் பயிர் செய்வதை விட்டுவிட்டு பணப் பயிர்களை உற்பத்தி செய்யும்படியான தொழிலுக்குப் போய்விடுவார்கள். 'காஷ் க்ராப்' செய்யும்படியான நிலைமை ஏற்படும்போது, உணவு உற்பத்தி பாதிக்கும்படியான நிலைமை ஏற்படும். ஆகவே, நாம் மிகவும் பார்த்து கவனித்துச் செய்யவேண்டிய நிலை இருக்கிறது.

11-00 a.m. கடைசியாக அதற்காக ஒரே ஒரு ஆலோசனை மட்டும் சொல்கிறேன். இப்பொழுது உணவு தானியத்திற்கு விலைவாசியை நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்பொழுது போக்குவரத்து சார்ஜையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஏற்கெனவே உற்பத்தி செய்கிறவர் இப்படிப்பட்ட எல்லா விதமான செலவுகளையும் சேர்த்து வைத்துத்தான் வியாபாரிகளுக்கு விற்கிறார்கள். இப்படி சகல விதமான செலவுகளையும் போட்டுத்தான் அவர்கள் வாங்குகிறார்கள். ஆகவே விலைகளை நிர்ணயம் செய்யும் கிராமத்தார்கள் அதிருப்தி அடையும் அளவில் நிர்ணயம் செய்யக்கூடாது. கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருளை வாங்கும்போது இப்படி குறைந்த விலையில் வாங்கப்படுவதை விவசாயிகள் கண்டு அதிருப்தி அடைவார்கள். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது, அவர்கள் அதிருப்தி அடையக்கூடிய நிலையில் வாங்கக்கூடாது. அதிகபட்சமாக விலையை நிர்ணயம் செய்து அதன்படி வாங்கவேண்டும். விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டிய பொருளை; அல்லது விலையை அவர்களுக்குக் கொடுத்துவிட்டால் நன்றாக இருக்கும். அப்படியே நிச்சயமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகளுக்கு கட்டுபடியாகக்கூடிய அளவில் நியாயமான அளவில் [illegible]

வேண்டும் என்பதை சர்க்கார் மீண்டும் புனராலோசனை செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : பேசும் நேரத்தைக் குறைப்பது என்றால் வருத்தமாகத்தான் இருக்கிறது. கட்சித் தலைவர்களும் பேசவேண்டும் என்று விரும்புகிறார்கள். இன்னும் பல அங்கத்தினர்களும் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதனால் ஒவ்வொருவரும் பத்து நிமிஷங்கள்தான் பேசவேண்டும். நான் சமீபத்தில் உலகப் பிரயாணம் செய்தபோது அங்கே சில இடங்களில் ஒவ்வொருவரும் முக்கால் மணிக்குக் குறைந்து பேசுவது கிடையாது. ஆனால் இங்கு அனேகம் பேர் பெயர் கொடுத்திருப்பதால் பத்து நிமிஷங்கள்தான் பேசுவதற்கு இடம் இருக்கிறது. இங்கு ஒவ்வொருவருக்கும் பேசுவதற்கு இடம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால்தான் பத்து நிமிஷங்கள் மட்டிலும் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் அதை ஐந்து நிமிஷங்களாகக் குறைக்கப்போவதில்லை என்ற வாக்குறுதியை மட்டும் கொடுக்கிறேன்.

SRI S. RAMAKRISHNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஒரு விவசாயி. விவசாயத் தொழிலை நம்பியிருக்கக்கூடிய பகுதியிலிருந்து வந்திருக்கக்கூடிய ஒரு விவசாயி. அதனால் சில ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்தில் வருகின்ற விளைப் பொருள்களின் விலையை மாத்திரம் குறைக்க வேண்டும் என்று சிலர் அபிப்பிராயம் கூறுகிறார்கள். குறைக்க வேண்டியது அவசியம்தான். அதேபோல விவசாயத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய மற்ற பொருள்களுடைய விலையும் குறைய வேண்டும் என்று கவனிக்க வேண்டியது ரொம்பவும் முக்கியமான ஒரு விஷயம். அவைகளைப்பற்றியெல்லாம் பரிசீலிப்பதற்கு ஒவ்வொருவரும் அநேக விஷயங்களைப்பற்றி சொல்லுகிறார்கள்.

(Sri V. K. Kothandaraman in the Chair)

அதற்கு என்று ஒவ்வொரு கட்சியிலிருந்தும் அங்கத்தினர் ஒருவரை நியமித்து அவர்கள் அந்த விலைவாசிகளைப் பார்த்து ஆலோசனை செய்ய வேண்டுமென்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் விவசாயத்திற்கு எந்தக் கட்சியும் தேவையில்லை. ஆனால் நாட்டில் இப்பொழுது எவ்வளவோ கட்சிகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. சர்க்காரிடத்தில் அநேகம் விவசாய நிபுணர்கள் இருக்கிறார்கள். விவசாயத்தில் நல்ல அனுபவம் வாய்ந்தவர்களும் திறமைசாலிகளும் இருக்கிறார்கள். அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அந்தக் கமிட்டியில் சேர்த்துக்கொள்ளவேண்டியது அரசாங்கத்தினுடைய நோக்கம். இதற்கு இடையில் நமது நண்பர் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் தான் பேசியபோது இது சம்பந்தமாக புள்ளி விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார். அதை நான் அப்படியே ஆமோதிக்கிறேன். இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறைகூட விளையாத மானாவாரி பிரதேசமாக நமது ஜில்லாவில் பல பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை வெள்ளாமை விளைந்தாலும் எவ்விதமான ஆதாயமும் இல்லாமல் இருக்கிறது. அதனால் அங்குள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பகுதிகளையெல்லாம் சர்க்கார் நன்றாக கவனித்து நல்ல முறையில் திட்டத்தை வகுத்து கொடுக்கவேண்டும்.

இந்த நிலையில் நமது நண்பர் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் நெல்லில் இரண்டு வித ரகம்தான் இருக்கலாம் என்றும் சொன்னார். ஆனால் எங்கள் ராமநாதபுரம் பகுதியில் பாரம்பரியமாக இரு வித நெல்லைத்தான் பயிரிட்டு வருகிறார்கள். ஒன்று சம்பா, மற்றொன்று பூரா கருப்பு தோடு, வெள்ளை தோடு என்று இரண்டு வித நெல்லை இரண்டு வித பகுதிகளாகப் பிரித்திருக்கிறோம். சம்பா என்பது நீண்ட கால பயிர். இந்த கருப்பு தோடு, வெள்ளைத் தோடு என்பது குறுகிய காலப்பயிர் ஆகிறது 4½ மாத வித்து, 3 மாத வித்துக்கள். கருப்புத்தோடு என்று

சொல்வது மாஞவாரி குருவை என்றும் சொல்லுவார்கள். இப்படி மூன்று விதமாகத்தான் பிரிவினையாகி இருக்கிறது. இப்படி ஒவ்வொன்றுக்கும் தாம்தான் வித்தியாசம். அதற்குத் தக்கபடி விலைவாசியும் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி மூட்டை ஒன்றுக்கு 6, 7 ரூபாய் வித்தியாசம் இருந்துகொண்டிருக்கிறது. அதனல் விவசாயிகளுக்கு பெரிதும் பாதிக்கக் கூடியதாகத்தான் இருக்கிறது. என்னுடைய பகுதியாகிய ராமநாதபாம் பகுதியில் ராமேஸ்வரத்திலிருந்து தொண்டி முதற்கொண்டு தஞ்சை ஜில்லாவிலுள்ள கோட்டைப்பட்டணம் வரைக்கும் விவசாயிகள் உணவுப் பொருள்களுக்கு எதிர் பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய பகுதி. அங்குள்ளவர்கள் எல்லோரும் விவசாயிகளை எதிர் பார்த்துக்கொண்டு விளைந்தவுடன் அவற்றை வாங்கிச் சாப்பிடக்கூடியவர்கள். அப்படிப்பட்டவர்கள் தான் அங்கே அதிகமாக இருக்கிருர்கள். ஆகவே மற்ற பொருள்களின் விலையையும் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கும்படி செய்தால், நல்ல முறையில் நீர்பாசனவசதி செய்து கொடுத்தால் நல்ல முறையில் விளைந்தால் இன்னும் விலைவாசிகளைக் குறைத்தாலும் அதை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருக்கிருர்கள்.

நான் சாதாரணமான ஒரு விவசாயி, அதன் அனுபவம் எனக்கு நன்ருகத் தெரியும். இரண்டு வருஷங்களாக வெள்ளாமை செய்து நல்ல செலவு செய்து பலன் வரக்கூடிய சந்தர்ப்பத்தில் பயிர் சாவியாகப் போய் விட்டது. இரண்டு வருஷங்களாகவே இப்படித்தான். எனக்கு விவரம் தெரிந்தது முதற்கொண்டு அங்கே இரண்டு வருஷங்கள் விளைந்தால் இரண்டு வருஷங்கள் விளைவது கிடையாது. இந்த நிலைமையில் அங்குள்ளவர்கள் பெரும்பாலும் பாதிக்கப்படுகிருர்கள். சில சமயங்களில் விலைவாசிகள் 7, 8 ரூபாய் உயர்ந்தும் அதனல் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். ஆகவே விவசாயத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய மற்ற பொருள்களின் விலையை குறைத்துக்கொண்டு கொடுத்தால் விவசாயிகளுக்கு நலமாக இருக்கும். அவைகளைக் குறைத்துக்கொடுத்தால் உணவு தானியங்களின் விலையையும் குறைத்துக்கொடுக்க நாங்கள் தயங்க மாட்டோம். நண்பர் ஸ்ரீ கருத்திருமன் சொன்னபடி விவசாய உபயோகமுள்ள பொருள்களை நல்ல விலையில் கொடுத்தும், நல்ல முறையில் தண்ணீர் வசதியைச் செய்து கொடுத்தும் நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு வசதி செய்து கொடுத்தால் உணவு பொருள்களை இன்னும் குறைந்த அளவில் கொடுக்க அஞ்ச மாட்டார்கள் என்பதைச் சொல்லிக் கொண்டு உடனடியாக இந்த விவசாயிகளுக்கு உதவியாக இருக்கக்கூடிய கருவிகளை குறைந்த விலைக்குக் கொடுத்து வந்தால், இப்படிப்பட்ட மாஞவாரி பிரதேசங்களுக்கு முதல் பிரதிநிதித்துவம் கொடுத்தால் நலமாக இருக்கும். இந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri M. P. SUBRAMANIAN: கனம் சேர்மன் அவர்களே, நம்முடைய நாட்டில் உணவுப் பொருள்களின் விலை ஏறிக்கொண்டு போவதைத் தடுத்து நிறுத்த இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் முழு தோல்வி அடைந்துவிட்டன என்பதைக் கண்டு சர்வ கட்சியைச் சேர்ந்த ஒரு குழுவை ஏற்படுத்தி அதன் மூலம் அதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று எதிர்கட்சி தலைவர் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகளைக்கூற விரும்புகிறேன். உணவுத்தானியங்களின் விலை ஏற்றத்தைத் தடுக்க வேண்டுமென்ருல் எல்லா பொருள்களினுடைய விலையையும் தடுக்க வேண்டும் என்றும் எல்லா பொருள்களுக்கும் நியாய விலையை நிர்ணயிக்க வேண்டும் என்றும் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் அதை வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் நியாயமாக இருக்க வேண்டும் என்றும் நண்பர் கருத்திருமன் அவர்கள் சொன்ஞர். நியாய விலை வைக்க வேண்டுமென்றும் அது எல்லோருக்கும் நியாயமாக இருக்க வேண்டும் என்றும் சொன்ஞர். உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கும் வாங்குகிறவர்களுக்கும் நியாயமாக இருக்கவேண்டும் என்பதுப்பற்றி எல்லோருக்கும் அக்கறை உண்டு. நான் ஒரு சிறிய விவசாயிதான்.

அவரைப்போல 500 அல்லது 600 ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய விவசாயி அல்ல. நான் ஐந்தாறு ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய ஒரு விவசாயி தான். கிராமப்புறங்களில் எடுத்துக்கொண்டால் எல்லோரும் வாங்கிச் சாப்பிடா விட்டாலும் ஒரு சிலர் வாங்கித்தான் சாப்பிடுகிருர்கள். கிராமப்புறங்களில் அறுவடை காலங்களில் ஒருக்கால் தானியமாகக் கொடுத்தாலும் மற்ற காலங்களில் அவர்கள் பணமாகத் தான் பெற்று வாங்கி சாப்பிடுகிருர்கள். ஆகவே நகரங்களில் வசிப்பவர்கள் மட்டும்தான் வாங்கிச்சாப்பிடுகிருர்கள் என்பது இல்லை. அரசாங்கம் விலைவாசிகளைத்தடுக்க என்ன நடவக்கை எடுத்துக்கொண்டிருக்கிருர்கள் ? அரசாங்கமும் என்ன முடிவு செய்திருக்கிறது ? முதல் ஐந்தாண்டு திட்டம் முடிந்து இரண்டாவது ஐந்தாண்டு திட்டமும் நடந்து மூன்ருவது ஐந்தாண்டு திட்டமும் வரப்போகிறது. காரியங்களை திட்டப்படி செய்ய நாம் முன்கூட்டியே முடிவு செய்து விடுகிருேம். நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் முன்பு பேசும் பொழுது சொன்ஞர், ஒவ்வொரு சினிமாவிலும் புது புது முகங்கள் தோன்றுவது போல் ஒவ்வொரு ஆண்டும் புதுப் புது திட்டங்கள் தோன்ருது என்ருர். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். திட்டப்படி காரியங்கள் நடைபெற வேண்டுமென்ருல் விலை வாசிகள் ஒரு நிலையில் இருக்கவேண்டும். இல்லை என்ருல் எதிர்பார்த்தப்படி காரியங்கள் நடைபெருது. அதனல்தான் பத்து கோடி என்று ஆரம்பித்தால் 12 கோடியில் முடிவடைகிறது. 11-10 a.m.
9 கோடி என்று ஆரம்பித்தால் 10, 12 கோடியாக மாறிவிடுகிறது. இதற்கெல்லாம் காரணம் ? சாதாரணமாக விளைபொருள்களானலும் சரி, செய் பொருள்களானலும் சரி, இரண்டின் விலைக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும். இல்லையென்ருல் திட்டமே தோல்வியில்தான் போய் முடியும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். செய் பொருள்களுக்கும், விளை பொருள்களுக்கும் ஒரு நிரந்தரத் தொடர்பு இருக்க வேண்டுமென்று நான் பல ஆண்டு காலமாக இந்தச் சபையிலும், மற்ற இடங்களிலும் வலியுறுத்தி வந்திருக்கிறேன். திடீரென்று உணவுப் பொருள்களின் விலை ஏறுகின்றது என்ருல் விவசாயிகளுக்குத் தற்காலிக பலன் கிடைக்கலாம். அதே சமயத்தில் விலை இறங்குகிற பொழுது பெரிதும் விவசாயி பாதிக்கப்படுகிருன். பொதுவாக இரண்டு மடங்கு உணவுப் பொருள்களின் விலை ஏறினல், செய் பொருள்களின் விலையும் அந்த நிலைக்கு ஏறவேண்டும். அதைப் போலவே வாங்கும் சக்தியும் அதே அளவில் உயரவேண்டும். அதனல் நாட்டிலும் பெரிய பாதகம் ஒன்றும் ஏற்படாது. ஆனல் இன்று இருக்கிற நிலைமை என்ன? இவ்வாறு ஒரு நிரந்தரத் தொடர்பு ஏற்படுத்துவது பற்றிப் பல ஆண்டு காலமாக வற்புறுத்தி வந்தும்கூட அரசாங்கம் அதைப் பற்றி இதுவரை ஒன்றும் பரிசீலனை செய்யவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான்கைந்து ஆண்டு காலமாகவே விளைபொருள்களுடைய விலை உயர்ந்து கொண்டே போகின்றன. "நியாயமான விலை என்ன? நியாயமான விலைக்கு உணவுப்பொருள்கள் கிடைக்கச் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?" என்று கேட்கப்பட்ட நேரத்தில் "அரசாங்க அதிகாரிகள் உன்னிப்பாகக் கவனித்து வருகிருர்கள். சரியான நேரத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சொன்ஞர்கள். கடந்த நான்கைந்து ஆண்டு காலமாகவே ஆண்டுக்கு ஆண்டு விலை உயர்ந்து கொண்டுதான் வருகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விலை அதிகமாக இருக்கிறது. நவம்பர், டிசம்பர் மாதங்களில், நியாய விலைக் கடைகள் திறக்கப்படவேண்டும் என்று பொது மக்களும் தொழிலாளர்களும் கிளர்ச்சி செய்தார்கள். அரசாங்கமோ நியாய விலைக் கடைகளைத் திறப்பதுபோல் ஒரு பாவனை செய்தது. ஆங்காங்குள்ள தண்டல்நாயகம் (கலெக்டர்) என்ன செய்கிருர்கள் என்ருல், பல்லாயிரக்கணக்கான மூட்டைகளைப் பதுக்கி வைத்திருக்கும் பெரும் வியாபாரிகளையும், மில்காரர்களையும் கூட்டிவைத்து "நீங்கள் நியாயமாக பொதுமக்களுக்கு விலையைக் குறைத்து கொடுங்கள்" என்று கூறுகிருர்கள். அவர்களும் "நாங்கள் பெரும் லாபத்தைக் கருதாமல், நியாயமான விலைக்கு விற்கிருேம்" என்று சொல்லி வெளியில் அதிகப்படியான விலையில்தான் விற்கிருர்கள். இந்த

[Sri M. P. Subramanian] [16th February 1959

நிகழ்ச்சி சேலம் மாவட்டத்தில் அனுபவத்தில் கண்டதாகும். விலை குறைய அரசாங்கம் தக்க நடவடிக்கை எதுவும் இது வரை எடுக்கவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மற்றப் பொருள்களின் விலை ஏற்றத்தை உடனடியாகத் தடுக்காவிட்டாலும், மக்களுக்கு அத்தியாவசியமான உணவுப்பொருள்களின் விலை ஏற்றத்தை தடுப்பதற்கு அதிகப்படியான முக்கியத்வம் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த உணவு தான்யங்களின் விலை ஏற்றத்திற்கு என்ன காரணம் என்பதை நாம் நல்ல முறையில் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்டது—சமுதாய நலத் திட்டங்கள் அமுலாக்கப்பட்ட பிறகு அந்தந்த வட்டாரங்களில் உணவு உற்பத்தி அதிகரித்துவிடும் என்று. உற்பத்தி அதிகரித்து விட்டது என்பதற்காக புள்ளி விவரங்கள் எல்லாம் பல சந்தர்ப்பங்களில் இந்தச் சபையில் காட்டப்பட்டது. சென்னை மாகாணம் சுய தேவைப் பூர்த்தி அடைந்து விட்டது என்று கூறப்படுகிறது. இவ்வளவுக்கும் பிறகும் கூட விலைவாசி குறையவில்லை. குறையாமல் இருந்தாலும் பரவாயில்லை. நாளுக்கு நாள் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. இதற்குக் காரணம் என்ன? ஒன்று உற்பத்தி பெருகவில்லை அல்லது உற்பத்தியாகின்ற தானியங்களைப் பதுக்கி வைக்கிறார்கள் வியாபாரிகள். பதுக்கிவைக்கப்படுகின்ற காரணத்தினால் விலை "ஆர்டிபிஷியல்" ஆக ஏற்றமடைகிறது என்றுதான் பொருள். உணவு தானியங்கள் அதிகரித்து விட்டதாக அரசாங்கம் தருகிற புள்ளி விவரங்களை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் புள்ளி விவரங்களை—உணவு தானியங்கள் அதிகரித்து விட்டது என்பதற்கான புள்ளி விவரங்களை—எவ்வாறு தயாரிக்கிறார்கள்? உணவு தானியங்கள் அதிகரித்து விட்டது என்பது எவ்வாறு கணக்கிடப்படுகிறது ? தாசில்தார்கள் மூலமாகவோ கிராம அதிகாரிகள் மூலமாகவோ தயாரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் அரசாங்கத்துக்கு வருகின்றன. அவர்கள் அந்தக் கணக்கை எப்படித் தயாரிக்கிறார்கள்? நான் ஒரு கிராம அதிகாரி மகனாக இருப்பதால் எனக்கு நன்றாக அதைப்பற்றித் தெரியும். அரசாங்க அதிகாரிகளின் வற்புறுத்தலின் காரணமாக இவர்கள் வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு மனதிலேயே எத்தனை இடங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டது, எத்தனை இடங்களில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது, என்பதை மனதிலேயே உத்தேசமாகக் கணக்கிட்டு, இவ்வளவு நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டால், இவ்வளவு நெல் உற்பத்தியாகும் என்று ஒரு முடிவு எடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பிவிடுகிறார்கள். அந்தப் புள்ளி விவரத்தை வைத்துக் கொண்டு, வற்புறுத்தலுக்காக கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு உணவு உற்பத்தி அதிகரித்து விட்டது என்று இங்கு கூறினார்கள். உண்மையில் புள்ளிவிவரங்கள் அடிப்படையில் தவறு இருக்கிறது என்று இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் விலைவாசி இறங்கவில்லை? தென்னிந்தியாவில் உள்ள ராஜ்யங்களுக்குள் உணவு தான்யங்கள் போக்குவரத்துத் தடை இல்லாமல் போகலாம் என்பதற்காகத் தென் மண்டல உணவுக் கவுன்சிலை ஏற்படுத்தினார்கள். அந்தத் திட்டம் வெற்றி பெற்றதா? வெற்றி பெறவில்லை என்றுதான் சொல்லவேண்டும். கேரளத்திற்குத் தமிழகத்திலிருந்து உணவு தான்யங்கள் செல்வது போல ஆந்திரத்தில் இருந்து சரளமாக உணவு தானியங்கள் மற்ற ராஜ்யங்களுக்குக் செல்வதில்லை. உணவு தான்யங்கள் ஆந்திரத்தில் ஒரு விலை விற்கிறது. தமிழகத்தில் ஒரு விலை விற்கிறது. கேரளத்தில் ஒரு விலை விற்கிறது. மற்றொரு இடத்தில் இன்னொரு விலை விற்கிறது. இந்த நிலையில் இந்தத் தென் மண்டலக் கவுன்சில் நிறுவப்பட்டதன் காரணமாக நீடித்தவெற்றியைப் பெற முடியும் என்று சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே இதைப்பற்றி நல்ல முறையில் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை இச்சபையில் பல அங்கத்தினர்களால் பல ஆலோசனைகள் கூறப்பட்டன. அரசாங்கம் அந்த

16th February 1959] [Sri M. P. Subramanian]

நல்ல முறையில் எடுத்துக்கொள்ளவில்லை. உணவு உற்பத்தியைப்பொறுத்தவரை நிலச்சீர்த்திருத்தத்தைத் தொடர்பு படுத்தி இந்தச் சபையில் பேசப்பட்டது. இங்கு நான் அதைப்பற்றி விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "நிலச்சீர்த்திருத்தம் காரணமாக உச்ச வரம்பு கட்டப்பட்டு நிலங்கள் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விடுவதால் உற்பத்தி பெருகுவது பாதிக்கப்படும்" என்று நிதியமைச்சர் சொல்வதை ஒத்துக்கொள்ளமுடியாது. உச்ச வரம்பு கட்டுப்படுவதன் காரணமாக உற்பத்தி ஒரு சிறிதும் பாதிக்கப்படாது. சிறு பண்ணைகளில்கூட பெரிய பண்ணைகளைவிட அதிகமாக உற்பத்தி செய்யும் நிலைமையைக் கிராமப் புறங்களில் பார்க்க முடியும். நூறு, 200 எக்கர் என்று இருந்தால் இயந்திர சாதனங்களை உபயோகப்படுத்தி பயிரிட்டால்தான் உணவு உற்பத்தி அதிகமாகும் என்று சொல்வது தவறு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிடைக்கக்கூடிய பல சாதனங்கள் சிறு நிலங்களுக்குக் கிடைக்காமல் இருக்கலாம். அதற்காக சிறு பண்ணைகளாக ஆக்கப்பட்டால் உணவு உற்பத்தி கெட்டுவிடும் என்று சொல்வது தவறு. நிலச் சீர்திருத்தத்தை கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு வருகிறார்களே தவிர இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக நிலச்சீர்த்திருத்தத்தை இப்போழுது கொண்டுவரப் போகிறோம், இன்னும் ஓராண்டில் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். போன ஆண்டில், இந்த ஆண்டு அந்தச் சட்டத்தைக் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லிவிட்டார்கள். "கூட்டுறவு மூலமாக நிலச்சீர்த்திருத்தம் கொண்டுவரப் போகிறோம், 1962-க்குள்ளாக கொண்டுவரப்போகிறோம்" என்று சொல்லுகிறார்கள் இப்பொழுது. ஏற்கனவே இரண்டு கட்டம் ஆகி விட்டது. இப்பொழுது 1962-ம் ஆண்டு வரை இழுத்துச் செல்லுகிற காட்சி தெரிகிறது. ஏற்கனவே கூட்டுறவு இயக்கம் ஜாதிப் பூசல்களுக்கு ஆட்பட்டவர்களாக இருந்து வருகின்றது. கூட்டுறவு ஸ்தாபனம் ஜாதிப் பூசல்களுக்கும் ஊழல்களுக்கும் முதலிடம் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. ஆகவே கூட்டுறவு மூலமாக இந்த நிலச் சீர்த்திருத்தம் அமுலுக்கு வரும் என்று கூறுவதைப் பார்க்கும்போது கூட்டுறவு முறை திருந்தி இந்த நிலச் சீர்த்திருத்தச் சட்டம் எப்பொழுது வரும் என்று நம்மால் உறுதியாகத் தெரிந்து கொள்ளமுடிவதில்லை. நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஏழைகளுக்குக் கொடுக்கப்படுகிற நிலம் மழை பெய்து பெய்து சத்து இல்லாத நிலைமையில் கிடக்கும் நிலங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட சத்தற்ற நிலங்களை அவர்களுக்குக் கொடுப்பதால் அந்த ஏழை விவசாயிகள் அந்த நிலத்தைப் பண்படுத்த 10, 100 செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிச் செலவு செய்து அந்த ஏழை மக்கள் உழைத்தால்கூட அவர்களுக்கு ஒரு தம்படி பலன்கூட ஏற்படுவதில்லை.

நிலத்தை மாத்திரம் கொடுத்தால் போதாது. அந்த நிலத்தைப் பண்படுத்தி விவசாயத்திற்கு லாயக்குள்ளதாக ஏழை மக்களுக்குக் கொடுத் 11-2)
தால் உடனே அவர்களால் விவசாயம் செய்யமுடியும். இதற்கான செலவு a.m.
வேண்டுமானாலும் இருபது முப்பது ஆண்டு தவணையில் அவர்களிடத்திலிருந்தே வசூல் செய்துவிடலாம் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அப்படிச் செய்திருந்தாலாவது இதுவரையில் நிலம் கொடுத்ததினால் ஏற்பட வேண்டிய பலன் உண்டாகியிருக்கும். இன்றைக்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவில் உணவு இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்று சொல்லும்போது உண்மையிலேயே அதிக உணவை இங்கேயே உற்பத்தி செய்து கொள்வதற்கு இந்த வசதி செய்து கொடுக்கப்படாததற்குக் காரணம் புரியவில்லை. சமுதாய நலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் பணம் கொடுக்கிறார்கள்—அதை வாங்கிவிட வேண்டும் என்ற அடிப்படையில் விதைப்பண்ணைக்காகச் செலவழிக்கப்படுகிற பணம் விரயம் என்று சொல்வேன். விதைப் பண்ணைகள் மிகவும் மோசம். லாயக்கில்லாத இடங்களை விதைப்பண்ணைக்காக வாங்கியிருக்கிறார்கள், அல்லது குத்தகை எடுத்திருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியும். [illegible] தருந்தாற்போல நிலம் [illegible]

இதைப்பற்றி பலமுறை தெரிவித்திருக்கிறோம். இன்றைக்கு சொல்கிறேன். State Informal Consultative Committee யிதற்குப் பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் புதுக்கோட்டையில் 51–52-ம் லோகல் விலைக்கு நாலாயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு வாங்கப்பட்டதை, நாற்பதாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. இப்படி இதற்கு முதல் சாஸனப் பத்திரத்தைப் பார்க்காமலும், உள்ளூர்க்காரர்களோக கலந்துகொள்ளாமலும் இஷ்டப்படி காம்பென்சேஷன் தொகையை வாரிக்கொடுப்பதும், தண்ணீர் வசதி இல்லாத இடங்களை குத்தகைக்கு அதிகமாக எடுத்துக்கொள்வதும் போன்ற முறையில் பணத்தை கண்மூடித்தனமாகச் செலவழிப்பதாகவே இருக்கிறது. இவற்றையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து உண்மையான எந்தவகையில் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைச் சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

Sri K. S. SUBRAMANIA GOUNDER: சட்டமன்றத் தாற்காலிகத் தலைவர் அவர்களே, இப்பொழுது நம்மிடையே இருக்கக் கூடிய பிரச்சனை இரண்டு. ஒன்று உணவுப் பிரச்சனை. உணவு உற்பத்தி எந்த அளவில் பெருகியிருக்கிறது, எந்த அளவில் பெருக்க வேண்டும் என்பது. இந்த இரண்டையும் நாம் பரிசீலிக்கவேண்டும். உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் மற்ற ராஜ்யங்கள் எல்லாவற்றையும் விட நம் ராஜ்யம் முன் அணியில் இருக்கிறதென்பதை நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும். ஆனால் இன்னும் அதிகமாக நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவருவதற்குப் போதுமான தண்ணீர் வசதி நம் ராஜ்யத்தில் இல்லை என்பது நமக்குத் தெரிந்த விஷயம். இருக்கக் கூடிய வசதியை வைத்துக்கொண்டு எந்த அளவில் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு நல்ல முறையில் திட்டம் வகுத்து அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இன்றைக்கு நெல் அதிக அளவில் உற்பத்தியாகியும்கூட விலை கொஞ்சங்கூடக் குறையாமல் இருப்பதுதான் அதிகக் கவலை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. அறுவடை காலத்தில் எந்த நிலைமையில் இருக்கிறதென்பதைப்பற்றி அரசாங்கம் கவலைப்படவில்லை. அறுவடை முடிந்தவுடனேயே வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு தானியத்தை வாங்கிப் பதுக்கி வைத்து பின்னால் விலை அதிகமாக உயர்ந்தவுடனே அதை விற்று வருகிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிய வேண்டும். இப்போது அரசாங்கத்தின் திட்டம் இவர்களே மார்க்கெட்டில 2 லட்சம் டன் அரிசி வாங்கவேண்டுமென்பது. இந்த இரண்டு லட்சம் டன் வாங்குவதற்கும் இப்போது எந்த அளவில் செய்வது என்பது யோசிக்கப் படவேண்டும். நல்ல முறையில் செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் பழைய மாதிரி கண்ட்ரோல் முறையில் இருக்கக் கூடாதென்பதை அரசாங்கமே யோசனை செய்து முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இரண்டு லட்சம் வாங்குவது என்றால் அதற்கு 10 கோடி ரூபாய் முதலீடு வேண்டியிருக்கிறது. பத்து கோடி ரூபாய் பணம் வேண்டுமென்றால் எந்த அளவில் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்பது இப்போது பிரச்சனையாக இருக்கிறது. விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டுமென்ற முறையில் சர்க்கார் எதையும் செய்யவில்லை. விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுக்காமல் அதே சமயத்தில் அறுவடை காலத்தில் குறிப்பிட்ட விலைக்கு விவசாயிகளிடத்திலிருந்து வாங்கி பின்னால் அறுவடை முடிந்த பின் சாதாரண விலைக்கு—நியாயமான விலைக்கு விற்கவேண்டுமென்பது இப்போது இருக்கிற திட்டம். இப்போது விநியோகத்தைப் பொறுத்த வரையில் கூட்டுறவு முறையில் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்திற்கு பத்து கோடி ரூபாய் கடன் கொடுப்பதற்கும் அரசாங்கம் எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள். இதில் உள்ள கஷ்டங்களை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவிக்கவேண்டுமென்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக பத்து கோடி ரூபாய்க்கு ஏற்பாடு செய்து கொடுத்தாலும் ராஜ்ய கூட்டுறவு பாங்குகளும் ஜில்லா கூட்டுறவு பாங்குகளும் மார்க்கெட்டிங் சொஸைட்டிகளும் வாங்குவது

என்றால் பாரோயிங் பவர் இருக்கவேண்டும். இப்போதுள்ள அடிப்படையில் பாரோயிங் பவர் 10 பங்கு இருக்கிறது. இதே விகிதத்தை வைத்துக் கொண்டு இன்னும் அதிகமாகப் பணம் வாங்குவது என்றாலும் முடியாது. பாரோயிங் பவரை உடனடியாக அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ரிசர்வ் பாங்க் பாரோயிங் பவரை அதிகப்படுத்திக் கொடுக்கச் சாதகமாக இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஷேர் காபிடலை அதிகப்படுத்த வேண்டும் என்கிறார்கள். இதற்கு விலக்குக் கொடுத்துவிட்டால் மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதில் இடைஞ்சலாக ஏதாவது இருந்தாலும் மத்திய அரசாங்க நிதி அமைச்சரிடம் தெரிவித்து என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து பாங்குகளில் கடன் வாங்கி இந்த வியாபாரத்தை ஆரம்பித்தால் சௌகரியமாகச் செய்யமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரி திட்டங்களை கூட்டுறவு இயக்கத்தினர் செய்வது. அரசாங்கத்திலிருந்து சப்ளையை மேற்கொண்டு சொஸைட்டிக்கும் இலவசமாகக் கொடுத்து இதை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ராஜ்ய அளவில் அவசியம் ஏற்பட்டால் ஜாயிண்ட் ரிஜிஸ்டிரார் கொடுத்து என்ன என்ன சிக்கல்கள் இருக்கின்றனவோ அவற்றை அவ்வப்போது நீக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான திட்டம் ஒன்று போடுவதாக இருந்தால்—ஒட்டிக்கொள்வதாக இருந்தால் அதில் கூட்டுறவு சொஸைட்டிக்கு இடம் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இப்போது நெல் விலை நிர்ணயம் செய்ததில் அதற்காக இப்போது கொடுக்கக் கூடிய விலை போதுமா இல்லையா என்பது பிரச்சனையாக இருந்தது. அதில் இப்போது நிர்ணயித்திருக்கக் கூடிய விலை மில்லர்களிடமிருந்து கூட்டுறவு சங்கங்கள் வாங்கக்கூடிய விலைதான். மில்காரர்கள் விவசாயிகளிடமிருந்து என்ன விலைக்கு வாங்கவேண்டுமென்ற அளவு குறிப்பிடவில்லை. ஆகவே மில்காரர்கள் விவசாயிகளிடமிருந்து என்ன விலைக்கு வாங்கவேண்டும், மில்காரர்களிடமிருந்து அரசாங்கம் என்ன விலைக்கு வாங்குவது ஆகிய இரண்டையும் நிர்ணயித்துவிட்டால் இன்னும் சிலாக்கியமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

மற்றொன்று விலை நிர்ணயிக்கப்பட்டு இருப்பதில் 13 ரூபாயிலிருந்து படிப்படியாக அரிசியின் ரகத்தை உத்தேசித்து நிர்ணயிக்கப்படுகிறது. இதில் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசம் இருக்கவேண்டுமா என்பதை அமைச்சர் அவர்கள் பூர்ணமாக பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக ஒரு ஏக்கராவில் என்ன நெல் விளையும், எவ்வளவு காணும் என்பதை ஆலோசித்து விலை நிர்ணயம் செய்வது அவசியம். இல்லாவிட்டால் மட்ட விலையுள்ள ரகத்தைப் பயிர் செய்யாமல் விலைஉயர்வான ரகத்தையே பயிரிட ஆரம்பித்துவிடுவார்கள்.

இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது நிலச்சீர்திருத்தத்தைப் பற்றியும் கூட்டுறவு பண்ணையைப் பற்றியும் அவர் தங்களுடைய அபிப்பிராயத்தை தெரிவித்தார்கள். ஆனால் நம் நாட்டிலே நம்முடைய ராஜ்யத்திலேதான் கூட்டுறவு ஸ்தாபனம் முதன்மையாக நிற்கிறது. இருந்த போதிலும் கூட்டுறவு பண்ணைக்கு நமது ராஜ்யத்தில் அதிகமாக கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால் இப்பொழுது, கூட்டுறவு பண்ணையை அமைப்பது நிலச்சீர்திருத்தத்தின் ஒரு அடிப்படையான கொள்கை என்பது அரசாங்கத்தின் கருத்து. இதைப் பார்க்கும் போது நாம் கூட்டுறவு முறையை நல்ல முறையில் இயங்கும்படி செய்ய வேண்டும். சர்வீஸ் கோவாப்பரேடிவ்ஸ் எந்த அளவில் செய்யப்படவேண்டும் என்பதை ஆராயவேண்டும். சாதாரணமாக இந்தக் கூட்டுறவு பண்ணையைப் பொறுத்தவரை நல்ல முறையில் இயங்கி வருகிறதா, அதை எந்த முறையில் நடத்தினால் ஜனங்கள் ஸ்லாக்கியம் என்று சொல்லுவார்கள் 11-30 a.m.

[Sri K. S. Subramania Gounder] [16th February 1959

என்பதை நன்கு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அரசாங்கம் அவசியம் என்று கருதினால் இந்தக் கூட்டுறவு பண்ணையை அமைப்பதற்கு எந்த முறையிலே நடத்தவேண்டும் என்பதை ஆராய்வதற்கு Officials and non-Officials கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலச்சீர்திருத்தம் கூட கூட்டுறவு முறையில் இருக்கவேண்டும், மற்றெல்லாக் காரியங்களும் கூட்டுறவு அடிப்படையில் இயங்கவேண்டும் என்று நமது பிரதமர் ஸ்ரீ நேரு அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அளவிலே செய்வதாய் இருந்தால் நம்முடைய நாட்டிற்கு எந்த அளவு பொருந்தும் என்பதையும் அதனால் சிக்கல்கள் ஏற்படுமானால் அதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன செய்யவேண்டும் என்பதையும் ஒரு கமிட்டியைப் போட்டு உடனடியாக ஆராய்வது சிலாக்கியம் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது அரிசி வாங்குவதிலே எந்த அளவிற்கு நம்முடைய ராஜ்யத்திலிருந்து மற்ற ராஜ்யத்திற்குச் செல்கிறதோ அதே அளவிற்கு மற்ற ராஜ்யத்திலிருந்து நமக்கு கிடைக்கிறதா என்பதை நாம் ஆராயவேண்டும். உதாரணமாக கேரள அரசாங்கம் நமது ராஜ்யத்தில் அதிக அரிசி வாங்குகிறது. ஆனால் நம்முடைய ராஜ்யத்துக்கு ஆந்திர ராஜ்யத்திலிருந்து வரக்கூடிய அரிசிக்கு தடை இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று பரிசீலனை செய்யவேண்டும். இந்தச் சிக்கலை நீக்குவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI V SANKARAN**: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய நிலைமை எப்படி இருக்கிறதென்றால் உணவுப்பொருள்களின் விலை அதிகமாகிக்கொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதுதான் இன்றுள்ள முக்கிய பிரச்னை. இந்த விஷயமாக இரண்டு விதமான வாதங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒன்று உணவுப் பொருள்களின் விலையை மட்டும் கட்டுப்படுத்துவது போதாது, மற்றப்பொருள்களின் விலையும் அதிகமாக உயர்ந்துக்கொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்தாவிட்டால் உணவு உற்பத்தி மிகவும் பாதிக்கும் என்று சொல்லப்பட்டது.

அதுமட்டும் அல்ல. சில ஜில்லாக்களில் அதாவது தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி போன்ற ஜில்லாக்களில் நெல் ஒன்றுதான் பயிராகிறது. அது ஒன்றுதான் அங்கே விளையக்கூடிய முக்கியமான பொருள். ஆதலால் நெல் அரிசி விலையை மட்டும் கட்டுப்படுத்தினால், அந்த ஜில்லாக்காரர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்களாம். ஆனால் மற்ற ஜில்லாக்களில் காஷ் கிராப் தான் உற்பத்தி செய்கிறார்கள். ஆதலால் மற்ற ஜில்லாக்காரர்களுக்கு அவ்வளவு பாதகம் ஏற்படாது. மற்றொரு வாதம் உணவுப் பொருள் விலையை ஒட்டித்தான் மற்ற பொருள்களின் விலையும் அமைகிறது. ஆதலால் நெல் விலை குறைந்தால் மற்ற பொருள்களின் விலையும் குறையும் என்று சொல்லலாம்.

ஆகவே இந்த இரண்டுவித வாதங்களையும் பார்க்கும்போது உணவுப் பொருள்களின் விலையை ஓரளவு கட்டுப்படுத்திவிட்டால் இதரப்பொருள்களின் விலை தானாகவே குறைந்து விடும். உணவுப்பொருள்களின் விலை எப்பொழுது குறையும். நம் நாட்டில் அதிக உற்பத்தி ஏற்பட்டால்தான் உணவுப்பொருள்களைக் கட்டுப்படுத்தமுடியும். நம் ராஜ்ய மக்களுக்கு எவ்வளவு தேவையோ அந்த அளவு வைத்துக்கொண்டு மீதியைத்தான் மற்ற ராஜ்யங்களுக்கு அனுப்பவேண்டும். தனக்கு மிஞ்சிதான் தானம். அம்மாதிரி இல்லாமல் ஓபன் மார்க்கட் மூலமாக கேரள ராஜ்யத்திற்கு அரிசி விற்கப்படுகிறது., சென்னை ராஜ்யத்திலிருந்து கேரள ராஜ்யத்திற்கும் கள்ளிக்கோட்டைக்கும் அரிசி கடத்தப்பட்டு அங்கிருந்து பாகிஸ்தானுக்கும், ராஜஸ்தானுக்கும் கொண்டுபோகப்படுகிறது. சாதாரணமாக கேரள ராஜ்யத்திற்கு கொண்டுபோகப்படும் அரிசியானது அதிக விலை கொடுத்து வாங்கப்படுகிறது. அப்படி வாங்கப்பட்ட அரிசியே இன்னும் அதிக விலைக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. ஆகையால் நம் ராஜ்யத்தில் அரிசி விற்பதில் ஓபன் மார்க்கட்டை சர்க்காரே தடைப்படுத்த வேண்டும், வேண்டு

16th February 1959] [Sri V. Sankaran]

மானால் சர்க்கார் எந்த அளவுக்கு அவர்களுக்குக் கொடுக்கலாம் என்பதை நிர்ணயித்து கேரள சர்க்கார் நேரிடையாக அந்த அளவு மட்டும் வாங்கிக்கொள்ள அனுமதிக்கவேண்டும். கேரள ராஜ்யத்தில் நம்மிடத்தில் வாங்குவதல்லாமல், தனிப்பட்ட வியாபாரிகள் கேரளாவிற்காக ஏராளமான அரிசியை லாரி மூலமாக கள்ளத்தனமாக கடத்திச் செல்கிறார்கள். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி போன்ற ஜில்லாக்களிலிருந்து மட்டும் அல்லாமல் மதுரையிலிருந்தும் இவ்வாறு வெளி இடங்களுக்கு கடத்திச் செல்லப்படுகிறது.

இப்பொழுது இரண்டு லட்சம் டன் ப்ரொக்யூர் பண்ணவேண்டுமென்று அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது. அதன்காரணமாகத்தான் விவசாயிகள் மற்ற நெல்லை பின்னால் நல்ல விலைக்கு விற்கலாம் என்று ஸ்டாக் செய்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் பெரிய பெரிய விவசாயிகள் மற்ற சிறிய விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கி பதுக்கி வைக்கிறார்கள். அது தவிர, பொது மக்களும் இன்னும் விலை அதிகமாக ஏறிவிடும் என்று பயந்து 10 மூட்டை 20 மூட்டை என்று வாங்கி சேமித்து வைக்கிறார்கள். இதன் காரணமாக விலை மேலும் அதிகமாகிறது. அடுத்தபடியாக ப்ரொக்யூர்மெண்ட் விஷயத்தை எடுத்துக்கொண்டால், முதலில் 50 சதம்தான் என்று நிர்ணயித்து வியாபாரிகளிடமிருந்து நெல்லை வாங்கிக்கொண்டு போகிறார்கள். மீதி 50 சதம் நெல் மில்காரர்களுக்கு விற்கப்படும்போது அந்த மில்காரர்களிடமிருந்து அரசாங்கம் ப்ரொக்யூர்மெண்ட் பண்ணிவிடுவதனால் மொத்தத்தில் 100-க்கு 75 ப்ரொக்யூர் ஆகிவிடுகிறது.

அடுத்தபடியாக whole sale merchant எடுத்துக் கொண்டால் அவர்கள் மதுரை ஜில்லாவில் கமிஷன் முறையில் (wholesale) என்ற முறையில் விவசாயிகளிடமிருந்து நெல்லை மில்காரர்களுக்கு விற்கிறார்கள் நாங்கள் 11-40 a.m. அதை வாங்கிக் கொள்வதில்லை. அதனால் அவர்களின் நெல் அல்ல. இவர்களுடையது என்று எண்ணி ப்ரொக்யூர்மெண்ட் அதிகாரிகள் அவர்களையும் அவர்கள் நெல்லில் பாதி கொடுக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டுக்கு ஸ்டாக் செய்ய வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். இரண்டாவதாக, ப்ரொக்யூர் பண்ணும் அதிகாரிகள் அதைச் செய்வதற்கு அப்போது வருவார்கள் என்று வியாபாரிகளுக்குத் தெரியவில்லை. இந்த நிலையில் அவர்கள் தானியங்களை சேமித்து வைக்க வேண்டும். தானியங்களை அவர்கள் எத்தனை இடங்களில் தான் சேமித்து வைக்க முடியும்? அன்றாடம் விற்று வரக நிலைமை போய் தானியங்களை பல காலம் வரையில் சேமித்து வைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கும். அத்துடன், நான் ஏற்கெனவே சொன்னதுபோல வியாபாரிகளிடமுள்ள நெல் விவசாயிகளின் நெல்லாக இருக்கும்போது, அவைகளை வியாபாரிகள் விவசாயிகளுடைய சம்மதம் இல்லாமல் எப்படி விற்காமல் சேர்த்து வைத்திருக்க முடியும்? இந்த நிலையில் கமிஷன் ஏஜெண்டுகளாக இருக்கும் வியாபாரிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாவார்கள். இப்படிப்பட்ட கமிஷன் ஏஜெண்டுகளுக்கு ப்ரொக்யூர்மெண்டிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, தானியங்களின் விலைகள் ரகத்திற்கு ஏற்றபடி இல்லை. எனவே அவைகளை ரகத்திற்குத் தக்கவாறு மாற்றியமைக்கவேண்டும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

முன்பு கொள்முதல் செய்யப்பட்டபோது 'வில்லேஜ் ப்ரைஸ்' என்று ஒரு ப்ரைஸ் இருந்தது. அதற்குப் பிறகு, 'டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ்' இன்ஸிடெண்டல் சார்ஜஸ்' இவைகளை விலையுடன் சேர்க்கலாம் என்று இருந்தது. அந்த முறையில் இப்போதும் ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். வியாபாரிகள் நெல் வாங்கும்போது பாடு வடி, அரை நெல், கால் நெல் முதலியவைகளைக் கவனித்து தள்ளுபடி செய்து விடுவார்கள். அரசாங்கத்தாரும் இதையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்து செய்ய வேண்டும்.

[Sri V. Sankaran] [16th February 1959

புழுங்கல் அரிசி பதமாக இருந்தால் சீக்கிரத்தில் நாற்றமடிக்க ஆரம்பித்துவிடும். பச்சரிசி சீக்கிரம் புழுத்துப்போய்விடும். இவைகளையெல்லாம் அரசாங்கத்தார் stock செய்யும் போது மனதிற் கொள்ளவேண்டும். ஏனென்றால், அரசாங்கத்தார், தாங்களே உணவு தானியங்களை கொள்முதல் செய்து விற்கும்போது தங்களுக்கு கெட்ட பெயர் வந்துவிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, 'க்ராப் இன்ஷ்யூரன்ஸ்' திட்டத்தை அரசாங்கம் கொண்டுவர வேண்டும். கூடியவரையில், தரிசாக இருக்கும் நிலங்களை சாகுபடிக்கு உட்படுத்த வேண்டும்.

சிறு நிலச்சுவான்தார்களுக்கு அதாவது 5 ஏக்கர் அல்லது ஒரு வேலிக் குட்பட்ட நிலச்சுவான்தார்களுக்கு விவசாயச் சட்டங்களிலிருந்து பூரணமாக விலக்கு அளித்தால் உணவு தானிய உற்பத்தி இன்னும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்போது அவர்களுக்கு அதிக உற்பத்தி செய்ய ஊக்கம் இல்லை.

கூட்டுறவு சாகுபடி முறை சைனாவிலும் ஜப்பானிலும் நன்றாக இயங்கி வருகிறது என்றால், அது நம் நாட்டிலும் வெற்றியுறும் என்று நிச்சயம் சொல்வதற்கில்லை. ஆகவே கூட்டுறவு சாகுபடித் திட்டத்தை பரீட்சார்த்தமாக ஓரிரண்டு இடங்களில் செயல்படுத்திப் பார்த்துவிட்டு பிறகு விரிவான அடிப்படையில் செயல்படுத்தவேண்டும்.

கமிஷன் ஏஜெண்டுகள் எல்லோரையுமே ஒழித்து விடுவது உசிதமல்ல. தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளிடமிருந்து அவைகளை இவர்கள் வாங்கி ஏதோ மூட்டைக்கு நாலணா, ஆறணா லாபத்திற்கு விற்கிறார்கள். அவர்களால் விவசாயிகளுக்கும் வாங்கும் மக்களுக்கும் அனுகூலமும் சௌகரியமுமே ஏற்படுகிறது. பல உணவுப் பொருள்கள் இதுபோன்று ஏஜெண்டுகள் மூலம் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. எனவே உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து விற்கும் பொறுப்பை பூரணமாக தாங்களே எடுத்துக் கொண்டு கமிஷன் ஏஜெண்டுகள் எல்லோரையுமே நீக்குவது சரியா என்று அரசாங்கத்தார் நன்றாக சிந்தித்து தங்கள் முடிவை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

Sri K. R. NALLASIVAM : மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, இன்று ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருப்பது பொருள் பற்றாக்குறையா அல்லது வேறு ஏதாவது காரணங்கள் இருக்கின்றனவா என்பதுபற்றி நாம் கொஞ்சம் யோசிப்பது பயனுள்ளதாக இருக்கும் என்று நினைக்கிறேன். உண்மையிலேயே, பொருள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்ற பிரச்னை அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. விலைகள்தான் ஏறியிருக்கின்றன என்று எல்லோரும் கூறுகிறார்கள். விலைவாசி ஏற்றத்திற்கு அடிப்படையான காரணம் யாது என்று பார்ப்போம். ஜனத்தொகை உற்பத்திக்கு ஏற்ப உணவுப் பொருள் உற்பத்தி இல்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அதனாலேயே விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன என்று சொல்ல முடியாது. அதுவும் ஒரு காரணம் என்றுதான் சொல்ல வேண்டும். மற்றொரு காரணம் சர்க்கார் ரூபாய் நோட்டுகளை ஏராளமாக அச்சடித்ததால் பற்றாக்குறை பட்ஜெட்டுகள் வந்திருக்கின்றன. பற்றாக்குறை பட்ஜெட்டுகள் வந்ததற்குக் காரணங்கள், அதிகமான ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டதும் அதிகமாக நோட்டடித்ததும் ஆகும். சுமார் 2,000 கோடி ரூபாய்க்கு நோட் அடித்திருக்கிறார்கள். அது மத்திய சர்க்கார் செய்யும் காரியம். அதைப்பற்றி இங்கே பேச வேண்டியதில்லை என்றாலும் அது இந்தப் பிரச்னையில் சம்பந்தப்பட்டிருப்பதால் அதை இங்கே தெரிவிக்கிறேன். விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க வேண்டுமானால் அதையும் தடுக்க வேண்டும். அதைச் செய்யாமல் வேறு முறைகளால் விலைவாசி உயர்வைக் கட்டுப் படுத்தலாம் என்று நினைத்தால் அது சரியாக இருக்க முடியாது என்று நினைக்கிறேன். எல்லாப் பொருள்களின் விலைவாசிகளுமே இப்போது

16th February 1959] [Sri K. R. Nallasivam]

உயர்ந்திருக்கின்றன. விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறோம். இன்று உணவு தானியங்களின் விலைகள் தான் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்குக் கூட விலைக் கட்டுப்பாடு கொண்டுவர வேண்டும். உணவு தானியங்களுக்கு மட்டுமே விலைக் கட்டுப்பாடு கொண்டுவந்தால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ஒரு கமிட்டி அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் இங்கே வந்திருக்கிறது. இப்போது, ஒரு விஷயத்தை நாம் மனதிற் கொள்ள வேண்டும். விலைகளை அகில இந்திய அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தார், ராஜ்ய அரசாங்கத்தார், அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து ஆலோசித்த பிறகுதான் இப்போதைய நிர்ணயிக்கப்பட்ட விலைகள், நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விவசாயிகளின் பிரதிநிதிகள், பொருள்களை வாங்குபவர்கள், அரசாங்க அதிகாரிகள் இவர்கள் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து ஆலோசித்து விலைகளை நிர்ணயித்தால் தான் நியாயமான விலைகள் நிர்ணயிக்கப்படும். மேலும், தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கும் உணவு தானியங்களுக்கும் விலைவாசியில் நியாயமான தொடர்பு இருக்க வேண்டும். இப்போது அப்படிப்பட்ட தொடர்பு இல்லை. அரசாங்கத்தார் இப்போது, நாட்டில் ஏற்படும் கிளர்ச்சிகளை சமாளிப்பதற்காகவே உணவு தானியங்களின் விலைகளை நிர்ணயித்திருக்கிறார்கள் என்று தான் நான் நினைக்கிறேன். விவசாயிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள், சர்க்கார் அதிகாரிகள் ஆகிய எல்லோரும் சேர்ந்து ஆலோசித்து நிர்ணயித்தால்தான் சரியான விலைகள் நிர்ணயிக்கப்படும்.

(Mr. Speaker in the Chair.)

அடுத்தப்படியாக, இன்று சர்க்காரால் உணவு தானியங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலைகள், வாங்கிச் சாப்பிடுபவர்களில் பெரும்பான்மையோருக்கு கட்டுப்படியாகாதவை. குறிப்பாக, ஆசிரியர்களும் என்.ஜி.ஓ-க்களும் இந்த விலைகளில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். யாருடைய நலனுக்காக விலைகளைக் கட்டுப்படுத்த விரும்புகிறோமோ அவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய அளவில் இவை நிர்ணயிக்கப்படவில்லை.

மேலும், இன்று பல உணவு தானியங்களின் விலைகள் விவசாயிகளுக்கு பாதகமாக இருக்கின்றன. இன்று சில தானியங்களின் விலை மணங்கு ஒன்று ஒன்பது ரூபாயிலிருந்து பதினொன்று ரூபாய் வரை விற்கின்றது. ஆனால் அதே நேரத்தில் விவசாயி வாங்கும் பிண்ணாக்கின் விலை மணங்கு பன்னிரண்டு ரூபாயாக இருக்கிறது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். வியாபாரிகள் பொருள்களை எந்த விலைக்கும் விற்கலாம் என்று இருந்தால் நாட்டு மக்களுக்குத் தொந்தரவுகள்தான் ஏற்படும். ஆகவே விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. விவசாயிகளுக்குத் தேவையான உரம், பிண்ணாக்கு முதலியவைகள் நியாயமான விலைக்கு விற்க வேண்டும். பொதுவாக, இன்று, விலைவாசிகள் குறைய வேண்டும் என்று கிளர்ச்சி செய்பவர்கள் விவசாயியல்லாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு அவ்வாறு கிளர்ச்சி செய்யும் துணிச்சல் இல்லை. அவர்கள் போராடுபவர்களாக இல்லை. எனவே அவர்கள் மீது எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் சுமத்துவோம் என்ற முறையில் இன்று சர்க்கார் இயங்கி வருகிறது. தான்ய உற்பத்தி செய்கிற அத்தனை பேர்களும், பெரிய நிலச்சுவான்தார்கள் என்று சொல்லி விட முடியாது. பெருவாரியான வகையில் நிலம் வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள், 40 சத விகிதம் தான் இருக்கிறார்கள். இரண்டு, மூன்று ஏக்கர்கள் என்று நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் 60 சத விகிதம் தான் இருக்கிறார்கள். '1 5) இப்பொழுதுள்ள முறைப்படி, விவசாயிகளிடம் இருந்து சர்க்கார் தான்யத்தை நேரடியாக வாங்கப் போவதில்லை. அதே நேரத்தில் விவசாயிகள் அதிக விலைக்கு விற்பார்களேயானால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் மிரட்டப்படுகிறது. மார்க்கெட்டைப் பொறுத்தவரை

[Sri K. R. Nallasivam] [16th February 1959

யில், அது பற்றி கேள்வி கேட்பார் கிடையாது. இன்றைய நிலை, விவசாயிகள் அரிசியை கண்ட்ரோல் ரேட்டை விட குறைவான விலைக்குத்தான் கொடுக்க வேண்டிய நிலை உண்டாக்கப் பட்டிருக்கிறது. நான் ஒரு உதாரணம் கொடுக்க விரும்புகிறேன். பதினைந்து ஏக்கர்களுக்கு மேல் நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளிடம் இருந்து மட்டுமே சர்க்கார் நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என்று வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர அதற்கு கீழ் நிலம் வைத்திருப்பவர்களுக்கு ஒருவித தொந்தரவும் கொடுக்கக்கூடாது என்று நான் அரசாங்கத்தை .கேட்டுக் கொள்கிறேன். எப்படி இன்று நெல் அல்லது அரிசியின் விலை கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறதோ அதே போன்று அதன் உற்பத்திக்கு தேவையாக இருக்கிற பிற பொருள்களுக்கும் விலைக் கட்டுப்பாடு இருக்கவேண்டும். ஸல்பேட்டின் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது, எங்கு வேண்டுமானாலும் கிடைக்கிறது என்று கூறப்படுகிறது. கவர்னர் உரை அன்று என்னால் இங்கு வர முடியவில்லை. இன்று நான் ஸல்பேட் வாங்குவதற்கு அலைந்து கொண்டிருந்தேன். கூட்டுறவு சொஸைட்டியில் போய் கேட்டால், அவர்கள், "தனிப்பட்ட முறையில் விற்கக் கூடியதை விற்று விட்டோம், இப்பொழுது இருப்பதெல்லாம் உரக்கடன் கொடுப்பதற்காகத்தான் வைத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். 'அப்படி உங்களுக்கு வேண்டுமானால் பி.டி.ஓ.விடம் கையெழுத்து வாங்கி வாருங்கள்' என்றும் கூறப்பட்டது. அவரிடம் போனால், 'மணியக்காரர், கணக்குப் பிள்ளை போன்ற குட்டித் தேவதைகளிடம் சென்று சர்ட்டிபிகேட் வாங்கி வாருங்கள்' என்று சொன்னார்கள். கடைசியாக, 53 ரூபாய்க்கு, இரண்டு மூட்டை உரம் வாங்கிக் கொடுத்துவிட்டு வந்தேன். ஆகவே விவசாயத்திற்கு தேவையான உரப் பொருள்களுக்கு ஆலாய்ப் பறந்து நாயாக அலைய வேண்டியிருக்கிறது. அப்படி அலைந்தும் கூட ஒரு மண்ணாங்கட்டியும் கிடைக்க மாட்டேன் என்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருக்கின்றன, சர்க்கார் ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்றெல்லாம் சொல்லப்படுகிறது . . ஆனால் சாதாரண விவசாயிகளுக்கு, அவர்களுக்கு வேண்டிய உரப் பொருள்கள் போன்றவை கிடைப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒரு நியாயமான ஏற்பாடு செய்யும் போது, ஒரு மணங்கு நெல்லுக்கு ஐந்து ரூபாய் என்று விலை நிர்ணயித்தாலும் அதை நான் ஆதரிப்பேன். நாட்டில் விலைவாசி எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டிலுள்ள மக்கள் நிம்மதியாக வாழ முடியும். அடுத்தபடியாக, விலையைக் கட்டுப்படுத்துவதினால் மட்டும் உணவுப் பிரச்னையை நாம் தீர்த்துவிட முடியாது. உணவுப் பொருள்களுக்கு விலை கட்டுப்படுத்தப் படுவதைப் போன்று அதற்கு அவசியமாக இருக்கிற மற்ற பொருள்களின் விலையும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். உற்பத்தி, உற்பத்தி என்று சொல்லிக் கொண்டு மட்டும் இருந்தால் போதாது. உற்பத்தி செய்பவனை மனிதனாக மதித்து, அவனுக்கு வேண்டிய சௌகரியங்களை செய்து கொடுக்க வேண்டும். எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்கு, அவர்களுக்கு மதிப்பளிப்பதில்லை. ஆகவே, உற்பத்தி அதிகரிக்க வேண்டுமென்றால் உற்பத்தி செய்பவர்களுக்கு உற்சாகம் அளிக்கப்பட வேண்டும். நான் பெரிய விவசாயிகளைப் பற்றி கூறவில்லை. அவர்கள் நிலச்சீர்திருத்தத்தைப்பற்றி கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள், நிலச்சீர்திருத்தம் வந்தால் உற்பத்தி பாதிக்கப்படும், ஆகவே நிலச்சீர்திருத்தம் கொண்டு வராதீர்கள் என்று சொல்கிறார்கள். அவர்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நாலைந்து ஏக்கர்கள் வைத்துக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்குத்தான் உற்சாகம் அளிக்கப்பட வேண்டும். சர்க்கார் மெஷினின் உதவியெல்லாம் நிலச்சீர்திருத்தத்தால் யார் அடிப்பட்டுப் போகிறார்களோ அவர்களுக்கு கிடைக்கிறது. சர்க்கார் உதவியெல்லாம் அவர்களுக்குத்தான் பயனளிக்கிறது. உணவு உற்பத்திப் பெருக்கு, நிலச்சீர்திருத்தம் இவைகளுக்கு எல்லாம் சர்க்கார் கூட்டுறவு இயக்கத்தைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறது. உண்மையிலேயே, கூட்டுறவு இயக்கம் என்பது நல்லதொரு இயக்கந்தான். ஆனால் அதே நேரத்தில் இன்று நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் எப்படி இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அதற்குள் [illegible]

16th February 1959] [Sri K. R. Nallasivam]

வைத்தால், போதும், போதும் என்றாகி விடுகிறது. ஒரு பக்கம் பிரசாரம் வேண்டும், மற்றொரு பக்கத்தில் விவசாயிகள், சாதாரண விவசாயிகள் அதில் போய் சேருவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுதுள்ள சட்டம், கூட்டுறவு இயக்கத்தில் இருக்கும் நிர்வாகிகள் மற்றுமுள்ள நிலைகளைப் பார்க்கும்போது சாதாரண விவசாயிகளுக்கு அவைகளினால் தற்போது வசதி கிடைப்பது அவ்வளவு லேசில் இல்லை. ஆகவே, கூட்டுறவு இயக்கங்களின்பால் நிலச் சீர்திருத்தம் போன்றவைகளை ஒப்படைக்க நினைக்கும்போது இன்றுள்ள சட்டத்தை மாற்றியமைத்து ஏராளமான விவசாயிகளை அதில் சேர்க்கும்படியானதொரு ஏற்பாட்டை செய்து கொடுக்கவேண்டும். கடைசியாக, எப்படி உற்பத்திப் பெருக்கிற்கு புதிய அணைக்கட்டுத் திட்டங்கள் தேவையாக இருக்கின்றனவோ அதேபோல் பழைய கால்வாய்கள், குளங்கள், வாய்க்கால்கள் இவைகளெல்லாம் செப்பனிடப்பட்டு நல்ல கவனம் செலுத்தப்பட வேண்டும். (பெல்) இன்று வாய்க்கால்கள் போன்றவை கவனிக்கப்படுவதில்லை. பத்தாயிரம் ஏக்கர்களுக்கு பாயும் வாய்க்கால்களை 20,000 ஏக்கர்களுக்கு பாயும்படி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஆகவே, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப் படும்போது அதற்கு காரணமாக இருக்கிற விவசாயிகளுக்கு, சாதாரண விவசாயிகளுக்கு வேண்டிய சௌகரியங்களை அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRIMATHI KOLANTHAI AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று உணவுப் பொருள்களின் விலை மிக அதிகமாக ஏறிக்கொண்டு செல்கிறது. அதனை கட்டுப்படுத்த வேண்டுமென்பதில் எல்லோருக்கும் நிறைய அக்கறையுண்டு. அதே சமயத்தில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் அவல நிலையையும் யோசனை செய்து அதற்கேற்ற நடவடிக்கைகளை, எப்படி நாம் உணவுப்பொருள்களின் மேல் உள்ள விலைக் கட்டுப்பாட்டை நல்ல முறையில் வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்று கருதுகிறோமோ அதே முறையில் விவசாயிகளுக்கு கிடைக்கக் கூடிய பல வகைப்பட்ட சௌகரியங்களையும் நல்ல முறையில் சிந்தனை செய்து பார்த்து சாதாரண விவசாயிகளுக்கு அவைகள் எளிதாக கிடைக்கக் கூடிய முறையில் திட்டத்தை வெற்றிகரமாக கொண்டுவர வேண்டும் என்பதுதான் என் போன்றோரின் அவாவாகும். விவசாயிகள் தான் நாட்டிலே விளைபொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் இன்று விஷம் போல் ஏறியிருக்கும் விலைகளெல்லாம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கிடைக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்போமேயானால் உறுதியாகச் சொல்ல முடியும், விவசாயிகளின் கையில் அதிகப்படி விலையின் பலன் கிடைக்கவில்லை என்று. ஆக, பல்வேறு கஷ்டங்களுக்காளாகி பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அந்த லாபம் கிடைக்காமல் இடையிலுள்ள வியாபாரிகளும், பல்வேறு கூட்டங்களும்தான் அந்தவித லாபத்தை அடைகிறார்கள் என்பதனை இந்த சபை நல்ல ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு அவசியமான பொருள்களை வரிசையாக எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால் விவசாயிகள் உபயோகிக்கும் பொருள்களில் மிகச் சிறந்தது, உர வகைகளாகும். உரம் வாங்குவதற்கு விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதைப்பற்றி பல அங்கத்தினர்கள் இங்கு எடுத்துக் கூறினார்கள். ஒரு விவசாயி சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலைக்கு உரம் வாங்க வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக அவன் உணவு உற்பத்தியை விட்டுத்தான் அப்பால் நிற்கவேண்டும். ஆகவே அதிகமான விலைக்கு உரம் வெளியில் கிடைக்கிறதே அது எப்படி கிடைக்கிறது என்பதை பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். வெளியில் மூட்டை ஒன்று 10 ரூபாய், 15 ரூபாய் லாபம் கொடுத்து பெறக்கூடிய மூட்டைகள் எல்லாம் எங்கிருந்து கொண்டுவரப்படுகின்றன என்பதை பரிசீலனை செய்து பார்த்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உர வகைகள் கிடைப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சர்க்கார் சிந்தனை செய்ய

[Srimathi Kolanthai Ammal] [16th February 1959

வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, நவீன முறைகளைப் பயன்படுத்தி விவசாயத்தைப் பெருகக வேண்டுமென்று சொல்கிறோம். நவீன முறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்ற வாய்ப்புகளைச் செய்யும்போது அந்த வாய்ப்புகள் சாதாரண விவசாயிகளுக்கு கிடைக்கும்படிச் செய்வது நமது கடமையாகும் என்பதை நாம் உணர வேண்டும். சர்க்கார் உணவு தானியங்களை கொள்முதல் செய்கிறது. அப்படி கொள்முதல் செய்யும் சரக்குகள் சில மாதங்களில் கெட்டுவிடுகின்றன என்று பலர் சொல்வதைக் கேட்கிறோம். நியாயவிலைக் கடைகளில் கிடைக்கும் அரிசி, நெல் முதலியன மட்டமானதாகும் என்று வெளியில் பேச்சு வரக் கூடிய அளவில் இருக்கிறது. சாதாரண ஒரு விவசாயி தன் பொறுப்பிலுள்ள நெல்லை அல்லது அரிசியை கொள்முதல் செய்து எப்படி பாதுகாக்கிறானோ அதேபோல் அரசாங்கமும் தன் கையில் பொருள்களை பாதுகாக்க ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும். அடுத்தபடியாக, பருத்தியை எடுத்துக்கொண்டால் விவசாயி உற்பத்தி செய்கிறான், பருத்தியை, மிகவும் பாடுபட்டு உற்பத்தி செய்த பருத்தியை விற்கிறான், விவசாயி. பருத்திக் கொட்டை வாங்கும்போது விவசாயிகளின் நிலைமை எப்படியிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இம்மாதிரியான
12-00 Noon. இடங்களிலெல்லாம் விவசாயிகளுக்கு கஷ்டம் கொடுக்கக்கூடாத நிலைமையிலே கூட்டுறவு பண்டகசாலைகளை நிறுவவேண்டும் என்று நாம் நிர்ணயம் செய்யவேண்டும். விவசாயிகளிடமிருந்து எந்த அளவுக்கு பொருள்களை வாங்குகின்றோமோ அந்த அளவுக்கு பண்டமாற்று முறையிலாவது விவசாயிகளுக்கு கிடைக்கவேண்டிய பொருள்களை முதலிலே கொடுப்பதற்கு நம்முடைய யோசனைகளை செலுத்தவேண்டுமென்பதை நான் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இனி, இன்று உணவுப் பொருள்களெல்லாம் ஏராளமாக விலை ஏறிக் கொண்டு போகிறது என்று கூக்குரல் இடுகிறார்கள் நகரவாசிகள். தொழிற்சாலையிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளப் பெருங்குடி மக்கள், ஆசிரியர்கள், அரசியல் துறையிலே இருக்கக்கூடியவர்கள், அரசாங்க ஊழியர்கள் என்று பல்வேறு துறையிலே ஈடுபட்டவர்கள் அவர்களுக்கு நிர்ணயமான ஒரு சம்பளம் இருக்கிற காரணத்தினாலே, அந்த உணவுப் பொருள்களை வாங்க முடியாத நிலைமையில் இருக்கிறோம் என்று ஒரு நிலைமை ஏற்படுகிறது. ஆனால் விளைந்த உடனேயே தங்களுக்கு இருக்கும்படியான கடன் பளு தாங்கமாட்டாது விவசாயி பொருள்களை விற்றுவிடுகிறான். அதே விவசாயி பிறகு தனக்கு அந்தப் பொருளை வாங்கவேண்டுமென்று கருதுவனேயாகில், தான் எந்த விலைக்கு விற்றானோ அந்த விலைக்கு வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. இப்படி நாம் பார்ப்போமானால் உற்பத்தி செய்யும்பொழுது விவசாயிகளுக்கு பல துறைகளிலும் கஷ்டம் இருக்கிறது என்பதை நாம் அனுபவபூர்வமாக காண்கிறோம். அவ்வாறு கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யக்கூடிய பொருள் அவனுக்கு எளிதாக கிடைக்கிறதா என்று சிந்தனை செய்து பார்ப்போமாகில், கிடைப்பது கிடையாது. ஆகவே, விவசாயப் பொருள்களின் உற்பத்தி ஏராளமாக பெருகவேண்டும், அப்பொழுதுதான் விலைவாசி குறையும் என்ற ஒரு எண்ணத்தை இந்தச் சபை முன் கூறிக்கொள்ளுகிறேன். அதற்குரிய வழிகளை நாம் வகுக்கவேண்டும். நம் நாட்டிலே இன்னும் ஏராளமாக தரிசு நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் நல்ல முறையில் உற்பத்தியை பெருக்கவேண்டுமென்று சொன்னால், ஆங்காங்குள்ள சிறு குளம், குட்டைகளை சீக்கிரம் செப்பனிட்டு நீர் வசதியை பெருக்க வேண்டும். நீர் வசதியை மட்டும் பெருக்கினால் போதாது. விவசாயிகளுக்கு எளிதான முறையிலே கடன் மேலும் கிடைப்பதற்கு ஏற்ற வாய்ப்புகள் செய்ய வேண்டும். இப்பொழுது அமுலில் இருக்கிற திட்டத்தில் ஓரளவு, குறைந்த அளவு கடன் கிடைக்கக்கூடிய சலுகைகள் இருக்கின்றன. ஆனால், பெரிய பாங்குகளில் வியாபாரம் செய்கின்றவர்களுக்கு கடன் கிடைப்பது போல, விவசாயிகள் என்று சொன்னால்

16th February 1959] [Srimathi Kolanthai Ammal]

கிடைப்பதில்லை. விவசாயிகளுக்கு பாதுகாப்பு சட்டம் இருக்கிறது. இது சில சமயங்களில் அவர்களுக்கு பாதகமாகக்கூட இருக்கிறது என்பதையும் இந்த இடத்திலே ஞாபகப்படுத்துகிறேன்.

விவசாயிகள் உபயோகப்படுத்தக்கூடிய மின்சாரத்தை எடுத்துக்கொள்ளுவோமானால், அதிக விலை கொடுத்துத்தான் அவர்கள் மின்சாரத்தை உபயோகிக்கிறார்கள். தொழிற்சாலைகளில் குறைந்த செலவிலே மின்சாரம் உபயோகப்படுத்தப்படுகிறது. அதற்கு கூறப்படுகின்ற காரணங்கள், அவர்கள் லட்சக்கணக்கான கிலோவாட்களை உபயோகிப்பதினால், குறைந்த செலவில் சப்ளை செய்ய முடியும் என்பதுதான். 'விவசாயத்துறையில் அந்த அளவு எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, எங்களுக்கு ஏற்படுகின்ற செலவுக்கு ஏற்றபடி விவசாயிகளிடமிருந்து பகிர்ந்து கோரப்படுகிறது' என்று சொல்லுகிறார்கள். அதற்கு என்னுடைய யோசனை என்னவென்று கேட்டால், எப்படி நாம் ஒரு திட்டம் முன்னேறவேண்டும் என்று கருதினால், அதற்கு மான்யமாக சில தொகைகளை அளிக்கின்றோமோ, அதே மாதிரி மின்சாரத்தை உபயோகிக்கின்ற விவசாயிகளுக்கு மான்யமாக ஒரு தொகையை உபயோகித்து, தொழிற்சாலைகளுக்கு உபயோகப்படுத்துகின்ற அளவுக்கு பணத்தை பெற்று மீதி விவசாயிகளுக்கு மான்யத் தொகையாக கொடுப்போமானால், விவசாயிகள் நல்ல முறையில் உற்பத்தியை பெருக்க முடியும் என்பதை இந்தச் சபையின் முன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதுமட்டுமல்லாமல், விவசாயிகள் உணவு உற்பத்தியை பெருக்கும் பொழுது, இரவு பகல் என்று பாராமல் மிக அதிகாலையிலே எழுந்திருந்து வயல் வெளியிலே வேலை செய்து பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஏற்ற அளவு, திருப்தியான அளவுக்கு என்று சொல்லப்போனால், கடன் இல்லாத அளவுக்காவது தங்களுடைய வாழ்க்கையை நடத்தலாமா என்று ஒரு விவசாயி கருதினால், அந்த அளவுக்கு நம்முடைய நாட்டிலே விவசாயிகளுடைய நிலைமை உயரவில்லை என்பதைத் தான் நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுவது மட்டுமல்லாமல், நம்முடைய இலக்கியங்களெல்லாம் உழவனை மிகப் பெருமையாக போற்றுகின்றன. இது பெரிய இலக்கிய பாட்டாக அமைந்திருக்கிறது. உழவன் உலகத்திற்கு அச்சாணி என்பது தெரியும். வண்டி கவிழாமல் செலுத்தப்படவேண்டுமென்று சொன்னால், அந்த அச்சாணி திடமொன்று கழலாமல் இருக்கவேண்டும். அந்த அச்சாணி திறம்பட இல்லை என்று சொன்னால், சீக்கிரம் ஓடுகின்ற வண்டி கவிழ்ந்துவிடும் என்பதைத்தான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். விலைவாசியை நல்ல வரம்பு போட்டு கட்டுப்படுத்த வேண்டுமென்றுதான் நினைக்கிறேன். எல்லா அங்கத்தினர்களும் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய எல்லா பொருள்களின் விலையையும் முதலில் கட்டுப்படுத்திவிட்டு, விவசாயிகள் உற்பத்திசெய்யும்படியான அரிசி, பருப்பு, எண்ணெய் இவற்றின் விலையை கட்டுப்படுத்த முன்வரவேண்டும் என்பதைத்தான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்யும்படியான பொருள்களின் விலையை முதலில் கட்டுப்பாடு செய்வதை விட, அவர்களுக்கு கிடைக்கக்கூடிய பொருள்களின் விலையை கட்டுப்படுத்துவதிலும், மேலும் அவர்களுக்கு செய்யக்கூடிய சௌகரியங்களிலும் சர்க்கார் கவனத்தை முதலில் செலுத்த வேண்டும் என்பதை இந்தச் சபை முன் தெரிவித்துக் கொண்டு, எனது சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. V. P. PERIAVALAGURUVA REDDI: கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது உணவுப் பொருள்களின் விலைவாசி ரொம்ப அதிகமாக இருக்கிறது, அதை கட்டுப்படுத்த வேண்டுமென்று எல்லா மக்களும் சொல்லுகிறார்கள். அரசாங்கமும் சொல்லுகிறது. அதை கட்டுப்படுத்த வேண்டியது வாஸ்தவம்தான். இது எப்படி இருக்கிறது என்றால், நான் 1930-ல் ஸ்ரீவில்லிபுத்தூரில் டியூடி வேலை பார்த்தேன். அப்பொழுது கோவிலில் ஒரு மேளக்காரன் 5½ மணிக்கு மேளம் வாசிப்பதற்குப் பதிலாக [illegible] மணிக்கு வந்து மேளம் வாசித்தான். அதன் காரணமாக என்னிடம் ரிபோர்ட் செய்யப்பட்டது. உடனே நான் அவனுக்கு 10 ரூபாய் அபராதம்

போட்டேன். அப்பொழுது அவன் 'என்னுடைய தொழில் 'டம் டம்' அடித்து சத்தப்படுத்துவதாய் இருப்பதால் எல்லோரும் தெரிந்துகொண்டு என்னைப்பற்றி ரிபோர்ட்டு செய்கிறார்கள். அரிசி, நெய், எண்ணை இவைகளெல்லாம் சத்தமில்லாமல் களவு போகிறது. சம்பளம் வாங்கும்பொழுது காஷியர் ஒரு ரூபாய் கேட்கிறார். இம்மாதிரி கொள்ளை போகும்பொழுது நான்தானா அகப்பட்டுக்கொண்டேன்' என்று சொல்லி என்னிடத்தில் ஆத்திரப்பட்டான். உடனே அவனுக்கு நான் விதித்த 10 ரூபாய் அபராதத்தை கொடுக்க வேண்டாமென்று மன்னித்து, மற்ற விஷயங்களை கவனிக்கிறேன் என்று சொன்னேன். அந்த மாதிரி, எல்லோருக்கும் உணவு உற்பத்தி முக்கியம். ஆனால், உணவு விலையை மட்டும் கட்டுப்படுத்தவேண்டும், விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்களின் விலையை கட்டுப்படுத்துகிறோமோ என்றால், ஒன்றுமில்லை. இன்று மண்வெட்டி ஏழு ரூபாய், எட்டு ரூபாய் விற்கிறது. கொழுக்கம்பு எட்டணா, ஆறணா இருந்தது இன்று ரூபாய் 1–8–0 விற்கிறது. நானே என்னுடைய நான்கு கிணறுகளுக்கு பம்பு செட்டுப் போட்டிருக்கிறேன். 1939, 1940, 1941-ல் ஒரு பம்பு செட்டு போட்டு, கரெண்டு கனெக்ஷன் கொடுத்து, தண்ணீர் எடுத்து வெளியிலே விடுவதற்கு ரூபாய் 375, 400 ரூபாய் ஆகியிருக்கிறது. ஆனால், இன்று 1,500, 1,800 ஆகிறது. நான் என்னுடைய கிணறுக்கே போட்டிருக்கிறேன். இந்த நிலைமையில் இருந்து கொண்டிருக்கும்பொழுது விலையை கட்டுப்படுத்துகிறோம் என்று சொன்னால் விவசாயி எங்கே போவது ? அவன் என்ன செய்வான் ? அவனுக்கு வேண்டிய சௌகரியத்தைச் செய்து கொடுத்துவிட்டு விலையை கட்டுப்படுத்தினால், அது பொருத்தமாக இருக்கும். இல்லாத பட்சத்தில், அவன் எந்த விதத்தில் ஜீவிக்க முடியும் என்று தெரியவில்லை. அதுதான் போகட்டும் என்றால், கிணற்றுக்கு அரசாங்கம் ஏராளமாக பண உதவி செய்திருக்கிறார்கள், 1,000 கிணறுகள் வெட்டபட்டிருக்கின்றன. அவைகளிலே பம்பு செட்டுகள் வைப்பதற்கு 8,000, 10,000 கிராமங்களுக்கு கரெண்டு கொண்டுபோய் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் ரைஸ் மில்லுக்கு ஷிப்டு முறை கிடையாது, தொழிற்சாலைக்கு ஷிப்டு முறை கிடையாது. அவர்கள் என்ன மண்ணையா தின்கிறார்கள் ? அவர்களும் விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களைத்தான் தின்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது விவசாயிகளுக்கு மட்டும் ஷிப்டு முறை. காலையிலே 6 மணியிலிருந்து 12 மணி வரைக்கும் ஒரு பக்கத்திலும், 12 மணியிலிருந்து 6 மணி வரையில் இன்னொரு பக்கமும் கொடுக்கிறார்கள். மார்ச் மாதத்தில் கம்பு சோளம் விதைக்கவேண்டியிருக்கிறது. பன்னிரண்டு மணிக்கு மேல் சோளத்தை விதைத்து தண்ணீர் விட்டால், அந்த வெயிலுக்கும், தண்ணீர் விடுவதற்கும் சோளம் கருகி மண்ணுக்குள்ளே போய்விடும். அதனால் போதுமான மகசூல் கிடைக்காத நிலைமை இருக்கிறது. முதல் கடமை உலகத்திலுள்ள மக்களுக்கு உணவு தானியம் முக்கியம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்களுக்கு முதலில் கரெண்டு கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு பிறகு கொடுக்க வேண்டும். ஷிப்டு முறையோடு அல்லாமல் கரெண்டு 'கட்' பண்ணுகிறார்கள். வருண பகவான் ஸ்டைரைக் செய்தால் 'கட்' பண்ண வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி யார் பேரிலும் குற்றமில்லை. மற்றொரு விஷயம் 'மினிமம் சார்ஜ்' கொடுக்க வேண்டியிருக்கிறது. வருஷக் கடைசியில் அவர்கள் தண்ணீர் எடுக்க முடியவில்லை. அறுபது, எழுபது ரூபாய்க்கு தண்ணீர் எடுத்துக்கொண்டு, பாக்கி 80 ரூபாய் தண்டம் கட்டவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், 'பியூஸை' பிடுங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். தண்டம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. பிண்ணாக்கு மாட்டுக்கு வேண்டியிருக்கிறது. ஆடு, மாடு, கோழிக்குக்கூட பிண்ணாக்கை பிசைந்து வைக்கிறார்கள். பலகாரக் கடைக்காரர்கள் கூட முறுக்கு போன்ற பலகாரம் செய்வதில் கடலை மாவோடு பிண்ணாக்கைச் சேர்த்து உபயோகிக்கிறார்கள். பிண்ணாக்கு ஏற்றுமதிக்கு அரசாங்கம் உத்தரவிட்டதினால், இப்பொழுது 120 ராத்தல் மூட்டை 25 ரூபாய் விற்கிறது. நெல் விலையை மட்டும் கண்ட்ரோல் செய்து விட்டால் அவன் என்ன செய்வான் ? கிராமங்களில்

விவசாயிகளில் முக்கால் வாசிப் பேர்கள் கேப்பை, சோளம், கம்பு முதலிய தானியங்களை உபயோகிக்கிறார்கள். அவர்கள் கரெண்டு தொந்த வினால் பம்பு செட்டு போட்டு சரியாக இந்தத் தானியங்களை விளைவிக்க முடியவில்லை.

இந்த நிலைமையில் நாங்கள் எல்லாம் இப்போது ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கருக்கு மேல் கம்பு போட முடியவில்லை. பெரியாறு திட்டம் வந்துவிட்டால் ஷிப்ட் ஸிஸ்டம் எல்லாம் போய்விடும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போதும் ஷிப்ட் ஸிஸ்டம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இனிமேல் நெய்வேலி திட்டம் நிறைவேறிவிட்டால் மின்சாரத்திற்கு பஞ்சமே இருக்காது என்று இன்ஜினியர்கள் சொல்லுகிறார்கள். நெய்வேலி நிறைவேறி விட்ட பிறகு வேறு ஒரு வேலி வரட்டும் அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே விவசாயிகளுக்கு போதுமான அளவில் மின்சாரம் முதலில் கொடுக்க முன்வரவேண்டும். அப்போது தான் விவசாயம் அபிவிருத்தி அடைய முடியும். சர்க்கார் விவசாயத்திற்கு என்று ஏராளமாக பணத்தை செலவு செய்து வருகிறார்கள். அதை நாம் எல்லோரும் அறிந்திருக்கின்றோம். எங்கள் பக்கத்தில் ஒரு நபர் ஒரு தரிசு நிலத்தை காட்டி 9,000 ரூபாய் வாங்கியிருக்கிறார், இதைப்பற்றி விபரங்கள் சேகரித்துக்கொண்டிருக்கிறேன். இப்போது அரைபாகம் தான் விபரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. பூராவும் ரிக்கார்டு பூர்வமாக விபரங்கள் கிடைத்தவுடன் மந்திரி அவர்களிடம் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். இவ்விதம் அநியாயமாக சில இடங்களில் அரசாங்கப் பணம் எல்லாம் கொள்ளை போய்க்கொண்டிருக்கிறது. நான் போன பட்ஜெட் கூட்டத்திலும் சொன்னேன். இப்போது பம்பு ஏற்படுத்தவேண்டுமென்றால் அதிகமான ரூபாய் வேண்டியிருக்கிறது. ஆனால் விவசாயத்திற்கு என்று கோடிக்கணக்கில் பணம் ஒதுக்கப்படுகிறது. எலக்ட்ரிக் சாமான்கள் எல்லாம் விலை உயர்ந்துகொண்டே போகிறது. இந்த சாமான்களை எல்லாம் எலக்ட்ரிக் டிப்பார்ட்மெண்டிலிருந்து வாங்கி வைத்து நூற்றுக்கு பத்து என்று லாபம் போட்டு விற்றாலும்கூட பரவாயில்லை. விவசாயிகள் சந்தோஷமாக வாங்கிக்கொள்வார்கள். இன்றைக்கு எப்படியிருக்கிறது என்றால் எலக்ட்ரிக் சாமான்கள் எல்லாம் காலையில் ஒரு விலை, மத்தியானம் ஒரு விலை, சாயந்திரம் ஒரு விலையாக இருக்கிறது. இதற்கு எல்லாம் கண்ட்ரோல் கொண்டு வரவேண்டும். அதல்லாமல் நெல்லுக்கு மட்டும் கண்ட்ரோல் கொண்டு வருவதால் விவசாயிகளுக்கு எந்த விதமான நன்மையும் இல்லை. விவசாயிகளை இம்சித்துக்கொண்டு போனால் அவர்கள் நெல் விவசாயம் செய்வதையே நிறுத்திவிட்டு, தன்னுடைய நிலங்களில் எல்லாம் வாழை, கரும்பு, வெங்காயம் போன்ற விவசாயத்தை ஆரம்பித்து விடுவார்கள். தனக்கு அவசியப்படுகிற அளவுக்கு மட்டும் நெல் விவசாயத்தை வைத்துக்கொண்டு சும்மா இருந்து விடுவார்கள். அவ்விதம் அவர்கள் சும்மா இருந்து விட்டால் இப்போது 46 லட்சம் டன் எதிர்பார்க்கலாம், 48 லட்சம் டன் எதிர் பார்க்கலாம் என்று சொல்லுவது எல்லாம் டபக் என்று கீழே விழுந்துவிடும். விவசாயிகள் எல்லாம் சோர்ந்து போய் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு காலம் தள்ளிவிடலாம் என்று நினைத்துக்கொண்டு இருந்துவிடுவார்கள். ஆகவே அவர்கள் அவ்விதம் போய்விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை. நான் சொல்லுவதை ஏதோ கிராமத்தான் ஏதோ உளறுகிறான் என்று எண்ணிக்கொண்டு இருக்காதீர்கள். நான் சொல்லுவது இன்று நடந்து கொண்டே வருகிறது. குடும்பக்கட்டுப்பாடு (பர்த் கண்ட்ரோல்) திட்டத்தை கொண்டு வருவதற்கு ஆப்ரேஷன் நம் நாட்டுக்கு பயன்படாது என்று முன்னால் இங்கேயே சொல்லியிருக்கிறேன். அப்போது நான் சொன்னதை ஒருவரும் கவனிக்கவில்லை. இன்று என்ன பார்க்கிறோம் என்றால் ஆப்ரேஷன் முறைகள் ஒன்றும் குடும்பக்கட்டுப்பாடுக்கு உதவாது, குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை கொண்டு வருவதற்கு மக்களுக்கு உணவோடு சேர்த்து சாப்பிடுவதற்கு ஏதாவது மருந்து கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு விஞ்ஞானி சொல்லியிருப்பதாக பத்திரிகையில் பார்க்கிறோம். அதேதபடியாக நான்

முன்பே சொல்லியிருந்தேன், கிராமங்களில் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் இல்லே, அவர்கள் கழுத்தில் துணியைச்சுற்றிக்கொண்டு ஊர் சுற்றுவதற்கு பட்டணம்தான் பிடித்திருக்கிறது, கிராமங்கள் அவர்களுக்கு பிடிப்பதில்லே, ஆகவே டாக்டர் கோர்ஸ் படிப்பவர்களுக்கு அவர்களுடைய படிப்பு தீர்ந்த பின்னுல் கிராமங்களில் சென்று ஒரு வருஷம் வேலே செய்யவேண்டும் என்று சர்க்கார் ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொன்னேன். அப்போது அதை அரசாங்கம் கவனிக்கவில்லே. இப்போது நம்முடைய முதல் மந்திரி ஜவகர்லால் நேரு அவர்கள் "கிராமங்களில் டாக்டர்கள் எல்லாம் ஒரு வருஷம வேலே செய்ய வேண்டும் என்கின்ற சட்டம் கொண்டு வந்தாலும் நலலதுதான்" என்று குறிப்பிட்டிருப்பதாக நாம் பார்க்கிறோம். இதைத்தான நான் ஒரு வருடத்திற்கு முன்னுல் இங்கேயே தெரிவித்தேன். ஆகவே நான் சொல்லுகின்ற வார்த்தைகளே "பழம் பெருச்சாளி" கூறுகிற வார்த்தைகளாகக் கருதி அதற்கு தகுந்த விதத்தில் விவசாயிகளுக்கும் மறறவர்களுக்கும் வேண்டிய உதவிகளே எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதல்லாமல் விவசாயிகளே தொநதரவு படுத்தக்கூடிய வகையில் நெல்லுக்கு எல்லாம் கண்ட்ரோல் கொண்டு வந்தால் அவர்கள் கீழே படுத்துவிடுவார்கள். பின்னுல் நாட்டுக்குததான கஷ்டமாகத் தீரும். வீட்டில் வளருகின்ற பூனே சாதாரணமாக கடிககாது, ஒரு தடவை அல்லது இரண்டு தடவை அடித்தால் கூட கடிக்காது. ஆனுல அடித்துக்கொண்டே இருந்தால் அது நம் மேலே விழுந்துவிடும். அது போல் விவசாயிகள் எப்போதும் ஒரே மாதிரி இருந்து கொண்டிருகக மாட்டார்கள். எல்லாவற்றையும் பொறுத்துப் பார்த்துக்கொண்டேயிருப்பார்கள். ஒரு நாள் தனக்கு வேண்டிய அரை எக்கரை மட்டும் வைததுக கொண்டு பாக்கியுள்ளதை எல்லாம் துண்டாக்கிவிட்டு சும்மா இருந்துவிடுவார்கள். இதனுல் நம் மாகாணத்திற்குத்தான் கஷ்டம் வந்து சேரும். அடுத்தபடியாக கூட்டுறவு கூட்டுறவு என்று சொல்லப்படுகிறது. விவசாயத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய அனுபவத்தைச் சொல்லுகின்றேன. ஒரு விவசாயிக்கு நான்கு பையன்கள் இருக்கிருர்கள் என்று வைத்துக கொண்டால், ஒருவனே கிராமத்திலேயே படிக்க வைத்துவிட்டு அதனே பின்னுல் விவசாயத்திலேயே ஈடுபட விட்டுவிடுவான், இரண்டாவது பையனே கொஞ்சம் நல்ல முறையில் படித்துக் கொண்டிருந்தால் அவனே பட்டணத்துக்கு அனுப்பி படிக்க வைப்பான், அவன் ஐந்து அல்லது ஆருவது பாரம் வரை படித்துவிட்டு ஊருக்கு திரும்புவான், ஊருக்கு வந்ததும எப்போதும் தலேயை சீவி, பவுடர் எல்லாம் போட்டுக்கொண்டு, 18 பொத்தான்கள் கொண்ட சட்டையையும் போட்டுக்கொண்டு கையில் சடிகாரத்தையும் கட்டிக்கொண்டு திரிவான். இதைப்பார்த்த கிராமத்திலுள்ளவனுக்கு பொறுக்கமுடியாது, அவனும் சட்டையும் போட்டுக்கொண்டு கடிகாரமும் கட்டிக்கொண்டு திரிய ஆரம்பித்துவிடுவான். தகப்பன் என்ன செய்வான்? இவ்விதம் ஒரு குடும்பத்திற்குள்ளேயே கூட்டுறவை பாாகக முடியாது. இந்த நிலேமையில் எப்படி கூட்டுறவு உருப்படும் என்று தெரியவில்லே. உண்மையிலேயே உணவு உற்பத்தியை பெருக்க வேண்டுமென்றுல் விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா உதவிகளேயும் செய்து கொடுகக வேண்டும். விவசாயி வாங்கவேண்டிய சாமான்கள் எல்லாம் விலேயேறிக் கொண்டிருக்கிறது. புண்ணைக்கு, உரம், மண்வெட்டி முதலிய சாமான்களின் விலேயெல்லாம் ஏறிக்கொண்டே போகிறது. இதற்கெல்லாம் கண்ட்ரோல் ஒன்றும் வரக் காணும். இதை ஒன்றும் செய்து கொடுக்காமல் உணவைப் பெருக்கவேண்டும், உணவைப் பெருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தால் எங்கே இருந்து பெருகும் என்றுதான் தெரியவில்லே. சுமார் 300 வருஷங்களுக்கு முன்னுல் நடந்ததாக ஒரு கதையை சொல்வார்கள். மதுரை பக்கத்தில் நத்தம் என்ற இடத்தில் லிங்கப்ப நாயக்கர் என்ற ஒரு ராஜா ஆண்டு வந்தாராம். அவர் தனக்கு வேண்டிய பால் கிடைப்பதற்கு மாடுகளே வாங்கி விட்டு பாதுகாப்பது எல்லாம அவைகள் எல்லாம் சங்கடம் என்று நினைத்துக்கொண்டு, மந்திரியை சொல்லி ஒரு உத்தரவு போட்டார். அதாவது ராஜாவினுடைய மாளிகைக்கு

முன்னுல் பல அண்டாக்களே வைத்து அதில் அவன் நாட்டிலுள்ள எல்லா மக்களும் ஒரு படி பால் வீதம் கொண்டு வந்து விடவேண்டும் என்பது. அவ்விதம் விட்டுவிட்டால் ராஜாவுக்கு போதுமான பால் கிடைத்துவிடும் என்பது ராஜாவினுடைய கருத்து. ஆனுல் அங்குள்ள ஒரு சம்சாரி நினைத்தான்—எப்படியும் இங்குள்ள 5,000 மக்களும் ஒவ்வொரு படி பால கொண்டு ஊற்றத்தான் செய்வார்கள்—நாம் மாத்திரம் ஒரு படி வெறும் தண்ணீரை மட்டும் கொண்டு ஊற்றிவிட்டால் என்று நினைத்து தண்ணீரை கொண்டு போய் ஊற்றிவிட்டான். ராஜா பால் இருக்கும் அண்டாக்களே எல்லாம் கொண்டு வாச்சொல்லிப் பார்க்கும்போது எல்லா அண்டாக்களிலும் தண்ணீர்தான் இருந்தது. எல்லா மக்களுமே இப்படி நினைத்துக் கொண்டு தண்ணீரைககொண்டு வந்து ஊற்றிவிட்டார்கள். இந்த மாதிரி எல்லா விதத்திலும் விவசாயிகளின் மீது சுமைகளே போடுவார்களானுல் இந்த நாட்டில் விவசாயம் அடியோடு போய்விடும். அதோடு அணேக்கட்டுகளுக்காக பத்து கோடி, ஐந்து கோடி என்று கோடிக்கணககில் செலவு செய்யப்படுகின்றது. அணேக்கட்டுகள் நாட்டுக்கு வேண்டியதுதான். ஆனுல் அதற்கு முன்பு ஏற்கனவே இருக்கக்கூடிய கண்மாய்களே எல்லாம் சீர்படுத்தினுல் நல்லதாக இருக்கும். ஒவ்வொரு இடங்களிலும் வானம் பார்த்த கண்மாய்கள் அதிகமாக இருககின்றன. ஒவ்வொரு கண்மாயிலிருநதும் 500 எக்கர்கள், 600 எக்கர்கள் சாகுபடி செய்யமுடியும். சாதாரணமாக இதையெல்லாம் ஆழப்படுத்தவேண்டுமென்றுல் வெறுமனே மண்ணே வெட்டி எடுத்துப்போட்டால் மட்டும் போதாது, புல் டோஸர்களே கொண்டு வந்து ஆழப்படுத்தினுல்தான் உபயோகமுள்ளதாக இருக்கும். இவ்விதம் எல்லா தாலூகாகளிலும் இருக்கின்றன. அணேக்கட்டுகள் கட்டிவிட்டால் நிறைய தண்ணீர் கிடைத்து விடும் என்று இருந்தாலும்கூட ஒவ்வொரு தாலூகாவிலும் குறைந்த பட்சமாக இருக்கின்ற கண்மாய்களே எல்லாம் புல் டோஸர்கள் உபயோகித்து ஆழப்படுத்துவார்களானுல் அது நமது உணவு பெருக்கத்திற்கு உதவும்படியாக இருககும் என்பதை தெரிவித்துக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொளகிறேன்.

* **SRI P. M. PERIA KARUPPAN AMBALAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது உணவு தான்யங்களின் மீது இருக்கும் விலேவாசியை குறைகக வழிவகை செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. நான் அதை ஆதரிக்கின்றேன், என்றுலும் உணவு தான்யங்களே மாத்திரம் கட்டுப்படுத்திவிட்டால் நமக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டுவிடாது. அரிசியை நாம் கட்டுப்படுத்த முற்படும்போது அரிசியை உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களுக்கு எல்லாம் நாம் கட்டுப்பாடு கொண்டு வரவேண்டும். அப்போதுதான் நாம் உற்சாகமாக விவசாயம் செய்ய முடியும். விவசாயத்திற்கு தேவைப்படுகிற சாமான்களுக்கு எல்லாம் விலே அதிகமாகிக்கொண்டே போகிறது. புண்ணைக்கு, பருத்தி விதை, இரும்பு சாமான்கள் இவைகளுக்கு எல்லாம் இப்போது அதிகமான விலே கொடுக்க வேண்டியிருககிறது. வண்டிப்பட்டை ஒன்று இப்போது வாங்க வேண்டுமென்றுல் 90 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதுவும் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மண் வெட்டி வாங்க வேண்டுமென்றுல் பத்து ரூபாய், பன்னிரண்டு ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக 15 அல்லது 20 வருடங்களுக்கு முன்னுல் ஒரு விவசாயி ஒரு ரூபாயைக் கொண்டு போனுல் ஜவுளி எடுக்கப்போனுல் ஒரு வேஷ்டி, ஒரு துண்டு, ஒரு சட்டை இத்தனேயும் எடுக்க முடியும். ஆனுல் இப்போது ஏழு அல்லது பத்து ரூபாய் கொண்டுபோனுல்தான் இத்தனேயும் எடுக்க முடியும். இந்த நிலேயில் இருந்தால் விவசாயி எந்த முறையில் உணவைப் பெருக்க முடியும் என்பதை நாம் பார்க்கவேண்டும். முன்பெல்லாம் அதாவது 20 வருடங்களுக்கு முன்பு எல்லாம் ஒரு விவசாயி ஒரு எக்கரிலிருந்து சுமார் 20 மூட்டைகள் நெல் உற்பத்தி செய்து கொண்டிருந்ததைப் பார்த்தோம். இப்போது அதிகமாகவே அதாவது இருபது மூட்டை, முப்பது மூட்டையென்று உற்பத்தி செய்து கொண்டிருக்கிறாகள். இதற்கெல்லாம் காரணம் அவர்களுக்கு நல்ல லாபம்—அதிகமான லாபம்—கிடைக்கிறது என்பதால்தான்

[Sri P. M. Peria Karuppan Ambalam] [16th February 1959

அந்த வேலையைச் செய்ய முற்படுகிறார்கள். இப்படி அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய தானியத்தின் விலையை மட்டும் கட்டுப் படுத்தினால், அடுத்த வருஷத்தில் நாம் எதிர்பார்ப்பதில் பாதி அளவு உணவுப் பொருள்களைக்கூட நாம் நிச்சயமாகப் பெற முடியாது என்று சொல்லிக் (12-10 p.m.) கொள்ள ஆசைப்படுகிறேன். மனிதனுக்கு எப்போதும் தனக்கு என்று வரும்படி இருக்கிறது என்ற உற்சாகம் இருந்தால்தான் அவன் எந்தத் தொழிலிலும் ஈடுபடுவான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்படி உணவுப் பொருள்களின் விலையை மட்டும் கட்டுப்படுத்தும்போது மற்ற பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்தவேண்டும். அவர்களுக்கு நல்ல விலை கொடுக்கவேண்டும். அதிலும் இன்றைக்கு விலையில் நெல்லுக்கு நெல் வித்தியாசம் வைத்திருக்கிறார்கள். ஒரு நெல்லுக்கும் இன்னொரு நெல்லுக்கும் வித்தியாசம் இருக்கிறது—9 ரூபாய் ஒரு நெல்லுக்கும், இன்னொரு நெல்லுக்கும் 13 ரூபாய் என்றும் வைத்திருக்கிறார்கள்— ஆகையால் ஒரு நெல்லுக்கும் இன்னொரு நெல்லுக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. ஒரு நெல்லுக்கும் இன்னொரு நெல்லுக்கும் உற்பத்திச் செலவில் 8 அணா அல்லது 1 ரூபாய்தான் இருக்கும். அதற்கு அதிகமாக 2 ரூபாய், 3 ரூபாய் என்று வித்தியாசம் இருப்பது நல்லதல்ல. இருக்கக்கூடிய வித்தியாசமானது சுமாரான அளவில் இருந்தால்தான் நலமாக இருக்கும்.

அதிலும் எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயம் விவசாயிகளுக்கு ஒரு சங்கம் என்று எந்த இடத்திலும் பார்க்க முடியாது. எந்தத் தொழிலாளியை எடுத்துக்கொண்டாலும் ஒரு சங்கம் இருக்கிறது. மொத்தத்தில் விவசாயிகள் 100-க்கு 75 பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான சங்கமும் இல்லை. அப்படி அவர்களுக்கென்று ஒரு சங்கம் இல்லாத காரணத்தினால்தான் சர்க்கார் தைரியத்தோடு விலையைக் கட்டுப் படுத்த முன் வந்திருக்கிறார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். மற்றவைகளாக இருந்தால், அவர்களுக்குச் சங்கங்கள் இருக்கின்றன, அதனால் போராட்டத்திற்குப் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று சர்க்கார் யோசிக்கக்கூடும். இப்படி ஒரு சங்கம் இல்லாத காரணத்தினால் தான் யாரும் கேட்பதற்கு நாதி இல்லை என்ற காரணத்தை வைத்துக்கொண்டுதான் இப்படிச் செய்கிறார்கள் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

இதையெல்லாம் நல்ல முறையில் சீர்தூக்கிப் பார்த்து 100-க்கு 75 பேர்கள் விவசாயத்திலே ஈடுபட்டுள்ளவர்கள், அவர்களுக்குச் சரியான கூலி கிடைப்பதில்லை, பாக்கி 25 பேர்கள் அவர்கள் உற்பத்தி செய்வதைச் சாப்பிடுபவர்கள், ஆகையால் அவர்களை பாதிக்காத அளவில் விலை நிர்ணயும் செய்யவேண்டும், அத்துடன் மற்ற சாமான்களும் சுலபமான முறையில்—மலிவான விலையில்—கிடைக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் முக்கியமாக, இந்த உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்றால் நிச்சயமாக கண்மாய்களை—தூர்ந்து கிடக்கக்கூடிய கண்மாய்களை—மராமத்து செய்யவேண்டும். அவைகளுக்கெல்லாம் நல்ல மடைகள் இருக்கவேண்டும்—நல்ல மதகுகள் இருக்கவேண்டும். பழைய கண்மாய்கள் ஏராளமாகத் தூர்ந்து பழுதடைந்து—கிடக்கின்றன. அவைகளையெல்லாம் செப்பனிட்டுக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு சிறு அணைகளை எங்கெங்கெல்லாம் கட்ட முடியுமோ அங்கெங்கெல்லாம் கட்டிக் கொடுத்து விவசாயத்திற்கு உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விலை விஷயத்தில் சர்க்கார் மிகவும் நன்றாக—உன்னிப்பாக—கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

16th February 1959]

*SRI N. K. PALANISAMI: கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் இந்தச் சபையில் பல அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு அறிக்கையிலேயும் விலைவாசி கட்டுப்படாத அளவிற்கு அவ்வளவு ஏறி விடவில்லை, சர்க்கார் கவனித்துக்கொண்டிருக்கிறது என்று ஒவ்வொரு கட்டத்திலும்—ஒவ்வொரு சமயத்திலும்—சொல்லியிருக்கிறார்கள். இன்றைய தினம் அறுவடையாகியும் விலைவாசி குறையவில்லை. போன பிப்ரவரி-மார்ச் மாதங்களை எடுத்துக்கொண்டால் 338 புள்ளியாக இருந்தது 417 புள்ளியாக மாறியிருக்கிறது. இந்த வருடம் அக்டோபரில் எடுத்துக் கொண்டால் 432-ஆக இருந்தது 420 ஆகக் குறைந்திருக்கிறது.

(Deputy Speaker in the Chair.)

போன வருஷம் 417-ஆக இருந்தது இன்றைய தினம் 3 புள்ளிகள் அதிகமாக இருக்கிறது. சேலத்தில் கொள்முதல் இல்லையாகையால் ராகி விலை மூட்டைக்கு 2 ரூபாய் அல்லது 3 ரூபாய் ஏறியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இன்றைய தினம் அறுவடை ஆகியும் விலை குறையவில்லை என்றால் இன்னும் நெருக்கடியான நிலையில்தான் இருக்கிறோம்.

விலை ஏறுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று ஸ்கேர்ஸிடி, அதாவது பற்றாக்குறை ஏற்பட்டு அதன் காரணமாக "டிமாண்ட்" அதிகமாகி விலை ஏறலாம். இங்கு விலை ஏறியிருப்பதற்கு அதல்ல காரணம். போதுமான அளவு உற்பத்தி இருக்கிறது. ஆனால் அது மார்க்கெட்டுக்கு வராமல், அதைச் சேமித்து வைத்து எப்போது விலை ஏறுகிறதோ அப்போது விற்கவேண்டுமென்று இன்றையதினம் "ஹோர்ட்" செய்து வைத்திருக்கிறார்கள். இதுதான் இன்றைய விலை ஏற்றத்திற்கு முக்கிய காரணம். நேருஜீ அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள் "இந்த மாதிரி ஹோர்டிங் ஒரு சில அளவுக்கு இருந்தாலும் படிப்படியாகக் குறைந்து விடும்" என்று. ஜெயின் அவர்கள் சொல்லுகிறார்கள் "நமது உற்பத்தியில் 5 சதவீதம்தான் குறைவு, ஸ்பெகுலேடர்ஸும், ஹோர்டர்ஸும் இருப்பதால்தான் விலை ஏற்றம் அதிகமாக இருக்கிறது" என்று. ஏராளமாக உணவு உற்பத்தி இருக்கிறது—போதுமான அளவு உற்பத்தி இருக்கிறது— ஆனால் அதைக் கொள் முதல் செய்து சரியானபடி வினியோகம் செய்யாமல் இருக்கிறோம். நான் கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் "ரேஷன் கடைகள் வைத்தால் மாத்திரம் விலை குறைந்து விடாது" என்று. நான் ஒத்துக் கொள்கிறேன். 200, 300 கடைகளை மட்டும் திறந்து விட்டு, அதிலே 2 அல்லது 3 மூட்டைகளை வினியோகம் செய்தால் மட்டும் விலை குறையாது. நிவாரணக் கடைகளை வைத்து கன்ஸ்யூமர் தேவைகளைப் பூர்த்தி செய்து விடலாம் என்று நான் சொல்லவில்லை. சர்க்காரே கொள்முதல் செய்து குறைந்த விலையில் விற்பனை செய்யவேண்டும். படி ரூ. 1-4-0 விற்றாலும் பரவாயில்லை—அந்த அளவுக்கு விற்கும் நிர்ப்பந்தம் ஏற்படாது. ஆகவேதான் சர்க்கார் கொள்முதல் செய்து அவர்களே வினியோகம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கார் 2 லட்சம் டன் தானியம் ப்ரொக்யூர் செய்யப் போவதாகச் சொல்லுகிறார்கள். நமது நாட்டில் 44 லட்சம் டன் உணவு உற்பத்தி ஆகிறது. அதிலே 31 லட்சம் டன் அரிசி, பாக்கி 12 லட்சத்துக்கு மேல் வேறு தானியங்கள். சர்க்கார் இப்போது கொள் முதல் செய்யப்போவது 2 லட்சம் டன்தான். நமது அரிசித் தேவையானது 20 லட்சம் டன் என்று வைத்தால்கூட, 10 லட்சம் டன்னாவது கொள் முதல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் குறைந்த விலையில் கொடுக்க முடியும். சர்க்காருக்கு பெரிய நிலப்பிரபுக்களின் பிடிப்பு இருப்பதால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாமல் தடங்கல் இருந்துகொண்டிருக்கிறது.

ஸ்டேட் டிரேடிங் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அது ஒரு வரவேற்கத் தகுந்த அம்சமே. 1956-ல் பாலக்காட்டில் நடந்த [illegible] நாட்டிலே கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் போட்டது. உணவு நெருக்கடி தீவிரமாகப் போகிறது. அரிசி கொள்முதல் வினியோகத்தை சர்க்காரே

எடுத்து நடத்தவேண்டுமென்று தீர்மானம் போட்டு அதன் அடிப்படையிலே வற்புறுத்தி வந்திருக்கிறது. அதை இப்போதுதான சர்க்காரே எடுத்து நடத்தப்போகிறது. ஸ்டேட் டிரேடிங் நல்ல முறையில் இருக்கவேண்டும். ஸ்டேட் டிரேடிங் என்று சொல்லி பதுக்கல்காரர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது, 2 லட்சம் டன் மட்டும் ப்ரொகயூர் செய்வது என்றால் இதுதானா ஸ்டேட் டிரேடிங் என்று கேட்க ஆசைப்படுகிறேன். இவர்கள் ஸ்டேட் டிரேடிங் என்று சொல்வது பாலை நன்றாகக் காய்ச்சி, ஆற வைத்து, சர்க்கரைபோட்டு பூனைக்கே கொடுப்பது மாதிரி இருக்கிறது. இந்த வியாபாரம் பூராவையும் மொத்த வியாபாரிகளிடம் கொடுத்துவிடுகிறார்கள். காங்கேயத்தில் மொத்த வியாபாரி ஒருவருக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள் . . .

SRI P. G. KARUTHIRUMAN: ரஷ்யாவில் ஸ்டேட் டிரேடிங் வைத்திருக்கிறார்கள். அது பெரிய பூனையாக இருக்குமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மொத்த வியாபாரிக்கு அரசாங்கம் லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அரசாங்கம் எந்த மொத்த வியாபாரிக்கும், தனிப்பட்ட நபருக்கும் லைசென்ஸ் கொடுக்கவில்லை.

SRI N. K. PALANISAMI: ஆகவே, இரண்டு லட்சம் டன் கொள்முதல் செய்வது ஸ்டேட் டிரேடிங் அல்ல. சர்க்கார் கொள்முதல் செய்து சர்க்காரே அதை வினியோகம் செய்யவேண்டும். அந்த அடிப்படையில் சர்க்காரின் கொள்கை இருக்கிறதா என்றால் இல்லை.

மத்திய சர்க்கார் கூறுகிறார்கள் என்று ஸ்டேட் டிரேடிங் கொண்டுவரப் போவதாக சொல்கிறார்கள். இன்றைய தினம் அவர்கள் கட்சியில் இருப்பவர்களே அதை எதிர்ப்பதைப் பார்க்கிறோம். ராஜாஜி, முன்ஷி, ரங்கா போன்றவர்கள் எதிர்க்கிறார்கள். 19 ரூபாய், 20 ரூபாய் என்று வியாபாரிகளுக்குக் கொள்முதல் விலை வைத்திருக்கிறார்களே தவிர விவசாயிகளுக்கு குறைந்தபட்சவிலை எவ்வளவு விலை என்று குறிப்பிட்டு நிர்ணயம் செய்யவில்லை. ஸ்டேட் டிரேடிங் வைத்து சர்க்கார் பொறுப்பில் ஜனங்களுக்கு உணவு வினியோகம் செய்யவில்லை. 10 லட்சம் டன் கூட இப்போது கொள்முதல் செய்யப்போவதில்லை. எனவே நிவாரணக் கடைகள் மூலம் சரியாகச் சப்ளை செய்ய முடியப்போவதில்லை. விலையும் குறைய முடியாது.

நேருஜி அவர்களே ஸ்டேட் டிரேடிங் பற்றியும், கூட்டுறவு விவசாயத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். அது வரவேற்கத்தகுந்த அம்சம். உற்சாகமூட்டக்கூடிய அம்சம். நமது மட்டத்திலே—மாகாண மட்டத்திலே—அதை கொச்சைப்படுத்துவதாக இருக்கிறது. திரு. ராஜகோபாலாச்சாரியார், திரு. முன்ஷி போன்றவர்கள் ஸ்டேட் டிரேடிங் முறையே கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

12-30 இன்னொரு வேடிக்கை என்னவென்றால் புதிய ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. பெரிய முதலாளிகள் பூராவும் உணவு விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லிவந்தார்கள், ஸ்டேட் டிரேடிங் என்பது தனியார் துறையில் கை வைப்பதாகும், அவர்கள் துறையில் தலையிடுவதாகும், என்று சொல்கிறார்கள் என்றால், உண்மையிலேயே நிலப்பிரபுக்களுக்கு ஆதரவு தருவதாக இருக்கிறது, இது வேடிக்கையாக இருக்கிறது, இது அபாயகரமாக இருக்கிறது என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

ஸ்டேட் டிரேடிங் என்றால் சரியான முறையிலே இன்று சர்க்கார் எடுத்து, அதைக் கொள்முதல் செய்து, விநியோகம் செய்து, இரண்டு சர்க்கார் செய்ய வேண்டும். சர்க்கார் இதை எடுப்பதன் மூலம் வருமானமும் உண்டாகும். அதே நேரத்தில் இடைத் தரகர்களை, கள்ள மார்க்கெட்டை ஒழிப்பதற்கு ஒரு முக்கியமான வழியாகும். [illegible]

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நிவாரணக் கடைகள் வைப்பது ஸ்டேட் டிரேடிங் மட்டும் உணவுப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பும் அவசியம். ஏற்கனவே பார்லிமெண்டில் மத்திய சர்க்கார் எல்லாக் கட்சிகளும் சேர்ந்த ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். கமிட்டி போட்டது மட்டுமல்ல. மாகாண சர்க்கார்களுக்கும் இம்மாதிரி கமிட்டி மாகாண மட்டத்திலே போடவேண்டும் என்று சொல்லியிருந்தும்கூட இந்தச் சர்க்கார் தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் நிலச் சீர்திருத்தம் உடனடியாகக் கொண்டுவரப்பட வேண்டும். அதற்கு அடிப்படையாக நேருஜி சொன்னதை வரவேற்கிறோம். கூட்டுறவு பண்ணை அமைத்தால்தான் பூமி கிடைக்கும் என்ற நிலை இருக்கக்கூடாது. நிலத்திற்கு உச்சவரம்பு எவ்வளவு என்று நிர்ணயிக்கப்படவில்லை. அதிகப்படியாக இருக்கும் பூமியை கூட்டுறவு பண்ணையிலே சேர்த்து பஞ்சாயத்து மூலம் விடுவது ஏன்? உழுபவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்படவேண்டும்; பட்டா செய்து கொடுக்கவேண்டும். அவர்கள் இஷ்டபூர்வமான முறையிலே கூட்டுறவு பண்ணை ஏற்பாடு செய்யப்படவேண்டும். அப்பொழுதுதான் உழுபவர்களுக்கு உற்சாகம் இருக்க முடியும். ஆகவே, இப்படிப்பட்ட முறையிலே செய்யவேண்டும்.

நாம் இன்னும் மூன்றாவது திட்டம் போடப்போகிறோம். இரண்டு வருஷ காலத்திலே உணவுப் பிரச்னையைத் தீர்த்தாகவேண்டும். இல்லாவிட்டால் மூன்றாவது திட்டம் போடுவது கஷ்டமாகிவிடும், இன்றைய தினம் இதற்கு எதிர்ப்பு இருக்கிறது. நிலச் சீர்திருத்தத்திற்கும் பெரிய அளவு எதிர்ப்பு வரப்போகிறது. அன்-டெவலப்ட் கண்ட்ரி என்ற முறையில் இன்றையதினம் தொழிலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைவிட விவசாயத்திற்குக் கொடுக்கவேண்டும். விவசாயத்திற்கு அதிகப்படியான தொகை பட்ஜெட்டில் ஒதுக்கவேண்டும். விவசாயத்திற்காக இப்பொழுது எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறதோ, அதை இரண்டு மடங்காகப் பெருக்கி உணவுப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உணவு நிலைமையைப்பற்றி நடந்த இந்த விவாதத்தை நான் வரவேற்கிறேன். கனம் எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள், உத்தியோகப் பற்று இல்லாத இந்தநாளில், உணவுப் பிரச்னையைப்பற்றிய தீர்மானத்தைப் பிரேரேபித்திருக்கிறார். அதற்கு நோட்டீஸ் வேண்டுமென்று வற்புறுத்தாமல் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையையும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டேன். உணவு நிலைமையானது, எல்லோரும் கலந்தாலோசித்து சரியான முடிவு காண வேண்டிய ஒரு விஷயம். எல்லோருக்கும் இதிலே அக்கறை இருக்கிறது. இது கட்சிகளுக்கு அப்பாற்பட்டது.

இந்த அரசாங்கம் உணவு நிலைமையைச் சமாளிப்பதற்குப் பல திட்டங்கள் போட்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகின்றது என்றாலும் அப்போதைக்கப்போது இந்த மன்றத்தில் உள்ள கனம் அங்கத்தினர்கள், எதிர்த் தரப்பிலே இருக்கும் அங்கத்தினர்கள், எல்லோருடைய அபிப்பிராயங்கள், யோசனைகள், அனுபவங்கள் இவைகளையெல்லாம் கூட கேட்டுத் தெரிந்துகொண்டு, தக்கவாறு திட்டங்களை உருவாக்கி நிலைமையைச் சமாளிக்க வேண்டும் என்ற கவலை இந்த அரசாங்கத்திற்கு உண்டு. அந்த வகையிலேதான், இந்தத் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்திலே பல கனம் அங்கத்தினர்கள் கலந்துகொண்டார்கள். கலந்துகொண்டவர்கள் எல்லாரும் இந்த நிலைமையைச் சமாளிக்கவேண்டும், சரிப்படுத்தவேண்டும் என்ற கருத்துடன்தான் பேசினார்கள். ஆனால், மாறுபட்ட அபிப்பிராயங்களும் கூறினார்கள். [illegible]

உணவுப் பொருள்களின் விலை அதிகமாகிறது, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையே, தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு விலையைக் குறைக்கவேண்டும் என்ற யோசனையும் கூறப்பட்டது. ஆனால், குறைப்பது என்றால்—"விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய விளை பொருள்களின் விலை குறையக் கூடாது, விலை குறைந்தால், அவர்களுடைய வருமானம் குறையும், அதனால் அவ்வளவு தூரம் விலைவாசிகளைக் குறைக்கக்கூடாது" என்ற அபிப்பிராயமும் கூறப்பட்டது. இரண்டையும் இணைத்துச் சரிப்படுத்தி, விவசாயிகளுக்கும் நியாயமான விலை கிடைக்கவேண்டும் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் அவர்களுடைய சக்திக்கேற்ற விலை எதுவோ அந்த விலையைத்தான் நாம் நிர்ணயிக்கவேண்டும். ஒவ்வொரு பக்கத்திலிருந்தும்—ஒவ்வொரு கோணத்திலிருந்தும்—வாதாடுவது சரியல்ல. விவசாயத்திற்கு வேண்டிய உரம் முதலியவைகளின் விலை அதிகமாகிறது என்று சொன்னார்கள். அதிலும் எந்த அளவுக்குக் கவனம் செலுத்திக் குறைக்கக்கூடுமோ அது குறைக்கப்பட்டு வருகிறது.

பிண்ணாக்கைப்பற்றி பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். பிண்ணாக்கின் விலை அதிகமாக இருப்பதற்குக் காரணம், ஓரளவு அது அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. மத்திய அரசாங்கத்தின் வியாபார அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—"சமீப காலத்தில் விவசாயப் பொருள்கள் மூலமாகவே நம்முடைய அன்னிய நாட்டு வியாபாரம் பெருகியிருந்தது, அது இன்று குன்றியிருக்கிறது, விவசாயப் பொருள்களின் ஏற்றுமதி பெருக வேண்டும்" என்று கூறினார்கள். அவர் கூறியது நம்முடைய கவனத்தைக் கவர வேண்டும். விவசாயப் பொருள்களின் ஏற்றுமதியையும் நாம் அதிகப்படுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம். ஏற்றுமதியாக வேண்டிய பொருள்கள் ஏற்றுமதியாகாமல் சில சமயங்களில் குறைவாக அனுமதிக்கும்போது, அந்தப் பொருள்களை உற்பத்தி செய்கின்றவர்கள், "ஏற்றுமதியை ஏன் தடுக்கிறீர்கள்? ஏன் குறைக்கிறீர்கள்? ஏற்றுமதியைக் குறைப்பதால் நாங்கள் விளைவிக்கின்ற பொருள்களின் விலை குறைந்துவிடுகிறதே" என்று புகார் சொல்கிறார்கள். ஆகவே, விலைவாசி குறையக்கூடாது என்ற கோரிக்கையும் இருந்துவருகிறது. இதையெல்லாம் அப்போதைக்கப்போது சரிபார்த்துத்தான் ஏற்றுமதி அனுமதிக்கப்படுகிறது. ஆனால், பொதுவாக விவசாயப் பொருள்களின் விலையை நிர்ணயிக்கும்போது விவசாயச் செலவையும் கவனித்துத்தான் நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. அதிலும் கவனம் செலுத்தவேண்டும் என்பதில் வேறு அபிப்பிராயம் இருக்க முடியாது.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, "நாம் தகுந்த நடவடிக்கை எடுக்காமல், உற்பத்தியைப் பெருக்குகின்ற விவசாயிகள் மீது அபாண்டமாக அரசாங்கம் புகார் சொல்கிறது. குறை சொல்கிறது" என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு அரசாங்கம் எப்பொழுதும் சொன்னது இல்லை. நான் அடிக்கடி இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன்—"இந்த ராஜ்யத்தின் நிலைமையைப் பொறுத்தமட்டில், விலைவாசி அதிகமாக இருக்கலாம், அதற்குக் காரணம் முதலிலே உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் இருக்கிறார்களே, அவர்கள் பதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை. அவ்வாறு நான் நம்பவில்லை" என்று நான் சொல்லியிருக்கிறேன். வியாபாரம் செய்கின்றவர்கள் மீது கூட அத்தகைய புகார் நான் சொன்னதில்லை. இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில், இப்பொழுதுள்ள நிலைமையைப் பொறுத்தமட்டில், இந்த ராஜ்யத்து வியாபாரிகள் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று நான் சொன்னதில்லை. வேறு எங்காவது இருக்கலாம், ஆனால், இந்த ராஜ்யத்திலுள்ள வியாபாரிகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் தானியங்களைப் பதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் இல்லை. அத்தகைய குற்றச்சாட்டை நான் சொன்னதில்லை. இருக்கும் நிலைமையைத்தான் கவனிக்கவேண்டுமேயொழிய, யார் மீது பழியைச் சொல்வது என்பது பிரச்னை அல்ல. அரசாங்கத்தின் மீது பழி சொல்வதா, வியாபாரிகள் மீது பழி சொல்வதா, விவசாயிகள்மீது பழி சொல்வதா என்பது அல்ல பிரச்னை.

இன்றிருக்கும் நிலைமையை எவ்வாறு சமாளிப்பது, அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான் இன்று நாம் கவனிக்க வேண்டியது. அதைப்பற்றி குற்றச்சாட்டுகளை கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அது வேறு விஷயம். அதைப்பற்றி நான் பின்னர் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், நாம் இன்று எல்லோரும் சேர்ந்து கவனம் செலுத்தவேண்டிய விஷயம் இப்பொழுதிருக்கும் நிலைமையில் விலைவாசி அதிகப்படுகிறது, அதுதான் இன்றைய விவாதத்தில் முக்கியமாகக் கருதப்பட்ட பிரச்னை. விலைவாசியை எப்படிக் குறைப்பது என்று யோசித்து, உற்பத்தி செய்கின்றவர்களுக்கும், வாங்கி உண்கிறவர்களுக்கும் எல்லோருக்கும் க்ஷேமம் ஏற்படும் வகையில் செய்யவேண்டும். விலை அதிகமாக நிர்ணயிப்போம் என்றால், விவசாயச் செலவும் இன்னும் அதிகமாகும் என்பதை விவசாயிகள் உணராமல் இருக்க முடியாது. அதுதான் இன்றைக்கு முக்கியமான பிரச்னை.

முதலில், விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, அவர்களுக்கு வேண்டிய உதவி, செய்திகள் பெருக்கப்படவேண்டுமென்பது பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். விதை, உரம் போன்ற வகைகளின் உற்பத்தியைப் பொறுத்தமட்டில், பற்றாக்குறை இருக்கிறது. பற்றாக்குறை இருந்தாலும், எவ்வளவு தூரம் இறக்குமதி செய்து, போதிய ரசாயன உரத்தைப் பெறுவது என்பதிலே கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். வரும் ஆண்டிலே இன்னும் அதிகமாகக் கிடைக்கும் என்று மத்திய அரசாங்கத்தின் முயற்சிகளிலிருந்து எனக்குத் தெரிகிறது.

மற்ற இயற்கை உரங்களை எடுத்துக்கொண்டால், பசுந்தாள் உரம் தயாரிப்பதற்கு விதை கிடைப்பதிலுள்ள கஷ்டத்தைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். விதை வாங்குவதற்கு மான்யம் கொடுக்கிறோம். விதை பற்றாக்குறை இருக்கிறது. பற்றாக்குறை எங்கு இருந்தாலும் கள்ள மார்க்கெட் அத்தோடு சேருகிறது. அதையெல்லாம் தவிர்த்து, பசுந்தாள் உரம் கிடைப்பதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. நல்ல விதை கிடைக்க வேண்டும் என்ற அந்த நோக்கத்துடன் விதைப் பண்ணைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது . . .

இன்றைக்கு எவ்வளவோ பண்ணைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற திட்டம் இருந்தாலும் அதில் பாதிகூட எடுத்துக்கொள்ளப்படவில்லை. 12-10 p.m. இருந்தாலும் அரசாங்கம் இதை உணர்ந்து இப்பொழுது இருக்கிற விதைப் பண்ணைகளைக் கொண்டே நடத்தலாம் என்று கருதி வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் மட்டும் அதிகமாக எடுத்துக்கொண்டு அதைச் சீராக நடத்தலாம் என்று உத்தேசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் உரையாற்றும்போது பசுந்தாள் உரத்திற்கு விதை வாங்கும்போது அது காலம் தாழ்த்தப்பட்டுதான் கொடுக்கப்படுகிறது என்று சொன்னேன். கருப்பு மார்க்கெட்டில்தான் கிடைக்கிறது என்று சொல்லவில்லை.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM** : அவர் சொன்னதாக நான் சொல்லவில்லை. அதிலும் கருப்பு மார்க்கெட்டு இருக்கிறது என்று கூறினார்கள். சில இடங்களில் குறிப்பிட்ட காலங்களில் கொடுக்கப்படுவது இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. இப்பொழுது இருக்கக்கூடிய விதைப் பண்ணைகளை வைத்துக்கொண்டே ராஜ்யத்திற்கு வேண்டிய சுத்தமான விதைகளைப் பெற்று விடலாம் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது. கிராமங்கள் பூராவும் இப்படிப்பட்ட விதைகளை எடுத்துக்கொண்டு விவசாயம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. கிராமங்களில் இந்த விதையையே எடுத்துக்கொள்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. சில பண்ணைகள் சரியானபடி

[Sri M. Bhaktavatsalam] [16th February 1959

நடைபெறவில்லை என்பது வாஸ்தவம்தான். அவைகளிலும் கவனம் செலுத்தப்பட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த அதிகப்படியாக நிலத்தை வாங்குவதற்கு இப்பொழுது உத்தேசம் இல்லை. நல்ல நிலம் கிடைப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. ஒரு சில நல்ல நிலங்களும் வாங்கப்பட்டிருக்கின்றன. எஸ்டிமேட் கமிட்டியார் சிபார்சு செய்த பிரகாரம், அவர்களுடைய யோசனையின் பேரில், அதிகப்படியான நிலங்களை இப்பொழுது வாங்குவது இல்லை. ஏனென்றால் சமீபத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் வரப்போகிறது. இன்னும் ஒரு அண்டில் அது நிறைவேற்றப்பட்டுவிடும். அப்படியே அரசாங்கமும் யோசனை செய்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டம் வந்தால் உபரியாக நிலம் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு எந்தந்த வகையில் சாகுபடி செய்யலாம் என்று யோசிக்கப்படும். கூட்டுறவு முறையிலும் சாகுபடி செய்வதாக உத்தேசம். அப்பொழுது நல்ல நிலங்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். அப்பொழுது வேண்டிய நிலத்தை விதைப் பண்ணைகளுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதுவரையிலும் இப்பொழுது இருக்கக்கூடிய பண்ணைகளை வைத்துக்கொண்டே விதை சப்ளை செய்யலாம் என்ற உத்தேசம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

மற்றொரு விஷயத்தைப் பற்றி எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார். அதாவது கிணறு மான்யத்தைப்பற்றி. அது நல்ல திட்டம்தான். கொஞ்ச நாட்களுக்கு அது நடைபெற்று வந்தது. அதன் பிறகு அது நின்றுவிட்டது. சில இடங்களில் அதை சரியானபடி பயன்படுத்திக்கொள்ளவில்லை என்ற புகார் வந்ததால் அதை நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பிறகு நான் பார்த்தேன், மற்ற ராஜ்யங்களில் அதை நடைமுறையில் ஏற்றுக்கொண்டு நீடிக்க நடத்திக்கொண்டு வருவதை. இது சம்பந்தமாக நடந்த மகாநாட்டில் இதைத் தெரிந்துகொண்டேன். மற்ற ராஜ்யங்களில் இது ஒரு நல்ல திட்டம் என்று அதை நீடித்து நடத்துக்கொண்டுவருவதால் அது ஒரு நல்ல திட்டம் என்று கருதி அதைப்பற்றி மீண்டும் யோசனை செய்து, அதை நிறுத்தியது தவறு என்று உணர்ந்து, அதை மறுபடியும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிணறு மானியத்தின் மூலமாக அதிகப்படியான நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது. அதனால் அதையே நீடிக்க வேண்டும் என்றும் கூறினார். அதையும் நாங்கள் உணர்ந்து ஜீவ நதிகள் பாயாத மாவட்டங்களாகிய செங்கற்பட்டு, தென்னார்காடு, வட ஆர்காடு முதலிய மாவட்டங்களில் இந்த திட்டத்தை மீண்டும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த திட்டத்தின்படி சுமார் இரண்டாயிரம் கிணறுகளையாவது வெட்டவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறோம். அதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் 300, 200, 150 என்று பகிர்ந்து கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் அந்த திட்டத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதை கனம் எதிர் கட்சி தலைவருக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கூட்டுறவு பண்ணையைப்பற்றி இரண்டு வித அபிப்பிராயம் கூறப்பட்டது. அதில் ஒன்று கூட்டுறவு முறைப்படி அதனால் பயன் இல்லை என்பது. சாதாரணமாக நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் எல்லோரும் குறைந்த நிலம் தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களால் சின்ன சாகுபடியாகத்தான் செய்யமுடியும். ஆனால் கூட்டுறவுதான் சிறந்த சாதனம் என்று அவர்களால் கருதப்படுகிறது. சில இடங்களில் இது வரையிலும் கூட்டுறவு பண்ணை விவசாயம் சரியானபடி நடைபெறாமல் இருந்திருக்கலாம். அப்படி ஒன்று அல்லது இரண்டு இடங்களில் நடக்காமல் இருந்திருக்கலாம். அதற்குக் காரணம் எவ்வளவோ உண்டு. மதுரையில் கூட்டுறவு பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. அங்கே அது சரிவர நடைபெறவில்லை. அதற்குக் காரணம் அதில் அரசியல் புகுந்து விட்டதால்தான். அதைத் தொடர்ந்து நடத்துவதாகவும் உத்தேசம். தவறான பிரசாரம் நடந்தது.

16th February 1959] [Sri M. Bhaktavatsalam]

அதைக் கண்டு ஏழை விவசாயிகள் மனதில் குழப்பம் ஏற்படுகிறது. ஆனால் ஒன்றிரண்டு இடங்களில் நடைபெற்று வருவதைப் பார்த்தால் கூட்டுறவு முறைதான் சிறந்த முறை என்பது நன்றாகத் தெரியும். நிலச் சீர்திருத்தம் செய்வதுடன் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவசியம் அல்ல, நிர்பந்தமும் இல்லை. நாம் முதலில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வசதிகளை அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதன்பிறகு கூட்டுறவு பண்ணையில் சேருவது, அதன் பிறகு சாகுபடி செய்வது. மற்றொன்றும் இருக்கிறது, கனம் அங்கத்தினர் கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் சொன்னது போல். அவருக்கு கூட்டுறவு முறையில் நல்ல அனுபவம் பெற்றவர், கூட்டுறவு முறையில்தான் விவசாயம் நடைபெற வேண்டும். அதுதான் சிறந்த சாதனம். அதனால் அதை சரியாக நடத்த வேண்டும். அப்படி சில சில இடங்களில் நல்ல முறையில் நடந்து வருகிறது. தேவஸ்தானம் நிலங்களை எடுத்துக்கொண்டால், முன்பு பெரிய குத்தகைக்காரர்கள் நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொண்டு அவர்களுக்குக் கீழ் சிறு குத்தகைக்காரர்களை அமைத்து நிலங்களை குத்தகைக்கு விட்டு வந்தார்கள். அதனால் அவர்களால் நிலத்தை சரிவர பயிரிட முடிவது இல்லை. குத்தகையையும் சரிவர வசூலிக்க முடிவது இல்லை. அவர்களுடைய சரிவர பயிர் செய்வது இல்லை. பணத்தையும் வசூலிக்க முடிவது இல்லை. அது தவறு என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் எடுத்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தால் எவ்வளவோ நன்மையாக இருக்கும், அதன் மூலமாக விவசாயிகளுக்குச் சேர வேண்டியதும் சேரும். இப்படிச் செய்ய வேண்டும் என்றுதான் இப்பொழுது வற்புறுத்தப்பட்டு வருகிறது. அப்படிச் சொன்னதன் பேரில் தஞ்சை மாவட்டத்திலுள்ள பெரிய கிராமங்களில் அப்படித் தொடங்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒன்றிரண்டு இடங்களில் அப்படி தொடங்கியிருக்கிறது. இவைகளையெல்லாம் கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படும். அதைப்பற்றி நாம் இன்னும் பரிசீலனை செய்யவேண்டும். கனம் அங்கத்தினர் ஸ்ரீ சுப்பிரமண்ய கௌண்டர் சொல்லிய யோசனைகளெல்லாம் சிறந்த யோசனைகள்தான். தக்க அனுபவமும், ஆற்றலும் படைத்தவர் சொல்லக்கூடிய யோசனைதான். அப்படி ஒரு கமிட்டி போட்டு அதை உருவாக்கவேண்டுமென்பதை நான் வரவேற்கிறேன். இதிலும் நமது அரசாங்கம் கவனம் செலுத்தும்.

உற்பத்திப் பெருக்கைப்பற்றி கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களைப்பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். கனம் சட்டநாதகரயாளர் உள்பட பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது கொடுக்கப்படுகிற புள்ளி விவரங்கள் சரியானது அல்ல என்று சொல்லுகிறார்கள். விளைவு இருக்கும் அளவில் உற்பத்தி பெருகவில்லை என்றும் சொல்லுகிறார்கள். மற்றும் அங்குள்ள மணியக்காரர்கள் கொடுக்கக்கூடிய புள்ளி விவரங்களைத்தான் இங்கு சொல்லப்படுகிறது என்றும் புகார் செய்தார்கள். ஆனால் நான் சொல்வது, கனம் அங்கத்தினர்களுக்கே நன்றாகத் தெரியும். அவர்களுக்கு வழங்கப்பட்ட, விவசாய இலாகா காரியதரிசியால் தயாரிக்கப்பட்ட அறிக்கையிலேயே அவர்கள் காண்பார்கள். 1955–56-ம் ஆண்டில் நமது ராஜ்யத்தில் மொத்த தானிய உற்பத்தி 44 லட்சத்தி 21 ஆயிரத்து 980 டன் என்பதை அவர்கள் காண்பார்கள். 1958–1959-ம் ஆண்டில் மொத்தம் 49 லட்சத்தி 87 ஆயிரம் டன் உற்பத்தியாகியிருக்கிறது. இன்னும் அதிகமாகக்கூட வந்திருக்கக்கூடும். ஆனால் மழை பெய்யாததாலும், சில இடங்களில் பூச்சிகள் பயிரை அழித்ததன் காரணத்தாலும் அதனால் பயிர்கள் நாசமாய்ப்போனதன் காரணத்தாலும் கணிசமான அளவு உற்பத்தி பெருகவில்லை. அப்படியிருந்தும் சில இடங்களில் கணிசமான அளவில் உற்பத்தி பெருகித்தான் இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR: Can we reach the revised target?

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say that now. Sir, we are making every effort to increase production and we have still got another two years. ஆனால் ஒன்று இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் உற்பத்தியில் நாம் படிப்படியாக உயர்ந்துகொண்டேதான் வருகிறோம். 1949-ம் ஆண்டில் இந்த ராஜ்யத்தின் உற்பத்தி 30 லட்சத்தி 40 ஆயிரம். 1955–56ல் சுமார் 44 லட்சம், 1958–59ல் சுமார் 50 லட்சம் டன். ஆகவே நமது ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் 1949-க்குப் பிறகு உற்பத்தி கணிசமான அளவில் பெருகிக்கொண்டேதான் வந்திருக்கிறது. இன்னும் எவ்வளவு தூரம் பெருகும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும் இன்னும் பெருக்குவதில் கவனம் செலுத்திக்கொண்டுதான வருகிறோம்.

மற்றொரு விஷயத்தையும் நான் விளக்க விரும்புகிறேன். புள்ளி விவரங்களைப்பற்றி கனம் எம். பி. சுப்பிரமண்யம் அவர்களும் குறிப்பிட்டார், அதாவது மணியக்காரர்கள் கொடுக்ககூடிய புள்ளி விபரங்களை வைத்துக்கொண்டு இங்கே கூறப்படுகிறது என்று. அப்படிச் சொல்வது சரியல்ல. அதையே நம்பவேண்டும் என்றும் நாங்கள் சொல்லவில்லை. குறிப்பிட்ட வகையில் சர்வே செய்து சரியானபடி விஞ்ஞான முறையில் கணக்குப் பார்க்கப்படுகிறது. அதையும் நல்ல முறையில் கவனித்து வரப்படுகிறது. ஒவ்வொரு இடத்திலும் பரவலான முறையில் எவ்வளவு விளை
12-50 p.m கிறது என்று கணக்குப் பார்க்கப்பட்டு வருகிறது. அந்தக் கணக்கை வைத்துக்கொண்டு மணியம், கர்ணம் கொடுக்கக்கூடிய கணக்கையும வைத்துக்கொண்டு கணக்கிடப்படுகிறது. அவர்கள் எல்லோரும் தவறுகள செய்கிறார்கள் என்றும் நான் சொல்லவில்லை. மணியம், கணக்கர்களுடைய கணக்குகள் அதில் இல்லை. கனம் அங்கத்தினர்களுக்கு மற்றொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பத்து நாட்களுக்கு முன்பு டில்லியில் விவசாய இலாகா அமைச்சர்களுடைய மகாநாடு நடந்தது. அந்த சமயத்தில் தென் மண்டல உணவு நிலைமையைப்பற்றி மைசூர் ஆந்திரா, கேரளா ராஜ்யத்தின் உணவு மந்திரிகளும் கலந்துகொண்டார்கள், அதில் நானும் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது கேரள அமைச்சர் அவர்கள் ஒரு புகார் சொன்னார்கள். கவலை தெரிவித்தார்கள். அதாவது "மாதந்தோறும் 20 ஆயிரம் டன் சராசரி தமிழ்நாட்டில் இருந்து அரிசி எங்களுக்கு வந்து கொண்டிருக்கிறது இப்போது அரசாங்கம் 2 லட்சம் டன் வாங்க முற்பட்டால் அதனால் எங்களுக்கு வருவது குறைந்துவிடுமோ, பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகிறேன்." என்று தெரிவித்தார்கள். அவர்கள் சொன்னது இது, நான் சொல்லவில்லை. மாதந்தோறும் 20 ஆயிரம் டன் வருவதாக அவர்களே குறிப்பிட்டார்கள். மொத்தம் எவ்வளவு போகிறதோ, நமக்குத் தெரியாது. சென்னை நகருக்கு—ஆந்திராவிலிருந்து நெல் வருகிறது—அரிசி வருகிறது. ஆனால் போதிய அளவு வரவில்லை. மத்திய அரசாங்கத்திடமிருந்தும் வரவில்லை. புள்ளிவிவரங்கள் வைத்துக்கொண்டு பார்த்தால் இது நன்றாக விளங்கும். இதையெல்லாம் குறிப்பிடுவது அரசாங்கத்தின் சார்பாக பெருமை அடித்துக்கொள்வற்காக இல்லை. விவசாய அபிவிருத்திக்காக நாம் ஏராளமாகப் பணம் செலவு செய்கிறோம். ஆனால் விவசாயிகள் ஒன்றும் ஊக்கத்தோடு, உற்சாகத்தோடு விளைவைப் பெருக்கவில்லை என்பதாக விவசாயிகள்மீது அபாண்டமாக நாம் பழி சுமத்திவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். விவசாய மக்கள் வெள்ளாமையைப் பெருக்கவேண்டுமென்று மிக்க ஊக்கத்துடன், உற்சாகத்துடன் பெரு முயற்சி செய்து ஈடுபடுகிறார்கள். உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டும் வருகிறார்கள். அவர்களது ஆற்றலுக்கும், உழைப்புக்கும் குறைவு வரக்கூடாது என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன். ஒரு ராஜ்யத்தைப் பொருத்தமட்டில் இவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டியது அவசியம் இல்லை. அதனால் நமக்குப் போதுமானதை உற்பத்திச் செய்துகொண்டால் போதுமானது என்று

நான் திருப்தி அடையவில்லை. நம் லட்சியம் எல்லாம் உணவைப் பெருக்க வேண்டும். நம் தேவைக்குப் போக அதிகமாக ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதுதான். இதுதான் அரசாங்கத்தின் எண்ணமும்.

கனம் அங்கத்தினர் கருத்திருமன் அவர்கள் ஆத்திரத்தோடு பேசினார். அவர் நல்ல விவசாயி. கஷ்டப்பட்டு விவசாயம் செய்கின்றார். தன்னிடத்தில் 3 எக்கர்தான் இருக்கிறது என்று சொல்கிறார். சொத்து பிரிவினை செய்யப்பட்ட பிறகு அவருக்கு அவ்வளவு தான். அவர் குடும்பத்திற்கே முன்பு 25 ஏக்கர்தான் இருந்தது என்கிறார். அவர் நன்றாக உழைத்துப் பயிரிடுபவர். ஆகையால் அவருக்கு அதன் அருமை தெரிகிறது. " விலையைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படவேண்டும்? எதற்காக குறைந்த விலை என்று நிர்ணயிக்கவேண்டும்?" என்று ஆத்திரப்பட்டார்கள்.

நாம் இப்படி கொள்முதல் செய்வது என்று இல்லாவிட்டால் நம் ராஜ்யத்தின் தேவைக்கு மற்ற நாடுகளோ, ராஜ்யங்களோ ஏற்றுமதி செய்யத் தயாராய் இருக்கவேண்டும். கனம் கருத்திருமனைப் போன்றவர்கள் உற்பத்தியைப் பெருக்கிக் கொடுக்கிறார்கள். உண்மையிலேயே இந்த விலைக் குறைவு பற்றி விவசாயிகள் கவலைப்படமாட்டார்கள். யாருக்கும் அந்தக் கவலை ஏற்படாது. உற்பத்தியைப் பெருக்கி விட்டால் க்ஷேமம். இதற்கிடையில் விலையைக் கட்டுப்படுத்துவது என்றால் ஏன் அப்படிச் செய்யவேண்டும் என்கிறார்கள். இன்றைக்கு விவசாயிகளுக்கு ஆகிற செலவு அதிகமாயிற்றே, விவசாயிகளுக்குத் தேவையான இதர சாமான்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முன்வருமா என்றெல்லாம் கேட்டார்கள். இன்னும் சிலர் உணவுப் பொருளின் விலை விஷம்போல ஏறிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் முன்பே சொல்லியிருக்கிறேன். விலை ஓரளவு தான் ஏறியிருக்கிறது. அதைத் தடுப்பதில் அரசாங்கமும் கவனம் செலுத்தி வருகிறது. விலை அதிகப்படாமல் இருப்பதற்குதான் அரசாங்கமே அதை வாங்கி அவசியம் நேரிடும்போது நியாயவிலைக் கடைகளின் மூலம் விநியோகிக்க வேண்டும் என்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. இதைத்தான் முன்பும் சொன்னேன். விலை அதிகமாகிறது என்கிறார்கள். விலை ஏறிக்கொண்டே போகவில்லை. ஏறுகிறது, இறங்கவும் செய்கிறது. நாம் ஒன்றும் இவ்விஷயத்தில் தவறு செய்துவிடவில்லை. எல்லாவற்றுக்கும் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. அரிசி ஏழை மக்களுடைய உணவு. அதன் விலையை நாம் சரியாகக் கண்காணித்துகொள்ளாவிட்டால் அதிகமான ஏழைமக்கள் பாதிக்கப்படுவார்கள். 1956–7–8-ல் விலை என்ன இருக்கிறது என்று பார்க்கலாம். கும்பகோணத்தில் 19·56 ரூபாய் ஒரு மூட்டை. வேலூரில் 18·31, திருச்சியில் 20·50, மதுரையில் 19·20. அதற்கப்புறம் கொஞ்சம் குறைந்தது. அப்படிக்குறைந்து வந்தபோது ஏகக் கவலை தெரிவிக்கப்பட்டது. இப்படி விலை குறைகிறதே, நாமே வாங்கி விற்கலாமா என்றெல்லாம் யோசனை சொன்னார்கள். 1958 ஜூலையிலிருந்து 20 ரூபாய்க்கு வந்தது. ஆனால் அப்போது நாகர் கோயிலில் மாத்திரம் 27·42 ரூபாயாக இருந்தது. அதிகம் தான். அதனால் சர்க்கார் கவலைகொண்டது.

ஆனால் இப்போது சமீபத்தில் விலைவாசி எப்படி இருக்கிறது என்பதற்குப் புள்ளிவிவரம் வைத்திருக்கிறேன். 16–1–59-ல் கடலூரில் 20·35. அடுத்த வாரத்தில் 6–2–59-க்கு அதே விலை தான். கோயம்பத்தூரில் 16–1–59-ல் 22 ரூபாய். இந்த வாரத்தில் 6–2–59-க்கு 18·28 ரூபாய். கொஞ்சம் குறைந்திருக்கிறது. மதுரையை எடுத்துக்கொண்டால் 16–1–59-க்கு 21·32 ஆக இருந்தது. இப்போது 6–2–59-க்கு 20·06 ரூபாயாக குறைந்து இருக்கிறது. நாகர்கோயிலை எடுத்துக்கொண்டால் 16–1–59-ல் 22·86 ஆக இருந்தது. அதற்குப் பிறகு 6–2–59-ல் 20·57 ஆக இருந்தது. விலை ஒரேயடியாக ஏறிக்கொண்டும் போகவில்லை. இறங்கியும் விடவில்லை. கொஞ்சம் ஏறுகிறது. உடனே இறங்குகிறது. ஆனால் வரவரக் குறைந்து வருகிறது. இந்த புள்ளிவிவரங்களை எல்லாம் கொடுப்பது நம்மையே திருப்திபடுத்தின

கொள்வதற்காக அல்ல. இப்போதுள்ள விலையை நம்ப முடியாது. அறுவடை காலத்தில் கொஞ்சம் குறைவதும், நடவு காலத்தில் கொஞ்சம் உயர்வதும் வழக்கமாக இருக்கிறது. இதனால் நாம் பீதி அடையவேண்டாம்.

1-00 p.m. ஆகவே தான் நாம் இந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறோம். இது ஒரு தலையீடு. தலையீடு என்றால் கண்ட்ரோல் தான். ஆனால் கனம் அங்கத்தினர்களுக்கு சொல்ல விரும்புவது என்னவென்றால், இம்மாதிரி கண்ட்ரோலைத் தவிர்க்க வேண்டும் என்பது தான் எல்லோருடைய எண்ணமும், அரசாங்கத்தின் எண்ணமும். ஆகவேதான் பார்க்கிறோம் உற்பத்தி பெருகாதா என்று. அப்படியும் இல்லை என்றால் கூறுகிறவர்கள் கூறுகிற அளவிற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். விவசாயிகளுக்கோ, வியாபாரிகளுக்கோ தொல்லைக் கொடுக்கவேண்டும், அவர்களை இம்சிக்கவேண்டும் என்பதற்கல்ல. இதையெல்லாம் கவனித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. என்ன நடவடிக்கை எடுக்கிறோம் என்றால், முதலிலே அதிக பட்ச விலையை நிர்ணயித்திருக்கிறோம். இரண்டாவது, இரண்டு லட்சம் டன் அரிசி வாங்க வேண்டுமென்று முன்பு முடிவு செய்திருக்கிறோம். மூன்றாவது அவசியம் ஏற்பட்டால் அப்படி வாங்குகிற அரிசியை நியாய விலை கடைகள் வைத்து சர்க்கார் நடத்தவேண்டும் என்பது. எனக்கு கடைசியில் வந்த தகவலிலிருந்து 141 டன் அரிசி அளவிற்கு இப்போது தஞ்சையிலே வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள பிரியப்படுகிறேன். கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இப்போது நமக்கும் சில குறைபாடுகள்பற்றி சொன்னார்கள். இரண்டு லட்சம் டன்தானே வாங்கப்போகிறார்கள் ஏன் 10 லட்சம் டன் வாங்கக்கூடாது என்று ஸ்ரீ சட்டநாத கரையாளர் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்லுகிறேன் நம்முடைய ராஜ்யத்தில் மார்க்கெட்டில் விற்கக்கூடிய உபரி தான்யங்கள் 10 லட்சம் டன்தான். இதில் 5-ல் ஒரு பங்கு அரசாங்கம் வாங்குகிறது என்று வைத்தும் 5-ல் ஒரு பங்கு அரசாங்கம் வாங்கிக்கொண்டு மிஞ்சும் நாலு பங்காக குறைந்த விலைக்கு விலையை மட்டும் என்றுதான் இந்த ஏற்பாடு. எல்லாவற்றையும் வாங்குவதற்கு உத்தேசம் இல்லை. ஏன் வாங்குகிறோம் என்றால் இந்த அடிப்படையில் அதிகபட்ச விலையை நிர்ணயிக்கிறோம். நாமே முன்னின்று தலையிட்டு ஓரளவாவது வாங்கிக் கொண்டால் தான் விலையை நிர்ணயம் செய்ய முடியும் என்று நாம் வாங்குகிறோம். அதோடு பின்னால் அவசியம் ஏற்பட்டால் அதை நியாய விலை கடைகள் மூலம் செய்யலாம் என்று buffer stock ஆக வைத்துக்கொள்ளலாம் என்று வைத்துக் கொள்ளுகிறோம். நியாய விலைக் கடைகளைப்பற்றி முன்பே நான் இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது விலை நிர்ணயம் செய்திருப்பது நாங்கள் வாங்குவதற்கு மாத்திரம் அல்ல. இந்த விலையில் யார் வாங்கினாலும் யார் விற்றாலும் குற்றம் இல்லை. இது அரசாங்கத்தின் உத்திரவாகும். அதை மீறினால் குற்றம். அப்படியிருக்கும் போது விலை தானாக குறையவேண்டும். இப்போது இருக்கும் விலையை விட இரண்டு ரூபாய் குறையும் என்று நினைக்கிறேன். இதுதான் என்னிடத்தில் உள்ள தகவல். 6–2–59-ல் இங்கு இருக்கும் விலையைப் பற்றி சொன்னேன். இதை விட இரண்டு ரூபாய் குறையவேண்டும். தானாக குறைந்து விட்டால் நியாய விலை கடைகளுக்கு அவசியம் இல்லை. சாதாரண மார்க்கட்டில் அதற்கு விலை நிர்ணயம் ஆகிவிடும். சாதாரண மார்க்கெட்டில் விலை அதிகம் இருக்கும்போது அது நியாய விலை கடைகளில் இருந்துதான் வந்தது என்று ஏதோ வியாபாரிகள் சொல்வார்கள் என்றால் அவர்களை குறை கூறக்கூடாது. கள்ளமார்க்கெட் செய்கிறார்கள் என்று ஒரு அங்கத்தினர் சொன்னால் அப்படி ஒன்றும் இல்லை, நாம் நியாய விலை கடைகள் வைப்பதற்கு முன்பு இந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளாத நிலையில் விலை அதிகமாக இருக்கிறது. ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னபோது, வியாபாரிகள் வைத்திருந்ததை எடுத்துக் கொடுத்துவிட்டார்கள். அவர்களே கொடுத்துவிட்டார்கள், அரசாங்கத்தின் உத்திரவு இல்லாமலேயே அவர்களின் சேவையைப் பாராட்டுகிறேன். இவ்வாறு விலையை நிர்ண

யித்துவிட்டால் இந்த விலையில் எங்கு விற்கவேண்டும் என்பது அவர்களுடைய திட்டம். அதற்கா்கத்தான் இரண்டு லட்சம் டன் வாங்குவது என்று போட்டோம். அதுதான் State Trading. State Trading என்று பிரமாதமாக பேசினார்களே அப்போது இந்த இரண்டு லட்சம் டன் அரிசி வாங்கத்தானா ? என்று ஒரு அங்கத்தினர் கேட்டார். State Trading என்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. State Trading என்பதைப் பற்றி யோசிப்பதற்கு முன் நாங்கள் யோசித்து முடிவு செய்து விட்டோம். State Trading-ஐ ஒரு ராஜ்யம் மட்டும் முடிவு செய்வது அல்ல. மற்ற ராஜ்யங்களும் சேர்ந்து கலந்தாலோசிக்கவேண்டும். இந்தத் திட்டத்தைப்பற்றி எல்லா ராஜ்யங்களுடைய அபிப்பிராயங்களும் கொடுக்கப்பட வேண்டும். அந்த முறையில்தான் (State Trading) ஸ்டேட் டிரேடிங் நிறைவேற்றப்படவேண்டும். ஸ்டேட் டிரேடிங் அவசியம் என்று நாங்கள் கூறுகிறோம். மற்ற ராஜ்யங்களும் தெரிவிக்கவேண்டும். இந்த ராஜ்யத்திற்கு ஒரு ஸ்டேட் டிரேடிங் மற்றொரு ராஜ்யத்திற்கு ஒரு ஸ்டேட் டிரேடிங் என்றால் நடைபெறாது. பின்னால் எடுத்துக்கொள்ளவேண்டிய விஷயம். இன்றைக்கு நாம் விலைக்கு வாங்குவது அதிகபட்ச விலை நிர்ணயிக்கத்தான் என்பது ஸ்டேட் டிரேடிங் திட்டத்திற்கு முதல் படி என்று எடுத்துக் கொள்ளவேண்டும். நாம் இன்று எடுத்துக்கொள்கின்ற நடவடிக்கை பின்னால் சர்க்கார் ஸ்டேட் டிரேடிங் திட்டத்தில் கீழ் கணிக்கப்படும். நெல்லின் விலையைப்பற்றி கனம் எதிர்கட்சி தலைவர் பேசும்போது எதற்காக ஒவ்வொரு தரத்திற்கும் இன்னின்ன விலை என்று போடவேண்டும். மூன்று தரங்களாக பிரித்து விட்டால் போதாதா என்று கேட்டார். ஆனால் கனம் அங்கத்தினர் கருத்திருமன் அவர்கள் இரண்டு தரமே போதும் என்று சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். இரண்டு தரம் என்றால் சிவப்பு அரிசி வெள்ளை அரிசி என்று எடுத்துக் கொள்வதா ? கருப்பு அரிசியும் இருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்து இரண்டே தரம் என்று பிரித்துவிட வேண்டும் என்று சொல்லுவது நியாயமா என்று கேட்கிறேன். விவசாயம் தெரிந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும் மட்டமான அரிசி இருக்கிறதென்று. குறைந்த விலைக்கு கிடைக்கப்படுவதெல்லாம் கூட வெள்ளை அரிசிதான். ஆகவே கனம் அங்கத்தினர் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் சொல்லுவதை எடுத்துக் கொண்டால், வெள்ளையாக இருக்கும் அரிசியை எல்லாம் ஒரே விலையில்தான் விற்கவேண்டும், அவர்கள் அதிகபட்ச விலை கொடுக்கவேண்டும் என்பது நியாயமல்ல. மூன்று தரமாக பிரிக்கலாம் என்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதுகூட சரியாக வராது. அவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கிறது தெரியும். மற்றவர்களுக்கும் தெரியும். நாம் இப்போது தரங்கள் வைத்திருக்கிறோம் என்றால் அதற்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறோம் என்றால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் தான்யங்களுக்கு தக்க விலை கிடைக்கவேண்டும் என்பதற்குத்தான் வியாபாரிகளும் ஏமாந்துவிடக்கூடாது. அவர்கள் ஏமாறவும் விடக்கூடாது என்பது அரசாங்கத்தின் எண்ணம். அதற்குத்தான் விலையை நிர்ணயம் செய்திருக்கிறது. விலை தானாக உருவாகும். முன்பெல்லாம் ப்ரொக்யூர்மெண்ட் செய்த காலம் உண்டு. இதையெல்லாம் வைத்துத்தான் ப்ரொக்யூர்மெண்ட் கண்ட்ரோல் ஆர்டர் போட்டிருக்கிறார்கள். என்ன விலை போடுகிறார்கள் என்றால் குறைந்த பட்ச விலை போடவில்லை. 1-10 p.m.
கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள் Living Index-ஐப்பற்றி எல்லாம் குறிப்பிட்டார். இங்கே குறைந்த பட்சம் என்ற பிரச்னை எழவில்லை. எல்லாம் அதிகபட்சம்தான். இருந்தாலும் விவசாயிகள் உறுதி கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் நஷ்டம் அடைவதை இந்த அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்காது. அதுதான் மத்திய அரசாங்கத்தின் கருத்தும் கூட. அதைத்தான் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள். அதற்கப்புறம், அவர்களிடம் உள்ள நெல்லையோ அரிசியையோ நாம் நிர்ணயிக்கும் விலைக்கு வாங்கிக்கொள்வோம் ; அவ்வாறு வாங்கிக்கொள்ளும்போது அவர்களிடம் உள்ள அந்த தானியங்களில் ஒரு பாதியை வாங்கிக்கொள்வோம். மற்றொரு பாதியை அவர்கள் விற்க வேண்டும் ; அதை அவர்கள் நாம் நிர்ணயித்த விலைக்கு மேற்படாமல் விற்க

[Sri M. Bhaktavatsalam] [16th February 1959

வேண்டும். மிகவும் குறைந்த விலைக்கு உணவு தானியங்களைக் கேட்டால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்களே என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லாமலில்லை. அதனால்தான், விவசாயிகளே இவைகளை நேரிடையாக விற்க முன்வந்தால், இவைகளை கோவாபரேடிவ் ஸொஸைடிகள் அரசாங்கத்தின் ஏஜெண்டுகளாக இருந்து அவர்களிடமிருந்து வாங்கட்டும் என்ற ஏற்பாட்டையும் செய்திருக்கிறோம். இரண்டு லட்சத்திற்கு மேல் எங்களால் விற்க முடியவில்லை என்று விவசாயிகள் சொன்னால் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு வாங்கிக்கொள்ள நாங்கள் தயார். எனவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். நிதியைப்பற்றி, கனம் அங்கத்தினர் ஸ்ரீ சுப்ரமணிய கௌண்டர் அவர்கள் குறிப்பிட்டார். அது கவனிக்கப்பட்டு வருகிறது. ஆகவே விவசாயிகள் நேரிடையாக விற்க வேண்டுமென்றாலும், அதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆனால் இப்போது வியாபாரிகள், " எல்லாவற்றையும் உங்களுக்கே கொடுத்து விடுகிறோம். எங்களுக்கு வருவதில்லையே " என்று புகார் சொல்லுகிறார்கள். காரணம், இந்த உத்தரவு பிப்ரவரி 2-ம் தேதி தான் வந்திருக்கிறது. ஒரு மாத காலத்திற்கு இப்படித்தான் இருக்கும். தானியத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் கொஞ்ச நாள் போனால் அதிக விலை கிடைக்குமோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். மற்றொரு காரணம், இந்தக் கண்ட்ரோலை நாம் மட்டும் போட்டால் போதாது. மைசூரிலும் ஆந்திராவிலும் கண்ட்ரோல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவில் இந்த உத்தரவை சரிவர அமல் நடத்தவில்லை என்று சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த மாதிரியான தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. உத்திரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு அதை எந்த ராஜ்யமும் சரியாக அமல் நடத்தும் என்று தான் நான் நினைக்கிறேன். உத்தரவை சரிவர அமல் நடத்துவது அந்த அந்த ராஜ்யத்தின் நன்மைக்கு உகந்தது. கேரளாவில் கூட கண்ட்ரோல் உத்தரவு போடப்படவிருக்கிறது என்று முன்பு தெரிவித்துள்ளேன். " சீக்கிரத்திலேயே இந்த உத்தரவைப் போடப்போகிறோம் " என்று கேரள அரசாங்கத்தார் சொன்னார்கள். உத்தரவைப் போடுவதற்கு முன்பு அவர்கள் சிற்சில விலைவாசிகளைப் பரிசீலனை செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. அங்கே சீக்கிரத்திலேயே அந்த உத்திரவு வந்து விடும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். கேரளாவில் விலை நிர்ணயிக்கப்படாததால், தமிழ் நாட்டு வியாபாரிகள் இங்கிருந்து தானியங்களை கேரளாவிற்குக் கொண்டுபோய் விற்கிறார்கள் என்றும், அங்கே அதிக விலை கிடைக்கும் என்ற எண்ணத்தில் அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. அவ்வாறு கேரளாவிற்கு இங்கிருந்து நெல்லும் போகிறது, அரிசியும் போகிறது என்று சொல்லப்பட்டது. அங்கே அதிகமாக அரிசி போகவில்லை. ஆனால் நெல் வெளியே போவதைத் தடுக்க வேண்டும் என்பது இப்போது எங்கள் அபிப்பிராயம். அரிசி போனால் போகட்டும். நெல்லிலிருந்து குத்தி எடுக்கப்பட்ட அரிசி அங்கே ஓரளவு போவதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. அரிசியை நாமும் விற்க வேண்டும், நம் விவசாயியும் விற்க வேண்டும். எனவே நெல் அங்கே போவதைத் தடுக்க வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். இதை வற்புறுத்துவதில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. ஆந்திராவில் அரிசியின் விலை ஒன்றாகவும் சென்னையில் அரிசியின் விலை வேறாகவும் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அப்படி ஒன்றும் இல்லை. விலைவாசி, மற்றும் எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, இன்ன ரக அரிசிக்கு இன்ன விலை என்று மத்திய அரசாங்கத்தார் நிர்ணயித்திருக்கிறார்கள். இங்கேயுள்ள வர்த்தகர்களால் ஒரு புகார் சொல்லப்பட்டது. ஒரு ரகத்திற்கு, சென்னையிலுள்ள விலையும் ஆந்திராவிலுள்ள விலையும் ஒன்றாகவே இருக்கிறது. ஆந்திராவிலிருந்து இங்கே தானியங்களைக் கொண்டுவரும்போது நாங்கள் வண்டிச்சத்தம் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே அதை விற்கும்போது வண்டிச் சத்தத்திற்கான பணத்தை விலையில் சேர்க்க எங்களை அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அவ்வாறே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் ; ஆந்திராவிலிருந்து கொண்டு வந்து

16th February 1959] [Sri M. Bhaktavatsalam]

இங்கே விற்கும் அரிசியின் விலையில் வண்டிச் சத்தத்தைச்சேர்க்கலாம் என்று சமீபத்தில் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதே மாதிரி, நமது ராஜ்யத்திற்குள்ளேயே உபரியாக உள்ள ஜில்லாக்களிலிருந்து பற்றாக்குறை ஜில்லாக்களிலுள்ள வியாபாரிகள் தானியங்களை வாங்கிச் செல்கிறார்கள். அவர்களும் இதே கஷ்டத்தைத் தெரிவித்து, தாங்கள் அந்த தானியங்களை விற்கும்போது அவைகளின் விலையில் வண்டிச்சத்தத்தையும் சேர்க்க அனுமதிக்க வேண்டுமென்று கோரினார்கள். அது அனுமதிக்கப்பட்டது. தஞ்சாவூர், சிதம்பரம் முதலிய இடங்களிலிருந்து ராமநாதபுரம், சேலம், ஈரோடு முதலிய இடங்களுக்குக் கொண்டுபோய் விற்கப்படும் அரிசியின் விலையில் வண்டிச் சத்தத்தையும் சேர்க்கலாம் என்று சமீபத்தில் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. உணவுப் பிரச்னையை சமாளிக்கும்போது அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடிய வியாபாரிகளுக்கு இந்த இடையூறுகள் இருக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

உணவு தானியங்களின் விலைவாசிகளைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதுள்ள விலைகளைப் பற்றிச் சொன்னேன். இன்று நெல் என்ன விலையாக இருக்கிறதோ அதற்கேற்றபடி தான் " ரீடெய்ல் ப்ரைஸும் " இருக்கிறது. அது பட்டணம் படி ஒன்று 11 அணாவிலிருந்து 15 அணா வரை விற்கிறது. அதன் விலை குறைய வேண்டுமென்றால், அப்போது அதைக் குறைத்துத்தான் ஆக வேண்டும். நாம் விலையை ரொம்பக் குறைத்திருக்கிறோம் என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ கருத்திருமன் சொன்னார். சிவில் ஸப்ளைஸ் கமிஷனர் அவர்கள், சென்னை, ஈரோடு முதலிய இடங்களிலுள்ள உற்பத்தியாளர்களையும் மற்றவர்களையும் பார்த்து அவர்களுடன் கலந்தாலோசித்த பிறகு தான் இந்த விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். முக்கியமாக C.O. 2 ரக அரிசியின் விலை ரொம்பக் குறைவாக இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் சொன்னார். அதை உயர்ந்த ரக அரிசியுடன் சேர்க்கக்கூடாது. உயர்ந்த ரக அரிசிக்கு அதிக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நாம் அதிக அரிசி உற்பத்தி செய்திருக்கக்கூடும். அதற்காக நாம் அந்த அரிசிக்கு அதிக விலை எதிர்பார்ப்பது சரியல்ல. தஞ்சாவூரில் உற்பத்தி செய்பவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. சில ரக அரிசிகளின் விலைகளை உயர்த்தவேண்டுமா என்பது பற்றி நான் சிலரிடம் விசாரித்தேன். அதை அவர்களும் வற்புறுத்த முடியவில்லை. உயர்ந்த ரக அரிசிக்குக் கொடுக்கும் விலையை இந்த ரக அரிசிக்கும் கொடுக்க வேண்டும் என்று அவர்களாலும் வற்புறுத்த முடியவில்லை.

நியாய விலைக் கடைகளை அதிகரிக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமாக ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். விலைகள் தானாகக் குறைகின்றனவா என்று பார்ப்போம் என்றும், அவை தானாகக் குறையாவிட்டால் அதிக பட்ச விலையை நிர்ணயித்து நியாய விலைக் கடைகளைத் திறப்போம் என்றும், இது தான் அரசாங்கத்தின் யோசனை என்றும் சொன்னேன்.

எவ்வளவோ " வேஸ்ட் லாண்ட்ஸ் " இருக்கின்றன என்றும், அவைகளை வன் விவசாயத்திற்கு உட்படுத்தக்கூடாது என்றும் ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் கூறினார். அவர் குறிப்பிட்டபடியே சேலத்தில் ஆத்தூர் தாலூகாவில் நிலங்களை மொத்தம் 30,000 ஏக்கருக்கு மேல், நிலமில்லா விவசாயிகளுக்குக் கொடுத்தோம். ஆனால் அவர்களால் சாகுபடி செய்ய முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் தான் கூட்டுறவுப் பண்ணைகள் மூலம் விவசாயம் செய்வது அவசியம் என்று வற்புறுத்தப்படுகிறது. நிலம் இருந்தால் அதில் விவசாயம் செய்யப்பட்டுத்தான் வருகிறது. மேலும், விவசாயிகளுக்கு என்னென்ன வசதிகளை அளிக்க முடியுமோ அவைகளை அரசாங்கம் அளித்துக் கொண்டுதான் இருக்கிறது.

உணவு தான்யங்களைக் கொள்முதல் செய்யும் அரசாங்கம், அதனால் தனக்கு நஷ்டம் வந்துவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் எச்சரிக்கை விடுத்தார். முன்பு பற்றாக்குறை இருந்த காலத்தில் அரசாங்கம் நெல்லை வாங்கி ஸ்டாக்கில் வைத்திருந்து விற்றது. அது ஒரு விதமான "ஸ்டேட் டிரேடிங்". அப்போது அவ்வாறு நெல்லை வாங்கி வைத்திருந்து விற்றதில் அரசாங்கத்திற்கு நஷ்டம் வந்ததே என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார். அப்போது அரசாங்கத்திற்கு நஷ்டம் வந்தது என்பதை நான் மறுக்கவில்லை. ஒரு தனி மனிதனும் உணவு கிடைக்காமல் பட்டினி கிடந்து சாகக்கூடாது என்ற எண்ணத்தில் அப்போது அரசாங்கம் அந்த நடவடிக்கையை மேற் கொண்டிருந்தது; வேறு வேலை இல்லாமல் அரசாங்கம் அதைச் செய்யவில்லை, "நாமும் உணவு தானிய வியாபாரம் செய்து லாபம் சம்பாதிப்போம்" என்ற நோக்கத்துடன் அரசாங்கம் அதைச் செய்யவில்லை. ஆக்கத் திட்டங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அரசாங்கம் அனுபவமில்லாத அதிகாரிகளை இதற்கு நியமித்து தாங்களே அரிசியைக் கொள்முதல் செய்து விற்றால் அரசாங்கத்திற்கு நஷ்டம் வரும். இப்போது வியாபாரிகள் அரிசியை விவசாயிகளிடமிருந்து நேரிடையாக வாங்குவதில்லை, அவர்களிடமிருந்து தனி நபர்களும் வாங்குவதில்லை. இந்தப் பொறுப்பை சில கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னோம். அவைகளும் மிகுந்த உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கத்தினரும் தங்களுக்கு நஷ்டம் வராத வரையில் இப்பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள். நஷ்டம் வந்தால் அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நஷ்டம் வராத வகையில்தான் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை நஷ்டம் வருமோ என்று சந்தேகப்படும்போது, ஆபத்துக்கிடமான திட்டத்தை அரசாங்கம் ஏன் மேற்கொள்ளவேண்டும் என்று சிலர் நினைக்கலாம்.

அரசாங்கத்திற்கு அவ்வாறு எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் இல்லை. இன்றைய நிலைமையில், விலை அப்படியே இருக்கிறது. விஷம் போல் ஏறிவிட்டாலும் கூட, விலை குறைய வேண்டும். அறுவடை வருகிறது, இருந்தாலும் விலை குறையவில்லை. உற்பத்தி பெருகியிருக்கும்போது வேறு யாரிடமாவது யாசகம் கேட்பதா அல்லது கடன் கேட்பதா? நாம் இங்கிருந்துதான் வாங்க வேண்டும். அந்த வகையில்தான் இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இது, அரசாங்கத்திற்கு புதிதுதான். விவசாயிகளுக்கும் ஒரு புறம் கஷ்டம். சில பேர்கள் ஒத்துழைக்காமல் போகலாம். அல்லது விவசாயிகள் விலை குறைந்து போய் விட்டதே என்று நினைக்கலாம். எத்தனையோ சிக்கல்கள் இருக்கின்றன இதில், அந்த சிக்கல்களை தீர்த்து நிலைமையை எப்படியாவது சமாளிக்க வேண்டும். பற்றாக்குறை இருக்கக் கூடாது. மனிதனால் ஆக்கப்படும் பற்றாக்குறை வரலாமென்று சிலர் எச்சரிக்கை செய்கிறார்கள். அல்லது பயமுறுத்துகிறார்கள். அதற்கு இடம் கொடுக்க மாட்டோம். இது, கஷ்டமான வேலைதான். ஆனால், அதை அரசாங்கம் துணிந்து ஏற்றுக் கொள்கிறது. இதில், நான் எல்லோருடைய ஒத்துழைப்பையும் கோருகிறேன். இன்று, அங்கத்தினர் பல யோசனைகள், அபிப்பிராயங்கள் தெரிவித்தார்கள். எனக்கும், சர்க்காரின் நிலையை விளக்கிக்கூற ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. கனம் அங்கத்தினர்கள், எதிர்க்கட்சி அங்கத்தினர்களையும் உள்பட சொல்கிறேன், எல்லா அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பும், யோசனைகளும் அரசாங்கத்திற்கு வேண்டும். அரசாங்கம் அதை வரவேற்கிறது. அரசாங்கம் அதை எதிர்பார்க்கிறது. அந்த வகையில் அங்கத்தினர்கள் எல்லோரையும் அப்போதைக்கப்போது கலந்து கொள்ளவேண்டுமென்பது என் ஆவல். உணவு நிலை பற்றி வேறுபட்ட அபிப்பிராயங்கள், லட்சியம் ஒன்றே எனினும் நல்ல எண்ணத்தோடு சொன்னாலும், வேறுபட்ட பல கருத்துக்கள் கூறப்பட்டன. விலை நிர்ணயம் பற்றியும், விவசாயிகளின் செலவுக்கேற்றபடி அதிகபட்ச விலை நிர்ணயம் இருக்க வேண்டுமென்றும் பல கருத்துக்கள்

கூறப்பட்டன. கனம் அங்கத்தினர்களின் யோசனைகளையும், ஆலோசனைகளையும் கேட்டு உணவு நிலைமையை சீர்படுத்த வேண்டுமென்ற ஆவல் சர்க்காருக்கும் உண்டு. ஆகவே இந்த மன்றத்திலுள்ள சில அங்கத்தினர்கள் ஒரு கட்சியில் உள்ளவர்கள் மட்டுமல்ல, பல கட்சிகளைச் சேர்ந்தவர்களாகயிருந்தாலும் அவர்கள் ஒரு சிலரைச் சேர்த்து ஒரு கமிட்டி போடுவோம். அந்தக் கமிட்டி அப்போதைக் கப்போது ஆலோசனைகள் சொல்லட்டும். உணவு நிலையை சமாளிக்கும் விஷயத்தில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் பொறுத்தமட்டில் ஆலோசனை கூறுவது அல்லது வேறு புது திட்டங்கள் என்ன எடுக்கலாம், என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் போன்று காரியங்கள் குறித்து ஆலோசனை சொல்ல ஒரு கமிட்டி நியமிப்பது என்பது அரசாங்கத்தின் எண்ணம். அதைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே நான் எதிர் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், அவர்கள் பிரேரேபித்திருக்கும் தீர்மானத்தை அப்படியே ஏற்றுக் கொள்வதற்கில்லை. அது அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இருந்தாலும் மற்ற கட்சியில் என்று சொல்லுவதில் ஆட்சேபனையில்லை. நாங்களும் அப்படியே நினைக்கிறோம். விவசாயப் பிரச்னை அல்லது உணவு பிரச்னை என்பது கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. மற்ற கட்சிகள் பிரதிநிதிகளையும் சேர்த்து ஒரு கமிட்டி போடலாம் என்ற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதை சீக்கிரம் நிறைவேற்றப் பார்க்கிறோம். ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவர்களது தீர்மானத்தைப் பிரேரேபித்ததினால், பல அங்கத்தினர்கள் அவரவர்களது அபிப்பிராயங்களைச் சொல்ல வாய்ப்பு கிடைத்ததோடு அரசாங்கமும் தனது நிலையை சொல்ல முடிந்தது என்றிருந்தாலும் இந்தத் தீர்மானத்தை அவர்கள் "ப்ரஸ்" செய்யாமல் வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* Sri P. G. KARUTHIRUMAN : கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு ஒன்றும் அதிகமாக சொல்வதற்கில்லை. அமைச்சர் அவர்களிடம் ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்துக்கொள்ள சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதலில் நான் ஆத்திரமாக பேசவில்லை, அமைதியுடன், அன்புடன் தான் பேசினேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் பேசின போது அமைதியாகத்தான் பேசினார். ஆனால் என்னிடம் பேசும் போது கொஞ்சம் ஆத்திரம் இருந்தது.

Sri P. G. KARUTHIRUMAN : விலை நிர்ணயம் என்று சொல்லும் போது, கண்ட்ரோல் இல்லாத காலத்தில், சாதாரணமாக நெல்லில் இரண்டு வகைகள்தான் உண்டு. ஒன்று "இளம் வித்துக்கள்" இரண்டாவது "வலிய வித்துக்கள்." பயிர்களில் "குறுகிய காலப் பயிர்கள்" "நீண்ட காலப் பயிர்கள்" என்று இருக்கின்றன.

DEPUTY SPEAKER : The hon. Member will please be brief.

Sri P. G. KARUTHIRUMAN : இந்த வித்துக்களுக்கு இடையேயுள்ள வித்தியாசம் ஒரு ரூபாய்தான். அது 60 ரூபாய் என்றால் இது 70 ரூபாய் இருக்கும். ஆனால் இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலையைப் பார்க்கும்போது 4½ ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே வித்துக்களில் வெள்ளை, கருப்பு, சிவப்பு என்ற நிற வித்தியாசம் செய்யக்கூடாது. அவைகளை இரண்டு வகைகளாகத்தான் பிரிக்க வேண்டும். ஸி.ஓ. 25 என்பது ஆனைக் கொம்பு ஜாதியைச் சேர்ந்தது. விவசாய இலாகா அதிகாரிகளுக்கு இது தெரியும். ஆக, இதைப் புனர் பரிசீலனை செய்து ஏழை விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

16th February 1959]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, the Hon. Minister has clarified my points. Not only has he clarified my points, but he has also conceded many of my points, namely, giving of subsidy for wells, appointment of committees, and so on. In view of the assurance given by the Hon. Minister, I do not propose to press the resolution before the House, Sir.

The resolution was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. on Tuesday, the 17th February 1959.

The House then adjourned.

VI—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

B. Reports and other papers.

25. *The Madras Open Places (Prevention of Disfigurement) Bill, 1958, as passed by the Madras Legislative Council.*

16th February 1959]

APPENDIX.

[Vide answer to starred question No. 400-D asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 16th February 1958 page 20 supra.]

Statement showin g the amount received by way of loan assistance from the Government of India for Development Schemes in 1958–59 so far.

A sum of Rs. 22·91 crores has been received as loan assistance from the Government of India to the end of January 1959.

The total loans received are—

Loans.

	RS. LAKHS.
(i) Loan for expenditure on Miscellaneous Development Schemes incurred in 1957–58.	2,50·00
(ii) Loan for fertilizers	92·00
(iii) Loan for Cotton Extension Scheme	4·57
(iv) Loans for Industries Schemes received through Khadi and Village Industries Commission.	29·35
(v) Loans for Community Development and National Extension Service Schemes.	7·07
(vi) Loan for Police Housing	38·00
(vii) Loans towards Small Savings collections in 1957–58.	2,78·00
(viii) Loans towards Small Savings collections in 1958–59.	71·00
(ix) Loans for Slum Clearance, Small Scale Industries and Minor Ports.	2·00
(x) Loan from Reserve Bank of India for share Capital of Madras State Co-operative Bank.	15·00
(xi) Loans towards Ways and Means assistances for Plan Schemes received for nine months at Rs. 167·06 lakhs per month.	15,03·54
Total ..	22,90·53

The actual loan and grant assistances for the current year will be sanctioned by the Government of India during February 1959 with reference to the expenditure for the current year. The portion of the ways and means assistances equal to the loans sanctioned will then be converted into regular loans and the balance will be treated as grants.

LIBRARIAN, SECRETARIAT LIBRARY
4 AUG 1959
GOVERNMENT OF MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, the 17th February 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Wellington Reservoir, Vridhachalam

* 3 *S.N.Q.*—SRI M. SELVARAJ AND SRI A. GOVINDASAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have received any representation from the Ayacatdars of Wellington Reservoir in Vridhachalam taluk (South Arcot) regarding the remission of taxes due to failure of water-supply; and

(b) if so, what action was taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (1) A representation has been received from the President of the Vridhachalam Taluk Congress Committee.

(2) The Collector of South Arcot and the Board of Revenue have sent proposals for the grant of special remission. The proposals are under consideration and orders will be issued shortly.

SRI A. GOVINDASAMY : ஸார், அந்தப் பகுதி மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிற காரணத்தால் பூரா வரி வஜா கொடுக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : " புல் ரெமிஷன் " தான்.

Rest-house at Poompugar

* 365 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri C. Muthiah): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

சீர்காழி பூம்புகாரில் (காவிரிப்பூம்பட்டிணம்) அரசாங்க விடுதி கட்ட உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : The question of constructing a two-roomed rest-house at Kaverippumpattinam has been examined by Government and it has been decided to defer the proposal in view of the financial stringency.

SRI K. B. S. MANI : ஸார், இந்த ரோடு கடந்த ஐந்தாண்டு திட்டத்திலேயே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று பலமுறை. . . .

THE HON. SRI P. KAKKAN : இந்தக் கேள்வி ரோடைப் பற்றியதல்ல, ரெஸ்ட் ஹவுஸைப் பற்றியது.

[17th February 1959

SRI K. B. S. MANI : இந்த இடத்தில் ஒரு ரெஸ்ட் ஹவுஸ் மிகவும் அவசியமாக இருப்பதால் அதை மிவகு சீக்கிரம் அமைக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நேற்று முன் தினம்தான் அந்தத் தாலுக்காவிற்குப் போனேன். அப்போது அங்கே அந்த ரெஸ்ட் ஹவுஸைப் பற்றிச் சொன்னார்கள். நமது நிதி நிலைமைக்குத் தக்கவாறு தான் ரெஸ்ட் ஹவுஸ்கள் கட்டப்பட்டு வருகின்றன. இப்போது அதிகப்படி பணம் இல்லாததால் " டெபர் " செய்திருக்கிறோம். இருந்தாலும் இதைப் பரிசீலனை செய்து பார்க்கலாம்.

Manicka pangu sea-shore

* 372 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri C. Muthiah): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா ?

(அ) மயூரம் தாலுக்கா, மாணிக்க பங்கு கடற்கரையைப் பலப்படுத்த திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) அப்படியானால், எவ்வளவு தொகைக்கு எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Detailed plans and estimates for the work, which is estimated to cost Rs. 40,000 have been prepared and they are at present under the scrutiny of the Chief Engineer. Suitable action will be taken on receipt of plans and estimates from the Chief Engineer.

SRI K. B. S. MANI : ஸார், இந்த எவ்வளவு குறுகிய காலத்திலே செய்யமுடியுமோ அவ்வளவு குறுகிய காலத்தில் செய்யமுடியுமா ? உத்தேசமாக எப்போது செய்து முடிக்கப்படும் என்று சொல்லமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : பிளான், எஸ்டிமேட் எல்லாம் வந்த பிறகு, வெகு சீக்கிரம் செய்யப்படும்.

Culverts

* 378 *Q.* SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லா, பவானி தாலுக்காவிலே கவந்தபாடி-பவானி மெயின் ரோட்டிலே குறுக்கே பாய்ந்து செல்லுகின்ற மூன்று பள்ளங்களின் மேல் பாலங்களை (Culverts) கட்டுவதற்காகத் தொகை சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறதா ?

(ஆ) இவ்வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) These two works have been included in the Second Five-Year Plan and will be sanctioned and taken up for execution depending on the availability of funds.

SRI P. G. MANICKAM : ஸார், இரண்டு பள்ளங்கள் மீது கல்வெர்ட் போடுவது எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மூன்றாவதாக எடுக்கப்படவேண்டியது கவந்தபாடியில் இருக்கும் ஒரு பள்ளத்தின் மீது கல்வெர்ட் போடுவது. இது ஒரு முக்கியமான இடம். இங்கே சந்தை இருக்கிறது. வண்டிகள் சந்தைக்கு அந்த வழியாகப் போக வேண்டியிருக்கிறது. பவானிவாய்க்கால் தண்ணீர் அங்கே போவதால் வண்டிகள் போவதற்கு இடைஞ்சலாக இருப்பதால் இதற்குக் கூடிய சீக்கிரம் எஸ்டிமேட் போட்டு சீக்கிரம் எடுத்துக்கொள்ளத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அதை நான் கவனிக்கிறேன்.

17th February 1959]

Subsidy to Harijans

* 395 *Q.*—SRI K. B. S. MANI (on behalf Sri M. C. Muthukumaraswamy): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

ஹரிஜனங்களுக்குக் காளை மாட்டுக்காக மான்யத் தொகை கொடுக்கும் போது ரெவின்யூ டிபார்ட்மென்டார் அத்தாட்சி பத்திரம் (Certificate) அளிப்பதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட தொகுதி சட்டசபை உறுப்பினர்கள் அத்தாட்சி பத்திரத்தை அளிக்கலாமென உத்தரவு போட உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : Sir, there are already instructions to the effect that a certificate from an M.L.A. or M.P. may be produced by the applicant in support of his community when he claims subsidy for plough-bulls, etc.

SRI P. G. MANICKAM : ஸார், ஹரிஜனங்களுக்கு மாடுகள் வாங்கிக் கொடுக்கப்படும் இந்த மானியத் தொகை தொடர்ந்தாற்போல் கொடுக்கப்படவேண்டுமென்பது அரசாங்கத்தார் நோக்கமா ? அரசாங்கத்தின் நோக்கம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அதை நான் பின்னால் பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

SRI A. GOVINDASAMY : ஸார், ஹரிஜனங்களுக்கு விவசாயத்திற்காக மாடு வாங்க அரசாங்கம் பணம் உதவுகிற நேரத்தில் குறைந்த அளவு தரப்படுகிறது. அதை மேலும் அதிகப்படுத்திக் கொடுக்க அரசாங்கம் அதிக நிதி ஒதுக்குவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நிதி இருப்பதற்குத் தக்கபடிதான் ஒதுக்கி மாடு வாங்குவதற்குக் கொடுக்கப்படுகிறது.

SRI K. B. S. MANI : ஸார், இந்த அரசாங்கம் தற்போது கொடுத்துவருகிற உதவி மேன்மேலும் நன்மை கொடுக்க வேண்டுமானால், இதைச் சற்று முன்கூட்டியே கொடுக்க ஏற்பாடு செய்தால் மிகவும் நன்மையாக இருக்கும். அம்மாதிரி வருகிற ஆண்டில் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : எப்போது எவ்வளவு துரிதமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு துரிதமாகக் கொடுத்துக்கொண்டுவருகிறோம்.

Nari Kuravars

* 400 *Q.*—SRI T. SAMPATH (on behalf of Sri V. Sankaran): Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to recognize "Nari Kuravars" as Adivasis or Scheduled Tribes and afford them all benefits and facilities granted to the latter?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

SRI A. A. RASHEED : Has any action been taken to settle these "Nari Kuravars" in any particular area?

THE HON. SRI P. KAKKAN : We have done it.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், நரிக்குறவர்கள் ஹரிஜனங்களைவிடக் கீழ்த்தரமான நிலைமையில் இருப்பதால் அவர்களை ஹரிஜனங்கள் லிஸ்டில் சேர்த்து அவர்கள் முன்னேற்றத்திற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

[17th February 1959

THE HON. SRI P. KAKKAN: நான் முதலில் சொன்ன பதிலிலேயே அதைத் தான் சொன்னேன். அவர்களை ஆதிவாசிகள் லிஸ்டில் சேர்த்து ஆதிவாசிகளுக்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அந்தச் சலுகைகளெல்லாம் கொடுக்கப்பட்டுவருகின்றன.

SRI K. VINAYAKAM: இந்த நரிக்குறவர்களை ஆதிவாசிகளாகச் சேர்த்துவிட்டதன், பயனாக யாராவது இது வரையில் எந்தப் பயனையாவது அடைந்ததுண்டா? அவர்களின் எண்ணிக்கை, பெயர்கள் இவைகளை மந்திரி அவர்கள் தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI P. KAKKAN: இப்போது சில இடங்களில் வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம். நில ஆர்ஜிதம் செய்து கொடுத்திருக்கிறோம். ஹாஸ்டல்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் அனேக விஷயங்கள் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார். இதற்குத் தனி கேள்வி போட்டால் நான் பதில் சொல்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR: நரிக்குறவர்கள், குருவிக் குறவர்கள் போன்ற நாடோடி மக்களின் வாழ்க்கையைப் பற்றி திரு. ஜே. எல். பி. லூயி என்ற ஒருவர் மத்திய சர்க்காரின் மான்யம் பெற்று ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் இந்த மக்களின் வாழ்க்கையைப் பரிசீலனை செய்து ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பது நமது சர்க்காருக்குத் தெரியுமா? இதைப் பற்றி மத்திய சர்க்காரிடமிருந்து நமது சர்க்காருக்கு தகவல் கிடைத்திருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN: இது சர்க்காருக்குத் தெரியும். இதைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்று கள்ளர் ரெக்ளமேஷனுக்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள டெபுடி கலெக்டரை அனுப்பி அதைப் பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்து வருகிறோம்.

Block Development Officers

* 401 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Block Development Officers recruited in 1957–58: and

(b) the basis on which such recruitment was made?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Eighty-eight in 1957. Fifty in 1958.

(b) A Selection Committee consisting of Development Commissioner, Additional Development Commissioner and Joint Development Commissioner, has been been constituted for the purpose of selecting candidates for appointment to the post of Block Development Officer. Whenever vacancies arise in the post of non-gazetted Block Development Officers certain heads of departments connected with the Development work and the Collectors of districts are requested to suggest names of suitable candidates for appointment as Block Development Officers. The candidates so recommended are interviewed by the Selection Committee and selected on merit. The names of candidates selected by the Committee are approved by the Government. After approval, the selected candidates are posted as non-gazetted Block Development Officers.

17th February 1959]

SRI K. SATTANATHA KARAYALAR: இவர்கள் எல்லாம் டிபார்ட்மெண்டிலிருந்து எடுக்கப்பட்டவர்கள்தானா? அல்லது வெளியிலிருந்து எடுக்கப்பட்டார்களா? அப்படியானால், இனியாவது இவர்களுடைய ரெக்ரூட்மெண்ட் பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனுக்கு விடப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இவர்களெல்லாம் டிபார்ட்மெண்டிலிருந்து எடுக்கப்பட்டவர்கள். ஆகையால்தான் இதை பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனுக்கு விடவில்லை.

SRI K. PERIANNAN: வட்டார அபிவிருத்தி அதிகாரிகளாகப் போடும்போது சரியான பயிற்சிபெறாத அதிகாரிகளாகப் போடுவதினால், அவர்களை மறுபடியும் பயிற்சிக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. அதனால் அபிவிருத்தி வேலை நடைபெறுவதற்கு ரொம்பக் கஷ்டமாகப் போய்விடுகிறது. இப்படிப்பட்ட முறை இருப்பதினால் ப்ளாக்குகளில் சரியாக வேலை நடைபெறவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சில சமயங்களில் அபாய்ண்ட்மெண்ட் ஆனதற்குப் பிற்பாடு தான் அவர்களை ட்ரெயினுங்குக்கு அனுப்ப வேண்டியதாக இருக்கிறது, இது தவிர்க்க முடியாதது.

SRI A. GOVINDASAMY: ப்ளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகளாகப் போடப்பட்டிருப்பவர்களில் சிலர் கெஜட் பதிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் கெஜட் பதிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். கெஜட் பதிவுள்ள அதிகாரிகள் இருக்கும் இடங்களில் அதிக வேலையும், கெஜட் பதிவில்லாத அதிகாரிகள் போடப்பட்டிருக்கும் இடங்களில் குறைந்த வேலையும் நடைபெற்றிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: கெஜட் பதிவு ஆன உடனேயே வேலை அதிகம் ஆகிவிடும் என்று நினைப்பது தவறு. அது அந்தந்த ஆபீஸருடைய தகுதியைப் பொறுத்திருக்கிறது. கெஜட் பதிவு உள்ள அதிகாரிகள் இருக்கும் இடங்களிலும் நல்ல காரியங்கள் நடந்திருக்கின்றன. கெஜட் பதிவு இல்லாதவர்கள் இருக்கும் இடங்களிலும் நல்ல காரியம் நடந்த பகுதிகள் இருக்கின்றன.

SRI K. SATTANATHA KARAYALAR: இவர்களுடைய ரெக்ரூட்மெண்ட் மெரிட் அடிப்படையில் மட்டுந்தானா? அல்லது பாக்வார்டு கம்யூனிடி, ஷெட்யூல் காஸ்ட் இதற்கெல்லாம் சில மார்க்குகள் கொடுக்கப்படுகின்றனவா? அப்படியானால், பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் மூலமாக ரெக்ரூட்மெண்ட் நடக்கும்போது அனுசரிக்கப்படுகின்ற முறைகளே இங்கும் அனுசரிக்கப்படுகின்றனவா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அம்மாதிரி குறிப்பிட்ட விதிகள் கிடையாது. இத்தனை ஷெட்யூல் காஸ்டுக்கும் இத்தனை பாக்வார்டு கம்யூனிடிக்கு என்று. ஆனால், அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்ற முறையிலே, மற்ற தகுதி இருக்குமானால், அவர்களுக்கு முதல் இடம் கொடுக்கப்படுகிறது.

SRI P. G. MANICKAM: பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டிலேயிருந்து ப்ளாக் டெவலெப்மெண்ட் அதிகாரிகளாக எடுக்கப்படுவதில்லை என்று குறை இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டிலே வேலை செய்வதற்கே போதுமான இன்ஜினியர்கள் இல்லாத நிலையில், அந்த இலாகாவிலே உள்ளவர்களை ப்ளாக் டெவலெப்மெண்டு அதிகாரிகளாக அனுப்புவது கஷ்டமாக இருக்கும். மேலும், இன்ஜினியர்கள் ப்ளாக் டெவலெப்மெண்டு அதிகாரிகளாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : சர்வீஸ் கமிஷன் மூலமாக அல்லாமல் நேரடியாக இவர்களை எடுப்பதினுடைய நோக்கம்—இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியினுடைய ஒரு பிரசாரத்தைப் பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு நேரடியாக எடுக்கப்படுகிறார்களா ? சர்வீஸ் கமிஷன் மூலமாக அல்லாமல் எந்த நோக்கத்தோடு எடுக்கப்படுகிறார்கள் ? இப்பொழுது எடுத்திருக்கக் கூடியவர்களை விட நீண்ட ஆண்டு காலமாக சர்வீஸ் அதிகப்படியாகச் செய்திருந்தவர்களை எடுக்காமல், கிராம சேவக்குகளாக இருந்தவர்களை நேரடியாக எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம் என்ன ? என்ன நோக்கத்தோடு அப்படி எடுக்கப்பட்டு வருகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினருடைய மூளை இந்த முறையில்தான் எல்லா விஷயங்களிலும் இயங்கிவருகிறது என்பதைப் பார்க்கிறேன். எதை யெடுத்தாலும், கட்சிப் பிரசாரத்திற்காகச் செய்யப்படுகிறதா ? கட்சி அடிப்படையிலே செய்யப்படுகிறதா ? என்று கேட்கிறார். அவருடைய கட்சியிலே இயங்கிவருவதை மனதிலே கொண்டு அவர் அப்படிப் பேசுகிறார் என்று நினைக்கிறேன். தங்களுடைய கட்சியார் எப்படி இயங்குவார்கள் என்பதை மனதிலே வைத்து, அப்படித்தான் மற்றக் கட்சிகளும் இயங்கும் என்ற முறையிலே கேள்விகளைக் கேட்கிறார் என்று நினைக்கிறேன். கட்சி அடிப்படையிலே இது நடப்பதில்லை. அரசாங்க உத்தியோகஸ்தர்களாக இருக்கிறவர்கள் எந்த அரசியலிலும் கலந்து கொள்ளக்கூடாது. அவர்களுக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இருக்கமுடியாது. ஏதோ வெளியிலே இருக்கிற காங்கிரஸ்காரர்களை எடுப்பதில்லை, அரசாங்க இலாக்காக்களிலே ஊழியம் செய்து வருகின்றவர்களிலிருந்து எடுக்கின்ற காரணத்தாலே கட்சி பிரதி கட்சி எழுவது இல்லை.

Licences for the use of loud-speakers

*402 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any licences were issued for the use of loud-speakers for long periods at the premises of the Brahmans Vaideeka Sabha in Chitrakulam North street in Mylapore, Madras, for religious discourses;

(*b*) if so, whether any objections thereto were received from neighbours; and

(*c*) the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir.

(*c*) The Police authorities inspected the place and found that the objections raised were untenable.

SRI K. SATTANATHA KARAYALAR : பொறுப்புவாய்ந்த ஒரு உத்தியோகஸ்தராக இருந்தவர் கொடுத்திருக்கும் கம்ப்ளெய்ண்டுகளை எந்த அளவு அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்தது ? அண்மையிலே நெருக்கமாக வீடுகள் இருப்பதினால், ரெஸிடென்ஷியல் க்வார்ட்டர்ஸ் நெருக்கமாக உள்ள இடங்களில் வசிப்பவர்களுக்கு ப்ரொடக்ஷன் கொடுக்காமலிருப்பது நல்லதா ? ஒலி பெருக்கி உபயோகிப்பதற்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு முன்னால், அருகாமையில் வீடுகளில் இருப்பவர்களுக்கு தொந்தரவு ஏற்படா வண்ணம் லைசென்ஸ் கொடுக்கப்படவேண்டும் அல்லவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பிட்ட மணி நேரத்திலேதான் இம்மாதிரி ஒலிபெருக்கியை உபயோகிக்கலாம். அதற்குப் பின்னால் உபயோகிக்கக்கூடாது என்று விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் குறிப்பிட்ட மணி நேரத்திற்குள்ளே ஒலிபெருக்கி உபயோகப்படுத்துவதற்காக சென்னையிலுள்ள போலீசாரிடமிருந்து லைசென்ஸ் கேட்டு வாங்குகிறார்கள். இந்த விஷயத்திலே ஆட்சேபம் வந்தது. யார் ஆட்சேபித்தாலும், அந்த ஆட்சேபம் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற முறையில் ஆட்சேபம் வந்ததும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும், அவருக்குமேலே ஒரு அஸிஸ்டெண்ட் கமிஷனரும், அவருக்குமேலே டெபுடி கமிஷனரும், அவருக்குமேலே போலீஸ் கமிஷனரும், அவருக்கும் மேலே உள்நாட்டிலாகா காரியதரிசியும் இவர்களெல்லாம் ஒவ்வொருவராகப் போய் பார்த்தார்கள். "ஏதோ மத சம்பந்தமான பிரசாரம், பிரசங்கம் அங்கே ஒலிபெருக்கிமூலம் நடக்கிறது, ஆட்சேபனைக்குக் கொஞ்சங்கூட ஆதாரம் இல்லை" என்று அவர்களெல்லோரும் கண்டு, ஆட்சேபனையை ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பிட்ட சில நாட்களுக்குத்தான் அப்போதைக்கப்போது லைசென்ஸ் கேட்கின்றார்கள். லைசென்ஸ் வழங்கப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு லைசன்ஸ் கேட்கவில்லை.

SRI A. A. RASHEED : May I know the type of religious instruction given through these loud-speakers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no idea about the religious topics for which the loud-speaker was asked for.

SRI K. VINAYAKAM : Are the Government aware that such of the persons as object to the installation of loud-speakers in the Vaideeka Sabha are people who belong to the atheist class and are opposed to religious discourses?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think so. The sponsors of these discourses as well as the objectors are equally orthodox.

SRI A. GOVINDASAMY : மார்கழி மாதத்தில் அதிகாலை இரண்டு மூன்று மணிக்கெல்லாம் "தூங்காதே தம்பி தூங்காதே" என்ற கிராமபோன் ப்ளேட்டுகளைக் கோயில்களிலெல்லாம் வைப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இதற்கெல்லாம் கூட லைசன்ஸ் வாங்கியிருக்க வேண்டுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : "தூங்காதே தம்பி தூங்காதே" என்னும் ப்ளேட் கோயில்களிலே வைக்கிறதில்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம். ஆனால், "திருப்பாவை-திருவெம்பாவை" ப்ளேட் வைக்கிறார்கள். அது கூட விடியற்காலை ஐந்து மணிக்கு மேலே வைக்கப்படுகிறது. ஐந்து மணிக்குமேலே வைக்கும்போது கூட தூக்கம் கெட்டுப் போகிறது என்று சொன்னால், அதை நான் ஏற்க முடியாது.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த சபை வைத்திருக்கக் கூடிய கட்டிடம் ரெஸிடென்ஷியல் க்வார்ட்டர்ஸ் அல்லவா ? அப்படியிருக்க, அதை ஒரு சபை கூடமாக மாற்றுவதற்கு சர்க்காரிடம் ஏதாவது பர்மிஷன் கேட்டார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது ஒன்றும் இண்டஸ்ட்ரியல் வேலை அல்ல. கைத் தொழில்சாலை வைக்க வேண்டுமானால், அதற்கு டவுன் ப்ளானிங் கட்டு திட்டங்களெல்லாம் இருக்கிறது. ஏதோ ஒரு கட்டிடம். அந்தக் கட்டிடத்தில் பத்து பேர் சேர்ந்து ஏதோ பேசுகிறார்கள், அதற்கு ஒலிபெருக்கி வைத்திருக்கிறது. ஆகவே, ரெஸிடென்ஷியல் ஏரியாவா, இண்டஸ்ட்ரியல் ஏரியாவா என்ற பிரச்னை இதில் வருவதில்லை. உள்ளே நடப்பதினால் ஏற்படும் சப்தம் வெளியே இருக்கிறவர்களுக்குக் கேட்கவில்லை என்று அங்கே போய் பார்த்தவர்கள்—நம்முடைய உள்நாட்டுக் காரியதரிசி முதற்கொண்டு சொல்கிறார்கள்.

SRI K. PONNIAN : தலைவர் அவர்களே, வால்பாறை பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை எஸ்டேட்டாக வைத்துக்கொண்டு அதில் வாழும் தொழில் மக்களுக்கு ஒரு பொதுக்கூட்டம் நடத்தவோ அல்லது வேறு நல்ல காரியங்கள் இதுபோல் நடத்தவோ ஒலிபெருக்கி லைசென்ஸ் கேட்டால், மறுக்கப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

MR. SPEAKER : இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

Selection of books for non-detailed study

* 403 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the book " எனது குறிக்கோள் " has been prescribed for non-detailed study in higher forms for the year 1958;

(*b*) whether the Government have given any instructions to the Text Book Committee to select such books which contain certain principles; and

(*c*) if so, the principles adopted by the Text Book Committee in selecting books?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No. Sir.

(*b*) & (*c*) The attention of the Member is invited to the rules relating to the Text Book Committee published as Notification No. 11 on pages 25–33 of the Rules Supplement to Part I-B of the *Fort St. George Gazette*, dated 16th June 1954. The Government do not issue any instructions in regard to any particular book or books.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் நிர்ணயிருத்திருக்கும் கொள்கைக்கும் அல்லது தப்பிதமாகவும் அந்த புஸ்தகம் இருந்தால், பப்ளிஷ் செய்தால், அதைத் தடுப்பதற்கும் டெக்ஸ்ட் புக் கமிட்டிக்கோ ; டிபார்ட்மெண்டுக்கோ அதிகாரம் இருக்கிறதா ?

MR. SPEAKER : Is it not a hypothetical question since it contains " இருந்தால், செய்தால் " ? How can the Government answer it? But I would have no objection if the Hon. Minister is going to answer.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் திரு. பழனிசாமி அவர்கள் கேட்டிருப்பது " எனது குறிக்கோள் " என்ற புஸ்தகத்தைப் பற்றி. எனக்குக் கிடைத்திருக்கும் தகவலில் இது வரையில் இம்மாதிரி புஸ்தகம் டெக்ஸ்ட் புக் கமிட்டியாருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்பது. இதுபற்றி அவர்கள் பரிசீலனை செய்யவில்லை.

Cattle Trespass Act

* 404 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கட்டுப்பாடின்றி திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஏதேனும் கடுமையாக நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விபரமென்ன ?

(இ) Cattle Trespass சட்டத்தை மாகாணம் முழுவதும் அமுலுக்குக் கொண்டு வர ஏதேனும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அ (ஆ) The Cattle Trespass Act, 1871, is being enforced to control straying cattle.

(இ) The above Act which is a Central Act is alerady in force in the Madras State except in the transferred areas where the Travancore-Cochin Cattle Trespass Act, 1125, is in force. It is proposed to extend the Cattle Trespass Act, 1871, to the transferred territory and repeal the Travancore-Cochin Cattle Trespass Act in force there now.

SRI A. VEDARATHNAM : விவசாய வளர்ச்சி, வனமகோற்சவம் பற்றியெல்லாம் பிரசாரம் செய்து, அந்தத் துறையிலே அதிக அபிவிருத்தியை எதிர்ப்பார்க்கின்ற நாம், கட்டுப்பாடின்றித் திரிகின்ற இந்தக் கால் நடைகளை சும்மா விடுவதினாலே விவசாயத்திற்கும் மரம் நடு விழாவில் நடுகின்ற மரங்களுக்கும் ஊனவிளைகின்ற காரணத்தால், கடுமையான நடவடிக்கை எடுத்து, கட்டுப்பாடின்றித் திரிகின்ற கால் நடைகளைக் கட்டுப் படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ? இப்பொழுதிருக்கும் சட்டத்தின் பிரகாரம் தனியாகக் கம்ப்ளெயின்ட் கொடுத்து, எவிடென்ஸ் எடுத்து நிரூபிக்கவேண்டிய பொறுப்பு விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. அப்படியின்றி, பவுண்டில் அடைக்கப்படும் மாடுகளுக்கெல்லாம் சட்டத்தில் கண்ட அபராதம் விதிக்க அரசாங்கம் வகை செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தச் சட்டத்தை இன்னும் தீவிரமாக அமுலுக்குக் கொண்டுவரும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது. இதிலே இன்னொரு கஷ்டம் என்னவென்றால், கட்டுப்பாட்டில் இருக்கும் கால் நடையை அதனுடைய சொந்தக்காரர்கள் அவிழ்த்து விட்டு மற்றவர்கள் நிலத்தில் மேயட்டுமே என்று விட்டுவிடுகிறார்கள்.

SRI K. PONNIAN : நமது நாட்டில் விவசாயத்திற்கு கால்நடை செல்வம் தான் நமக்கு அதிகமாக வேண்டியதாக இருக்கிறது. அதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டு வருவதால் மலை அடிவாரங்களில் கால் நடைகளை மேய்ப்பதற்கு சர்க்கார் அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது கேட்கப்பட்டிருக்கும் விஷயம் வேறு, கனம் அங்கத்தினர் கேட்கும் விஷயம் வேறு.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that cows belonging to certain temples roam freely in the city streets causing obstruction to motorists and road users and, if so, what action has been taken to prevent this?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir, it is not cow, it is the bull that is dedicated to the Gods. (Laughter.)

SRI K. B. S. MANI : சுயேச்சையாக திரியும் கால்நடைகளை ஓட்டிக் கொண்டு போய் பவுண்டுகளில் அடைத்தாலும் அவைகளை விவசாயிகள் மீட்டுக்கொண்டு வந்த பிறகு அவைகள் மறுபடியும் விவசாயத்திற்கும் மற்றப்படியும் தொந்தரவு கொடுக்கின்றன. அதனால் தஞ்சை வட ஆற்காடு முதலிய ஜில்லாக்களில் பல லாரி, கார், விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அவைகள் மீண்டும் வெளியில் வந்து கண்டபடியெல்லாம் ரோடுகளிலும் மெயின் ரஸ்தாக்களிலும் திரிகின்றன. ஆகவே இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படா வண்ணம் சர்க்கார் அதில் தலையிட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை போலீஸைக்கொண்டு எடுப்பதற்கு முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைத்தான் நான் முன்னமே சொன்னேன். இந்த திட்டத்தை இன்னும் தீவிரமாக அமுலுக்குக் கொண்டு வருவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொன்னேன்.

Hydrographic survey

* 405 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any hydrographic survey was made recently;

(b) if so, what are the findings; and

(c) if not, whether there is any programme for hydrographic survey?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir. Hydrographic surveys of Cuddalore Port, Nagapattinam Road-stead and Tuticorin Port have been carried out by the Hydrographic Department, Indian Navy, between March 1955 and February 1958.

(b) While only a draft survey plan of the Cuddalore Port has been received by the Port authorities, the charts for the Nagapattinam and Tuticorin ports are still awaited.

(c) A survey of the Pamban Pass has been recommended, but in view of the dearth of survey vessels with the Indian Navy, this work has been assigned only a low priority by the authorities at the Centre.

SRI K. SATTANATHA KARAYALAR : கொளச்சல், லீபுரம், கன்யாகுமரி போன்ற கன்யாகுமரி மாவட்டத்தில் பழைய காலத்திய துறைமுகம் இருக்கிறது. அந்தத் துறைமுகத்தை நல்ல நவீன முறையில் அமைப்பதற்கும் இந்த சர்க்கார் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. தனியான கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : எக்ஸ்ப்ரஸ் பஸ்கள்...

MR. SPEAKER : அது அடுத்த கேள்வி.

SRI A. GOVINDASAMY : கடலூர் துறைமுகத்தை எந்த முறையில் விஸ்தரிக்கலாம் என்று சர்வே செய்தவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

SRI N. MARUDACHALAM : கோவை ஜில்லாவில் மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள வெள்ளியங்கிரியில் ஒரு நீர்வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஏதாவது பரிசீலனை செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இந்தக் கேள்வி எப்படி எழும்?

THE HON. SRI P. KAKKAN : இது அந்தக் கேள்விக்கு சம்பந்தப்பட்டது இல்லை.

Express buses

* 406 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the various routes in which Express Buses are plying at present: and

(b) the new Express routes to be opened soon?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A statement[a] furnishing the particulars is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : இதில் தற்போது உள்ள ரூட்டுகள் மாத்திரம்தான் இருக்கிறது. ப்ரபோஸ்ட் ரூட்டுகள் அதாவது புதியதாக எந்த ரோடுகளில் எல்லாம் எக்ஸ்ப்ரஸ் பஸ்களை அமைக்கப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். இந்தக் கேள்வி என்னுடைய முதல் கேள்வியிலேயே இருக்கிறது.

THE HON. SRI V. RAMAIAH : புது ரூட்டுகளைப் பொருத்த வரையில் எப்பொழுதெல்லாம் கோரிக்கைகள் வருகின்றனவோ அப்பொழுதெல்லாம் உடனடியாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. எந்தெந்த ரூட்டுகளில் உடனடியாக ஆரம்பம் செய்ய வேண்டும் என்றெல்லாம் கேட்கப்படுகிறதோ அங்கேயெல்லாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. என்னென்ன ரூட்டுகள் ப்ரபோசலில் இருக்கின்றன என்று சொல்வது கொஞ்சம் கஷ்டம்.

SRI K. SATTANATHA KARAYALAR : சென்னையிலிருந்து வேடந்தாங்கல், திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரம் வரையில் எக்ஸ்ப்ரஸ் பஸ் ரூட்டுகள் வேண்டுமென்று யாராவது சர்க்காரிடம் கோரியிருக்கிறார்களா, அந்த விஷயம் இப்பொழுது எந்த அளவில் கவனிக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH : இது போன்ற கோரிக்கைகள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. மேலும் சென்னையிலிருந்து வேடந்தாங்கலுக்கு எக்ஸ்ப்ரஸ் பஸ் ரூட் அவசியம் என்று நான் கருதவில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : சேலத்திலிருந்து சென்னைக்கும், சேலத்திலிருந்து பெங்களூருக்கும் எக்ஸ்ப்ரஸ் பஸ் ரூட்டுகள் வேண்டும் என்று ஏதாவது விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா? அப்படி இல்லையென்றால் ரயில்வே நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு அங்கே எக்ஸ்ப்ரஸ் பஸ்களை விட சர்க்காரிடத்தில் ஏதாவது உத்தேசம் இருக்கிறதா?

THE HON. SRI V. RAMAIAH : ரயில்வே நெருக்கடியை தவிர்க்க மட்டும் அல்ல, பிரயாணிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் முறையில் எக்ஸ்ப்ரஸ் ரூட்டுகள் அதிகமாக போட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். அது பரிசீலனையில் இருக்கிறது. ரூட்டுகளுக்குத் தக்கபடி ரூட்டுகளை எப்படி பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமோ அதைப் பார்த்தும் வரப்படுகிறது. ஒவ்வொரு அங்கத்தினரையும் திருப்தி பண்ண வேண்டும் என்ற முறையில் இருந்தால் அதனால் கஷ்டம் ஏற்படும்.

SRI P. S. SANTHANAM : செங்கத்திலிருந்து சென்னைக்கு வருவதற்கு துரிதமான பஸ்களை விடுவதற்கு கவனிக்கப்படுமா? இது சம்பந்தமாக பச்சையப்பன் பஸ் சர்வீஸ், வி.டி.எஸ். பஸ் சர்வீஸ், திருமலை பஸ் சர்வீஸ் முதலியவர்களிடமிருந்து ஏதாவது மனுக்கள் வந்திருக்கின்றனவா? அவர்களில் யாருக்குக் கொடுக்க உத்தேசம்?

MR. SPEAKER : The question is out of order.

---

[a] Printed as Appendix I on pages 162-163 infra.

[17th February 1959]

SRIMATHI T. N. ANANDANAYAKI : எக்ஸ்ப்ரஸ் ரூட்டுகளை சாதாரணமாக வழங்குவதாக இருந்தால் 75 மைலுக்கு மேற்பட்டு பஸ்களை விடக் கூடிய ப்ளீட் ஆளர்களுக்குத்தான் கொடுக்கப்படும் என்று ஒரு ஜி.ஓ. இருக்கிறது. அப்படி கொடுப்பதால் ப்ளீட் ஆளர்களுடைய கையைத்தான் பலப்படுத்துவதாகும். அதனால் இப்பொழுது ஜி.ஓ.-வை திருத்தி தனிப்பட்டவர்கள் எல்லோருக்கும் கொடுக்க முடியுமா என்பதை விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : அந்த ஜி.ஓ.-வை திருத்த வேண்டிய அவசியம் இல்லை. அப்படி ஜி.ஓ. ஒன்றும் இல்லை. 75 மைலுக்கு அதிகமாக ரூட்டுகளைக் கொடுக்க எந்த விதமான நிபந்தனையும் இல்லை. யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். யார் திறமையாக நடத்த முடியும் என்று ஆர்.டி.ஓ. கருதுகிறாரோ அவருக்கு அந்த ரூட்டைக் கொடுக்கலாம்.

SRI K. VINAYAKAM : What are the salient features of the express bus service? Do they enjoy better facilities than the ordinary services like toilet facilities, radio music and good cushioned seats?

THE HON. SRI V. RAMAIAH : I may assure that these express buses provide better facilities such as washing facilities, drinking water facilities, etc. More than all that it is the speed at which the buses that appeals to the public. Regarding radio music, I can say that we have prohibited this in the express as well as the local bus services.

SRI M. RAMACHANDRA REDDI : ரயில் மார்க்கங்கள் அல்லாத தாலூகா ஹெட் க்வார்டர்களிலிருந்து மதராசுக்கு எக்ஸ்ப்ரஸ் பஸ் விடுவதை ஒரு கொள்கையாக சர்க்கார் அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : கேள்வியை மறுபடியும் கேளுங்கள்.

SRI M. RAMACHANDRA REDDI : தாலூகா ஹெட் குவார்ட்டரிலிருந்து சென்னைக்கு எக்ஸ்ப்ரஸ் பஸ் விடுவது தேவை என்பதை சர்க்கார் அறிந்து அது சர்க்காருடைய கொள்கையாக அறிவிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : கொள்கை ரீதியாகச் சொல்வதற்கு இல்லை. எங்கெங்கே தேவைப்படுகிறதோ, எங்கெங்கே சட்டசபை உருப்பினர்கள் வேண்டுமென்று வலியுறுத்துகிறார்களோ அங்கேயெல்லாம் கவனிக்கப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR : எக்ஸ்ப்ரஸ் பஸ் ரூட்டுகள் கொடுக்கும்போது எந்த அடிப்படையில் கொடுக்கிறார்கள் ? கூட்டுறவு இயக்கத்திற்கும் எக்ஸ் சர்வீஸ் மென் அசோசியேஷனுக்கும் முதலிடம் கொடுக்க சர்க்கார் உத்தரவிடுமா ?

THE HON. SRI V. RAMAIAH : எக்ஸ்ப்ரஸ் ரூட்டாக இருந்தாலும், அல்லது சாதாரண ரூட்டாக இருந்தாலும் எந்த முறையில் ரூட்டுகள் வழங்கப்பட வேண்டும் என்று விதிகள் போடப்பட்டிருக்கின்றனவோ அந்த அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

Special Wards in Hospitals

* 407 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether it is a fact that admissions to the A and B class wards in the Government General Hospital, Madras, are not made seriatim as per registration?

17th February 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : The admissions to all the special wards are made seriatim as far as possible as per registration. However, discretion is given to the Resident Medical Officer to admit patients with acute and emergent conditions immediately.

* 408 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to instruct the Resident Medical Officers in Government hospitals to relax rules for admission of patients in A and B wards on emergency basis instead of admitting on priority only?

THE HON. SRI M. A. MANICKAVELU : None, Sir.

Special Minor Irrigation Schemes in South Arcot district

MR. SPEAKER : The hon. Member Sri M. Jagannathan is not in his seat. The question and answer will be printed in the official proceedings. 9-30 a.m.

* 409 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the amount allotted for Special Minor Irrigation in the South Arcot district in 1957–58;

(*b*) the number of tanks, lakes, anicuts and channels constructed under this scheme, talukwar; and

(*c*) the amount spent out of the sum allotted for this scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 2·56 lakhs.

(*b*) Forty-six works (including repairs to existing works) were carried out in the taluks of South Arcot district as detailed below :—

Name of taluk.	*Number of works including repairs to existing works.*
Vriddhachalam	2
Kallakurichi	5
Tirukoilur	4
Villupuram	6
Tindivanam	12
Gingee	16
Cuddalore	1
Total ...	46

(*c*) Rs. 2·61 lakhs.

Small Savings

* 410 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Tahsildar, Erode, has addressed the Police, Tiruppur, Coimbatore district, to take action against one Durai, resident of Perunth†oluvu, Tiruppur, for illegal collections of Small Savings in Uttukuli firka, Erode taluk; and

(*b*) if so, the action taken by the Government in the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes.

(b) The matter is under investigation by the Superintendent of Police, Coimbatore.

City water-supply

* 411 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to draw water from Andhra rivers to augment the City water-supply; and

(b) if so, how far the matter now stands?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir. None at present.

(b) Does not arise.

SRI N. K. PALANISAMI : சார், நமது முதலமைச்சர் அவர்கள் ஆந்திராவுக்குச் சென்றிருந்த சமயத்தில் இதைப் பற்றி அந்த ஆந்திரப் பிரதேசத்து முதலமைச்சர் அவர்களிடம் பேசி நமது "சிட்டி"க்கு அதிகப்படி தண்ணீர் வர ஏற்பாடு செய்ததாகச் சொன்னார்கள். இதில் ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is for the Zonal Council to take up the matter. But I may inform the hon. Member that the Central Irrigation Research Committee is examining the feasibility of drawing water from these rivers particularly examining at what point it could be drawn from those rivers.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கிருஷ்ணா-பெண்ணார் திட்டம் என்பது ஓரளவுக்கு உருவாகி, நடுவிலே விடப்பட்டது. அதை மீண்டும் துவக்க அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா ? வேலை ஆரம்பிக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைத்தான் சொன்னேன். எந்த இடத்திலிருந்து தண்ணீர் எடுப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறது. ஒரு இடத்தில் தண்ணீர் எடுக்க உத்தேசித்தபோது பம்ப் செய்தால்தான் தண்ணீர் கிடைக்கும்படியான நிலைமை இருந்தது. பம்ப் செய்யும் செலவைப் பார்த்தால் தண்ணீர் எடுப்பதால் பிரயோஜனம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். பம்ப் செய்யாமல் எந்த இடத்தில் இருந்து தண்ணீர் எடுக்காலம் என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : சார், இந்தக் கிருஷ்ணா, கோதாவரி தண்ணீரைக் கொண்டு வந்தால் வட ஆற்காடு, செங்கல்பட்டு, சென்னை ஆகிய இடங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். அப்படிப்பட்ட இந்தத் திட்டத்தைக்கொண்டு வர சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முயற்சி பற்றித்தான் இப்பொழுது உத்தேசித்துக் கொண்டிருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, is the Government aware of the fact that the generous Chief Minister of Andhra Pradesh has made a public declaration that he is prepared to consider the proposal of giving water from these perennial rivers to the City of Madras and, if so, will the Government make direct approach to the Chief Minister and then arrive at conclusions before they place the matter before Council?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, there is no necessity now for that kind of approach. The real approach is about the examination and the feasibility and how and where to draw water. That is being looked into now.

Cooum river

* 412 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any research was conducted at the Irrigation Research Station to open the Cooum river into the sea; and

(b) if so, what the conclusions are?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) As a result of experiments conducted, it is considered that pilot studies at the site have to be conducted before coming to a final decision in the matter. But the pilot studies at the site has not been conducted so far and hence, no decision on this proposal has yet been arrived at. In the meanwhile another proposal has been formulated by the Superintending Engineer, Madras Circle, for keeping the Cooum bar permanently open. The remarks of the Port Trust Engineer have been called for on the proposal. The Chief Engineer has promised a further report after getting the opinion of the Port Trust Engineer. This further report is awaited.

MR. SPEAKER : அடுத்த கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம். கனம் மந்திரி அவர்கள் 413-வது கேள்விக்குக் கூட பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* 413 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to use the portion of the Buckingham Canal and that of the Cooum river in the City of Madras as waterways and means of transport of passengers; and

(b) whether any Committee of Technical experts has been appointed to go into this question?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) Yes, Sir. The Government have constituted a High Power Technical Committee to formulate among other things, a scheme for the development of Cooum as a clean and tidal river and the improvement of Buckingham Canal to serve as an addition to the cheap transportation facilities within the Madras City.

SRI K. SATTANATHA KARAYALAR : சார், இந்த ஆராய்ச்சியின் பலன் எந்தத் தேதியில் அவர்கள் சர்க்காருக்குத் தெரிவித்தார்கள் ? ஒரு முடிவு எடுக்க இவ்வளவு காலம் தாமதம் ஏன் ?

THE HON. SRI P. KAKKAN : நான் பதிலிலேயே சொன்னேன் இப்பொழுதுதான் பரிசீலனை நடக்கிறது, முடிவு எடுக்கவில்லை என்று.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்தக் கூவத்தின் காரணமாக துர்நாற்றம் அதிகபட்டுக் கொண்டிருக்கிறது. அதைத் தற்காலிகமாகப் போக்குவதற்காவது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

[17th February 1959

THE HON. SRI P. KAKKAN : அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தற்காலிகமாகச் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்ல முடியும்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்தக் கூவம் நதியானது சென்னை பாகத்தில் வெயில் காலத்தில் வரண்டு போகும் காரணத்தால் துர்நாற்றம் ஏற்படுகிறது. அந்தச் சமயத்தில் சமுத்திரத் தண்ணீரை இந்தக் கால்வாய்களில் நிரப்பி துர்நாற்றத்தைப் போக்குவதற்குச் சர்க்கார் தற்காலிகமாகவாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : அப்படிச் செய்ய வேண்டுமென்று தான் எஞ்சினீயர்கள் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இந்தக் கூவத்தைச் சுத்தம் செய்வது குறித்தும், பக்கிங்ஹாம் கனலை சீர்திருத்துவது குறித்துக் கார்ப்பரேஷனிலிருந்து இரண்டு திட்டங்கள் வந்தனவா ? அவைகளின் நிலைமை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : இந்தக் கேள்வியை ஒட்டி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் சில தற்காலிகத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். அந்தத் தற்காலிகத் திட்டங்கள் எவை என்று அறிந்து கொள்ளலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : புதிய தண்ணீரைச் சமுத்திரத்தில் இருந்து கூவம் நதியில் விட்டு முன்பே இருக்கிற அழுக்குத் தண்ணீரை வெளியேற்றுவது.

SRI A. A. RASHEED : அதன் காரணமாக நாற்றத்தில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம், நாற்றத்தில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. துர் நாற்றம், நல்ல நாற்றம் இரண்டும் நாற்றம்தான்.

SRI K. VINAYAKAM : இந்த ஹை பவர் இரிகேஷன் கமிஷன் பரிசீலனைக்கு விடுவதற்கு முன்பே பக்கிங்ஹாம் கனல் மூலமாக சவுக்குக் கட்டை அரிசி முதலிய வியாபாரப் பொருள்கள் சிறு படகுகளில் கொண்டு போகப்பட்டு வருகின்றன. அந்தக் கனலில் வர வர ஆழம் குறைந்து வருவதன் காரணமாக அதன் மூலமாக நடைபெற்று வரும் வியாபாரம் தடைப்பட்டு வருகிறது. ஆகவே இந்தப் பக்கிங்ஹாம் கனலை ஆழப்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : பக்கிங்ஹாம் கனலை சென்னைக்கு வடக்கே ஆந்திரப் பிரதேசம் எல்லை வரை செப்பனிட எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டு மத்திய சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

SRI A. GOVINDASAMY : பக்கிங்ஹாம் கனலை வடக்கே போவதற்குச் செப்பனிட உத்தேசித்திருக்கிறார்கள். அந்தக் கனல் தெற்கே கடலூர் வரை போகிறது. தெற்கே கடலூர் வரை ஆழப்படுத்தினால் சவுக்குக் கட்டை, அரிசி முதலிய வியாபாரப் பொருள்கள் கொண்டு செல்ல வசதியாக இருக்கும். இதைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN : எல்லாக் காரியத்தையும் ஒரே சமயத்தில் எடுத்துக் கொள்ள முடியாது. ஒவ்வொன்றாகத்தான் எடுத்துக் கொள்ள முடியும்.

17th February 1959]

Motor taxis in Pudukkottai Division

* 414 Q.—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state how many motor taxis are plying in Pudukkottai Division, Tiruchirappalli district?

THE HON. SRI V. RAMAIAH : There are four taxis plying in Pudukkottai division of Tiruchirappalli district of which three are big taxis and one is a baby taxi.

Foreign scholarships

* 415 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether it is a fact that the Government have represented to the Central Government to offer sufficient number of Foreign scholarships to this State under the Research Scholarship in Humanities, General Cultural Scholarship Scheme, Colombo Plan Scheme and Indo-German Industrial Co-operation Scheme?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government of India have been requested to allot to this State a larger number of scholarships under the Central Overseas Scholarships Scheme.

* 416 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state the maintenance allowance for overseas scholarships in different countries in Europe and in America?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [a] is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : சார், செண்டரல் ஓவர்சீஸ் ஸ்காலர்ஷிப் தற்சமயம் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது ? அதிகமாகக் கோரப்பட்டிருக்கிறதா ? எந்தெந்த இனத்தில் எவ்வளவு கோரப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not have information regarding the exact number of scholarships allotted.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த ஸ்காலர்ஷிப் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தச் சர்க்கார் சிபாரிசு செய்வதன் பேரில் மத்திய சர்க்கார் இதைக் கொடுக்கின்றார்கள். இதில் 50 சத வீதம் வெளியில் இருக்கக்கூடிய எந்த கவர்ன்மெண்ட் "ஸ்பான்சர்" பண்ணுகிறார்களோ அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். பாக்கி 50 சத வீதத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே தற்சமயம் எத்தனை பேர் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டு வெளியில் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் ? உத்தியோகத் துறையில் இருப்பவர்கள் வெளியில் போயிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னிடத்தில் தற்போது புள்ளி விவரங்கள் இல்லை. நான்கைந்து நாட்களுக்கு முன்பு புள்ளி விவரங்கள் கொடுத்ததாக ஞாபகம்.

a Printed as Appendix II on page 164 supra.

[17th February 1959

SRI A. VEDARATHNAM : வெளி நாடுகளில், குறிப்பாக அமெரிக்கா போன்ற இடங்களில் இருந்து இந்த மாணவர்களுக்கு ஸ்காலர் ஷிப் அந்த நாட்டுச் சர்க்கார் கொடுத்து வருகிறார்கள். நம்முடைய மா நிலத்து மாணவர்கள் அந்தப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்களா? எத்தனை பேர் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அனுப்பப்பட்டிருக்கிறார்கள். எத்தனை பேர் என்ற விவரம் இல்லை.

SRI T. SAMPATH : " மெரிட் " டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I suppose everything is taken into consideration before selection is made. I suppose these things will generally be given on merit.

Sub-treasury for Vedaranyam

* 417 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியில் இப்போதுள்ள தாலூகா கஜானா வேறெங்கேனும் மாற்றப்படுமா ?

(ஆ) வேதாரண்யம் சப்-தாலூகாவிற்கு கஜானா வசதி செய்துகொடுக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) There is no proposal to transfer the taluk treasury at Tiruturaipundi elsewhere.

(ஆ) & (இ) The proposal whether a separate sub-treasury may be opened at Vedaranyam is under consideration.

SRI A. VEDARATHNAM : வேதாரண்யத்தில் இதற்கு முன் இருந்த கஜானாவை எடுத்த காரணத்தினால் ஏராளமாக பணம் ரிமிட் பண்ணுகிறவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதன் காரணமாக அங்கே ஒரு சப்-டிரஷரியை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா? அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது தோப்புத்துறை என்ற இடத்தில் கஸ்டம்ஸ் டிரஷரி இருக்கிறது. அதை எடுத்துவிடவேண்டுமென்ற உத்தேசம் இருக்கிறது. அப்போது இந்த இடத்தில் அதை வைக்கலாமா என்ற உத்தேசமும் இருக்கிறது.

Public Works, Irrigation and Food Production departments

* 418 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Public Works, Irrigation and Food Production departments have been amalgamated;

(*b*) whether there is any proposal to constitute a special Public Works Department Division for Tanjore district to provide irrigation facilities for rain-fed areas and to provide drainage facilities in the district; and

(*c*) whether there is any proposal to amalgamate minor irrigation department now under the Revenue Department with the Public Works Department?

17th February 1959]

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir. But, the question of integration of the various engineering branches, viz., Public Works, Highways, Irrigation, Food Production, Minor Irrigation, etc., is under the consideration of the Government.

(*b*) There is no proposal to investigate schemes for providing for irrigation facilities to rain-fed areas in the Tanjore district. The question of forming a Special Public Works Department Division for improving the existing drainage facilities is however under consideration.

(*c*) Yes, Sir.

61270

Educational concessions

* 419 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to revise the income limit of parents of students entitled to (i) full-fee concession; and (ii) half-fee concessions?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

V211,31 N59 N60.19

Heavy rains in the City

* 420 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : }
SRI N. K. PALANISAMI : } Will
the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of persons rendered homeless in the Madras City and suburbs due to heavy rains on the 19th and 20th November 1958; and

(*b*) the steps taken by the Government to give relief to them?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The number of persons whose dwelling numbering about 6,300 were rendered uninhabitable on account of the heavy rains is 25,800.

(*b*) Temporary accommodation was provided and a survey of the extent of damages was made. An advance amount of Rs. 10,000 was sanctioned in November 1958 to those victims who were in urgent need of relief. It is proposed to sanction a further amount for affording relief to all the victims. The matter is under the consideration of the Government and orders are likely to issue shortly.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த வட்டாரத்தில் வாழக்கூடிய மக்கள் ஒவ்வொரு தடவையும் பெரும் மழை வரும்போது பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் நிரந்தரமாக அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது அங்கே ஆட்சேபகரமான இடத்திலே குடிசை போட்டு வருகிறார்கள். அந்த மாதிரியாக போட்டுக்கொள்ள வொட்டாமல் தடுப்பது சிறந்த வழி என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : இருக்கக்கூடிய சேரிகளில் டிரேனேஜை ஆழம் செய்வது, இன்னும் பள்ளங்களை மேடு செய்வது ஆகியவை மூலமாக இந்த மாதிரி ஏற்படுகிற கஷ்டத்தைத் தவிர்க்க முடியும். அந்த மாதிரி சர்க்கார் செய்யக் கூடாதா?

[17th February 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : பேசின் பிரிட்ஜ் வரியாவே மிகப் பள்ளம். அதில் வேண்டுமென்றே குடிசை போடுகிறார்கள் இந்த மாதிரி வெள்ளம் வந்து அடித்துப் போனால் பணம் வாங்கலாம் என்றே சிலர் போடுகிறார்கள்.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : பேசின் ப்ரிட்ஜ் பக்கத்தில் குடிசை போட்டுக் கொண்டிருப்பவர்கள் சித்ரா டாக்கீஸ் பக்கத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவர்கள். அங்கு வாழக்கூடியவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்கப்படவில்லை என்று பல மனுக்கள் கொடுத்து இருக்கிறார் கள். அவர்களுக்கு மேலும் இந்தச் சலுகை கொடுக்க அரசாங்கத்தார் முன் வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU ; முன்பு நான் சொன்னேன். சிலருக்கு உடனடியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற வருக்குக் கொடுப்பதில் கஷ்டம் இருக்கிறது. இந்தச் சலுகைக்குப் பாத்திரம் இல்லாதவர்களும் கூட மனுப் போட்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நன்றாக அலசிப் பிரித்துப் பார்த்துக் கொடுக்க வேண்டியிருப்பதால் காலதாமதம் ஆகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : வீடு கட்டி தனி முதலாளிகள் அவற்றை வாடகைக்கு விடுகிறார்கள். அவர்களை நல்ல முறையில் வீட்டைச் செப்பனிடவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்ளக் கூடாதா? அது போல வீடு இழந்தவர்களுக்கு உதவி செய்கிறார்கள் அரசாங்கத்தார். ஆனால் ஒரு பகுதி தான் இடிந்து விழுந்திருக்கிறது என்றாலும் அவர்களுக்கும் உதவி செய்ய முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த மாதிரியும் பார்ஷியல் டாமேஜ் உள்ள இடங்களுக்கு உதவி கொடுத்து வருகிறார்கள். முதலாளிகள் கட்டியிருக்கிற இடத்தில் சரிப்படுத்த வேண்டுமென்றால் ஸ்லம் க்ளியரன்ஸ் என்ற அடிப்படையில் தான் முடியும்.

SRI K. ANBAZHAGAN : நவம்பர் 19—20 தேதி ஆகிய நாட்களில் ஏற்பட்டது போன்ற மழையை ஒட்டி கடல் அரிப்பும் (சி எரோ ஷன்) தொடர்ந்தது. இப்படி மழையை ஒட்டி கடல் அரிப்பும் ஏற்பட்டு அதனால் பாதகம் அடைந்தவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்க சர்க்கார் தீர்மானித்திருக்கிறது ?

MR. SPEAKER : The main question is about something else. The hon. Member may put a separate question.

THE HON. SRI M. A. MANICKAVELU : இங்கே மழையினால் ஏற்பட்ட விளைவைப் பற்றித் தான் கேட்கப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : The hon. Member will now see that as I told him already a separate question has to be put.

SRI K. ANBAZHAGAN : மழையை ஒட்டியே கடல் அரிப்பும் ஏற்பட்டிருக்கிறது. இது இரண்டும் கலந்தது தான்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படியானால் என் பதிலிலும் இரண்டும் கலந்திருக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : இப்படி பாதிக்கப்பட்ட குடிசை மக்களுக்கு தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டு வருகிறது ? கொடுக்கும்படி யான அந்தத் தொகை மிகவும் குறைந்த தொகையாக இருக்கிறதென்று அரசாங்கம் கருதவில்லையா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நூற்றுக்கு 30 ரூபாய் வீதம் கொடுக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களை ஓரளவு கைதூக்கித்தான் விட முடியும். முழுக்க உதவமுடியாது. பணம் இருந்தால் வாரிக்கொடுக்கலாம்.

SRI K. VINAYAKAM : Are the Government aware of the fact that most of these huts are situated in low-lying areas and thus become susceptible to flooding and if so, will the Government take steps to clear these slums before the oncoming of rains and move the huts to high level areas and thus save the recurring expenditure which had become a drain on the resources of the Government?

17th February 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the trouble about clearing these huts in low-lying areas is this, that unless we make alternative accommodation, we cannot make them move out. Under the slum clearance scheme, this is being done.

SRI A. A. RASHEED : May I know the total loss due to these, loss both to the Government as well as private persons?

THE HON. SRI M. A. MANICKAVELU : It has not been estimated, Sir.

Coleroon banks

* 421 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri C. Muthiah) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சீர்காழி எலத்தூர்—கொள்ளிடக்கரை வெள்ள காலத்தில் உடைப்பு ஏற்படுவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : The following nine protective works were sanctioned for protecting the flood bank of Coleroon in Elathur :—

(1) Providing brick block groynes at Sothiriyam set between M. 83/4—82/4 Coleroon right bank (Rs. 52,400).

(2) (*a*) Protecting the erosions at Sothiriyam set between M. 84/0-1 of Coleroon right bank by providing brick masonry revetment (Rs. 28,000).

(*b*) Providing brick masonry revetment at Sothiriyam set between miles 83/7—84/0 of Coleroon right bank (Rs. 35,500).

(3) Widening the Coleroon right bank at M. 84/01 Sothiriyam set (Rs. 1,000).

(4) Providing Pile groynes and edging at Sothiriyam set at miles 83/7—84/0 Coleroon right bank (Rs. 3,600).

(5) Widening the bank at Sothiriyam set between mile 83/7—84/0 (Rs. 1,450).

(6) Providing preamble screen at Sothiriyam set (Rs. 4,700).

(7) Diverting the flow in the River Coleroon by providing groyne at Sothiriyam set between miles 83/5-6 Coleroon right bank (Rs. 9,500).

(8) At the Alakudi set permanent protective works were done by constructing five brick block groynes and by forming a diversion bank between miles 96/3—97/1 in Coleroon right bank.

(9) In addition to the abovementioned works necessary pereamble screen work is also proposed to be carried out to reclaim the eroded portion in the area.

Out of that nine works, items (1), (3), (4), (5) and (8) have been completed and the rest are in different stages of progress. Information regarding latest stage of remaining four works has been called for and will be furnished later.

SRI K. B. S. MANI : கனம் அமைச்சர் குறிப்பிட்ட 8 வேலைகளில் ஏதாவது ஒரு வேலை பலகீனப்பட்டால் கூட—தடைப்பட்டால் கூட—சீர்காழி தாலூகா பூராவுமே அழிந்து விடக்கூடிய சூழ்நிலை ஏற்படும். கடந்த ஆண்டு 30,000 ரூபாய்க்கு விடப்பட்ட காண்டிராக்ட் வேலையை சம்பந்தப்பட்ட காண்டிராக்டர் சரியாகச் செய்யவில்லை. எனவே, இனிமேல், காண்டிராக்ட் வேலைகளை சரியாகச் செய்யாவிட்டால் காண்டிராக்ட் ரத்து செய்யப்படுவதுடன், அரசாங்கத்திற்கு ஏற்படும் நஷ்டமும் காண்டிராக்டர்களுடைய சொத்திலிருந்து வசூலிக்கப்படும் என்ற முன் எச்சரிக்கையுடன் காண்டிராக்டுகளை விட அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : காண்டிராக்ட் கொடுக்கும் போது காண்ராக்டர்களிடம் எந்த நிபந்தனையைப் போட முடியுமோ அதைத் தான் போட முடியும். அதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியாது. இப்போது அந்த 9 வேலைகளில் 5 முடிந்து விட்டன. மற்ற 4 வேலைகள் பற்றி விசாரித்திருக்கிறோம். அவைகளும் துரிதமாக முடிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : ஆற்றோரங்களில் அரிப்பு ஏற்படுவதைத் தடுக்க அங்கே மரங்களை வைத்தாலே போதும் என்று சொல்கிறார்களே. அந்த யோசனையை ஆராய்ந்து பார்த்த பிறகே இந்த 8 வேலைகளை எடுத்துக்கொள்ள கனம் அமைச்சர் முன் வந்தாரா?

THE HON. SRI P. KAKKAN : மரங்கள் வைத்தால் மட்டும் போதாது. நாணல்களையும் வைக்கலாம். இருந்தாலும், ரிவெட்மெண்ட் கட்டினால் தான் அதைத் தடுக்க முடியும்.

Medical graduates

* 422 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of vacancies remaining unfilled in the various departments of Government and local bodies due to non-availability of Medical Graduates; and

(b) the steps taken or proposed to be taken to solve this problem?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Sixteen in Primary Health Centres and 100 in other Government Medical Institutions. Information regarding the number of vacancies in the Local Fund medical institutions is not available.

(b) The Government have decided to appoint G.C.I.Ms. in Government Medical Institutions. With a view to induce Medical Officers to come forward to take up appointments in the Primary Health Centres, the compensatory allowance payable to Assistant Surgeons employed in Primary Health Centres has been raised from Rs. 50 to Rs. 100 per mensem. Quarters for the staff employed in these centres are also proposed to be constructed.

SRI T. T. DANIEL : Sir, is it a fact that many of the M.B.B.S. students do not accept Government jobs, and even if they accept Government jobs, they resign and go away, because the salary is poor and also because there is no convenient housing accommodation in villages to which they are posted?

THE HON. SRI M. A. MANICKAVELU : All that is true. I shall be grateful to the hon. Member if he would suggest ways and means of overcoming these difficulties.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : It is not very difficult for the Government to collect statitstics from the local bodies regarding the number of vacancies in the local fund medical institutions. It should be possible for the Government to collect statistics and place them on the table of the House. Will the Government consider the desirability of collecting figures and placing them on the table of the House before the next meeting?

THE HON. SRI M. A. MANICKAVELU : I submit, Sir, that even with great difficulty if the statistics are collected, what step we are going to take to remedy the state of affairs, is not known. However, since the Leader of the Opposition wants the information, I shall see what could be done.

SRI A. R. SUBBIAH MUDALIAR : எம்.பி.பி.எஸ். பட்டதாரிகளுக்கு கூடுதலாகச் சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்ற முறையீடு இலாகாவிலிருந்து வந்திருக்கிறதா ? அதாவது, இப்போது அவர்களுக்கு உள்ள சம்பளத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற முறையீடு சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முறையீடு இருக்கிறதோ இல்லையோ, அதை அதிகப்படுத்தலாமா என்று நாங்களே ஆலோசித்து வருகிறோம்.

SRI S. LAZAR : மருத்துவப் பட்டதாரிகள் ஒரு சில ஆண்டுகளாவது சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் கட்டாயம் வேலை செய்யவேண்டும் என்று சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற யோசனை எந்த அளவில் இருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை எந்த மாதிரிச் செய்யலாம் என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது. முதலாவதாக, சில மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்து இந்த மாதிரியான நிபந்தனையைப் போடுவதை நாம் சட்டப்படி செய்ய முடியும்; அது ஆலோசனையில் இருக்கிறது.

SRI P. S. CHINNADURAI : அரசாங்கம் எல்.ஐ.எம். பட்டம் பெற்றவர்களையும் ஜி.சி.ஐ.எம். பட்டம் பெற்றவர்களையும் சமமாகக் கருதி நடத்துவதற்கு இந்த ராஜ்யத்தில் எந்த விதமான தடையும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, எல்.ஐ.எம். பட்டம் பெற்றவர்களை ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்களில் நியமிக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு முன்பு எந்த பட்டத்தை வாங்கியவர்களை எல்.ஐ.எம். என்று சொல்லி வந்தோமோ அந்தப் பட்டத்தை வாங்குபவர்களைத் தான் ஜி.சி.ஐ.எம். என்று சொல்லி வருகிறோம். அவர்களை ஜில்லா தலைமை ஆஸ்பத்திரிகளிலும் தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளிலும் நியமிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்களில் 35 பேர்களுக்கு உத்தியோகம் கொடுக்க சர்க்கார் முன் வந்தது. ஆனால் 3 பேர்கள் தான் வேலையில் சேர்ந்திருக்கிறார்கள். அதுவும் சென்னையில் தான். பிரைமரி ஹெல்த் ஸெண்டர்களைப் பொறுத்த வரையில், அவைகளை நடத்துவதில் UNICF இன் உதவிகள் பெறப்படுவதால் அந்த ஸ்தாபனத்தின் சம்மதம் பெற்றே அங்கே இந்த வைத்தியர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. இவர்களை அங்கே நியமிப்பதற்கு அந்த ஸ்தாபனம் ஒத்துக்கொள்வதில்லை.

MR. SPEAKER : பத்து மணியாவதற்கு இன்னும் நான்கு நிமிஷங்கள் தான் இருக்கின்றன. எல்லாக் கேள்விகளையும் சீக்கிரம் முடிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.

Perundurai Sanatorium

* 423 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount of grant given to Perundurai Sanatorium by the Centre during 1957–58;

(*b*) the amount of funds collected for running the Sanatorium; and

(*c*) the expenditure incurred during that year?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Rs. 30,000.

(*b*) Rs. 2,35,688.

(*c*) Rs. 2,78,021.

SRI N. K. PALANISAMI : பெருந்துறை க்ஷயரோக ஆஸ்பத்திரி மாநிலத்திலேயே பெரிய ஆஸ்பத்திரியாக இருக்கிறது. அதற்குக் கொடுக்கபடும் மானியத் தொகை போதாது. எனவே மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் சேர்ந்து அந்தப் பற்றுக் குறையை சரிக்கட்ட முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது அதற்கு உதவி அளித்துக்கொண்டு தான் இருக்கிறோம். அதற்குள்ள "மெய்ன்டினன்ஸ் க்ராண்டை" அதிகப்படுத்தியிருக்கிறோம். அதற்கு மெய்ன்டினன்ஸ் க்ராண்டாக 46,000 ரூபாய் கொடுக்கிறோம், இதற்கு முன்பு இவ்வளவு தொகை கொடுத்ததில்லை.

Hospital in Tanjore district

*424 *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf Sri M. D. Thiagaraja Pillai) : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா.—

(அ) தஞ்சை ஜில்லா தாலூகா தலைநகரில் உள்ள எந்தெந்த ஆஸ்பத்திரிகளை சர்க்கார் எடுத்து நடத்தி வருகிறது ? அவைகளுக்கு ஆண்டுதோறும் ஆகும் செலவு என்ன ?

(ஆ) நன்னிலம் தாலூகா தலைநகரில் உள்ள லோகல் போர்டு ஆஸ்பத்திரியை எப்பொழுது சர்க்கார் எடுத்து நடத்த உத்தேசம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Local Fund Hospitals at Sirkali and Arantangi. The annual recurring expenditure on these institutions is about Rs. 54,950 and Rs. 9,000 respectively.

(*b*) The matter is under consideration of the Government.

SRI A. VEDARATHNAM : நன்னிலம் தாலூகா தலைநகர் ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்துக்கொள்வது பற்றிய ஆலோசனை எப்போது முடியும் ? அது எப்போது சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும் ? அதை விரைவில் எடுத்துக்கொள்ளும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தாலூகா தலைநகர ஆஸ்பத்திரிகள் மொத்தம் 28. அவைகளில் 24 சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டன. பாக்கியுள்ள நான்கும் அனேகமாக இந்த வருஷம் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படலாம். அந்த நான்கில் ஒன்று தான் நன்னிலம் தாலூகா தலைநகர ஆஸ்பத்திரி.

MR. SPEAKER : மணி பத்து ஆகப்போகிறது. இன்னும் 10 நிமிஷங்கள் எடுத்துக்கொண்டு எல்லாக் கேள்விகளையும் முடித்து விடலாம்.

Bus-worthy roads in Peruvalappur firka

* 425 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the length of the roads under the Public Works Department (Highways) in Peruvalappur firka in Lalgudi taluk, Tiruchirappalli district;

(*b*) the length of bus-worthy road in the said firka; and

(*c*) whether there is any proposal by the Government to lay at least one bus-worthy road right across the firka?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Thirty-one miles of District Board roads and 14 miles of Government road;

(*b*) None.

(*c*) No, Sir. The Second Five-Year Plan, however, provides for construction of bridge across two crossings in the Pullambadi, Sirugalappur-Padalur road, a Government road, to make it an all weather road. The work will be taken up in its due turn subject to availability of funds.

Valkaradu forests

*426 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா தேனி வால்காடு காட்டில் எத்தனை தடவை மரம் நடு விழா நடந்தது ?

(ஆ) அதற்காக எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Vanamahotsava was *not* celebrated in Valkaradu forests at any time.

(*b*) The question does not arise.

SRI N. R. THIAGARAJAN : அங்கே வனமஹோற்சவம் நடக்காவிட்டாலும், என் வீட்டிற்குப் பக்கத்தில் 7–8 தடவை மரங்கள் நடப்பட்டு அவை பட்டுப்போய்விட்டன என்பது எனக்குத் தெரியும். எந்த இடத்தில் எந்த மரத்தை வைத்தால் பட்டுப்போகாமல் வளரும் என்று பார்த்து அந்த அந்த இடங்களில் அந்த அந்த மரங்களை நடச் செய்வதற்குரிய உத்தரவை அரசாங்கத்தார் போடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் சற்று முன்பு குறிப்பிட்ட காட்டில் கூட 3,007 மரங்கள் பச்சையாக உயிரோடு இருக்கின்றன என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Multi-purpose School

* 427 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) செகண்டரி கல்விக் கமிஷனின் சிபாரிசுபடி ஒரு பலநோக்கப் பள்ளி (Multi-purpose School) ஏற்படுத்தப்படுமோ ?

(ஆ) அப்படியானால் எப்போது, எங்கே ? என்ன செலவில் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The scheme of opening diversified courses in Secondary schools has been in vogue from 1948–49.

(b) A statement [a] is laid on the table of the House.

SRI A. VEDARATHNAM : இதுவரையில் இந்த முறையில் நடத்தப்படும் பள்ளிகள் திருப்திகரமாக வேலை செய்திருக்கின்றனவா ? இது சம்பந்தமாக அரசாங்கத்தின் அபிப்பிராயம் என்ன ? திருப்திகரமாக இருந்திருந்தால், மற்றப் பள்ளிகளையும் பல நோக்கப்பள்ளிகளாக மாற்ற அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இவைகளை பல நோக்கப் பள்ளிகளாக மாற்றியதில் நல்ல பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சர்க்கார் கருதுகிறது. அடுத்த ஆண்டில் அவசியமான பணத்தை ஒதுக்கி எத்தனை பள்ளிகளை பல நோக்கப் பள்ளிகளாக மாற்றமுடியுமோ அத்தனை பள்ளிகளை பல நோக்கப் பள்ளிகளாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

Number of Doctors in the State

10 a.m. *428 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தற்போதைய சென்னை ராஜ்யத்தில் எத்தனை டாக்டர்கள் இருக்கிறார்கள் (ஜில்லாவாரியாக) ?

(ஆ) அவர்களில் எம். பி. பி. எஸ். எத்தனை பேர் ? எல். எம். அண்டு எஸ்., எல். எம். பி. எத்தனை பேர் (ஜில்லாவாரியாக) ?

(இ) சர்க்கார் சர்வீஸிலுள்ளவர்கள் எத்தனை பேர் (ஜில்லா வாரியாக ?

(ஈ) சொந்தத்தில் தொழில் நடத்துபவர்கள் எத்தனை பேர் (ஜில்லா வாரியாக) ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) to (d) A statement [b] is placed on the table of the House.

SRI N. R. THIAGARAJAN : இதில் பிரைவேட் பிராக்டிஸ் செய்யும் டாக்டர்களின் பெயர்கள் காணவில்லை. கிட்டத்தட்ட பதினாயிரம் டாக்டர்கள் அப்படி இருக்கவேண்டுமென்று தெரிகிறது. ஆகவே எல்லா டாக்டர்களின் பட்டியலையும் தயாரித்து டி.எம்.ஓ. கையில் அது இருப்பதுதான் நல்லது. ஆயிரம் பேர்களைக் கொன்றவன் அரை வைத்தியன் என்று சொல்வது போல், பல கம்பவுண்டர்கள் டாக்டர் என்று போர்டு போட்டுக் கொண்டு வைத்தியம் செய்து வருகிறார்கள். ஆகவே நான் குறிப்பிட்டது போன்று ஒரு பட்டியல், டாக்டர்களின் பட்டியலிலே தயாரித்து வைக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கம்பவுண்டர்கள் டாக்டர் என்று போர்ட் போட்டுக் கொண்டிருப்பதாக அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி போர்ட் போட்டுக் கொண்டிருக்கிற இரண்டு நபர்களைச் சொன்னால் போதும், நடவடிக்கைகள் எடுக்கலாம்.

(கனம் அங்கத்தினர் இன்னொரு கேள்வி கேட்க எழுந்தார்.)

MR. SPEAKER : இப்பொழுது ஒரு உப கேள்விக்குத்தான் சந்தர்ப்பம் கிடைக்கும். இல்லை கேள்வியை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று அங்கத்தினர் சொன்னால் நாளை எடுத்துக்கொள்ளலாம்.

Local Fund Hospital at Peralam

MR. S PEAKER : கனம் அங்கத்தினர் இடத்தில் இல்லாததால், 429-வது கேள்வியும் அதன் பதிலும் சட்டசபை நடவடிக்கைகளில் அச்சிடப்படும்.

---

a Printed as Appendix III on pages 164–172 infra.
b Printed as Appendix IV on page 172–173 infra.

*429 Q.—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலுக்கா பேரளத்திலுள்ள லோகல் பண்டு ஆஸ்பத்திரியை அரசாங்கமே எடுத்து நடத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI P. G. MANICKAM : கனம் சபாநாயகர் அவர்களே எனது
3 கேள்விகளையும் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

MR. SPEAKER : அப்படி எல்லாக் கேள்விகளையும் எடுத்துக் கொள்ளமுடியாது. எதற்கும், 430-வது கேள்வியை நாளை எடுத்துக் கொள்ளலாம்.

Lands for Harijans

*431 Q.—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any representation has been received from the Harijans of Chettipunyam, Chingleput taluk for the assignment of lands; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) Necessary action is being taken by the Revenue authorities to assign the lands to the Harijan applicants of the village.

Tamil Typewriters

*432 Q.—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஜில்லாக்களிலுள்ள சர்க்கார் காரியலாயங்களுக்கு எத்தனை தமிழ் டைப்ரைட்டிங் யந்திரங்கள் 1958-ம் வருஷத்தில் வாங்கப்படுவதற்காக ஆர்டர்கள் கொடுக்கப்பட்டன ?

(ஆ) எத்தனை டைப்ரைட்டிங் யந்திரங்கள் சப்ளை செய்யப்பட்டிருக்கின்றன ?

(இ) 1959-ம் வருஷத்தில் எத்தனை தமிழ் டைப்ரைட்டிங் யந்திரங்கள் வாங்கப்படுவதற்காக ஆர்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI V. RAMIAH : (அ) & (ஆ) During the financial year 1958–59, orders were placed for 600 Tamil Typewriters with standardised key board, out of which 100 have been supplied so far.

(இ) None, Sir, as it is too early to assess the requirements for 1959–60.

SRI P. G. MANICKAM : பாக்கியுள்ள டைப்ரைட்டிங் மெஷின்கள் எப்பொழுது வாங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI V. RAMIAH : 1958–59-ல் 600-க்கு ஆர்டர் கொடுத்திருக்கிறோம். அதில் 100 வந்துவிட்டது, இன்னும் 500 வரவேண்டும்.

[17th February 1959

Road facilities to Siruthalaikadu, Thiruthuraipoondi

*433 *Q*.—SRI A. VEDARATHNAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுகா, சிறுத்தலைகாடு கிராம மீன்பிடி தொழிலாளர்களிடமிருந்து ரோடு வசதி கோரி சமீபத்தில் விண்ணப்பம் வந்திருக்கிறதா ?

(ஆ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

:SRI A. VEDARATHNAM : இந்தக் கிராமம் வேதாரண்யத்தில் இருக்கிற 150 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள " ஸ்வாம்ப்-ன் " மத்தியில் இருப்பதால் கோடைகாலத்தில் கடல் ஜலமும், மழை காலத்தில் மழை ஜலமும் சேர்ந்து கொள்வதால் அங்குள்ள மக்கள் வெளியே வரமுடியாது ஒரு தீவில் இருப்பது போல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ரோடு வசதி செய்து கொடுக்க முன் வந்து அவர்களது கஷ்டங்கள் தீர்க்கப் படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அப்படிப்பட்ட வசதி வேண்டுமென்று கோரி இதுவரையிலும் ஒரு விண்ணப்பமும் வரவில்லை. அப்படி வந்தால் கூடுமான வரையில் அதில் கவனம் செலுத்தலாம்.

Appointment of more doctors and nurses in Government hospitals.

*434 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to appoint more doctors and nurses in Government hospitals with reference to the bed-strength therein?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

Government Ranee's Hospital, Pudukottai.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் இடத்தில் இல்லாததால் கேள்வியும் பதிலும் சட்டசபை நடவடிக்கைகளில் அச்சிடப்படும்.

* 435 *Q*.—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government propose to expand the Government Ranee's Hospital for Women and Children at Pudukottai;

(*b*) whether the Government have received a resolution from the Pudukottai Municipal Council requesting the Government to use the present Basic Training School building for the extension of this hospital; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) No, Sir.

(*c*) Does not arise.

17th February 1959]

Water-supply and drainage schemss

*436 Q.—SRI P. G. MANICKAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலே ஒவ்வொரு வருஷத்திலும் எந்தெந்த முனிசிபாலிடிகளிலும், பஞ்சாயத்துப் போர்டுகளிலும் water-supply and drainage-களை எடுத்து நடத்தப்படவேண்டுமென்று 1947-ல் நியமிக்கப்பட்ட water-supply and drainage committee யால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The water supply and drainage committee did not make any recommendation in the matter.

" Hard of Hearing Clinic "

* 437 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the steps taken to get the " Hard of Hearing Clinic " in the Government General Hospital, Madras, well equipped and well manned; and

(*b*) (i) the number of cases that have attended the clinic in 1957-58;

(ii) the number of cases for which fenestration was done in the above year; and

(iii) the number of cases for which surgical repair of drum was done in the same year?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) During the year 1958 the " Hard of Hearing Clinic " in the Government General Hospital, Madras had the following improvements :—

(i) A sound proof room has been constructed where the hearing is tested more accurately.

(ii) An operating microscope called ' Otoscope ' has been purchased and put into use.

(iii) A new audiometer has been ordered and is expected soon.

(iv) A post of Audiometrician has been sanctioned.

(v) A sectional library has been set up.

(*b*) 862, 12 and 21 respectively.

Government Tuberculosis Sanatorium at Tambaram.

* 438 *Q*.—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) how many patients are admitted on an average per month, in the Government Tuberculosis Sanatorium at Tambaram; and

(*b*) how many days, on an average a patient has to be on the waiting list before he gets admissions into the Sanatorium?

[17th February 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) About 130.

(*b*) Average waiting period for various categories of patients at present is as follows :—

Men for admission in the general wards—6 months.

Women for admission in the general ward—5 months.

Children for admission in the children ward—4 months.

MR. SPEAKER : Next question.

(Sri K. Vinayakam rose . . .)

MR. SPEAKER : I think the hon. Member would have heard me saying that I would allow only one question by way of supplementary by the hon. Member who has put the original question.

SRI K. VINAYAKAM : But, suppose the hon. Member declines in my favour?

MR. SPEAKER : In that case you may put a supplementary question.

SRI K. VINAYAKAM : I am thankful to you, Sir. Is the Hon. Minister aware of the fact that in more cases than one, the admission cards are sent to the patients when a most all of them have left this world to join the majority in the other world?

THE HON. SRI M. A. MANICKAVELU : The hon. Member is not exactly correct. But, in some cases it is so. (Laughter).

B.C.G. Vaccination

* 439 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the B.C.G. Vaccination Campaign is carried on in the State every year; and

(*b*) whether the Government are watching the effects on those persons B.C.G. vaccinated?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir. Any complication due to B.C.G. vaccination brought to notice is attended to then and there. The Director-General of Health Services, New Delhi, sends now and then assessment teams to follow the B.C.G. vaccination cases for the purpose of assessing the duration of allergy produced by B.C.G vaccination.

SRI N. K. PALANISAMI : அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு வருஷமும் பி.வி.ஜி. ஊசி போடப்பட்டவர்கள் பரிசீலனை செய்யப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவிலும், நீலகிரி ஜில்லாவிலும் இம்மாதிரி பதினாயிரக்கணக்கான பேர்களுக்கு ஊசி போடப்பட்டிருக்கிறது. ஊசி போடுவதோடு சரி. ஆனால் அதற்குப் பிறகு எந்தவிதமான பரிசோதனையும் செய்வதில்லை என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? மூன்று வருடங்கள் தொடர்ந்து பரிசோதனை செய்தால்தான் அது வெற்றியா, தோல்வியோ என்று கூறமுடியும்.

THE HON. SRI M. A. MANICKAVELU : I want notice, Sir.

17th February 1959]

Medical College for Tanjore district

* 440 Q.—SRI M. D. THIAGARAJA PILLAI : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) தஞ்சை ஜில்லாவில் வைத்தியக் கல்லூரி கட்டிடம் கட்ட மத்திய அரசாங்க கிராண்டுக்கு சென்னை அரசாங்கம் எழுதியிருக்கிறதா ?

(ஆ) எழுதியிருந்தால் எப்பொழுது எவ்வளவு தொகைக்கு ?

(இ) கல்லூரி கட்டிடம் ஆரம்பிப்பதற்கு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

(ஈ) இந்த கட்டிடங்கள் கட்டுவதற்கு ஜில்லா போர்டாரால் சென்னை அரசாங்கத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Yes, on 30th April 1958, for Central assistance on the approved pattern.

(*c*) The Chief Engineer, Public Works Department (General), is drawing up plans and estimates for the construction of buildings.

(*d*) Rs. 30 lakhs.

SRI A. VEDARATHNAM : மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த ஆஸ்பத்தரிக்கு எவ்வளவு உதவி கிடைக்கிறது ? தஞ்சை ஜில்லா போர்டிலிருந்து எவ்வளவு நிதி இதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: தஞ்சை ஜில்லாபோர்டிலிருந்து ஒதுக்கியதைப் பற்றி சொன்னேன். அவர்கள் ஒதுக்கியது, 30 லட்சம். மத்திய அரசாங்கத்திடம், " யூஷ்வல் பாட்டேர்ன் " பிரகாரம் கேட்டிருக்கிறோம். அதுபற்றிய விவரம் தெரியவில்லை. எவ்வளவு கொடுப்பார்கள், என்னனென்னவென்று தெரியவில்லை.

MR. SPEAKER : Questions are over.

[Note.—An asterc (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. STATEMENT BY THE HON MINISTER FOR LOCAL ADMINISTRATION.

MR. SPEAKER : The Hon. Minister for Local Administration will now make a statement with reference to the answer given to Question No. 12 on the 5th February 1959.

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Mr. Speaker, in reply to starred question No. 12 by Sri K. Sattanatha Karayalar, I stated on 5th February 1959 that fishing in river estuaries and reservoirs are regulated by issue of licences and by mesh regulations by the Fisheries Department. Destructive and sweep types of nets are prohibited from operation according to the mesh restrictions. Small sized fry and other fingerlings are not allowed to be captured and if captured, they are requested to be released back into the water. It has subsequently been found that the question purports to the measures taken by the Government to safeguard the lives of the fishermen who fish in river estuaries during high tide. In this connection, it may be stated that the tide in river estuaries during high tide will be about 3 feet higher than at normal times and it is not difficult for the fishermen to negotiate it. Further, during high tide there will be increased catches from the river estuaries and, so far, no unhappy incidents to fishermen or to their

[Srimathi Lourdhammal Simon] [17th February 1959

appliances have been reported to have occurred due to fishing operations. So, the question of preventing fishing in river estuaries during high tide does not arise.

MR. SPEAKER : The next item on the agenda is Government Bills.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I think there is a motion under rule 40 of the Assembly Rules.

MR. SPEAKER : Yes. But the hon. Member who has given notice of the same is absent. As nobody else can move it, I think we can take it up tomorrow. I think the Hon. Minister has no objection to it.

THE HON. SRI M. A. MANICKAVELU : The only thing is that the Minister will not be here tomorrow.

MR. SPEAKER : All right then. The hon. Member will miss the chance. But I cannot help it, because, nobody else can move it.

III. GOVERNMENT BILL.

THE MADRAS OPEN PLACES (PREVENTION OF DISFIGUREMENT) BILL, 1958 (L.C. BILL NO. 8 OF 1958).

10-10 p.m. * THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, I move—

" That the Madras Open Places (Prevention of Disfigurement) Bill, 1958 (L.C. Bill No. 8 of 1958) [a], as passed by the Council, be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா முன்பு இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டு ஒரு பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டது.

(Deputy Speaker in the Chair.)

அந்தப் பொறுக்குக் கமிட்டி ஒவ்வொரு பிரிவையும் நன்றாகப் பரிசீலனை செய்து சில திருத்தங்களை செய்திருக்கிறது. முக்கியமான திருத்தம் என்னவென்றால், மத சம்பந்தமான அபிப்பிராயங்களோ, அல்லது நடவடிக்கைகளோ, அல்லது சமூக சம்பந்தமான அபிப்பிராயங்களோ, அவைகளை மாற்றி அமைக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இம்மாதிரி விளம்பரங்கள் அமைக்கப்பட்டால் அதற்கு விதி விலக்கு வேண்டும் என்பது தான். இதை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் உணர்வார்கள்.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் ஆட்சேபகரமான விளம்பரங்கள் நகரங்களிலே முக்கியமாக சுவர்களில் ஒட்டப்படுகின்றன. அவைகள் நகரங்களின் அழகை கெடுப்பதோடு, வேறு வகையிலும் ஆட்சேபகரமான விளம்பரங்களாக இருக்கின்றன சில. ஆட்சேபகரம் என்றால், பலாத்காரத்தை தூண்டக்கூடியவை, பிறர் மனதை புண்படுத்தக் கூடியவை, ஆபாசமானவை என்ற மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். இம்மாதிரி விளம்பரங்களைப் போடுவது நகரத்தின் அழகை கெடுப்பதுமட்டுமல்ல, வேறு வகையிலும் அது நல்லது அல்ல என்பதை எல்லா அங்கத்தினர்களும் ஒப்புக் கொள்வார்கள். இதனால் விளம்பரம்

[a] Printed as Appendix V on pages 173-176 infra.

17th February 1959] [Sri M. Bhaktavatsalam]

செய்யபடுவது பாதிக்கப்படுமா, தவறான அபிப்பிராயங்கள், பிற்போக்கான அபிப்பிராயங்கள், கெட்ட அபிப்பிராயங்கள், கெட்ட பழக்க வழக்கங்கள் இவைகளையெல்லாம் மாற்றியமைக்கும் முயற்சி பாதிக்கப்படுமா என்று கேட்டால், அவ்வாறு எந்த விதத்திலும் பாதிக்கப்படாத வகையிலே தான் இந்த மசோதா அமைக்கப்பட்டிருக்கிறது.

பொறுக்கு கமிட்டியில் இருந்த சில அங்கத்தினர்கள்கூட இதற்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள். அவர்கள் இந்த மசோதாவே அவசியமில்லை, பொது ஜன அபிப்பிராயத்திற்கே இதை விட்டுவிடலாம், அது தானாகவே திருந்திவிடும் என்று சொல்லுகிறார்கள். தவறுதலான பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கு முடியாமல் போய்விடலாமே என்று சொல்லுகிறார்கள். அல்லது சினிமா போன்ற பல தொழில்கள் பாதிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள்.

(Mr. Speaker in the Chair.)

அத்தகைய அச்சம் ஏற்படுவதற்கு இடமே இல்லை. திருத்தப்பட்ட இந்த மசோதாவை நன்கு கவனிப்பவர்கள் அத்தகைய அச்சத்திற்கு இடமில்லை என்பதை நன்றாக உணர்வார்கள். இன்னும் சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபோல் இது நீண்ட காலமாக இருக்கக்கூடிய ஒரு குறை. அந்தக் குறையை அகற்றக்கூடிய வகையிலே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆபாசமான சுவர் ஒட்டிகளையும், ஆபாசமான விளம்பரங்களையும் தடுப்பதற்காகவே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆபாசமான காட்சிகளை காணக்கூடிய வகையிலே சில விளம்பரங்கள் அமைக்கப்படுகின்றன. சினிமா படங்கள் சென்ஸார் செய்யப்பட்டு அவைகள் ஒழுங்காக இருந்தாலும்கூட, உள்ளே காண்பதைவிட ஆபாசமான வகையிலே சில சமயங்களில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. சில பத்திரிகைகளில்கூட சில சமயங்களில் உள்ளே வருவது ஒன்றாக இருக்கும், மேலே கொட்டை எழுத்துக்களில் போடுவது வேறாக இருக்கும் என்பதைக் கூட சில அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டினார்கள். உள்ளே சென்ஸார் செய்யப்பட்டு ஒழுங்காக இருந்தால்கூட, வெளியே வசீகரம் ஏற்பட்டுவிடும் என்ற குறுகிய நோக்கத்தோடு மிகவும் ஆட்சேபகரமான, ஆபாசமான முறையில் சில சமயங்களில் சில விளம்பரங்கள் அமைக்கப்படுகின்றன. அம்மாதிரி விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். இந்த இழுக்கை நாம் சீக்கிரமாக அகற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மற்றொன்று, கட்டிடங்களின் சொந்தக்காரர்களை கேட்காமல் விளம்பரங்கள் சுவர்களில் ஒட்டப்படுகின்றன. சொந்தக்காரர்கள் அனுமதி இல்லாமல் அவர்களுடைய கட்டிடங்களின் சுவர்களில் விளம்பரங்கள் ஒட்டுவது சரியல்ல. இப்படியெல்லாம் வரம்பு கட்டினால் விளம்பரம் செய்வது பாதிக்கப்படுமா என்று ஒரு அபிப்பிராயம் கூறப்பட்டது. இதற்காகத் தான் நகரங்களிலே முக்கியமான இடங்களில் எங்கே விளம்பரம் செய்ய வேண்டுமென்பதற்காக " ஹோர்டிங்களை " ஏற்பாடு செய்ய வேண்டும், நகர சபை சட்டத்தை திருத்தும்பொழுது அம்மாதிரி " ஹோர்டிங்களை " ஏற்பாடு செய்யவேண்டுமென்பதாக ஒரு பிரிவை அதில் சேர்க்கவேண்டுமென்று யோசனை பொறுக்குக் கமிட்டியிலே தெரிவிக்கப்பட்டது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். மற்றொன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் துறையிலே கூட சில அபிப்பிராயங்கள் தெரிவிக்கவேண்டும், பிரசாரம் செய்யவேண்டுமென்றால், இந்த மசோதா குறுக்கே நிற்கும் என்ற அச்சத்திற்கு கொஞ்சம் கூட ஆதாரம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மசோதாவில் எது ஆட்சேபகரமானது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அந்த வகையிலே விளம்பரம் செய்கிறவர்கள் வியாபாரத்தை ஒட்டியிருந்தாலும், கலையை ஒட்டியிருந்தாலும், அரசியலை ஒட்டியிருந்தாலும், அவர்களுடைய லட்சியம்கூட நிறைவேறாது. அவர்களுடைய லட்சியம்கூட பாதிக்கப்படும். அந்த நாளடைவிலே அனுபவத்திலேயே அவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள். இன்று ஏதோ வசீகரம்

அளிக்கின்றது. வசீகரிக்கும் என்ற நோக்கத்தோடு ஒரு ஆபாசமான விளம்பரத்தை செய்தால், விளம்பரம் செய்தவர்களே அவ்வாறு விளம்பரம் செய்வது எவ்வித பலனையும் அளிக்காது என்பதை நாளடைவிலே உணர்வார்கள். ஆகவே, இந்த சீரிய நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை கனம் அங்கத்தினர்கள் ஆதரிப்பார்கள் என்று நம்பி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Open Places (Prevention of Disfigurement) Bill, 1958 (L.C. Bill No. 8 of 1958), as passed by the Council, be taken into consideration."

Sri S. M. Annamalai has given notice of an amendment.

SRI S. M. ANNAMALAI : I am not moving it.

MR. SPEAKER : All right. I was about to rule it out of order.

*SRI A. GOVINDASAMY : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் வன்மையாக எதிர்க்கிறேன். இந்த மசோதா அவசியம் இல்லாத ஒரு மசோதா என்று நான் கருதுகிறேன். நகரங்களின் அழகு கெடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு தனியார் தரப்பில் இருந்து மேல் சபையிலே கனம் அங்கத்தினர் பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த மசோதாவைக் கொண்டு வந்த நேரத்தில் அவர்களுடைய நோக்கம் நகரங்களின் அழகு கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், சினிமா விளம்பரங்கள் பெரியதாக இருக்கிற காரணத்தினாலே அதைப் பார்ப்பதற்கு ஜனக் கூட்டம் அதிகமாக சேர்ந்து, அதனால் வண்டிப் போக்குவரத்து தடைபடுகிறது. இதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் தேவை என்பதுதான். ஆனால், அரசாங்கம் அதை துணையாகக் கொண்டு, வேறு சில ஷரத்துக்களையும் சேர்த்து இங்கே ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் கொண்டு வந்த நோக்கம் வேறு, அரசாங்கம் அதை பயன்படுத்திக்கொண்டு, அதை சாக்காக வைத்துக்கொண்டு, இன்னும் சில ஷரத்துக்களை இம்மாதிரியாக சேர்த்து இங்கே இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நகரங்களின் அழகு கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றால், நாடு சுதந்திரம் அடைந்து 10, 11 ஆண்டுகள் கழிந்தும், அதற்காக அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன? ஸ்தல ஸ்தாபனம், பஞ்சாயத்து போர்டு, அல்லது சென்னை போன்ற பெரிய நகர சபைகளில் விளம்பரம் ஒட்டுவதற்கு ஆங்காங்கு (ஹோர்டிங்குகள்) ஏற்பாடுகள் செய்கின்றார்களா என்றால், எங்கேயோ ஒரு சில இடங்களில் அம்மாதிரி பலகைகள் இருக்கின்றனவே தவிர, தேவையான அளவுக்கு, அவசியமான அளவுக்கு, போதுமான அளவுக்கு ஏற்படுத்தப்படவில்லை. இந்த நிலைமைக்குக் காரணம், அதற்கான குற்றத்தையும் அரசாங்கத்தின் மீதுதான் சுமத்துகிறேன். ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இதனாலே வருமானம் வரக்கூடும். அம்மாதிரியாக விளம்பரங்களை ஒட்டுவதற்கு "ஹோர்டிங்குகளை" அமைத்திருக்க வேண்டும். அதைத்தான் செய்திருக்க வேண்டும். இந்த மசோதா முதலிலே இந்தச் சபையில் பிரேரேபித்த நேரத்தில், கவுன்சிலில் பிரேரேபித்த நேரத்தில் இதிலே ஒரு பிரிவு சேர்க்கப்பட்டிருந்தது. அதாவது, ஸ்தல ஸ்தாபனங்கள் "ஹோர்டிங்குகளை" ஏற்பாடு செய்யும்படியாக கேட்டுக்கொள்ளப்படும் என்பது தான் அந்த ஷரத்து. அந்த ஷரத்தை இப்பொழுது பொறுக்குக் கமிட்டியில் எடுத்துவிட்டார்கள். ஸ்தல ஸ்தாபன சட்டத்தை திருத்தும் பொழுது அதில் இம்மாதிரி ஒரு ஷரத்தை வேண்டிய இடத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்று இப்பொழுது சொல்லுகிறார்கள். அம்மாதிரி அந்தப் பிரிவை ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த மசோதாவை இப்பொழுது அவசரம் அவசரமாகக் கொண்டு வரவேண்டிய காரணம் என்னவென்று புரிய

வில்லை. நகரங்களின் அழகு கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றால், ஸ்தல ஸ்தாபனங்கள் "ஹோர்டிங்குகளை" தகுந்த இடங்களில் ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்வார்களேயானால், நகரங்களின் அழகு கெடாமல் பார்த்துக்கொள்ள உள்ளபடியே அவர்கள் வழிவகைகள் செய்ததாகக் கருதப்படும். நகரங்களின் அழகை பாதுகாக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, பிரசாரத்தையும், விடுதலை உணர்ச்சியையும் தடுக்கும் தீதான காரியத்தை இந்த மசோதா செய்கிறது. நோக்கம் அது அல்ல என்று சொன்னாலும், ஜனநாயக உரிமையை பாதுகாக்காத விளைவில் தான் அது கொண்டு போய் விடும் என்ற காரணத்தினால், இந்த மசோதா தேவையில்லை, அவசியமில்லை, தீதானது, தீமை பயக்கக்கூடியது என்று நான் கருதுகிறேன்.

அதிலும் சிறப்பாக எதிர்க்கட்சிக்காரர்கள் செய்யும் நல்ல பிரச்சாரங்களை 10-20
தடுக்கின்ற வகையில்தான் இந்த மசோதா அமைந்திருக்கிறது. ஆபா a.m.
சத்தை ஒழிக்கவோ அல்லது கெட்ட எண்ணங்களை தூண்டும் பிரச்சாரத்தை ஒழிக்கவோ இது பயன்படுமா என்கிற கேள்வியை எழுப்புகின்ற நேரத்தில் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள், நாங்கள் நல்ல பிரச்சாரங்களை எல்லாம் தடுப்பதற்காக இதை கொண்டு வரவில்லை, ஆபாசமான விளம்பரங்களை தடுப்பதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இம்மாதிரிப் பட்ட சுலோகங்கள், இம்மாதிரிப்பட்ட பிரச்சாரங்கள் எல்லாம் மற்ற நாடுகளில் அனுமதிக்கப்படவில்லையா என்று கேட்கிறேன். மற்ற நாடுகளில் எல்லாம் சுவரொட்டிகளுக்கு எல்லாம் அனுமதி கொடுக்கின்றபோது இந்த அரசாங்கம் மாத்திரம் இம்மாதிரிப்பட்ட விஷயங்களில் தலையிடுவானேன். அவசர அவசரமாக இந்த சட்டத்தைக் கொண்டு வருவானேன் என்பது தான் தெரியவில்லை. எல்லா காரியங்களுக்கும் அகில இந்திய ரீதியாக பேசும் இவர்கள் அகில இந்தியாவின் சபையாக இருக்கக்கூடிய பார்லிமெண்டில் கூட இத்தகைய ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்களா என்று பார்த்தால் அங்கேயும் கிடையாது, மற்ற நாடுகளிலும் கிடையாது, இந்த நிலையில் இந்த அரசாங்கம் மாத்திரம் இந்த சட்டத்தைக் கொண்டு வருவானேன்? ஆனால் இந்த சட்டத்தில் குறிப்பிட்டிருக்கின்ற பிரிவுகளின் பிரகாரம், பலாத்காரம், அநாகரீகமான பிரச்சாரங்கள் முதலியவைகளை தடுப்பதற்கும் ஆபாசமான விளம்பரங்களை தடுப்பதற்கும் இந்த சட்டம் கொண்டு வரப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆனால் ஏற்கனவே இந்த அரசாங்கத்தின் கையில் இவைகளை எல்லாம் தடுப்பதற்கு இந்தியன் பீனல் கோடின்படி நல்ல பாதுகாப்பை வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தியன் பீனல் கோடிலிருக்கும் 295-ஏ பிரிவின் பிரகாரம் இவைகளை எல்லாம் தடுக்க முடியும். மதத் துவேஷங்களை பரப்புவதை தடுப்பதற்கு இந்தியன் பீனல் கோடில் இருக்கின்ற 295-ஏ என்கிற பிரிவே போதுமானது. அதோடு வயலன்ஸ், அதாவது பலாத்காரம், அதே போன்று மிஸ்சீப் காரியங்களை பரப்புவதை தடுப்பதற்கும் 425-வது பிரிவின்படி நடவடிக்கை எடுக்கலாம் அதே போன்றுதான் ஆட்சேபகரமான காரியங்களை தடுப்பதற்கு, 292-வது பிரகாரம் நடவடிக்கை எடுக்கலாம் என்றிருக்கிறது. இந்த சட்டங்களையெல்லாம் கையில் வைத்துக்கொண்டு இப்போது ஏன் இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. இன்றைய தினம் உண்மையிலே, பத்திரிகையில் வருகின்ற விளம்பரங்கள், கார்ட்டூன்கள் இவைகளை எல்லாம் இந்த அரசாங்கம் அனுமதிக்கின்றது. ஆனால் அவ்விதம் பிரசுரிக்கப்படும் கார்ட்டூன்களை வெட்டி எடுத்து வேறு பிரதி எடுத்து அச்சிட்டு சுவரொட்டிகளாக ஒட்டினால்மட்டும் குற்றமாகிவிடுகிறது. இதை அரசாங்கம் மறுத்துவிட முடியாது. நமது போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களை போலிஸ்காரர் வேஷத்தில் போட்டு சில பத்திரிகைகள் கார்ட்டூன்களாக வருகின்ற நேரத்தில் அதைப் பார்க்கின்ற அமைச்சர் அவர்கள் அல்லது அமைச்சர் அவர்களது ஆட்கள் புண்படுகின்ற நேரத்தில் இதன் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு ஒன்றும் கிடையாது. ஆனால் அதை சுவற்றில் ஒட்டினால் மாத்திரம் குற்றமாக கருதப்படுகிறது. இந்த சட்டத்தின் மூலம்

மதவாதிகளுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. அதே நேரத்தில் மதத்தின் பேரில் நம்பிக்கையில்லாத மக்கள் பெரும்பகுதியினர் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த சட்டத்தின் மூலம் அரசாங்கம் என்ன பாதுகாப்பு கொடுத்திருக்கின்றது என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு மதத்தைத் துவேஷிக்கக்கூடியவர்கள் வெட்டுவேன், குத்துவேன் என்றெல்லாம் சுவரொட்டிகள் மூலமாகவும் சுலோகங்கள் மூலமாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டதற்கு எல்லாம் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்று கேட்கிறேன். நேர்மாறாக அவர்களுக்கு தகுந்த பாதுகாப்புதான் கொடுத்தது. இந்தச் சட்டத்தை பொது நோக்கத்தோடுதான் நிறைவேற்றியிருக்கிறோம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், இதில் சொல்லப்பட்டிருக்கும் பிரிவுகளை பார்க்கும்போது இதன் மூலம் ஒரு சாராருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகதத்தான் இச்சட்டம் கொண்டு வரப்
10-00 a.m. பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை நான் மிக வன்மையாக கண்டித்து சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். இந்த நிலைமையில் வியாபாரத் துறையிலும் சரி, கலைத் துறையிலும் சரி, சினிமாத் துறையிலும் சரி, சரியான முறையில் விளம்பரங்களை செய்வதற்கு முடியவில்லையானால் நிச்சயமாக அதிலுள்ள முன்னேற்றம் தடைபடும் என்பதில் சந்தேகமில்லை. இன்றைக்கு சினிமா மீது யாருக்கும் வெறுப்பு கிடையாது, அதிலும் ஆளும் கட்சிக்கு வெறுப்பே இருக்க முடியாது என்பதற்கு அவர்களது சமீப கால நிகழ்ச்சிகளே சான்றாகும். இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ், அகில இந்திய காங்கிரஸ் கூட்டங்களுக்குகூட அதிகமான கூட்டம் வருவதற்காக சினிமாக்காரர்களைதான் அழைத்து வருகிறார்கள். இதற்கும் விளம்பரம் இல்லாமல் முடியாது. இதில் யாரும் ஆத்திரப்படுவதற்கு இடமில்லை. காங்கிரஸ் கூட்டங்களுக்கு எல்லாம் அதிகமாக கூட்டம் கூடுவதற்காக சினிமாக்காரர்களை வைத்துத்தான் நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள். (இச்சமயத்தில் ஸ்ரீ எஸ். லாஸர் அவர்கள் தமது இருப்பிடத்தில் இருந்து எழுந்திருந்தார்). கனம் லாஸர் அவர்கள் கொஞ்சம் பொறுமையோடு இருந்து கேட்பார்களானால் என்னால் சொல்ல முடியும், சமீபத்தில் நடந்த தமிழ்நாட்டு காங்கிரஸ் மகாநாட்டுக்கு சிவாஜி கணேசன் போன்ற பிரபல சினிமாக்காரர்களை கொண்டு வந்தார்கள். இதற்காக பெரிய பெரிய போஸ்டர்கள் எல்லாம் ஒட்டப்பட்டிருந்ததை நாம் எல்லோரும் அறிவோம். இதற்கெல்லாம் விளம்பரங்கள் இல்லாமல் இருந்தால் அதிகமாக கூட்டம் வந்திருக்க முடியாது.

SRI S. LAZAR: Sir on a point of order நாம் இப்போது விவாதிக்கக்கூடிய மசோதாவில் சினிமாவைப்பற்றி எதுவுமே கிடையாது. அப்படி இருக்கும்போது கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த மசோதா சினிமாக்காரர்களை மிகவும் தாக்குகின்றதுபோலவும், இவர்கள் அதற்காக பரிந்து பேசுவது போலவும் பேசுகின்றார்கள்........ will be in order because we are on a different Bill which has nothing to do with cinemas or film exhibitions.

MR. SPEAKER: I think Mr. Govindasamy apprehends that this Bill may affect putting up of very big advertisements with regard to cinemas. That is his fear and he is entitled to express it. It is not out of order, though it may be irrelevant.

SRI A. GOVINDASAMY: தலைவர் அவர்களே, உங்களுடைய விளக்கத்திற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவினால் கலைத்துறைக்கோ அல்லது சினிமாத் துறைக்கோ எந்த விதமான பாதகமும் ஏற்பட்டு விடாது என்று அமைச்சர் அவர்கள் கருத்தை தெரிவித்திருந்தார்கள். அதைக் குறித்துத்தான் நான் சொன்னேன். சமீபத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாட்டில் சினிமா நட்சத்திரங்களான சிவாஜி கணேசன் போன்றவர்களை கொண்டு பங்கு கொள்ள செய்துதான் அங்கு மகாநாடு கூட்ட முடிந்தது. ஆகவே இந்த மசோதாவினால் ஆளும் கட்சிக்குக்கூட பாதகம் ஏற்படும் என்பதைத்

தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு வெளிநாட்டிலிருந்து பெரிய தலைவர்கள் எல்லாம் நம் நாட்டுககு வருகிறார்கள். சமீபத்தில் "டிட்டோ" போன்றவர்கள், எடின்பரோ மன்னர் போன்றவர்கள் நம் நாட்டுக்கு வரும்போது அவர்களின் வருகையை பெரிய விளம்பரங்கள் மூலம் தான் மக்களுக்கு அறிவிக்க முடிந்தது. ஆகவே இம்மாதிரிப்பட்ட சந்தர்ப்பங்களில் விளம்பரங்கள் தேவை என்பதை அரசாங்கம் மறுக்க முடியாது. ஆகவே இம்மாதிரிப்பட்ட சந்தர்ப்பங்களில் பொதுக்கூட்டம் நடத்துவது என்றால் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு மட்டுமல்ல ஆளும் கட்சியினருக்கும் பெரிய பாதகமாகத்தான் வந்து சேரும் என்பதை குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக எதிர்கட்சிக்காரர்களுக்கு இதனால் பெரிய பாதகம் ஏற்படும் என்பதை அரசாங்கம் உண்மையிலேயே உணர்ந்துதான் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு என்ன முறையை கையாளுவது? துண்டு பிரசுரங்கள், நோட்டீஸ் மூலம் விளம்பரம் செய்வது என்றால் எல்லா மக்களுக்கும் அறிவிக்க முடியாது, அதற்கு வேண்டிய வசதியும் இருக்காது. ஆகவே சுவரொட்டிகள் (வால் போஸ்டர்) மூலம்தான் விளம்பரம் செய்யமுடியும். இம்மாதிரிப்பட்ட 500 சுவரொட்டிகள் ஒட்ட வேண்டுமென்றால் அதற்கெல்லாம் அனுமதி பெற்றுத்தான் ஒட்ட வேண்டிய நிலையில் இருக்கிறது. ஒரு சுவரொட்டிக்கு ஒரு ரூபாய் என்று சுவர் சொந்தக்காரர் கேட்பதாக இருந்தால் 500 ரூபாய் கொடுத்துதான் இந்த சுவரொட்டிகளை ஒட்ட முடியும். இது முடியாத காரியமாகும். மேலும் இந்த சட்டம் ஆபாசமான விளம்பரங்களை தடுப்பதற்கு ஆட்சேபகரமான விளம்பரங்களை தடுப்பதற்கும் வேண்டிதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரி ஆட்சேபகரமான விளம்பரங்கள், ஆபாசமான விளம்பரங்கள் செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை இதன் மூலம் விதிப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. தண்டனை 1,000 ரூபாய் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு ஒரு வருட சிறை தண்டனையும் கொடுப்பதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஆபாசம் என்று அரசாங்கம் எதை கருதுகிறது என்று தெரியவில்லை. அந்தவிதத்தில் பார்த்தால் இன்றைக்கு பல வீடுகளிலும் கிருஷ்ண லீலா படம் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் இருக்கின்ற காட்சிகள் எல்லாம் ஆபாசமில்லையா? அதை பார்க்கின்ற வாலபர்கள், யுவதிகள் கெட்டுவிடமாட்டார்களா என்று கேட்கிறேன். மத துவேஷம் செய்யக்கூடிய விளம்பரங்கள் செய்யக்கூடாது என்று சொல்லுகின்ற நேரத்தில் "கண்ணப்பர்" சினிமா பற்றிய படத்தில் சிவலிங்கத்தைக்காட்டி அதன் மேல் கால் வைத்து மிதிப்பது போன்ற காட்சி காட்டப்படுகிறது. இவையெல்லாம் மத துவேஷம் போன்று கருதப்படலாகாதா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே இதில் போடப்பட்டிருக்கிற படம் என்ன என்பதை பார்க்காமல் யார் போட்டிருக்கிறார்கள் என்பதை பார்த்துதான் நடவடிக்கை எடுப்பார்களோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. மேலும் இந்தக் குற்றத்தை செய்பவர்களுக்கு தண்டனை விதிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வித்ம் கூறப்படுவதில் இந்த குற்றத்தை யார் உண்மையாக செய்திருந்தாலும் சுவரொட்டிகள் முதலியவைகளை ஒட்டுகின்றவர் 10-30 a.m.
களுக்கு தண்டனை கொடுக்கவும் இந்த ஷரத்தில் இடம் வைத்திருக்கிறார்கள். யாரோ செய்கிற குற்றத்திற்காக இவர்களுக்குத் தண்டனை கொடுக்கிறார்கள். அந்தச் சுவர் லைசென்ஸ் பெற்ற சுவரா இல்லையா என்று தெரியாமல் கூலிக்காரர்களும், சிறுவர்களும் அதிலே ஒட்டிவிட்டால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை. இப்படித் தெரியாமல் ஒட்டிவிட்டால், அது எந்தக் கட்சிக் கூட்டம், எந்தக கட்சிக்காரர்கள் செய்திருக்கிறார்கள் என்று அவர்களுக்கும் தண்டனை கொடுக்க இடமிருக்கிறது. இப்படியில்லாமல் இருப்பதற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று பார்க்கும்போது இந்தச் சட்டம் தேவையில்லை—அவசியமில்லை—என்று கூறவிரும்புகிறேன்.

"ஜூபிக்" என்று சொன்னால் குற்றம் என்று கொண்டு "அறியாமை [illegible], அறிவு [illegible]" என்று சொல்லும்போது "[illegible]" என்று வரு

கிறது என்று அவர்கள் மேல் கேஸ் போட்டு, கோர்ட்டுக்குப் போகும்போது அங்கே திறமையான வழக்கறிஞர்களை வைத்து, வாதாடித் தான் அந்தக் குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ளக் கூடிய நிலைமை ஏற்படும். இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், இதனால் பிரசாரமோ, விளம்பரமோ பாதிக்காது என்று. இங்கே அந்த மாதிரி விவாதித்தாலும் ஒவ்வொரு கோர்ட்டுக்கும் அமைச்சர் அவர்கள் சாட்சியாக உடன் வரமுடியுமா ? கொடுத்திருக்கக் கூடிய விதி விலக்கைப் பார்த்தாலும், அமைச்சர் அவர்கள் சொல்லுகிற சமாதானத்தைப் பார்த்தாலும், வழக்குத் தொடருகின்றவர்களுடைய மனப்பான்மையைப் பொறுத்துத்தான் இது இருக்கும் இந்த நிலைமையிலே இந்தச் சட்டம் தேவையில்லை என்றுதான் நான் சொல்லுகிறேன்.

ஆபாசமான பழக்கங்களைத் தடுத்து மக்கள் மனதில் மாற்றத்தைச் செய்ய பிரசாரம் செய்வதற்கு வழிவகைகள் செய்யக்கூடும். ஆனால் அவைகளைச் செய்ய அரசாங்கம் தயாராயில்லை. அவைகளின் மீது கவனம் செலுத்தாது, இத்தகைய ஒரு சட்டத்தை யாரையோ ஒடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்குச் சுவரிலே "ஸ்லோகன்" கள் எழுதுகிறார்கள். பெருத்த அளவில் பிரசாரத்திற்கு உபயோகப்படக்கூடியது சுவரிலே "ஸ்லோகன்கள்" எழுதுவதாகும். புத்தகம் படிக்காதவர்கள் சுவற்றிலே இருப்பதை மற்றவர்கள் பார்த்து, அவர்களிடமிருந்து கேட்டு அதனுடைய கருத்தை புரிந்துகொண்டு தங்கள் மனதை மாற்றிக்கொள்ள வசதியுள்ளதாக இருக்கிறது.

பட்டாளத்தைத் தூண்டிவிடக் கூடிய நிலையிலோ அல்லது போலீஸ்காரர்களைத் தூண்டிவிடக்கூடிய நிலையிலோ இருந்தால் அதற்கும் தண்டனை இருக்கிறது இந்தச் சட்டத்திலே. பட்டாளத்திலே ஆட்கள் சேர வேண்டாம், பட்டாளத்திற்குப் பணம் கொடுக்கவேண்டாம் என்று சொன்னவர்கள் காங்கிரஸ்காரர்கள். யாராவது பட்டாளத்தையோ, போலீஸ்காரர்களையோ தூண்டி விடுவார்களா ? இதற்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று போட்டிருப்பதானது, அவர்களுடைய பழங்கால சரித்திரம்தான் இதற்கு இடம் கொடுத்திருக்கிறது என்று இங்கே நான் வலியுறுத்திக் கூறாமல் இருக்க முடியாது.

இந்தியாவிலிருக்கிற ஒரு பகுதியார் இன்னொரு பகுதியார் மீது கோபத்தை உண்டாக்கக் கூடிய முறையில்—ஆத்திரத்தை மூட்டக் கூடிய முறையில்—இருக்கக்கூடாது என்று ஒரு ஷரத்து இருக்கிறது. "வடநாட்டுச் சுரண்டல் ஒழிக" என்று சொல்லும்போது, வட நாட்டுச் சுரண்டல் தான் ஒழிய வேண்டுமென்று சொல்லப்படுகிறதே தவிர, வடநாட்டுக்காரர்களே ஒழிய வேண்டுமென்று சொல்லப்படுவதல்ல. அதையும் வடநாட்டுக்காரர்கள் ஒழிய வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று நினைத்து—கோபத்தை தூண்டுகிறார்கள் என்று நினைத்து—அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, வழக்கு தொடரக் கூடும். அங்கேயும் நல்ல—சிறந்த—வழக்கறிஞர்களை வைத்து—அவர்களின் துணை கொண்டு—வட நாட்டுச் சுரண்டலைத்தான் ஒழிக்கவேண்டுமென்று சொன்னோமே தவிர, வட நாட்டுக்காரர்களை ஒழிக்க வேண்டுமென்று சொல்லவில்லை என்று நிரூபித்து தப்பித்துக்கொண்டு வர நேரிடும். வட நாட்டுச் சுரண்டலை இது அனுமதிக்கிறதா என்று கேட்கிறேன். இதற்கெல்லாம் பாதுகாப்பு கொடுக்காத நிலையில், எதையோ மனதில் வைத்துக் கொண்டு—மதத்தை துவேஷிக்கிறார்கள்—மதத்தில் இருக்கிற ஆபாசத்தை எடுத்துச் சொல்லுகிறார்கள்—அதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, "வட நாடு, தென்னாடு" என்று பேசுகிறார்கள், அதைத் தடுக்க வேண்டும் என்ற நிலையிலே இந்தச் சட்டம் வருகிறது என்று அஞ்சுகிறேன். மதவாதிகளின் மனது புண்படக்கூடாது என்று இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. நான் சொல்லுகிறேன், ஒரு போஸ்டரில் "குழந்தைக்கு பாலில்லை, தயிரில்லை, தேனில்லை—பாலையும், தேனையும், தயிரையும் பாழாக்குவானேன்" என்று போட்டால், அபிஷேகம் செய்வதை மனதில் கொண்டு மதவாதிகள் செய்வதைக் கண்டிக்கிறான் என்று அதன் காரணமாக அவன் மீது நடவடிக்கை எடுத்து அவனுக்குத்

தண்டனை. குழந்தைக்குப் பாலில்லை, தயிரில்லை, மருந்துக்குக்கூட தேன் இல்லை என்று இருக்கும்போது ஏராளமாக வீண் செலவு செய்வதை—மூடப்பழக்கத்தில் நம்பிக்கை வைத்துச் செய்வதை—இந்த ரேஷனலிஸ்டிக் வியூஸ் உள்ளவர்கள் பிரசாரம் செய்வதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்று நான் கண்டிக்கிறேன். ஒரு கரண்டி எண்ணைக்கு வசதியில்லாத நேரத்தில், டின் டின்னாக குடம் குடமாக—எண்ணையையும், நெய்யையும் போட்டு எறிக்கிறீர்களே, குழந்தையின் தலைக்குத் தடவக்கூட எண்ணையில்லாதபோது எண்ணையையும், நெய்யையும் எறிப்பானேன் என்று கேட்டால், திருவண்ணாமலையை மனதில் வைத்துக்கொண்டு தான் இம்மாதிரி எழுதியிருக்கிறார்கள் என்று அவர்கள் மீது நடவடிக்கை சட்டம் உறுதுணையாக இருக்கிறதேயல்லாது, மூடநம்பிக்கையை அகற்றவேண்டுமென்று சொல்லிப் பிரசாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு இந்தச் சட்டம் எந்த வழியில் வசதி செய்து கொடுத்திருக்கிறது என்று கேட்கிறேன்.

அரசாங்கம் எடுத்துக் கொண்டு நடத்தும் எல்லா திட்டங்களுக்கும் விளம்பரம் தேவைப்படுகிறது. எல்லாவற்றிற்கும் அரசாங்கம்...........

MR. SPEAKER : The hon. Member has already taken more than fifteen minutes. He is only repeating what he has said.

SRI A. GOVINDASAMY : I want five minutes more. I am on a different point now.

நான் இன்னும் சில நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். அரசாங்கம் விளம்பரத்திற்கென்றே ஒரு இலாகாவை வைத்திருக்கிறார்கள். அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுகிறோம் என்று படம் போடுகிறார்கள். எங்கே என்ன நடந்தாலும் அதற்குச் சில போஸ்டர்களைப் போடுகிறார்கள், கைத்தறி வாரமாக இருந்தாலும், சிறு சேமிப்பு நிதியாக இருந்தாலும், அதற்குச் சினிமாக்காரர்களின் துணை—தயவு—தேவையாக இருக்கிறது. அவர்கள் மனது புண்படுமாகையால், பகுத்தறிவுப் பிரசாரத்திற்கு இது தடையாக இருக்குமாதலால், எதிர்க் கட்சிகளை ஒடுக்குவதாக இருக்கும் என்ற காரணத்தினால் இந்தச் சட்டத்தைக் கைவிடவேண்டும்—இது தேவையில்லை—என்று கூறி நான் முடித்துக் கொள்கிறேன்.

* SRI T. SAMPATH : Mr. Speaker, I welcome this Bill. There has been a long-felt need for an enactment of this nature. Disfigurement of public places, public buildings, schools, temple walls, etc., by writing slogans and objectionable and obscene matters has become quite common. These writings have reached very undesirable proportions in recent years. Particularly, boys and girls of impressionable age are spoiled by such advertisements. Indecent and scurrilous writings in public places and roads and on private buildings have been resorted to very freely. Some of these are intended for blackmail purposes alone. Objectionable advertisements and slogans and writings intended to wound the religious feelings of the people have tremendously increased. They incite class hatred and communal hatred. Such acts have sometimes led to very unpleasant consequences. These acts are considered as anti-social acts in Western countries and very heavy penalties have been provided for such offences. I am glad that the Government have taken up this question at least now and have come forward to put down such acts by means of this legislation. My Friend, Mr. Govindaswamy in his minute of dissent has stated that the existing provisions in the Indian Penal Code—Sections 292, 295-A and 425—are quite adequate. With great respect, I wish to say that

I differ from him. The existing provisions in the Indian Penal Code are not adequate for realising the objects of the Bill. The scope and provisions of this Bill are quite different. He also apprehended that this Bill was intended to stifle political parties. It is not so because Explanation 'A' says: 'Expressing disapprobation or criticism of any law or of any policy or administrative action of the Government with a view to obtain its alteration or redress by lawful means' shall not be deemed to be objectionable.

10-40 a.m. As regards the complaint that this Bill will hit hard the cinema advertisements and business people, I do not think there is any force in such a complaint. As long as the advertisement is not objectionable and as long as the propaganda of any political party is not intended for the purpose of inciting any person to resort to violence or sabotage, the provisions contained in the Bill would not apply to such propaganda.

I am glad, Sir, that the Bill covers effigies also. The Select Committee has amended the provision. We know that effigies of top leaders are sometimes made and are openly dragged in the streets and burnt even. Hon. Members know what an atrocious act it is. I am therefore glad that the Government have made provision to prevent such occurrence.

Then, I come to the preamble portion. I welcome the changes made therein. The words 'objectionable or unauthorized' have been added. That is the answer to the point made by my hon. Friend Sri A. Govindasamy. The changes are quite necessary.

Coming to the explanation under sub-clause (b), scope is given to express or criticise or bring in social reform or justice but at the same time it says that an advertisement would not be deemed to be objectionable merely because it criticises any social or religious practices without malicious intention and with an honest view to promote social or religious reform or social justice. According to me I feel it would be very difficult to judge the intention of the offender. It may give a loophole, which the offending person is likely to take advantage of. This in my view would take away by one hand what is given by the other hand, particularly the words 'malicious intention' would enable the offenders to escape. Likewise in the definition clause, under item (iv) the words 'deliberately intended' would cause some difficulty. It would be difficult to make a distinction between honest intention and deliberate intention. It would be very difficult to prove deliberate intention. So it would be better if the word 'deliberately' is deleted. In the same clause which covers other advertisement there is no provision for posters and advertisements relating to inciting communal hatred and communal feeling. I would in this connection like to draw the attention of the Hon. Minister to an amendment that I have given notice of namely; after the word 'or', include the words, 'creates communal hatred.'

I am glad, Sir, that the offences committed under this Act are made cognisable offences and I am sure it will have a very salutary effect. With these remarks I support the Bill.

Sri V. K. KRISHNAMURTHY: அவைத் தலைவர் அவர்களே, மாமன்றத்தில் விளங்குகின்ற இம் மசோதாவை முழு மனதுடன் ஆதரித்து வரவேற்று, விரைவில் சமுதாயம் பலனடைவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சிறந்த நம் தமிழ்ச் சமுதாயம், சிறந்த முறையிலிருப்பதிலிருந்து சரிந்திருப்பதற்குக் காரணம் விளம்பரங்களின் பெயரால் வர்க்கப் பகைமை இனப் பகைமை, மொழிப் பகைமை, மதப் பகைமை இன்னும் ஆபாசங்கள், ஒழுங்கீனங்கள் இன்னபிறவெல்லாம் மலைபோல் வளர்ந்து கொண்டிருக்கின்றன. தலைசிறந்த தமிழகத்தை எண்ணிப் பார்க்கும்பொழுது அறப்பழங் காலத்தில் எந்தத் துறவிகள், எந்த ஞானிகள் எவைகளைக் கண்டித்தார்களோ அவைகள் அத்தனையும் இந்த நாட்டில் விளங்குகின்றன.

தமிழகத்திற்கு சாத்திரத்தைப் படைத்த திருமூலர்:

" பார்க்கின்ற மாதரைப் பாராதகன்று போய்
ஓர்க்கின்ற உள்ளம் உருக அழல்மூட்டி
பார்க்கின்ற கண்ணை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே "

என்று குறிப்பிடுகிறார். அந்த முறையிலே பார்க்கும்போது எந்த ஒழுங்கீனத்திற்கு ஆபாசத்திற்கு சமுதாயத்தை அழைத்துக்கொண்டு செல்வதற்கு—கதைகள், உரையாடல்கள், கலையின் பெயரால், நாகரீகத்தின் பெயரால் முன்னேற்றத்தின் பெயரால், விளம்பரங்கள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. இத்தகைய கொடுமைகளால் சமுதாயமே சரிந்துவிடும் சமுதாயமே அழிந்துவிடும் என்று வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு தலைசிறந்த நாடு. அறம்—ஒழுக்கம் இருக்கவேண்டும் என்று தொல்காப்பியர் காலம் முதல் இக்கால ஞானிகள் வரை கூறியிருத்தல் வெள்ளிடைமலை. இந்நாடு சிறந்த முறையில் இருக்கவேண்டுமென்றால் அறம்—கற்பு—ஒழுக்கம் முதலியவைகளைக் கொண்டு விளங்கின் தலைசிறந்த நாடாக இருக்கும். கலையின் பெயரால், மொழியின் பெயரால், நாகரீகத்தின் பெயரால் தமிழ் மக்கள் சிறந்தவர்கள்—உயர்ந்தவர்கள் என்றாலும்கூட மனிதன் மனிதப் பண்புடன் வாழும் நிலையில் நம் தமிழ் சமுதாயம் இல்லை.

தமிழகத்திற்குத் தோத்திரத்தைப் படைத்த மாணிக்கவாசகர்:

" கச்சற நிமிர்ந்து, கதிர்த்து, முன்ப ணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து, புடை பரந்து
ஈர்கிடைபோகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்தும் "

என்று கூறி ஈராயிரமாண்டுகளுக்கு முன்னால் சமுதாயத்தை வேசியர்—விலைமாதர்—பரத்தையர்—பதியிலார் ஒழுக்கக் குறைவுடைய நடத்தையால் கெடுத்ததைக் கூறி அக் கொடுமையினின்று சமுதாயம் விலகி மீண்டும் நல்ல சமுதாயமாகப் படைக்கப்பட வேண்டுமென்று அவர் கண்ணீர் சிந்தியிருக்கிறார்.

அண்மையில் தோன்றிய இராமலிங்க அடிகளார் சமுதாயம் சரிந்து சிதைந்து—ஒழுக்கமின்மையால் தாழ்ந்த நிலைக்கு சென்றிருந்ததை உற்று நோக்கி உள்ளம் வெதும்பி

" ......மெய்யுறக் காட்ட வெருவி, வெண்துகிலால்
மெய்யெலாம் ஐயகோ மறைத்தேன் "

என்று கூறியுள்ளார். ஆணைப் பிறந்த அடிகளார் தன் உடலைக் காட்டக் கூடாதென்று நினைத்து வெள்ளாடை உடுத்தினார். சமுதாயம் எந்த அளவில் வீழ்ச்சியுற்றிருந்திருத்தல் வேண்டுமென்பதைக் கூறத் தேவையில்லை. என்றாலும் இன்றைய நிலையைப் பார்க்கும்போது கதையின் பெயரால்—கலையின் பெயரால்—உரையாடல் பெயரால் இன்னபிற [illegible]

வற்றின் பெயரால் தமிழ்நாட்டுப் பண்பு பாழாகியிருக்கிறது; தமிழ்நாடு கறைபடுத்தப்பட்டிருக்கிறது; மதம் பற்றியவர்கள் மதம் பற்ருத காரணத்தால், சீர்திருத்தப் போர்வையில் மதத்திற்கு ஊறு செய்யும் வகையில் ஏற்றவாறு திறுத்திக் கூறுமியல்புடையோருக்களவே இல்லை. தலைசிறந்த சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்ற இம்மசோதாவை வேறுபட்ட கட்சியோ—மாறுபட்ட கட்சியோ—கூறுபட்ட கட்சியோ—எப்படி இருப்பினும் ஒன்றுபட்டு பிரிவினை இன்றி ஆதரித்து வரவேற்பதைக் கைவிட்டு எதிர்க்க முன்வந்திருப்பதை எண்ணும்பொழுது இல்லாத ஒன்றுக்குத் திரித்துக் கூறி தன் எண்ணத்திற்கு ஏற்றவாறு நிறம்பூசும் இயல்பை ஷேக்ஸ்பியர் மிகச் சிறந்த முறையிலே சித்தரிக்கிருர்:

"Men may construe things after their fashion clean from the purpose of the things themselves".

எத்தகைய நல்ல திட்டம் வந்தாலும் அதை அறவே விடுத்துப் புறம்பான முறையில் திரித்து பகுத்தறிவின் பெயரால் பகரும் இயல்பு கனம் திரு. கோவிந்தசாமி அவர்களிடமிருத்தல் கண்கூடு. சேக்கிழார் படைத்த பேரிலக்கியத்தை இழிவுபடுத்த இயம்பியது வருந்துதற்குரியது. தலைசிறந்த கண்ணப்பர் ஒரு கண் இழந்து அடுத்த கண்ணைப் பிடுங்க முனையும் பொழுது இட அடையாளத்திற்கு காலைத் தவிர பிறிதொன்றையும் வைக்க முடியாததால் இதை தனக்கேற்றவாறு திரித்துக் கூறியதைப் பார்க்கையில் இவர் எந்த நூலைப் பயின்ருர் என்று கேட்க விரும்புகின்றேன். இன்மை வாதத்தைப் பரப்ப கண் இழந்த உயரிய நல்ல நிலையை சமயத்திற்கு விரோதம் என்று கூறுகிருர். இருண்டவர்கள் மருண்ட கொள்கையைக் கூறும்பொழுது சமுதாயத்தை வாழவைக்கும் இறைநெறியைக் குறைவாகப் பேசுவது சைவத்திற்கு இழுக்காகும். மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருதத்தை அரசியலில் பிணைத்து பாவக் கடலைத் தோற்றுவித்து அறங்கடந்த செயலைப் புரிந்து வருவதைத் தொடர்பில்லாத இம் மசோதாவுடன் பிணைத்து பொருந்தா முறையில் கூறுமியல்புக்கு வருந்தாமலிருக்கவில்லை; அவர் எந்த அளவு மதத்தை எதிர்த்துப் பேசவேண்டுமோ அந்த அளவுக்குத் தொடர்பின்றியே பகர்ந்துள்ளார். அவர் கூற்றுக்கும் மசோதாவிற்கும் தொடர்பில்லை என்ருலுங் கூட தான் எதை நினைக்கிருரோ அதைத் திருத்திக் கூறுகிருர். சமுதாயத்தைச் சீர்குலைப்பதற்காக, சீர்திருத்தத்தின் பெயரால் மதத்தை வன்மையாக எதிர்த்தார் என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழ் நாட்டின் தரம் இப்பொழுது தாழ்ந்து விட்டது. தமிழ் நாட்டின் உயர்வு ஊறுபட்டிருக்கிறது; தமிழ் நாட்டின் பண்பு புண்பட்டிருக்கிறது; தமிழ் நாட்டின் கலை கறைபட்டிருக்கிறது; தமிழ் நாட்டின் நாகரீகம் நலிவுற்றிருக்கிறது; இளைஞர்கள் காவியங்களைப் படிக்கும்போது பொருளுணர்ந்த பிறகு மனதில் பதிகிறது; ஆனால் ஓவியத்தைப் பார்த்த மாத்திரத்தில், ஆராய்ச்சி இல்லாமல் உடனே திடீரென்று ஓவியத்தின் தன்மை எதைக் குறிக்கிறதோ அது திடீரென்று பற்றிவிடும். ஆகையால் ஓவியம் அன்பையும்—அமைதியையும்—அருளையும் ஊட்டக் கூடிய முறையில் படைக்கப்பட்டிருக்குமானுல் இந்த மசோதா வந்திருக்க வேண்டியதில்லை. சமுதாயம் சிறந்த முறையில் இருக்கவேண்டும் என்பதற்காகவே இம் மசோதா வந்திருக்கிறதென்று கூறுவதோடல்லாமல் அரசியல் கட்சிகளை அடக்கவோ—ஒடுக்கவோ வரவில்லை.

கருவி கரணங்களை ஒடுக்கி புலனை அடக்கி கட்டமைந்த ஒழுக்கத்திற்கு அடிகோலும் இறைநெறிக் கொள்கைகளை விளக்கும் தெய்வ நூல்களைப் பழிக்கவே சீர்திருத்தத்தின் பெயரால்—பகுத்தறிவின் பெயரால்—முன்னேற்றத்தின் பெயரால்—கலையின் பெயரால் விளங்கும் விளம்பரங்களை—உரையாடல்களை—ஆபாசக் கற்பனைகளை அறவே அகற்றி மாசு எய்திய சமுதாயத்தை மாண்புற வைக்கவே இம்மசோதா வந்துள்ளது. ஏனையோரும் இம் மசோதாவை ஆதரிக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விளம்பரத்தின் பெயரால் வருமானம் கிடைக்குமென்று கனம் திரு. கோவிந்தசாமி அவர்கள் கூறியது மிகவும் வியப்பாக இருக்கிறது. அறநூலாம் திருக்குறள் பிறந்த தமிழகத்தில் அழக்கொண்ட பொருளும்; அறங்கடந்த பொருளும் தேவையில்லை என்று தெரிவித்துக்கொண்டு காலங் கடத்தாமல் கடிதில் இம் மசோதாவைச் சட்டமாக்கி கட்டமைந்த ஒழுக்கத்தை சமுதாயத்தில் பரப்பி சிறந்த சமுதாயத்தைப் படைக்க விரைவில் ஆவன புரியுமாறு அமைச்சரைப் பணிவன்புடன் கேட்டுக் கொண்டு இம்மசோதாவை வரவேற்று ஆதரிக்கிறேன். வணக்கம்.

10 50 a.m.

SRI V. K. KOTHANDARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, விகாரப்படுத்துவதை தடுப்பதற்கு வேண்டி கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை, மசோதா என்று சொல்லக்கூடிய விகார மசோதாவை, நான் மனதார வரவேற்காமல் எதிர்த்து பேசக்கூடிய நிலைமையில் இருக்கிறேன். காரணம் மதாபிமானிகளை புண்படுத்துவதாகவும், அப்படிப் புண்படுத்துவதைத் தடுக்க வேண்டுமென்கின்ற பெயரால் இது போன்ற பலாத்காரத்தை தூண்டக்கூடிய விளம்பரங்கள் வருமேயானுல் அதைத் தடுப்பதற்காகவும் வேண்டி இப்படிப்பட்ட ஒரு மசோதா, மசோதா என்கிற பெயரால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆபாசமாக, விகாரமான விளம்பரங்களைத் தடுப்பதற்காகவும் இதைக் கொண்டு வருவதாகச் சொல்லுகிருர்கள். இதைக் கொண்டு வருகிற நேரத்தில் இதற்கு முன்னதாக அவைகளைத் தடுப்பதற்கு சட்டம் இல்லையா என்பதைப் பார்க்கும்போது பல சட்டங்கள் இருக்கின்றன. இது போன்ற சட்டங்கள் இருக்கின்ற காரணத்தால்தான் கட்டிடங்களின் பேரில் "Stick No Bills" என்று ஒட்டுகிருர்கள். அப்படி ஒட்டப்பட்டிருக்கிற சுவர்களில் எந்த விதமான விளம்பரமும் செய்யப்படுவது இல்லை. போஸ்டர்களும் ஒட்டப்படுவது இல்லை. ஆகவே இது போன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்டங்கள் இருந்தபோதிலும்கூட இந்த நேரத்தில் இதைப்போன்ற தனியான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதன் நோக்கம் என்ன என்பதைப்பற்றி என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்படி புரிந்துகொள்ள முடியாத நிலையிலும் இருக்கிறேன்.

இது போன்ற சட்டங்கள் கொண்டு வருவதற்கு இதற்கு முன்பு இது போன்ற சட்டங்கள் கொண்டு வரவேண்டும் என்று ஏதாவது கிளர்ச்சிகள் நடந்தனவா அல்லது ஏதாவது மகஜர்கள் வந்தனவா அல்லது ஏதாவது லெட்டர்கள் வந்தனவா என்று பார்த்தால் எந்த விதமான மகஜர்களும் லெட்டர்களும் வந்ததாகத் தெரியவில்லை. கிளர்ச்சிகள் நடந்ததாகவும் தெரியவில்லை. இன்றைக்கு மக்கள் பலவிதமான சட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிருர்கள். அப்படிப்பட்ட சட்டங்களை இன்னும் கொண்டு வரவில்லை. அவற்றுக்கெல்லாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியவைகளுக்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனுல் மத சம்பந்தமானவைகளை தடுக்க புண்படுத்தக்கூடிய அளவில் இருக்கக் கூடியவைகளை தடுக்க இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் நான் என்ன நினைக்கிறேன் என்ருல் இந்தச் சட்டத்தின் மூலமாகத்தான் ஜாதி மத பூசல்களையும், சண்டைகளையும் மேலும் அதிகப்படுத்தக்கூடிய அளவில் போகும் என்றே நினைக்கிறேன். அமைதியாக இருக்கக்கூடிய இந்த நேரத்தில் பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய அளவில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று கருத வேண்டியதாக இருக்கிறது. பலாத்காரத்தில் ஈடுபடக்கூடிய அளவில் சர்க்காரே நடவடிக்கைகளில் ஈடுபடப்போகிருர்களா? அந்த அடிப்படையில் அதற்கு முன் கூட்டியே தடுத்துக்கொள்வதற்காக இது போன்ற சட்டத்தைக் கொண்டு வருகிருர்களா என்பதை அறிய விரும்புகிறேன். அந்த முறையில்தான் நினைக்க வேண்டியதாக இருக்கிறது.

விளம்பரம் இல்லாமல் எந்த வியாபாரமும் நடைபெருது. விளம்பரம் இல்லாமல் எந்த அரசியல் கட்சியும் நடைபெருது. மதருஸ் சிட்டியில்

பார்த்தால் அரசியல் கட்சிகள் பெரிய வால் போஸ்டர்களை ஒட்டியிருப்பதைப் பார்க்கலாம். மந்திரிகள் பெயரால் போடப்பட்ட பல விளம்பரங்களையும் பார்க்கலாம். மந்திரிகள் கலந்து கொள்ளக்கூடிய பல கூட்டங்களை விளம்பரப்படுத்தக்கூடிய போஸ்டர்களையும் பார்க்கலாம். அதே போன்று ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் விளம்பரங்கள் தேவையாக இருக்கின்றன. இது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதனால் இது போன்ற சட்டங்களைக் கொண்டு வருவதானது அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமையை பிடுங்குவதாக ஆகிறது. அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய முதல் நடவடிக்கையாக இருக்கிறது. அரசியல் கட்சிகள் போதுமான அளவில் விளம்பரங்களை செய்யக் கூடாது, போதுமான கூட்டங்கள் கூட்டி அவர்களுடைய கருத்துக்களை சொல்லக்கூடாது என்பதற்காக கொண்டு வரப்படுவதாக இருக்கிறது. இன்றைக்கு பேச்சு உரிமை, எழுத்து உரிமை எல்லாம் கொடுக்கப்பட்டிருப்பதை இதன் மூலம் எடுத்து விடுவதாக ஆகிறது. ரேஷன் சிஸ்டம் என்ற அடிப்படையில் மூன்று மணி நேரம்தான் பேச வேண்டும், அதற்கு மேல் பேசக்கூடாது என்கிற நிலைமையிலும், ஒலிபெருக்கி வைப்பதற்கு அனுமதி வேண்டும் என்றும், ஏற்கெனவே அதை இலவசமாக உபயோகப்படுத்தலாம் என்று இருந்தது, அதற்குக் கட்டணம் இப்பொழுது கட்ட வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. மக்களுடைய உரிமையை முழுக்க முழுக்கப் பறிக்காவிட்டாலும் அரைகுறையாகப் பறிக்கப்பட்டு வருகிறது. முன்பு இலவசமாக ஒலி பெருக்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று இருந்தது இப்பொழுது காசு கொடுத்து லைசென்சு வாங்கி வைக்க வேண்டும் என்று இருக்கிறது. எங்கு அதிகாரிகள் இருக்கிறார்களோ அங்கு அவர்களைத் தேடிச் சென்று லைசென்சு வாங்கி வரவேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்த குறைகளைப் பார்த்தால் அரசியல் கட்சிகள் வளரக் கூடாது என்கிற நோக்கத்துடன் பல காரியங்களைச் செய்து வருவதாகத் தோன்றுகிறது. ஆகவே இது போன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது என்று சொன்னால் அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்காக இது முதல் ரூபத்தில் வருகிறதோ என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் அதன் முடிவு எதில் கொண்டு போய் விடும் என்று தெரியவில்லை. இதற்கு ஒரு பழமொழி கூட சொல்லுவார்கள். "தோலைக்கடிச்சு, துருத்தியைக் கடிச்சு, ஆட்டைக்கடிச்சு, மாட்டைக் கடிச்சு மனிதனைக் கடித்தது" என்று சொல்வதுபோல் இதன் முடிவு எதில் கொண்டு போய் விடும் என்பது தெரியவில்லை. இப்படி படிப்படியாகப் போவதற்கு இந்தச் சட்டம் முதல் படியாக இருக்குமோ என்று அச்சப்பட வேண்டியதாக இருக்கிறது. கடைசியில் அரசியல் கட்சிகள் சட்ட விரோதமானது என்று சொல்வதற்கு ஒரு நிலைமை ஏற்பட்டு விடுமோ என்று கூட தோன்றுகிறது. ஆகவே இந்த நேரத்தில் இது போன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியமே கிடையாது. ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டங்கள் மூலமாக, இந்தச் சட்டத்தினால் எடுக்கலாம் என்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு வசதி இருக்கிறது. அதனால் இந்தச் சட்டம் கொண்டு வருவதை நான் எதிர்க்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு சட்டம் வேண்டும் என்று பொது மக்கள் கிளர்ச்சி செய்யவில்லை மகஜர்கள் அனுப்பவில்லை, லெட்டர்கள் எழுதப்படவில்லை. எந்தெந்த சட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று மக்கள் கிளர்ச்சி செய்கிறார்களோ, மகஜர் அனுப்புகிறார்களோ லெட்டர்கள் எழுதுகிறார்களோ அப்படிப்பட்ட சட்டங்களைத்தான் கொண்டு வரவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமேயொழிய இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வரவேண்டாம் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: கனம் சபாநாயகர் அவர்களே, சென்னையிலுள்ள வெளியிடங்களை விகாரப்படுத்துவதைத் தடுக்க இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளோம். இதைப்பற்றி பேசும்போது எதிர் கட்சி அங்கத்தினர் ஒருவர் "அது ஒரு விகார மசோதா" என்று

குறிப்பிட்டார். இது விகார மசோதா அல்ல. விகாரத்தைச் செய்கிறவர்களை விகாரமான விளம்பரங்களை ஒட்டுகிறவர்களைத் தடுப்பதற்கு கொண்டு வந்துள்ள மசோதா இது. இந்த மசோதாவை சரியாக படித்துப் பார்த்திருந்தால் இது நன்றாகத் தெரிந்திருக்கும், புரிந்திருக்கும். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதனால் பேச்சு உரிமையையும் எழுத்து உரிமையையும் தடுக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார். இந்த உலகத்திலுள்ள ஜனநாயக நாடுகளில் நம்முடைய நாடு எவ்வளவோ முன்னடைந்து நிற்கிறது. மக்களுக்கு எவ்வளவு உரிமை கொடுக்கப்படவேண்டுமோ, அவ்வளவு உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த உரிமைகளை யார் பயன்படுத்திக்கொள்ளுகிறார்களோ அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் நாங்கள் பத்து வருஷங்கள் பார்த்துக்கொண்டிருந்தோம். கொடுக்கப்பட்ட உரிமைகள் நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்று. நல்ல மக்கள் கொடுக்கப்பட்ட உரிமைகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுவார்கள். நாகரீகமான மக்கள் கொடுக்கப்பட்ட உரிமைகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுவார்கள். அப்படி பயன்படுத்திக்கொள்ளவில்லையானால்தான் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளை சரியானபடி பயன்படுத்திக்கொண்டிருந்தால் இப்படிப்பட்ட சட்டங்கள் வந்திருக்காது. கொடுக்கப்பட்ட உரிமைகளை ஒழுங்கான முறையில் பயன்படுத்திக்கொள்ளாமல் இருந்ததின் காரணத்தினால்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்தால் நாகரீகத்தை நல்ல முறையில் காப்பாற்ற முடியும். அந்தக் காரணத்தினால்தான் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள் அரசாங்கத்தார்.

நாகரீகத்திற்கு விளக்கம் கொடுத்த பல அறிஞர்கள், பல பெரியவர்கள் எல்லோரும் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் பிறரைப் புண்படுத்தாமல் இருக்க எதை எதைச் செய்யவேண்டுமோ அதுதான் நாகரீகத்தின் செயல் என்று கூறினார்கள். அதை ஆங்கிலத்தில் கூட சொல்லுவார்கள்.

"**A gentleman is one who does not inflict pain on others**" என்று கூறினார்கள். ஒரு நாகரிக மனிதன் என்றால் மற்றவனை எந்த வகையிலும் நோக வைக்கக் கூடாது. அவன்தான் நாகரீக மனிதன் என்று கருதப்படும். வள்ளுவனுடைய வாக்கைப் பார்த்தாலும் என்னசொல்லியிருக்கிறார் என்றால்,

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்",

என்று கூறியிருக்கிறார். எந்த துறையில் எந்த முறையில் எந்த வகையில் புண்படுத்தாமல் நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். விளம்பரம் செய்யும்போது எவ்வளவோ உணர்ச்சி வசப்பட்டு பேசுகிறார்கள். அவர்களை இப்பொழுது கண்டிக்க முடியாது. நல்ல முறையில், நியாயமான முறையில் நடந்துகொண்டால் அவர்களை அரசாங்கம் தண்டிக்காது. நியாயமான முறையில் விளம்பரங்கள் செய்தாலும் அரசாங்கம் எந்த விதமான தண்டனையும் கொடுக்காது. சட்டபூர்வமாக நடந்துகொண்டால் எந்த விதமான தண்டனையும் கிடையாது என்பது சட்டத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. சட்டத்திற்குப் புறம்பாக நடந்துகொள்ளுகிறவர்களை கண்டிப்பாக தண்டிக்க வேண்டியதுதான். ஒழுங்கான முறையில் நடந்துகொண்டால் அவர்களுக்கு வேண்டிய உரிமைகள் கொடுக்கப்படும். அதற்கு வேண்டிய ஷரத்தும் அந்தச் சட்டத்தில் போடப்பட்டிருக்கிறது. ஒன்று அவர்களுக்கு இது புரியாமல் இருந்திருக்கலாம். அல்லது புரிந்துகொண்டிருந்தும் அதைச் சொல்லாமல் இருந்திருக்கலாம். புரிந்துகொண்டிருந்தாலும் அந்த எண்ணத்தை வெளியில் காட்டிக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். எப்படிப்பட்ட உரிமை கொடுக்கப்படும் என்பது இந்தச் சட்டத்திலேயே அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஷரத்து எக்ஸ்ப்ளனேஷன் முதலாவது பிரிவைப் பார்த்தால் அது நன்றாகத் தெரியும்.

11 00 a.m. அந்த முறையிலே கொடுக்கப்பட்ட உரிமையை பாழாக்கக் கூடிய வகையில் " நாலடியார்கள் " தோன்ற ஆரம்பித்துவிட்டார்கள். நம்முடைய தமிழகத்தில் நாலடியார் நூலில் " ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி " என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சுவர்களிலே இப்பொழுது எழுதப்படும் நாலடிகளால் சொல்லுக்கு உறுதி ஏற்படாது. எவ்வளவுதான் அரசாங்கத்தை இந்த " நாலடியார்கள் " கீழ்த்தரமாகத் தாக்கினாலும் கூட, மக்கள் கவலைப்படுவதில்லை. மக்கள் அவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டார்கள். ஆபாச உணர்ச்சிகளை வெளிப்படுத்த சுவர்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். பழைய " நாலடியார் " நல்லதைக் கொடுத்தது.. இந்த " நாலடியார் "களோ, மக்களை நாசப்படுத்துகிறது. நரம்பு இல்லாத நாக்கு எதை வேண்டுமானாலும் எழுதும். யார் நம்மைக் கேட்கப்போவது என்ற காரணத்தினால் அவர்கள் இஷ்டப்படி எழுதிவருகிறார்கள். கேட்கப் பயந்து கொண்டிருந்த காரணத்தினால்தான் கவலைப்படாமல் எழுதினார்கள். நம் நாட்டைச் சுற்றிப் பார்க்க வெளி நாடுகளிலிருந்து வருபவர்கள்—ஏன் நம் நாட்டிலேயே இருக்கக் கூடிய நல்லவர்கள் அதைப் பார்க்க நேரிட்டால் நம்முடைய நாட்டுப் பண்பைப் பற்றி என்ன நினைப்பார்கள். இதைப் பற்றிப் பல கோடி மகஜர்கள், பல மனுக்கள் அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வீட்டை அழகாகச் சுண்ணாம்பு அடித்து வைத்திருந்தால் இந்த " நாலடியார்கள் " சுவற்றிலே எழுதிவிட்டுப் போய்விடுகிறார்கள். வேறு எதிலும் எழுதினால் கலைந்துவிடும் என்று கருதி, கலைத்தாலும் போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தாரினால் எழுதுகிறார்கள். பொதுவாக இளைய பிள்ளைகள்தான் இதைச் செய்கிறார்கள். சில அரசியல் கட்சிக்காரர்கள் இந்த மாதிரி இளைஞர்களைத் தூண்டிவிடுகிறார்கள். இந்த இளைய பிள்ளைகளை நல்ல பாதையில் நடத்துவது நம்முடைய பொறுப்பு. இந்தச் சுவர் சுலோகங்களை எழுதுபவர்கள் படித்தவர்களாக இருப்பதில்லை. பெரியவர்கள் எழுதித் தருகின்ற வாசகத்தை இவர்கள் சுவற்றிலே எழுதுகிறார்கள். சுலோகத்தின் கருத்து என்னவென்றே புரியாது. ஆகவே இளைஞர்களை நல்ல பாதையில் நடத்த இந்தச் சட்டம் மிகவும் துணை புரியும். இந்தச் சட்டம் மிகவும் போற்றத்தக்கது. பல்லாயிரம் ரூபாய் போட்டுக் கட்டியிருக்கிற வீடுகளின் சுவர்களை இவர்கள் பாழ்படுத்துகிறார்கள்.. எத்தனையோ சொந்தக்காரர்கள் இதைப் பற்றி மனுக்கள் அனுப்பி இருக்கிறார்கள். " இதை நிறுத்த உங்களுக்குச் சக்தி இல்லையா ?" என்று கேட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை இப்பொழுதாவது கொண்டுவந்தது மிக மிக நல்லது என்று கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின் மூன்றாவது ஷரத்தின்படி பார்த்தால் " ஒருவர் சுவரிலே எழுதினார் என்பதை ருசுப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது " என்று இருக்கிறது. தங்களுடைய சம்மதத்தின்பேரில் கொடுத்திருப்பவர்களானால், அந்தச் சம்மதம் வாங்கப்பட்டதா ? இல்லையா ? என்பதும் காட்டப்பட வேண்டும். ஆகையால் திடீரென்று எந்த முறையிலாவது உள்ளே தள்ளிவிட வேண்டுமென்று அரசாங்கம் சர்வாதிகாரம் ஏற்படுத்த முன்வரவில்லை. " இந்தியன் பினல் கோடு இருக்கிறது. அதிலே இதை தடுப்பதற்கேற்ற ஷரத்துக்கள் இருக்கின்றன. இந்த மாதிரி சட்டம் ஏன் கொண்டுவர வேண்டும் ?" என்று கேட்கிறார்கள். " இந்தியன் பினல் கோடு " சட்டத்தில் போடப்பட்டிருக்கக்கூடிய ஷரத்துக்களில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. என்னென்ன முறையில் கேஸைத் தயார் செய்தாலும், நல்ல முறையிலே " எவிடன்ஸ் " இருந்தாலும் " **obscene matters** " என்று சொல்லி தள்ளுபடி செய்துவிடுகிறார்கள். இப்படி இருப்பதால் எத்தனையோ ஆபாசமான பத்திரிகைகள் நம்முடைய நாட்டில் உலவிக்கொண்டு வருகின்றன. ஆகவே இதைப் போல ஒரு சட்டம் மிகமிக அவசியம் என்று கூற விரும்புகிறேன்.

" கண்ணப்ப நாயனார் லிங்கத்தைக் காலால் உதைத்தாரே, அது ஆபாசம் இல்லையா ? " என்று ஒரு அங்கத்தினர் பேசும்போது குறிப்பிட்டார். கண்ணப்ப நாயனாருக்கு இருந்த உள்ளத்தைப் பற்றி மக்களுக்குத் தெரியாமலில்லை. நன்றாகத் தெரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அன்பு

உள்ளம் கொண்டவர்களுக்கு கண்ணப்ப நாயனாரின் அன்பு உள்ளம் தெரிந்தது. ஆனால் இங்கு பேசியவர் உள்ளத்தில் ஆபாச உணர்ச்சி எழுந்திருக்கிறது என்பதை மக்கள் நன்றாக உணர்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : On a point of order, Sir, இங்கே பேசுகின்ற அங்கத்தினர் அவர்கள் ஏற்கனவே பேசிய ஒரு அங்கத்தினருடைய உள்ளம் ஆபாசமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். நேரடியாக ஒரு அங்கத்தினரை அவமதிக்கக்கூடிய மாதிரி பேசுவதற்கு இந்த மன்றத்தில் இடம் அளிக்கலாமா ?

MR. SPEAKER : I uphold the point of order raised by the hon. Member, Sri Anbazhagan. I would request the hon. Member, Srimathi Anandanayaki not to cast aspersions on any hon. Member of this House. The words ' ஆபாச உணர்ச்சி ' are objectionable.

SRIMATHI T. N. ANANDANAYAKI : அதை கீழ்த்தரமாகச் சொன்னேன் என்று நினைக்கவேண்டாம்.

MR. SPEAKER : I rule that those words are not parliamentary.

SRIMATHI T. N. ANANDANAYAKI : I bow to your ruling and withdraw those words. அந்த முறையிலே, அந்த உள்ள எழுச்சியையும் இந்த உள்ள வெறுப்பையும் வைத்துக்கொண்டு எது ஆபாசம் என்று கண்டுபிடிக்க முடியும். சினிமாப் படங்கள் சில கீழ்த்தரமான உணர்ச்சிகளை எழுப்பிவிடுகிறது. இந்த மாதிரி ஆபாசங்களை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று மாதர் சங்கங்களிலிருந்தெல்லாம் தீர்மானங்கள் போடப்பட்டு அரசாங்கத்துக்கு வந்திருக்கின்றன. இத்தகைய தீர்மானங்களை எல்லாம் வாங்கி வைத்துக்கொண்டு, எத்தனையோ ஆண்டு காலமாக நன்றாகச் சிந்தித்துப் பார்த்து பிறகுதான் இப்பொழுது சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதேயொழிய, திடீரென்று அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துவிடவில்லை. பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் வளர்க்கப் பயன்படும் இந்தச் சட்டத்தை எல்லோரும் எங்களோடு சேர்ந்து, ஒத்து வரவேற்று இருக்கவேண்டும். மக்களைப் பண்படுத்துவதற்காகக் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தைக் குறித்து வேண்டாத உணர்ச்சியைப் பரப்புவது மிகத் தவறு என்ற காரணத்தினால் எல்லாக் கட்சிகளும் ஒன்றாக தமிழ் மாண்பைக் காக்கும் இந்தச் சட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

(Sri V. K. Kothandaraman in the Chair.)

SRI V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது எல்லாக் கட்சியினராலும், எல்லா வகுப்பினராலும் வரவேற்கப் படவேண்டிய ஒரு மசோதா என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைப் பற்றிச் சொல்லும்போது கனம் கோவிந்தசாமி அவர்கள் " இது எதிர்கட்சிகளின் பிரச்சாரத்தைப் பெரும் அளவில் தடை செய்து விடும் ; சினிமாக்காரர்கள் விளம்பரம் செய்வதைப் பாதித்து விடும் " என்று கண்ணீர் வடித்தார்கள். உண்மையில் இந்த மசோதா பூராவையும் படித்திருந்தால் அது போன்ற ஒரு வாதத்திற்கு இடம் இல்லை என்பதை நன்றாக உணர்ந்துகொள்ள முடியும். கட்சிப் பிரசாரங்கள் சரியான முறையில், நன்றாக இருக்கவேண்டுமென்ற காரணத்தினால்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அத்துடன் இதில் எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்திற்கும் பூரண பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த விதமான ஒழுங்கான கட்சிப் பிரசாரத்தையும் தடை செய்வதாக இல்லை என்பது இந்தச் சட்டத்தைப் பூரணமாகப் படித்தவர்களுக்கு இது நன்கு விளங்கும். ஒரு மதத்திலே அவருக்கு நம்பிக்கை இல்லையென்றால் அதைக் கைக் கொள்ளக் கூடாது என்று சொல்லலாம். ஆனால் பிற மதத்தினரை அவமதிக்கும் முறையில், துவேஷிக்கும் முறையில் பேசினால் இந்த

மசோதா அதைக் கட்டுப்படுத்த உதவுகிறது. வகுப்பு வாதத்தை எடுத்துக் கொண்டால் வித்தியாசங்கள் இருக்கக்கூடாது என்று பிரசாரம் செய்வதை கண்டிப்பாக இந்தச் சட்டம் தடை செய்யவில்லை. ஆனால் அதே சமயத்தில் வகுப்பு துவேஷத்தை வளர்க்க வேண்டுமென்று ஒருவன் பிரசாரம் செய்தால் இந்த மசோதா தடை செய்யும் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. இன்றைக்குப் பலவித ஆபாச குணங்கள் பொருந்திய விளம்பரங்களை நாம் பார்க்கிறோம். இந்த முறையில் ரொம்பக் கண்டிப்பாக இதையெல்லாம் வரையறை செய்யவேண்டும். உண்மையிலேயே தவறாக இருந்தால் அதை எடுத்துக் காட்டுவதற்குப் பல முறைகள் இருக்க வேண்டுமென்றே கிளர்ச்சி என்று சொல்லிக்கொண்டு நியாயமில்லாத தன்மையில் செய்யப் படுகிற காரியங்களைத் தடை செய்தாகவேண்டும். நியாயமான கிளர்ச்சிகளை அவர்கள் நடத்தட்டும். நியாயமற்ற செயல்களைச் செய்யும்போது அதை நாம் தடுக்கவேண்டும். இதை என் ஆட்சேபிக்கவேண்டும் என்று கேட் கிறேன்.

அதே சமயத்தில் இன்னொரு வாதம் சொன்னார்கள். பட்டாளத்தில் சேரவேண்டாம் என்று அப்போது காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்ய வில்லையா என்றார்கள். இது ராணுவக் கட்டுப்பாட்டுக்கு முரண்பட்ட செயல், இதைச் சொன்ன காங்கிரஸ்காரர்கள் அப்படிச் சொன்னதன் பலனை அனுபவிக்கவும் தயாராய் இருந்தார்கள். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யப் போகும்போது அதனால் ஏற்படும் விளைவை—தண்டனையை— ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கவேண்டுமேயொழிய அதைவிட்டு அதற்கும் நாங்கள் தயாராய் இல்லை என்கிற ரீதியில் இந்தச் சட்டத்தை மாற்றும்படிச் சொல்லக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக பலவிதமான ஆபாசச் சுவரொட்டிகளைப் பார்க்கிறோம். ஆபாசப் படங்கள் அடிக்கடி பத்திரிகையில் வருகின்றன. சினிமாப் பெண் களை எல்லாம் ஆபாசமான முறையில் சித்தரிக்கிறார்கள். இதையெல்லாம் தடுக்காமல் விட்டுவிட வேண்டுமென்றால்—இவைகள் நம்முடைய நாகரீகத்திற்கு அழிவு தேடவில்லையா என்று கேட்கிறேன். இப்படி பத்திரிகையில் வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று ஒரு கேள்வி கேட்டபோது அதற்குப் பதில் அளிக்கும் வகையில் அதற்கும் ஒரு தனி மசோதா கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். சீக்கிரத்தில் அதையும் கொண்டுவர வேண்டியது அவசியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த மசோதாவில் வேண்டுமென்றே மதச் சம்பந்த மாக பிறர் மனம் புண்படும்படியாகச் செய்யப்படுகிற காரியங்கள் செய் தாலும் குற்றம் என்று வருகிறது. அதோடு ஆட்சேபகரமான விளம்பரங் கள் என்பதில் **clause 2 (b) (IV)**-ல் '**is deliberately intended to outrage the religious feelings on any class of the citizens of India by insultidg or blaspheming or profaning the religion or the religious beliefs of that class**' என்று இருக்கிறது. இதற்கு வியாக்கியானம் கொடுக்கப்படுகிற இடத்தில் **Explantion** (2) வேண்டுமென்றே இந்தக் காரியத்தைச் செய்தால் தான் குற்றமாகக் கருதப்படும் என்று சொல்லப்படுடிருக்கிறது. வேண்டு மென்றே செய்யப்பட்ட காரியமா, இல்லை சீர்திருத்தம் செய்வதாக **Bonafide** ஆக எண்ணி செய்யப்பட்ட காரியமா என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது. இது தெளிவு இல்லாது இருக்கிறது. ஆகவேதான் இந்த ஷரத்து 2 (b) ல் இருக்கக்கூடிய நான்காவது பிரிவில் உள்ள "**deliberately**" என்ற வார்த்தையையும், "**any class of the**" என்ற வார்த்தைகளுக்குப் பின் வருகிற '**the**' என்பதையும் எடுத்துவிடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஒருவனுடைய மனதிற்குள் இருக்கிற நோக்கம் என்ன என்று நமக்குத் தெரியாது. நம்மால் கண்டுபிடிக்கவும் முடியாது. மனதிற்குள் என்ன இருக்கிறது என்பதை விசாரணை செய்ய வேண்டு

மென்றாலும் கோர்ட்டுகளால் அது முடியாது. ஆகவே இந்த வார்த்தைகளை வைத்துக்கொண்டு தப்பித்துக் கொள்ள ஏதுவாக இருக்கக்கூடாது என்பதற்காக நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன்

வகுப்பு துவேஷத்தை உண்டு பண்ணக் கூடிய, மத சம்பந்தமான உணர்ச்சியைப் புண்படுத்தக் கூடிய எத்தகைய விளம்பரங்களாகவோ சுவரொட்டிகளாகவே இருந்தாலும் தண்டிப்பதற்கு வழி இருக்க வேண்டும். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு ஒரு துளியும் இடம் இருக்கக் கூடாது.

ஷரத்து 2 (b) (i)-ல

"**incite any person to commit murder, sabotage or any offence involving violence: or**

என்று போடப்பட்டிருக்கிறது. '**involving violence**' என்று பலாத்காரம் சம்பந்தமாக குற்றம் இருந்தால் தான் என்று பொருள்படும்படியாக இருக்கிறது. இதற்கு அவசியம் இல்லை. திருடச் சொல்லலாம். கொள்ளை அடிக்கச் சொல்லலாம். பிறரை ஏசும்படியாக இருக்கலாம். இப்படிப் பட்ட எல்லாவற்றையும் குற்றமாகக் கருதி தண்டிக்கக் கூடிய தாய் இருந்தால் அதுவே போதும் என்று சொல்லிக்கொள்ள விரும் கிறேன். ஆகவே, "**involving violence**" என்பதற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக "**place open to public view**" என்கிற ஷரத்தை எடுத்துக் கொண்டால் இரவும் (வி), (டி) ஆக இரண்டு பிரிவாக இருக்கிறது. எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து "**place open to public view" includes a private place or building, momement, statute, effigy, post, wall, fence** என்று இருப்பதில் எல்லா இடங்களும் பூரணமாகப் பாதுகாக்கப்படவேண்டியது அவசியம். அப்படிச் செய்தால் எல்லோரும் வரவேற்கக் கூடிய சட்டமாக அமையும். அதே சமயத்தில் இன்னொரு வார்த்தையும் சொன்னார் கள். தனிப்பட்டவர்களுடைய கட்டிடங்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் என் பாதுகாப்புத் தரவேண்டும். ஏற்கெனவேயே தனியார் சுவர்களில் சுவரொட்டிகள் ஒட்டினால் தண்டிக்க சட்டம் இருக்கிறதே இது எதற்கு என்றார்கள். முன்பும் இதுமாதிரி சட்டம் இருக்கிறது. அதை மீண்டும் வலியுறுத்துவதாக இந்தச் சட்டம் இருப்பதில் ஆட்சேபணை என்ன என்று கேட்க விரும்புகிறேன் ஆகவே இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன.

. **Sri P. S. CHINNADURAI**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மசோதா ஒரு மயக்கம் தருகிற மசோதா என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த மசோதாவில் நல்ல நோக்கங்களை சர்க்கார் எந்த அளவுக்கு அமுல் நடத்த வேண்டுமென்று கருதுகிறார்களோ அதில் சற்றும் தாழ்ந்தவர்கள் அல்ல எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிற அங்கத்தினர்கள். நான் உண்மையாக நம்புகிறேன். இந்தச் சபையின அந்த நல்ல நோக்கத்தை தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு தாயும், தந் தையும் ஏற்றுக் கொள்ளச் செய்வார்கள். சிறந்த ஒழுக்கத்தை விரும் பாத தாய், தந்தையர்கள் இருக்க முடியாது. குழந்தைகளிடத்தில் நல்ல பண்பாடு வளரவேண்டும் என்பதில் தாய்க்கும், தந்தைக்கும் அதிகப்படி யான அக்கறை உண்டு. இதில் நாம் மிக்க பெருமை கொள்ளலாம். இந்த நல்ல நோக்கத்தை அமுல் நடத்துவதற்கு இப்படிப்பட்ட மசோதா தேவையா என்று பார்க்கிறபோது இந்த மசோதா இல்லாமல் இந்த நல்ல நோக்கத்தை நிச்சயமாக அடையலாம் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. அந்தக் காரணத்தினால் இந்த மசோதா தேவையற்றது என்று நான் கருதுவேனானால் ஏதோ பண்பாட்டுக்கு எதிராக நான் பேசுவ தாக அல்ல. ஒழுக்கக் கேட்டை நாங்கள் விரும்புவதாக அல்ல. அப்படிப் பட்ட எண்ணம் பிறரால் கற்பிக்கப்பட்டுவிடுமே என்ற ஐயத்தால் காரியம்

செய்ய முடியாது. இதைச் செய்வதனால் ஒழுக்கத்தைக் காப்பாற்றியவர்கள் என்ற பெருமை வந்துவிடாது. இதனால் தான், இது ஒரு மயக்கம் தரும் மசோதா என்று நான் குறிப்பிட்டேன். இந்த சபையிலுள்ள அங்கத்தினர்களை சர்க்கார் கட்சியினர் என்றோ எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் என்றோ பாகுபாட்டுக்கு உட்படுத்தி நான் இப்போது பேசவில்லை ; இந்த சபையிலுள்ள அங்கத்தினர்கள் எல்லோரையும் ஒரு மயக்கத்தில் ஆழ்த்தும் மசோதாதான் இது என்று குறிப்பிட விரும்புகிறேன். சபையிலுள்ளவர்களுக்கு மட்டுமின்றி மக்களுக்கும் இது மயக்கத்தைத் தான் கொடுக்கும். நமது ராஜ்ய மக்களை விட்டுவிட்டோம். இவ்வாறு சட்டமியற்றினால் மற்ற ராஜ்யங்களிலுள்ள மக்கள் என்ன நினைப்பார்கள் ? " தமிழ்நாட்டில் ஒழுக்கம் எவ்வளவு குன்றிப் போய்விட்டது ? மக்களின் ஒழுக்கத்திற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அளவிற்கு தமிழ்நாட்டில் ஒழுக்கம் கெட்டுப்போய்விட்டது போல் இருக்கிறதே ? தமிழ் நாட்டின் பண்பே குறைந்துபோய் விட்டதே ? அதனால் தான், அங்கே சட்டசபையில் இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றி யிருக்கிறார்கள் " என்று தான் அண்டை ராஜ்ய மக்களும் அயல் நாட்டு மக்களும் நினைப்பார்கள். இவ்வாறு, இந்த மசோதாவால் எல்லோருக்கும் மயக்கம் ஏற்படக்கூடும். எனவே தான் இது ஒரு மயக்கம் தரும் மசோதா என்று கூறுகிறேன். உண்மையிலேயே, இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக்கொண்டு வராமலிருந்து, மசோதாவின் அதே நோக்கம் பொது மேடைகளில் அரசியல் கட்சிகளால் வற்புறுத்தப்பட்டு வருமேயானால், நிச்சயமாக உரிய பலனை நாம் எதிர்பார்க்கலாம். அதில் சந்தேகமே கிடையாது.

இந்த மசோதாவின் 4-வது ஷரத்தை எடுத்துக்கொள்வோம். எந்தச் சுவரிலும், அதன் சொந்தக்காரருடைய அனுமதியைப் பெறாமல், எழுதவோ, விளம்பரங்களை ஒட்டவோ கூடாது என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அனுமதி பெறாமல் அவ்வாறு செய்வதற்கு தண்டனைகொடுப்பதற்குரிய சட்டங்கள் ஏற்கனவே இருக்கின்றன. 'நோட்டீஸ் ஒட்டக் கூடாது' என்று எழுதப்பட்டுள்ள சுவர்களைத் தவிர மற்றச் சுவர்களில் நோட்டீசுகள் ஒட்டுவதும், எழுதுவதும் மிக சகஜமாக இருக்கிறது. இது இன்று நேற்று நடக்கவில்லை. நம் நாடு ஜனநாயக ரீதியில் இயங்கத் துவங்கிய நாள் முதற்கொண்டு இந்த முறையில் விளம்பரங்கள் நடைபெற்றுத்தான் வருகின்றன. இது மிகவும் மலிவான விளம்பரம் என்றும் நான் சொல்வேன். இவ்வாறு விளம்பரம் செய்வதற்கு யாருடைய அனுமதியையும் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. லைசென்ஸ் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. இதனைத் தடுக்க இன்று அவசியம் ஏற்பட்டு விட்டதா என்று இந்த அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். ஆபாச விளம்பரங்களைத் தடுக்க மசோதா கொண்டு வரப்படும் வேளையில் பல ஆண்டுகளாக அனுமதிக்கப்பட்டு வந்த சாதாரண விளம்பரங்களையும் சட்டத்தின் மூலம் தடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன். இந்த மசோதா சட்டமானால் என்ன நேரும் ? இது சட்டமானால் ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒவ்வொரு அரசியல் ஸ்தாபனமும் என்ன செய்ய வேண்டியிருக்கும் ? அவைகள் தங்கள் சுவரொட்டிகளை அச்சடித்தவுடன் வீட்டுச் சொந்தக்காரர்களுடைய அனுமதிக் கடிதங்களை வாங்க வேண்டிவரும். எழுதுவதற்கு மட்டுமன்றி வெறும் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கும் அனுமதி வாங்க வேண்டிவரும். அவ்வாறு அனுமதியில்லாமல் யாராவது சுவரொட்டிகளை ஒட்டிவிட்டால், வீட்டுச் சொந்தக்காரர் புகார் செய்யாவிட்டாலும், சுவரொட்டியை ஒட்டியவரை போலீஸ்காரரே பிடித்து ஒரு கோர்ட்டில் நிறுத்தி விடலாம். அவரை அப்படி கோர்ட்டில் நிறுத்திவிட்டால் அவர் அனுமதியைப் பெற்றிருக்கிறார் என்று, ஒட்டியவரோ ஒட்டும்படி கூறியவரோ சுவரின் சொந்தக்காரரோ கூறியாக வேண்டும். அத்துடன் நில்லாது சுவரின் சொந்தக்காரரின் எழுத்துபூர்வமான அனுமதியைக் கொண்டுவந்து காட்டியாக வேண்டும். இல்லாவிட்டால் சுவரொட்டியை ஒட்டியவருக்கு மூன்று மாத சிறை தண்டனை தப்பாது, 200 ரூபாய் அபராதம் தப்பாது. சுவரொட்டியை ஒட்டச் சொல்லியவரேனவருக்கும், தண்டனை

கொடுக்கும் முறையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, இது பொதுஜன ஸ்தாபனங்களையும் அரசியல், சமூக ஸ்தாபனங்களையும் எந்த அளவிற்கு பாதிக்கும் என்று அரசாங்கத்தார் சிந்தித்துப் பார்த்தார்களா ? அவ்வாறு சிந்தித்துப் பார்த்திருந்தால் இந்த ஷரத்தை ஏன் போட்டிருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். நகரத்தில் அழகான காம்பவுண்ட் சுவர்கள் இருக்கின்றன. அவைகளில் பலவற்றில் சுவரொட்டி ஒட்டக்கூடாது என்று எழுதப்பட்டிருக்கிறது. நல்ல விளம்பரங்களாக இருந்தாலும் ஒட்டக்கூடாது என்று சொல்லுகிறவர்களைக் காண்கிறோம். அப்படிப்பட்டவர்களுடைய சுவர்களில் நாம் சுவரொட்டிகளை ஒட்டப்போவதில்லை. அவர்கள் தங்கள் சுவர்களில் நோட்டீஸ் ஒட்டக் கூடாது என்று ஒரு அறிவிப்பைப் போட்டிருந்தால் போதும். நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களிலும், இன்ன அபேட்சகருக்கு வோட்டுப் போடுங்கள் என்று கூறும் சுவரொட்டிகளைப் போடுவதற்குக் கூட இது தடையாக இருக்கும். இத்தகைய சுவரொட்டிகளைத் தடுத்தால் நாட்டில் ஜனநாயகம் பாதிக்கப்படும். இதைப்பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும். ஏதோ ஒரு அரசியல் கட்சிக்காகக் கொண்டுவரப்பட்ட மசோதாவாக இதை நான் கருதவில்லை. நாம் உண்மையிலேயே நல்ல நோக்கம் கொண்டிருந்தாலும் ஆழ்ந்து பார்க்காமல் இந்த மசோதாவைக் கொண்டுவந்து விட்டோமோ என்று அஞ்சுகிறேன். நிச்சயமாக, 4-வது ஷரத்தையாவது எடுத்துவிடலாம் என்று நினைக்கிறேன். அது இந்த மசோதாவில் இருக்கவேண்டிய அவசியமே யில்லை என்பதை இந்த சபையில் வலியுறுத்துகிறேன். இதனைச் சற்று ஆராய்ந்துபார்க்க வேண்டும். இப்போதும் கூட காலம் தாழ்ந்து விடவில்லை என்று கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசுவதிலுள்ள நல்ல கருத்துக்களை ஏற்க கனம் அமைச்சர் தயங்கமாட்டார் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆபாச விளம்பரங்கள் என்றால் என்ன என்று இந்த மசோதாவில் வரையறுக்கப்படவில்லை. ஒரு விளம்பரமானது ஆபாசமானதா இல்லையா என்று தீர்மானிக்கும் பொறுப்பை நீதிபதிக்கு விட்டு விடுகிறோம், இது சம்பந்தமாக, 'விச் இஸ் க்ராஸ்லி இன்டீஸெண்ட் ஆர் இஸ் ஸ்கரிலஸ் அர் அப்ஸீன' என்று இந்த மசோதாவில் போடப்பட்டிருக்கிறது. எது 'இன்டீஸெண்ட்' எது 'அப்ஸீன்' என்று யார் வரையறுப்பது ? ஒருவருடைய மனதிற்கு ஆபாசமாகத் தோன்றுவது இன்னொருவருடைய மனத்திற்கு ரொம்பவும் அலங்காரமாகத் தோன்றுகிறது. மசோதாவில், ஆபாசம் என்பது இன்னது என்று தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட மசோதாவைச் சட்டமாக்குவதில் பயனில்லை என்று கூற விரும்புகிறேன். இந்த மசோதா சட்டமானால், அது சினிமா விளம்பரங்களைத் தடைபடுத்தும் என்று பேசப்பட்டது. அப்படி யெல்லாம் இல்லை யென்றும் இன்னொரு தரப்பிலிருந்து பேசப்பட்டது. சில சினிமா விளம்பரங்கள் எனக்கு உண்மையிலேயே சில சமயங்களில் ஆபாசமாகத் தோன்றுகின்றன. சில சமயங்களில் அலங்காரமாகத் தோன்றுகின்றன. இதெல்லாம் மனதைப் பொறுத்தது. இதெல்லாம் வயதைப் பொறுத்தது என்று எண்ணி வந்தேன். ஆனால், இதெல்லாம் மனதையும் சூழ் நிலையையும் பொறுத்தது என்று இப்போது எண்ணுகிறேன். எத்தனையோ சினிமாப் படங்கள் வருகின்றன. இப்போது வரும் சினிமாப் படங்களில், சோபன இரவின் முற்பகுதியை, படுக்கை அறையை, காட்டாத படமே இல்லை. சினிமாக் கொட்டகைகளில் ஏராளமாக கூட்டம் இருக்கிறது. பொதுமக்கள் இந்தக் காட்சிகளை விரும்புகிறார்களா ? இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. இந்தக் காட்சிகள் ஆபாசம் என்றால் தணிக்கை அதிகாரிகள் இவைகளை ஏன் அனுமதிக்கிறார்கள் ? அவர்கள் அனுமதிக்கும் காட்சிகள் தானே விளம்பரங்களாக சுவரொட்டிகளில் வருகின்றன. அவைகளை சுவர்களில் ஒட்டிவைக்காவிட்டாலும் தள்ளுவண்டிகளில் ஒட்டி சந்து பொந்துகளில் தள்ளிக்கொண்டு போகிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆகையால் அவைகள் ஆபாசம் என்று கருதி இந்த மசோதாவைச் சட்டமாக்கினால் நமது நோக்கம் நிறைவேறாது என்று சொல்ல விரும்புகிறேன். இனி

மாவே ஆபாசமா இல்லையா என்ற கேள்வி இருந்து வருகிறது. சினிமாவே ஆபாசமானது, அதனை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று நினைக்கிறவர்களும் இருக்கிறார்கள். சினிமா நாட்டுக்கு நல்லது, சமூகத்திலுள்ள தீமைகளைக் களைந்தெறிவதற்கு சினிமா துணைபுரிகிறதாதலால் சினிமா அவசியம் என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த மாதிரியான சர்ச்சைகளில் இறங்கி சாதக பாதகங்களை ஆராய்ந்து பார்த்து ஒரு மசோதாவைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். எத்தனையோ மருந்து விளம்பரங்களும் அழகு சாதன விளம்பரங்களும் போஸ்டர்களில் வராவிட்டாலும் புத்தகங்களில் வரத் தான் செய்கின்றன. 'தளர்ந்துபோன நசை நார்களை மீண்டும் பலப்படுத்த தாது புஷ்டி லேகியம் சாப்பிடுங்கள்' என்று விளம்பரம் வருகிறது. அந்த விளம்பரத்தில், ஒரு பயில்வானின் படம் போடப்பட்டிருக்கிறது. அந்த பயில்வான் லங்கோடு மட்டும் போட்டுக் கொண்டிருக்கிறான். அந்தப் படம் ஆபாசமானதாக சிலருக்குத் தோன்றுகிறது; எனக்குக்கூட அவ்வாறு தோன்றுகிறது. அவனுக்கு சரியான ஆடைகள் போடப்படவில்லையே என்று எனக்குத் தோன்றுகிறது. முறுக்கேறிய நசை நார்களைக் காட்ட வேண்டுமானால் அவ்வாறு படம் போட்டுக்காட்ட வேண்டும் என்று சொல்லப்படலாம். 'நசைநார்கள் அந்த மாதிரி வலுப்பட வேண்டுமானால் இந்த தாதுபுஷ்டி லேகியத்தைச் சாப்பிடுங்கள்' என்று அந்த விளம்பரத்தில போடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு சிலர் அதை வாங்கி உண்ணுகிறார்கள். அதை அவர்கள் உண்டதால் பலன் ஏற்பட்டிருக்கிறதோஎன்னமோ, எனக்குத்தெரியாது; அதைநான் சாப்பிட்டதில்லை.

இப்படி, அழகு சாதன விளம்பரங்கள் பல இருக்கின்றன. அப்படி அழகு சாதன விளம்பரங்களைப் பற்றி விவரித்து இந்த சபையின் நேரத்தை எடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. எத்தனையோ கவர்ச்சிகரமான விளம்பரங்கள் இருக்கின்றன. கவர்ச்சிகமாக இருக்கிறது என்று யார் யார் நினைக்கிறார்களோ அவர்கள் அதைக் கவனித்தான் செய்வார்கள். ஆகவே இன்று இவைகளுக்கு எல்லாம் ஒரு மசோதா கொண்டுவர வேண்டுமென்று நாம் ஏன் கருத வேண்டும். சமுகத்தில் நல்ல பழக்கம் நிலவுவதற்கு, சமூகம் பிரதிநிதிகளாக விளங்கக் கூடிய அரசியல் வாதிகள் பொதுஜன ஸ்தாபனங்கள் இவைகள் ஒழுக்கம் பற்றி மக்களிடையே வலியுறுத்தி அங்கங்கு பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதும். தேர்தல் வரும்போது அரசியல் மேடைகளில், நிறைய பொதுக் கூட்டங்கள் போட்டு பேசுகிறோம். மற்ற நாட்களில் நாம் என்ன செய்கிறோம்? நாம் செய்கிற சாதனைகளை எடுத்துக் கூறுவதோடு மட்டுமல்லாமல், நாம் செய்யக் கூடிய சாதனைகளை எடுத்துச் சொல்வதோடு மட்டுமல்லாமல் மக்கள் இடையில் ஒழுக்கத்தை உண்டாக்குவது, மத வேறுபாடுகளைப் போக்கி மக்களிடையே ஒரு சமரஸ மனப்பான்மையை உண்டாக்க, ஜாதி வேறுபாடுகளை விட்டு விட்டு மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்றெல்லாம் நாம் மக்களிடம் எடுத்துச் சொல்கிறோம். வடநாட்டார் என்றும் தென்னாட்டார் என்றும் கூறி பிரிவினையை உண்டாக்கக் கூடியவர்களுக்கும் ஜனநாயகத்தில் அவர்களுக்கும் உரிமை இருக்கத்தான் இருக்கிறது, இந்த இனம் அந்த இனம் என்று கூறி பிரிவினையை வளர்க்கக் கூடிய வர்களுக்கும் மக்கள்தான் அதற்கு முடிவு கூறவேண்டும். எது நல்லது எது கெட்டது என்று மக்களிடையே எடுத்துச் சொல்வதற்கு, நாட்டுப் பற்றுள்ளவர்கள் ஏன் அவர்கள் கடமையைச் செய்ய முன்வரக் கூடாது? அப்படி அவர்கள் கடமையைச் செய்ய முன்வருவதற்குப் பதிலாக, மக்களிடையே நல்லறிவை தட்டி எழுப்புவதற்குப் பதிலாக, நல்ல கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லி தீய சக்திகளையும், கெடுதல்களையும் ஒழித்துக் கட்டுவதற்குப் பதிலாக சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அதை போலீசார் கையில் ஒப்படைத்து, நீதிபதிகளின் கையில் விட்டுவிட்டு நாம் சும்மா கை கட்டிக் கொண்டு உட்காரப் போகிறோமா என்று நான் கேட்க விரும்புகிறேன். சட்டம் ஒன்று உண்டாக்கி விட்டோம். போலீசார் அதை அமுல் நடத்த, நீதிபதிகள் சட்டத்தை மீறுபவர்களுக்கு தண்டனை அளிக்க, சமூகத்தில் ஒழுக்கம் நிலவிவிடும் என்று நாம் கருதினால் பொதுமக்களின்

நாட்டுப் பற்றுடைய நல்ல ஊழியர்கள் என்ற முறையில் நாம் நமது கடமையைப் புறக்கணிக்கிறோம் என்றுதான் நான் இந்த நேரத்தில் குறிப்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே எந்த நல்ல நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டு வரப் பட்டிருக்கிறதோ அதே நல்ல நோக்கத்தோடு நான் தாழ்மையோடு வேண்டிக் கொள்வேன், உங்களுடைய நல்ல நோக்கத்தோடு ஒத்துழைக்க ஏராளமான பேர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள், ஆகவே இது ஒரு சட்டமாக வெறும் புத்தகரூபத்தில் சட்டத் தொகுப்பிற்கு ஒரு பளுவாக ஆக்கிவிடாதீர்கள் என்று வேண்டிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

Sri S. LAZAR: கனம் சபைத் தலைவர் அவர்களே, விளம்பரங்கள் சம்பந்தமாக எந்தளவிற்கு கட்டுப்படுத்த வேண்டுமென்று நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மசோதாவை ஆதரித்துப் பேச முற்படுகிற நான் இதைப் பற்றி எதிரிடையாகப் பேசிய அங்கத்தினர்கள், ஒரு கட்சியைச் சார்ந்தவர் ஆத்திரப்பட்டது மற்றொரு கட்சியைச் சார்ந்தவர் விகாரப்பட்டது, மூன்றாவது கட்சியைச் சார்ந்தவர் மயக்கமுற்றதும், உள்ளபடியே என் போன்றவர்களுக்கு ஆச்சரியத்தை கொடுக்கவேயில்லை. அதைப் பார்க்கிறபோது அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டுவந்ததில் எல்லாவித "ஜஸ்டிபிகேஷன்," நியாயமும் இருக்கிறது என்பது தெரிய வருகிறது. ஒருவேளை அரசாங்கம் இதனவோடு நின்று விடாது, இது போன்று பேசுவதற்கு பேச்சு உரிமை இருக்கிற அதே நேரத்தில் இது போன்ற முறைகளில் விளம்பரப்படுத்தக் கூடாது என்று சொல்கிற நாம், இதுபோன்ற முறையில் பேசக்கூடாது என்ற முறையில் ஒரு சட்டம் கொண்டு வந்தால் அது இன்னும் நல்ல முறையில் அமைந்ததாக இருக்கும். அதற்கு நல்ல நியாயமும் இருக்கும் என்பதுதான் எனது தாழ்மையான கருத்து. ஒருவர் பேசுகிற போது குறிப்பிட்டுச் சொன்னார், இது போன்றதொரு மசோதா உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் கிடையாது என்றும் இப்படி ஒரு மசோதாவை தமிழ்நாட்டில் நான் கொண்டுவருவதே நமக்கு ஓரளவு அவமானத்தைக் கொடுக்கிறது என்றும் சொன்னார். இதில் இருக்கக்கூடிய பாகுபாடு இரண்டு வகுப்படும். முதலாவதாக, இந்த மசோதாவின் நோக்கம் எந்த விதத்திலும் வீடு அல்லது சுவர் போன்ற எந்த ஒரு இடத்திலும் அந்தந்த சொந்தக்காரர்களின் அனுமதி இல்லாது நோட்டீஸ்கள் அல்லது விளம்பரங்கள் ஒட்டக்கூடாது என்பது. இதுபோன்றதொரு சட்டம் வேறு ஒரு நாட்டிலும் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே சமயத்தில் நாம் ஒன்று கவனிக்க வேண்டும். பிறருடைய வீட்டுச் சுவற்றில் அவர்களுடைய அனுமதியின்றி எந்தக் காரியமும் எந்த நாட்டிலும் யாரும் செய்வது கிடையாது. எனக்கு முன்னால் பேசிய சின்னதுரை அவர்கள், "ஸ்டிக் நோ பில்ஸ்" என்று குறிப்பிட்டிருந்தால் அந்தச் சுவற்றில் நாங்கள் ஒட்டுவதில்லை, அப்படியில்லாத சுவற்றைப் பார்த்துத்தான் ஒட்டுகிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் ஒன்று கவனிக்க வேண்டும். சட்ட அடிப்படையில், ஒவ்வொருவருடைய உரிமையின் அடிப்படையில், பண்டமண்டல் ரைட்டின் அடிப்படையில் பார்க்கிறபோது ஒருவனது அனுமதியில்லாமல் அவனுடைய சுவற்றில் ஒட்டுவதற்குத் தான் நீங்கள் உத்தரவு வாங்கச் செல்ல வேண்டுமே தவிர "ஸ்டிக் பில்ஸ்" என்று இருந்தால் மட்டுமே அந்த சுவற்றில் ஒட்டலாமே தவிர ஸ்டிக் நோ பில்ஸ் என்ற விளம்பரம் இல்லாததால் அங்கு ஒட்டலாம் என்று சொல்வது அர்த்தமற்ற ஒரு வாதம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். "ஸ்டிக் பில்ஸ்" என்று இருந்தால் மட்டுமே. அதற்கு அவர்கள் அனுமதி கொடுத்தால் தாராளமாக ஒட்டலாம். அதில் ஒருவரது உரிமையும் பறிபோகாது. அதேபோல் மூன்றாவது பிரிவைப்பொறுத்தவரைக்கும், ஆட்சேபகரமான விளம்பரங்கள் செய்யக் கூடாது என்ற முறையில் மூன்றாவது பிரிவு அமைந்திருக்கிறது. உள்ளபடியே அப்படிப்பட்டதொரு அம்சம் வேறு எந்த நாட்டிலும் இல்லாத ஒரு அம்சமாகும் என்பதை நான் பகிரங்கமாக ஒத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். இந்த இடத்தில் நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாம் மற்ற நாடுகளில் நாகரீகத்தை அல்லது கலாசாரத்தை ஒட்டிச்சொல்வதாக இருக்கிறோமே அல்லது நாம் மேடை